உ

சிவமயம்.

அருணந்தி சிவாசாரியார்

இயற்றிய

சிவஞான சித்தியார்

சுபக்ஷம்.

மறைஞானதேசிகர்

சிவாக்ரயோகியர்

ஞானப்பிரகாசர்

சிவஞானயோகியர்

நிரம்பவழகியர்

சுப்ரமண்ய தேசிகர்

இவர்களின் உரையுடன்

சிவஞானபோதயந்த்ரசாலையிற்

பதிப்பிக்கப் பட்டது.

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை

சர்வதாரி ௵ வைகாசி ௴

உ

சிவமயம்.

(சீரார்கயிலை—எழுதுவனே) என்னுஞ் செய்யுள் சிவபிரானருளிய சிவாகமங்களின் கருத்தினையும், சிவாகமங்களைத்திரட்டிய சிவஞான போதக் கருத்தினையும்,' உடைத்தென்பவாகலான்;

உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டிய

ப்ரமாண நூல்கள்.

மறைஞானதேசிகர்.

தொல்காப்பியம்
திருவாசகம்
அளவை நூல்
குறள்
பௌஷ்கரம்
தர்க்கபரிபாஷை
வாதராச்யக்காரர்
சிவஞானபோதம்
ஸ்வாயம்புவம்
பார்க்கியை
மதங்கம்
வாய[illegible]ம் (சம்ஹிதை)
நிஶ்வாசோத்தரம்
சிந்தியலாகமம்

விஶ்வசாரோத்தரம்
ரத்நத்திரயம்
கிரணாகமம்
நிச்வாசம்
காந்தபுராணம்
ம்ருகேந்த்ரம்
சுப்ரபேதம்
தேவாரம்
சுத்தாக்யை
வாதுளம்
காலோத்தரம்
காலிங்கம்
காமிகம்
மகுடம்

ஸ்வச்சந்தம்
பரமதநிராகரணம்
காரணாகமம்
ப்ரம்மபத்ததி
சம்புபத்ததி
வாதுளோத்தரம்

ஆ ௩௪.

சிவாக்ரயோகியர்.

———0———

வீராகமம்
வாதுளம்
அம்பாஸ்தவம்
மதங்கம்
மஹிமஸ்தவம்
பௌஷ்கரம்
அந்யத்ராபி (இதர நூல்)
காமிகம்
சித்தாந்ததீபிகை
நைஷதம்
சைவாகமம்
ந்யாயஸாரியம்
தேவிகாலோத்தரம்
ரத்நத்திரயம்
ஜைநதந்த்ரம்
பராக்கியம்
காளிதாசர்
ம்ருகேந்த்ரம்
தத்வப்பிரகாசம்
ஆதித்யபுராணம்
ப்ரம்ஹாண்டபுராணம்
சிவஞானபோதம்
பூஜாஸ்தவம்

ஆ ௨௩.

ஞானப்பிரகாசர்.

———0———

ஞானாமிர்தம்
வாதுளம்
பௌஷ்கரம்
இரத்நத்திரயம்
மதங்கம்
காரணாகமம்
ஸ்வாயம்புவ வ்யாக்யா

ஆ ௭.

சிவஞானயோகியர்.

சீகண்டபாஷ்யம்
வேதாந்தநூல்-௨ - அதிகரணம், ௧ - ௨-பாதம்.
ஞானாமிர்தம்
இரத்நத்திரயம்
சிவப்பிரகாசம்
சதுர்வேததாற்பரிய சங்கிரகம் ௧௧
தேவாரம்
வாயுசங்கிதை
வாதுளம்

ஆ௲ ௬.

நிரம்பவழகியர்.

திருவாசகம்
சங்கற்பநிராகரணம்
சிவஞானபோதம்
சித்தி-பரபக்ஷம்
தேவாரம்
திருக்களிற்றுப்படியார்
தத்துவவிளக்கம்

ஆ௲ ௭.

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷ

க—சூ, இஅதிகரணம்.

க—ஒருவனோ டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம், வருமுறைவந்து நின்று போவது மாதலாலே, தருபவனொருவன்வேண்டும் ௩.0சூ
உ—ஈறுமாகி, மருவிடு மநாதிமுத்த சித்துரு மன்னி நின்றே. ௬௪௪
௩—தான்முதல் சூசூ௩

இவற்றிற்குச் சூர்ணிகை கருத்து வார்த்திக முதலிய சிவஞானபோதத்திற் கூறியுள்ளதே! இதன் விபரம் பாண்டிப்பெருமாள் விருத்தியுரை அச்சிட்டிருப்பதிற் காண்க.

அதிகரணத்திற்கு உதாரண விருத்தத்தொகை.

க—சூ, விருத்தம்		க
,,	க அதி	உஎ
,,	உ ,,	௩க
,,	௩ ,,	கக
	ஆ	எ0

அதிகரண சப்தார்த்தம்:—

நீலகண்டபாஷ்யம்

"விஷய சம்சய பூர்வபக்ஷ சித்தாந்த நிர்ணய ங்கதி நாமாதாரத்வம் அதிகரணத்வம். "

சிவஞானமுனிவர் சிற்றுரை - க—சூ, கருத்துரை.

தன்ஞற் கூறப்படும் பொருளும், அதன்க ணையப்படும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும், அதனைமறுத் தரைக்குஞ் சித்தாந்தத் துணிவும், இயைபும் என்னுமிவற்றது நிலைக்களம் அதிகரணமெனப்படும்.

ப்ரயோகவிவேகம் - கரு - செ.

"விஷயமொரோவழி மேவுதலெங்கும் வியாப்கமென்
றடைய விம்மூன்று வகையான் விரியுமதிகரணம்"

'விஷயமுரிமை விளம்புங்காலே' 'ஒரோவழிமேவுத லுபச்சிலேஷம்,' 'வேற்றுமைநயத்தால் வேறேயாயினு-மொற்றுமைநயத்தா லொன்றபிவியாபகம்'

இவற்ருல் உய்த்துணர்க.

—o—

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்

விஷயசூசிகை.

பரபக்ஷம்

பாயிரத்தில் நின்றும் உரையாசிரியர்கள் எடுத்துக்கொண்ட செய்யுள்கள்.

சுபக்ஷப்பாயிரம்.

௧ அறுவகை	சிவவணக்கம் (ம) சமயபேதத்திற்கு மூர்த்திபேதம் (சிவ-)பரபக்ஷக்கருத்தும், சுபக்ஷம் - ௧௨-சூத்திரக்கருத்தும்	௫௧
௨ என்னையிப்பவ	மூன்னூற்சிறப்பு (ம)வடமொழி க்ரந்தத்தை தமிழிலியற்றிய காரணம் (ஞா)-விசேஷவுரை.	௬௧
௩ பண்டை	நூற்பயன்	௭௧
௪ மறைபின்	அவையடக்கம்	௭௭
௫ அருளின்	சிவனை யறியும் வகை (ம) பாயிரத்தியல்பும் உரை இலக்கண முதலிய	௮௩

அளவை.

---

௧ அளவை காண்டல்	பிரமாணங்களின் தொகை இவற்றின் லக்ஷணம், சமயிகள் கொண்ட கோட்பாடு.	௯௩

கரு அநாதியே | மந்திரகலை தந்திரகலை உபதேச கலை என்னும் உரை மூவிதம் உ0௬
(சி) வேதம் சிவாகமமுதலிய பதப் பொருள்களும், அகாராதி வர்ணோற்பத்தியும், இவற்றின் சிறப்பும் கூறுகின்றது.

கசு ஈண்டுபெக்க | போலி—சூடு - இன், விபரம் உதாரணங்களுடன் (உ௩௫-உ)
(ஞா) சிவ-சிவசத்தி விளக்குதலைக் கூறுகின்றது.

———o———

க—சூத்திரம்.

பதியிலக்கணம்.

க ஒருவனோ | இப்பிரபஞ்சத்துக் கொருகர்த்தா வுண்டென்பது உஅ௬
(சி) பசுபதி நாமத்தின் பொருளும், அந்வய வ்யதிரேக லக்ஷணமும், சார்வாகாதி மதநிராகரணமும்,
(தி) சிவஞானபோத சூத்திர சூரணை வெண்பாக்களின் கருத்துள்ள தென்பது கூறுகின்றது.

க—அதிகாரணம்.

(உதிப்பது, முதல்; 'காரியங் காரணம்' ஈறு) ௪௭-செய்யுளால் உலோகாயதர் புத்தர் சமணரென்னும் வைதிகப்புறத்தார் மதமும், மீமாம்சர் தார்க்கிகர் சாங்கியரென்னும் வைதிகத்துட்பட்ட மூவர் மதம்பற்றி ஐயநிகழாமல் 'வருமுறை வந்துநின்று போவதுமாதலாலே தருபவனொருவன்வேண்டும்' என்னு முக்கூற்றுப் பொருளையுங் காத்தல்.

௨ உதிப்பது	உலகாயுதன் மறுப்பு (நி) சிவஞானபோதம் "பூதாதி" என்னும் வெண்பாவின் கருத்து.	௩0௬
௩ இயல்புகாண்	,,	௩௧௩
௪ நிலம்புனல்	,,	௩௧௬
௫ சார்பினிற்றோ	புத்தரில் சௌத்ராந்திகன் மறுப்பு	௩௨௫
௬ உள்ளதுயில்	,, மாத்திமிகர் ,,	௩௩௨
௭ ஒருபொரு	சமணர் ,, (ஞா) இது சாங்கியன் கருத்து. (ம-நி) சார்பினில் எ - து. முதல் இதுவரை புத்தர் கோட்பாடு. (சி) புத்தர்-௪ - வர் கருத்து.	௩௩௭

	த்திபங்களும் ஆதி என்பதும்	ரு அஎ
	(சி) ப்ரபாகரன்	
	(சிவ) 'மாயைக் கொருவனு ரென்னிங்கென்னி னுள்ளவா றுரைப்பக்கேணீ' என்பதொழிந்து 'அழிந்திடுமெ ணுக்கடாமே' என்பதுமுதல் இவை-கூ-செய்யுளும், தார்க்கிகர்.	
	(ம-நி) பட்டாசாரி	
கஎ புத்திமற்காரி	பூதாதியாகிய பிரகிருதியும் புருடனும் கர்த்தாவாகா என்றது	ரு கூஉ
கஅ காரியங்கார	கர்த்தா பிரபஞ்சகாரியத்தை யுண்டாக்குமிடத்துக் குலாலனைப்போல காரணத் திரயத்தா லுண்டாக்குவன் என்பது	ரு கூகூ
	(சிவ) 'மாயைக்கொருவ ரிங்கென்னி னுள்ளவாறுரைப்பக்கேணீ' என்பதுட்பட இவையிரண்டு செய்யுளும் சாங்கியர்.	
	(நி) மாயாவாதத்தில் நிரீச்சுரசாங்கியன்.	

இனி யக்காரணகாரியங்கள் தருபவ னொருவ ஞற் றரப்படுமாறும் அவற்ற தியல்பும் யாங்ஙனமென்பார்க்கு, ஆரியன் குலாலனாய் நின்று க்குமாறு‘விந்துவின் மாயை’முதல் ‘அருவினிலு ரு’ ௰ கூ செய்யுளாற் றொகுத் துணர்த்துகி ன்றார்.

௧௯ விந்துவின்	உபாதானகாரணமூன்றும் அவற்றின் காரியமு முணர்த்துகின்றது	௪௦௯
௨௦ வைகரி செவி	வைகரியி னிலக்கணம்	௪௧௮
௨௧ உள்ளுணர்	மத்திமை ,,	௪௨௩
௨௨ வேற்றுமை	பைசந்தி ,,	௪௨௭
௨௩ சூக்குமை	சூக்குமை ,,	௪௩௧
௨௪ நிகழ்ந்திடும்	பஞ்சகலைகளில் வாக்கிருக்குமுறை	௪௪௦
௨௫ வித்தைகள்	விஞ்ஞானகலர்க்கு தநுவாதி வைந்தவம்	௪௪௮
௨௬ மூவகையணு	விந்துஞானம் ஆன்மாக்களிடத்து சீவிக்குமுறை	௪௫௪
	(சிவ) இவை-எ-செ - சுத்த மாயை யியல்பு	
௨௭ அருவினிலுரு	மாயையி னின்று பிரபஞ்சந் தோன்றியது	௪௬௦
	நையாயிகர் மதமறுப்பு.	
௨௮ அருவுருவீனு	பிரமத்தில் பிரபஞ்சந் தோன்றுமென்னும் பாற்கரியன்மறு	௪௬௮
	(சிவ) மாயாவாதி	

உ—அதிகரணம்.

௨௯ மண்ணினிற் — மாயையி னின்று விகாரமாகி
யபிரபஞ்சம் ஒரு கர்த்தா
வாலுண்டாகின்றது — ௪௭௪
(நி) புத்தன் மறுப்பு

௩௦ சிலமோவுலக — கர்த்தாவுக்கு வடிவில்லையாயி
ன் ஒருதொழிலை எப்படியி
யற்றுவன் — ௪௭௯
சாங்கியன் மறுப்பு.

௩௧ கற்றனுற் — அசரீரியும் நிர்விகாரியுமான சி
வன் சிருஷ்டியாதிகள் செ
ய்வ தெப்படி — ௪௮௫
(நி) சிவஞானபோதம் – க-
சூ, உ-அ, ௪-செ, 'நோக்
காது' என்பதின் கருத்து

"உயிரவை எ-து முதல்-௬-செ, ஈறுமாகி மருவி
டும்' என்றதனை வலியுறுத்துகின்றது.

௩௨ உயிரவை — ஒடுக்கின ஆன்மா மீளத்தோன்
றுவானேனென்பது — ௪௯௧
புத்தனை மறுத்தது.

௩௩ தோற்றுவித் — கர்த்தா கிருத்தியஞ் செய்யுமி
டத்து விகாரியாகானென
ன்பது
பாஞ்சராத்திரியைமறுத்தது. — ௪௯௭

௩௪ உரைத்தவித் — " — ௫௦௪

௩௫ இறுதியாங் — " — ௫௧௪
(சிவ) பௌராணிக மறுப்பு

௩௬ சொன்னவித்	இத்தொழிலென்ன பயன் கருதிச்செய்கிருர்	௫௨௨
	(நி) புத்தன் மறு	
௩௭ அழிப்பிளைப்	பஞ்ச கிருத்தியமு மநுக்கிரகமென்பது	௫௨௮
	(சிவ) 'சொன்னவி' முதல்- உ-செ, நாத்திகர் மாயாவாதி பரிணமவாதி மறுப்பு	,,
	(நி) புத்தன் மறு	
௩௮ அருவமோ	கர்த்தாவுக்கு வடிவியாதென்றதற்கு	௫௩௪
௩௯ நண்ணிடு	உருவத்தின் முறைமை	௫௩௯
௪௦ வித்தகயோக	,,	௫௪௪
௪௧ மாயைதான்	கர்த்தா மாயாரூபி என்றது.	௫௪௯
	(நி) புத்தன் மறு.	
௪௨ சத்தியே	அவனுக்கு வடிவு சத்தியாலுண்டாக்கப்பட்டது.	௫௫௬
	(நி) புத்தன் மறு	
௪௩ உலகினிற்	மேலதற்கோர் புறனடை	௫௬௦
௪௪ பந்தமும்வீடுமாய	கர்த்தாவின் வடிவின்னதென்றளத்தற்கரிது.	௫௬௫
	(சி) சத்தபிரவாதி மறு.	
௪௫ குறித்ததொன்	மேன் முடிந்தது முடித்தலென்னுந்தந்திரவுத்தி.	௫௭௨
	குறித்தொன்று முதல் உருமேனி வரைக்கும் பாஞ்சராத்திரிகள் மறுப்பு.	

முதல்வனுக்கு உருவத் திருமே
ணியுண்டென்பது அரு+உரு-
என்பார் மதமறுப்பு.

ஙரு ஆரணமாகம — சிவ ஞானகமங்களை யருளத் திருமேனிகொண்டது. ருஎஅ

ஙஎ உருவருள் குணங் — சிவ னொருவனே யிருந்து கிருத்திய நிமித்தியம் திருமேனி கொண்டது. ருஅச

(சி) அங்க, ப்ரத்யாங்க, சாங்க, உபாங்க, பதப்பொருள்விபரமும்; சிவபேத சத்திபேத உற்பத்திகளும்.

(சிவ) இவை-கூ-செ, உருவத்திருமேனி

ஙஅ உலகினையிறந்து — ,, ருகூ

ஙகூ தேவரினொருவ — தேவரில் ஒருவனல்லன் என்றது. கூ00

(சிவ) இவை-உ-செ, அசிந்திதன்

ரு) போகியாயிருந்து — கடவுள்போகவிசேஷம் கூ0ரு

ருக ஒன்றொ டொன் — மஹேச விக்கிரக நானாவிதமாயிருக்கு மென்றது. கூ0கூ

இவை-உ-செ, அசிந்திதனதற்கு ஏது

ருஉ நாயகன்கண் — சிவப்ரகாசத்தால் உலகம் விளங்குவது. கூகரு

ருங கண்ணுதல் — கடவுள் யோகவிசேஷம் கூகஅ

௫—வது, அதிகரணம்.

—o—

'தான்முதல்'

சூஉ சத்திதன்வடி மேற்சத்திரூப முணர்த்தல். சூஎஅ

சூ௩ ஒன்றதா இச்சாஞானக் கிரியாசத்தி கி
ருத்திய முணர்த்துதல். சூஅசு

(சிவ) அநேகிஸ்வரவாதிமறு
இந்நான்கும் அனேகேசு
ரவாதியை மறுத்தல்.

சூச சிவனுமிச்சா சிவசமவாதி சிவனுக்கு மூவித
சத்தியென்றீராயின் அம்
மூன்று மான்மாவுக்குமு
ண்டாகையால் இருவரு
மொக்கும். சூகூ

(ஞா) மீமாஞ்சகன்
சிவசமவாதி மறுப்பு.

சூ௫ ஞானமேயான சிவனிச்சாஞானக் கிரியாசொ
ரூபனென்பதும், சுத்த
மாயா காரியமும். சூகூஎ

சூசு வித்தையோ சுத்ததத்வ ஸ்மந்துஞ் சிவன் றி
ருமேனி. எ0சு

சூஎ ஒருவனே சுத்த தத்துவங்களை யதிட்டி
த்திருந்தாலு மதற்குவே
றுபட்டு நிற்பர் எகஉ

சூஅ பொன்மைநீலா சிவன்றனது தன்மை திரியா
மல் சத்திகாரணமாய் நின்
று தானுங் காரணனென்று
ணர்த்தல். எகஎ

இந் நான்கும் சிவபேதவா
தி மறுப்பு.

ஈக சத்தியுஞ்சிவ ஐக்கியமாயிருக்கிற சிவசத்திகள் விசுவத்தின் கண்ணே பேதமாய் நிற்கும் முறைமை. எஉச

எ0 சிவனுருவருவு பதியினதிலக்கண முணர்த்தி மேலெய்தியது விலக்கி பிறிது விதிகூறுகிறார். எ௩௯

முதற்சூத்திரச் செய்யுளின் கருத்து முற்றியது.

இதில்வந்த குறிப்பெழுத்துகளின் விபரம்.

ம—மறைஞானதேசிகர்
சி—சிவாக்ரயோகியர்
ஞா—ஞானப்பிரகாசர்
சிவ—சிவஞானயோகியர்
நி—நிரம்பவழகியர் — இவர்கள் உறையிற் கூறுகின்றது என்பன.

சமயங்களின் பெயர் வருமிடத்தில் ஷை மறுப்பு எனக் கொள்க.

—0—

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

க—சூத்திரச் செய்யுளகராதி.

செய்யுளகராதி முற்றியது.

சிவமயம்.

சிவஞானசித்தியார்

சுபக்ஷம்.

மறைஞானதேசிகர் உரை.

உரையாசிரியர் காப்பு.

ஆனைமுகன் பதநினைவா மார்வங்கூர வரனடியம் பிகைபாதம் பணிவா மன்பால், வானவரை வருத்தியவல் லசுரர்தம்மை வதைத்தகுகன் மலரடியெம் மனத்தில் வைப்பாங், கானமதி வடமாடிக் கோயில்வாய்தல் காவலரு ணந்திபதங் கருத்தில் வைப்பாம், ஞானமுனி சநற்குமரா தியர்தம் பாத நயந்தேனுவா மெணியவர நயக்கேயாமே.

சிவாக்கிரயோகியர் உரை.

உரையாசிரியர் அவையடக்கம்.

அருமறையா திகளனைத்து மன்பத்தொன்று மக்காத்துளடங்கியவா றுமதென்னத், தருவிதையு ளடங்கியதோர் தன்மையென்னச் சாற்றுசிவா கமப்பொருள்க டன்னை யெல்லாந், திருமுனிவர் சிவஞான சித்தியென்றே செப்பினரிங் கிதற்குரைநீ செய்கவென்றெங், குருசரண ரருள்புரிதன் மறுக்கவஞ்சிக் கூறுமுரை குணமெனவே கொள்வர்நல்லோர்.

விநாயகஸ்துதி.

திருமகளுங் கலைமகளுஞ் சேவித் தேத்துஞ் சிவகாமசுந்
தரியுஞ் சிவனுமீன்ற, குருமணியாங் குமரனுக்கு மூத்தோன்
பாதங் கொண்டெனது புந்தியிற் கூறுகின்றே, னருமறையு
ஞ் சைவநெறி யனைத்துந் தேர்ந்தே யருணந்தி தேவனா ரருளி
ச்செய்த, தருநிகருஞ் சிவஞான சித்தி யுண்மைத் தரும்பொரு
ளைக் குருவருளினன் றலைமேற்கொண்டே.

தனியன் — நேரிசையாசிரியப்பா.

நீர்வளர்பெருங்கடல் சூழுலகுய்யப் - பார்புகழ்கைலை
ப் பரமனன்றுரைத்த - திடபிருவடமொழி யடைவுறத்தெ
ரிந்து - பண்ணவர்பயிறிரு வெண்ணெய்நல்லூரின் - மெய்கண்
டுசுபுனை மெய்கண்டதேவன் - றொன்னூலுரையாற் றெரு
ளுறச்செய்து - முன்னூனும முறைபெறநிறுவிய - நன்னெறி
தருஞ்சிவ ஞானபோதத்தை - யாங்கவரருள்கொண் டத்தவ
னடிபிழாற் - பாங்குறவிரித்துப் பழமறைவாகமப் - பொரு
ள்பெருந்திடமே புலப்படத்தெரித்த - அருணந்திதேவ சி
வாசாரியர்தாம் - அனிபுரவுலகி லாசறப்பகர்ந்த - தெளிசி
வஞான சித்தியினுண்மையைச் - சிவனன்பருக்குத் தெளிய
மறறதன்பொரு - ளுவகையின்விரித் துரைசெய்திடுகென -
வாசாரியர்குறித் தருளிச்செய்தலிற் - றேசாரவருட் செ
றிந்துளமகிழ்ந்து - திரமாமுனிசிற் சிற்சத்திதானே - பிர
மாணமென்றும் பின்னாதத்துக் - காரணமானவை காட்சியுங்
கருதலு - முரையுமிவ்வகை மூன்றெனவோதிப் - பேரிசைய
டைத்த பிரபஞ்சமெல்லாங் - காரியரூபமாய்க் காணப்படுத
லின் - இவைபொருமுதல்வனு லெய்துவதென்றும் - பலவுந்
தீபுரிவோன் பாரிசேடத்தால் - அரனேயென்று மவ்வாண்மை

க்களின் - பரவியமலபரி பாகத்தனக்கு - மொருவருமிருவினை
யொத்தவாறினுக்கு - மருவியசுத்தா சுத்தமாயையின் - க
லையறநின்று களிதநுகரண - புவநபோகங்கள் பொலிய
வுண்டாக்கி - யாக்குமப்பிரபஞ் சத்திவ்வியாத்தியாய் - நீக்
குதலின்றி நிலைபெறநின்றதா - ஞெங்கியஞான வுருவாலவ
ற்றை - நீங்கியும்வேறாய் நிற்பவனென்று - மெண்ணியசரு
ம யியற்றியபபிளை - மண்ணிடைத்தய்த்து வாழுமான்மா
க்கள் - காயமிந்திரியங் க திபிராண - வாயுவந்தக் கரண
யற்றிவைக்கும் - வேறாயாணவ சத்தியான்மிகவு - மாறாய்த்
தடுக்க மன்னியஞானக் - கிரியாசத்திகளைக் கெடாஅதடைத்
தாய் - விரிவுகொணித்திய விபுவாயந்தத் - தாங்கருமாண
வச் சத்தித்தடைவாற் - பாங்காலீசன் பாதந்திரத்தாய்-வந்
தமுறையின் மாயாகாரிய - பந்தமதனாற் பயின்றேகதேசியுஞ்-
சிற்றறிவனுமாய்ச் சிவனுலியற்றுநற் - குற்றவனுமா யொளிர்
மணவர்க்குக் - காயமிவற்றாற் காண்டற்கரிதாய் - ஆயுஞ்சிவ
ஞானத்தருபவத்தா - லறியப்பட்ட வத்தகையான்மாச் - செ
றிபச்சத்தஞ் சித்துமாய்நின்ற - அரனெனுமவர்க்கு மசத்து
ஞ்சடமுமாய்ப் - பரவியவருபிர பஞ்சத்தனக்கும் - அத்தியனு
மா யவ்விரண்டினையு - முன்னியறிதற் குணர்வுடைபோனுமா
ம் - யிருவினையொப்பு மலபரிபாகம் - பிறக்க பக்குவமதனிற்-
சத்திநிபாதந் தனிற்சிவன்குருவாய் - முத்திசேருமே சத்
தினைமொழிப் - பாசமொருவிப் பதியுடன்வேறிலா - ஆசற
மநுபவ மடைவதேயென்று - மடையுமாறவ தலம்வருபசுவி
ன் - படருஞானத்தாற் பாசஞானத்தா - லறிவரும்பதியைப்
பதிஞானத்தால் - தெறிதரக்கண்டு நெறிபொருந்தெரியக் - க
ண்ணுறுபவனுங் காட்சியுங்காட்சிக் - கந்நியப்பொருளு மழிந்
தழியாமற் - றன்மயமாகத் தானிற்பதென்று - மின்னவாறு
ண் தெப்தாதிருக்கிற் - பலவனைப்பிர பஞ்சமெல்லாஞ் -

சொல்லுறிலசத்தியஞ் சுதந்தரந்தனக்கென - வில்லையாகு மி
யற்றுநம்பணியெலாஞ் - சிவன்பணியென்று சிவனிடத்தேற்றி
ப் - பவங்கெடநிற்கின்முன் பகர்ந்தவந்நிலையே - கூடுமென்று
மக் கொள்கையுங்கூடா - தாகியாணவச் சத்தியாற்றடைக
ண் - டேதுமோரறிவற் றிருந்தநமக்குக் - கோதிலறிவு கொ
டுத்தருள்சிவனை - மறத்தலரிதென மதியுறக்கூறு தி-யாத்தகை
யந்தரியாகமதனை - சிறப்பொடுபுரிந்துமித் திறத்திலந்தரங்க-
முரப்படுபத்திவைத் தருகினுஞானம் - வரப்பெறுமென்னுமிவ்
வகையரிதாயிற் - றலைப்படும்பெருமைச் சற்குருசரண - நிலைப்
படவடைந்து நெறியினுலவர்த - மேவலின்வழாம லியம்
பியசிவன்றிருக் - கோயிலினிடத்துங் குழாம்படயில்பரம - ன
டியவரிடத்து மஞ்சலியொடும்வழி - படுமுறைபுரியினும் பர
க்திக்கேதுவாய்த் - தப்பிலாஞானந் தழைத்திடுமென்று - மி
ப்படியநேக மெய்ப்பயன்விளங்கக் - கருத்துப்பதப்பொருள்
காட்டெனமுன்னோ - ருரைத்திடும்வகையா லொண்பொருள்
விரித்து - பண்டைநாண்முகுந்தன் பாற்கடல்கடைந்தெடுத் -
தண்டமார்புலவோர்க் கமுதளித்ததுபோற் - பான்மையிற்
றெளிந்துப் பரமனன்பருக்கு - ஞானமென்னு நல்லமுதீந்தன
ன் - தரந்தவிர்பெருமைச் சதாசிவதேசிகன் - றிருந்துசந்தா
நத் தீபமாய்த்தோன்றி - நிலைபெறுசத்திநி பாதர்க்கருள்வா
ன் - மலைவறுவருண மருவுமாச்சிரமம் - பேபர்குணமென்றி
வை பெறுதலில்லாமையைப் - பார்மிசையறிவிப் பதுபொரு
ட்டாக - வாற்றலினதிவரு ணாச்சிரமியெனச் - சாற்றிடநின்
ற தலைமையோனாகிக் - கொல்லாவிரதமுங் கொடியபொய்யி
ன்மையு - மெல்லாவுயிர்க்கு மிதந்தருங்கருணையும் - பொறை
யுஞ்சாந்தமும் பொருந்தநுக்ரகமு - நிறையுநிக்ரகமு நியா
சாரமுங் - குருவினன்னேசமுங் கொண்டுயர்தவத்தால் - அரு
மறைப்பொருளா மாகமமுழுதுந் - தெரிதமிழ்முழுதுந் தெரி

க்கடலொலியென - மருவியதிருமட மணிமண்டபத்திற் - குல
மறைமுனிவர் குழாம்புடைநெருங்கப் - புலியுரியாசனம் பொ
லிபுறவிருந்து - நெஞ்சுருபத்தி நெறிகொணம்பிக்கை - வஞ்சக
மின்மை வழுத்திய குருவின் - வாய்மைமறை மனத்தாதர
வு - காய்புலனடக்கல் கடையுடனுண்மை - மெய்ப்பரிசுத்தம்
விழுத்தவமுயற்சி - யத்தருநன்றி யறிதல்பலகால் - தத்துவ
ஞான சாத்திரங்கேட்கையென் - றித்தகையிலக்கண, மிசைந்
தமாணுக்கருக் - காகச்சரிதை யாதிநாற்பாதமும் - போதித்த
ருளும் புலமையின்றலைமையுந் - தவமறந்தல்லவை தான்செ
ய்யாமையு - மவத்தைசெய்மந்திர வாதவினோதக் - கிரியைகளி
ன்மையுங் கிளர்புலனடக்கலு - மறுபகைதடிந்த வாற்றலும
மைவு - மிறலருந்தாமத மிராசதமின்மையு - மெல்லோரிடத்து
மின்பொதுப்பார்வையும்-பல்சமயத்தினுண் மைப்பயனறிகையு-
மருவுமாணாக்கர் மனகுணதோடமுங் - கருதுமுன்குறிப்பினிற்
கண்ணுறக்காண்கையுஞ் - சகலசாத்திரத்தின் சந்தேகந்தவிர்
க்கையு - மகமகிழ்சிவாநந் தாநுபூதியுமென் - றிவ்வகையனைத்
து மியல்புறவுடைத்தாய்த்- தெய்வதவடிவு சிறந்தனனாகி - ம
ன்னிபதிக்களும் வான்றிகழ்நதியுஞ் - சென்னியின்மருவச் சிவ
னெனத்தோன்றுந் - தூயகோபுரமுஞ் சுடரவிரதப் - பாய
ப்பிடறப் பயிறிருமதிலு - மஞ்சுதுஞ்சிய மாடமாளிகையும்-வி
ஞ்சியவளம்பல விளங்குதனோக்கிச் - சூழிவெண்சலிற்றோன்
றொல்பதிவெறுக்கும் - சீழிபம்பதியின் மெய்த்தவங்கைவரு -
சாழிஞானக் கவுணியன்போலச் - சைவநன்னெறி தான்றழை
வித்தப் - பரவியசைவ பரிபாலனென்று - முறைதருசிவாசா
போதியென்றுந் - திறந்தருகருணைச் சிவக்கொழுந்தென்றும் -
வரம்பின்மாதவர் வழுத்தும் - பரம்பராநாமம் படைத்த
தேசிகனே.

வரலாறு.

உலகங்களுக்குநடுவா யிலக்ஷம்யோசனையுந்தமு முப்பத் திராயிரயோசனை விஸ்தீர்ணமுமுடைத்தாய், பசும்பொன்வி னிறமாயிருக்கும் மஹாமேருவினுச்சியினடுவே சோதிசிகரமெ ன்னும் பெயராயுடைத்தாய், இருபதினாயிரம் யோசனையுந்தத் தையும்விஸ்த்தீர்ணத்தையுமுடைத்தாய், இரசிதம்போலும் பளி கம்போலு நிர்மலதையாயிருக்கிற மஹாகைலாசத்தினடுவே, சுத்தமாயாஸ்வரூபமாகிய வடவிருக்ஷமூலத்திலே, சுத்தவித்தி யாமயமான மந்திரசிம்ஹாசநத்தின்மீது, பக்குவான்மாக்களு டைய பாசசங்காரநிமித்தமாக தக்ஷணாபிமுகமாக வெழுந்தரு ளியிருந்த ஸ்ரீகண்டபரமேஸ்வரனை; ப்ரம்ம விஷ்ணு இந்த்ராதி தேவர்களும் சர்வருஷிகணங்களுஞ் சேவித்திருக்க, பரமகிரு பாளுவான ஸ்ரீநந்திகேஸ்வரநாயனார் ஸ்வாமியைப்பிரதக்ஷண த்திரயம்பண்ணி துவாதசவாரஞ் சாஷ்டாங்கமாகநமஸ்கரித் துக் கிருதாஞ்சலிபுடராகி; சுவாமீ! சர்வானுக்கிரகார்த்தமாகத் தக்ஷணாமூர்த்தமாய் சாஸ்திரவியாக்கியாந முத்திராசகிதமாக வடியேங்களுக்குச் சேவைப்பிரசாதித்ததால் க்ருதார்த்தரா னோம். சிருஷ்டிகாலத்திலே ஸ்வாமியனுக்கிரகம்பண்ணிய வே தாகமங்கள் வெகுவிஸ்தாரமாகையால், அவையெல்லா மோதி யுணருஞ் சத்தியில்லாமையால், சமுத்திரகலசநியாயமாக வவ ரவர்களறிந்தமாத்திரங்கொண்டு பூர்வபக்ஷமுஞ் சித்தாந்தமு மாக வநேகசாஸ்த்திரங்கள் பண்ணினார்கள்: அதனாற்சமயங் களு மநேகமாயிற்று. அச்சந்தேகங்களெல்லா நிவர்த்தியாகிப் பரமப்பிரயோசநமாகிய மோக்ஷத்தை யடைவதற்கு சங்கிரக மாக வுபதேசிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்த பிரச் னையாவன ?

(க) சகத்காரணது.—அநாதியோ - ஆதியோ?
(உ) சகத்து, சுவாபிகமோ - ஏதுவுள்ளதோ.

(௩) ஏதுவானது, காலகன்மாதிமாத்திரமோ - சேதநனேதுவோ.

(௪) சேதநன்றான், சமுசாரியோ தத்தநிகற்பாந்தமுத்தனோ - அநாதிமுத்தனோ.

(௫) அநாதிமுத்தன்றான், அநேகனோ - ஏகனோ.

(௬) அவன்றனக்குத்தான் இலக்ஷணமேது.

(௭) அந்தக்கத்தாவினுடைய சத் பாவத்திலே பிரமாணமேது.

(௮) அவன் நாமமேது.

(௯) அப்படியொருவன்சித்தித்துள்ளளவில், சகத்துநிருபாதாநமோ - சோபாதாநமோ - சூந்நியோபாதாநமோ - பரமாணுபாதாநமோ - பிரதாநோபாதாநமோ - கேவலம் பிரமோபாதாநமோ - கேவலம் மாயோபாதாநமோ - ஈஸ்வரசத்தியதிஷ்டிதமாயோபாதாநமோ.

(௧௦) சகத்துற்பத்தி, சங்காதரூபமோ-ஆரம்பரூபமோ-விவர்த்தரூபமோ - பரிணாமரூபமோ - காரணசமூகரூபமோ-விர்த்திரூபமோ.

(௧௧) ஈஸ்வரன் சகத்சிருஷ்டியைப்பண்ணுகிறது, கன்மநிரபேக்ஷையோ - கன்மசாபேக்ஷையோ.

(௧௨) கிருத்தியம்பண்ணுவது, லீலையோ - பிரயோசநத்தையுத்தேசித்தோ.

(௧௩) உத்தேசம், ஸ்வப்பிரயோசநமோ-பரப்பிரயோசநமோ.

(௧௪) கிருத்தியங்கள் பண்ணுமிடத்து, கரணநிராபேக்ஷையோ - கரணசாபேக்ஷையோ.

(௧௫) கரணந்தான், தேகவியாபாரமோ - பஞ்சேந்திரியங்களோ - அந்தக்கரணங்களோ - விந்துவோ - சத்தியோ.

(௧௬) சத்தியாகில், அந்தச்சத்தி அநேகையோ - ஏகையோ - சிவனுக்குச் சமயுக்தையோ - சமவேதையோ - சடரூபையோ - சித்ரூபையோ.

(௧௭) சிவனுக்கு பின்னலக்ஷண லக்ஷியமானஜீவன் அந்நியமோ - தேகமோ - இந்திரியசமஷ்டியோ - பிராணவாயுவோ - அந்தக்கரணவர்க்கமோ - ஆலயவிஞ்ஞானமோ - இவையிற்றுக்கந்நியமோ.

(௧௮) அந்நியமாகில், சடமோ - சித்தோ - அகர்த்தாவோ - கர்த்தாவோ - அணுவோ - மத்தியமபரிமாணமோ - விபுவோ.

(௧௯) ஆன்மா, ஏகனோ - அநேகனோ - கிஞ்சிஞ்ஞனோ - சர்வஞ்ஞனோ - அவஸ்தா பஞ்சகோர்பத்திஞானோ பாவமோ - மித்தியஞானமோ - அதன்வாசனையோ - அநிர்வசநீயா வித்தையோ - ஆணவமலமோ.

(௨௦) அந்தஆணவமலம், அத்ரவ்யரூபமோ - த்ரவ்யரூபமோ.

(௨௧) த்ரவ்யரூபமாகில், ஜந்நியமோ - அஜந்நியமோ.

(௨௨) இந்தமலத்திற்கு மான்மாவிற்குஞ் சம்பந்தம், சமவாயமோ - சம்யோகமோ. (சையோகம் = சம்யோகம்)

(௨௩) இந்தமலம், ப்ரதிபுருஷபிந்நமோ - சர்வஜீவசாதாரணமோ - விசித்திரசத்தியுடையதோ - விசித்திரசத்தியில்லாததோ - அநித்தியமோ - நித்தியமோ.

(௨௪) இந்தமலத்தையுடைய ஜீவன், ஸ்வதந்திரனோ - பரதந்திரனோ.

(௨௫) பரதந்திரனாகில் தந்நிர்வாகமாயிருக்கிற ஈச்வரவியாபாரமானது, ஏனுதிரூபமோ - சந்நிதிமாத்திரமோ.

(உச) சந்நிதியாவது, சமீபமாயிருக்கையோ - சத்திசமீபமோ - காரியோன்முக்கிய விசிஷ்டசத்தியோ.

(உஎ) இப்படிச்சந்நிதிமாத்திரத்திலே ஆன்மாக்களைப்பிரேரிக்கிற ஈஸ்வரன், பிரமாண விர்த்திப்பிரகாசியனோ - ஞானசொரூபனோ-சர்வப்பிரகாரத்தினாலு மதிர்ஸ்வியனோ-சொரூபஞானப்பிரகாசனோ - ஞானஸ்வரூபமாத்திரமோ-ஞானாநந்தஸ்வரூபியோ-விர்த்திஞானப்பிரகாசியனோ - ஆன்மஸ்வரூபஞானப்பிரகாசியனோ.

(உஅ) அந்தஈஸ்வரசத்பாவத்திலே, ஆகமம் பிரமாணமோ - ஆகமமும் பாரிசேஷமும் பிரமாணமோ.

(உகூ) இந்தப்பிரமாணத்தினுடைய பிரமாண்ணியமானது, பரதோவா - ஸ்வதோவா.

(௩௦) இந்தப்பதிக்கு, அந்நியமாகச் சொல்லப்பட்ட பசுவிற்கும் பாசத்திற்கும் இலக்ஷணமேது.

(௩க) இந்தப்பசுக்களுக்கு, மோக்ஷத்திலே சமதையில்லையோ-உண்டோ.

(௩உ) அதுதான், கன்மமேசாதகமோ - ஞானகன்மசமுச்சயஞ்சாதகமோ - கன்மவேதுவான ஞானஞ்சாதகமோ.

(௩௩) ஞானமுங்கன்மமும், ஸ்வதந்த்ரசாதகமோ-அங்காங்கிபாவசாதகமோ.

(௩௪) கன்மஞானத்திற்கு, ஐக்கியாத்தியோப காரகமோ - ஆராதுபகாரமோ.

(௩௫) அந்தஞானம், சிவஜீவர்களுக்குப் பேதவிஷயஞானமோ - அபேதவிஷயஞானமோ - பேதாபேதவிஷயஞானமோ - தாதாத்மகஸ்வரூபமோ.

(௩௬) இந்தஞானத்திற்கு ஏதுவான சைவாகமத்திற் கதிகாரி த்ரைவர்ணிகரோ - ஸ்ரீருத்திரத் துவிஜபக்தர்களோ, சாதுர்வர்ணத்தி னவர்களுமோ.

(௩௭) ஆகமாதிகாரிகள், கேவல சாதுர்வர்ணத்தி னவர்களுமோ - சமஸ்காரவிசிஷ்டரோ.

(௩௮) அந்தசமஸ்க்காரந்தான், ஸ்மார்த்தமோ - சைவமோ.

(௩௯) சைவந்தான், சமயவிசேஷமோ-நிர்வாணதீக்ஷையோ.

(௪0) நிர்வாணதீக்ஷையிலே, வர்ணமாத் திரத்திலே அதிகாரியோ - முமுக்ஷுவோ.

(௪௧) அந்த முமுக்ஷுவின் இலக்ஷணமேது.

(௪௨) தீக்ஷைபண்ணு மாசாரியனிலக்ஷணமேது.

(௪௩) அந்தவாசாரியன்றான், ஜீவன்முத்தனோ-சிவனோ.

(௪௪) தீக்ஷையிலே சோதிக்கப்படு மந்திர பத வர்ண புவன தத்துவ கலையென்னு மவைகளினுடைய சொருபமேது.

(௪௫) இந்தஅத்வாவைச் சோதிக்குமடைவேது.

(௪௬) தீக்ஷாநந்தரம், பரமமுத்தனோ-ஜீவன்முத்த வியவகார முண்டோ.

(௪௭) ஜீவன்முத்தர்க்கு, கிஞ்சிஞ்ஞத்துவ கிருத்திய மில்லையோ-உண்டோ.

(௪௮) ஜீவன் முத்தியவத்தையில், ஆகாமியமேறுமோ - ஏறாதோ.

(௪௯) ஏறாததற் குபாயமேது.

(௫௰) முத்தியானதுதான், தேக விநாசமோ - ப்ரகிருதிபுருஷ விவேகத்தைப்பண்ணிப் பிரகிருதிக்குப் புறம்பாய் புருஷமாத்திரமா யிருக்கையோ - ஞானசத்திவிச்சேதமோ - ஆத்தியந்திகதுக்கவிச்சேதமோ - உலோகாக்கரத்தை யடைவதோ - நித்தியமான ரூபத்தைப்பெறுவதோ - அணுமாதியைப்பெறுவதோ - கணுதிபத்தியமோ - பாஷாணவஸ்திதமோ - அநிர்வசந்நிய வித்தியா நிவர்த்தியோ - சிவசாயுச்சியமோ.

(௫௧) அந்தச் சிவசாயுச்சியந்தான் சிவகுணசங்கிராந்தியோ - சமுத்பத்தியோ - சிவசமாவேசமோ - ஆன்மாவினிடத்தனக்குள்ள சர்வஞ்ஞத்துவாதி அபிவியத்தியாய சிவசமமாயிருப்பதோ - அகண்டாகார சச்சிதாநந்தாத்வய சிவாநந்நியாநுபவாத்ம சாக்ஷாத்காரமோ: என்னுமித்தியாதி சந்தேகங்களெல்லாம் நிவிர்த்தியாம்படிக்கு அநுக்கிரகம்பண்ணவேணுமென்று விஞ்ஞாபநம்பண்ண.

ஸ்ரீதக்ஷணாமூர்த்தி பகவான் சந்தோஷித்து, நந்திகேஸ்வரபகவான் சிரஸ்ஸிலே ஸ்ரீ அத்தத்தை வைத்து, நீர் பண்ணின பிரஸ்னை உலோகாநுக்கிரகமாச்சுது; இப்படி யொருவர்க்கும் பிரஸ்னை பண்ணக்கூடாது.

சிருஷ்டிகாலத்திலே பரமசிவம் சதாசிவமூர்த்தியை யதிஷ்டித்து, ¶ மூலகௌகப்ரகாரமென்றும் ப்ரதி சம்ஹிதாப்ரகாரமென்றும் இருவகைத்தாய் ப்ரணவாதி சிவர்கள் பத்துப்பேர்க்கும் அநாதிருத்திராதியான உருத்திரர் பதினெட்டுப்பேர்க்கும் ஆக விருபத்தெட்டுப்பேர்க்கும் காமிகாதி வாதுளாந்தமான ஆகம மிருபத்தெட்டையும் அருளினலநுக்கிரகம் பண்ணினார்.

¶ இதன்விரிவை சித்தாந்தசாராவளி சரியாபாத வியாக்யாநம் - க - உ - ௫ - ஸ்லோகங்களிற் காண்க.

இந்த விருபத்தெட் டாகமங்களையு மநேகப்பிரகாரமாக நந்திகேஸ்வரதேவர்க்கு அநுக்கிரகம்பண்ண, அந்தப்பிரகாரமே நந்திகேஸ்வர தேவர் நமக் கநுக்கிரகம் பண்ணினார்.

அதிலே * இரௌரவாகமத்திலே † பாச விமோசனப் படலத்திலே அநுஷ்டுப் சந்தசாக த்வாதச சூத்திரஞ் சர்வாகம சாரமாயிருக்கும், அதை யுமக் குபதேசம்பண்ணுகிறோம், அதை தேவமுனிகணங்களிடத்திலே பக்குவமறிந்து நீரும்போதியுமென்று “ஸ்ரீ புக்கபுஞ்சகாதித்தவா” தித்தியாத் த்வாதச சூத்திரத்தையு மதனுடைய வர்த்தத்தையு மநுக்கிரகம்பண்ண:—

* இரௌரவம் = ருருவென்பவர்க்கு ஆதியில் உபதேசித்தருளியதால் ரௌரவமெனப் பெயர் கொண்டது. இஃது வடநூற் சிவஞானபோத உரை யச்சிட்டிருப்பதிற் கூறுகின்றது.

† பாச விமோசனப்படலம், ரௌரவாகமத்தில்—௭௩—வது படலம், ௧௨-வது அத்தியாயம், த்வாதசசூத்ரம் - சிவஞானபோதம்.

அந்த நந்திகேஸ்வர பகவான் சநற்குமார மகாருஷிக்கநுக்கிரகம்பண்ண, அவர் சத்தியஞான தரிசனர்க் கநுக்கிரகம்பண்ண, அவர் பரஞ்சோதி மஹாமுனிக் கநுக்கிரகம்பண்ண, அவர் க்ருபாவசத்தினாலே யித்தேசத்தேழுந்தருளித் திருவெண்ணெய் நல்லூரிலே சாம்சித்தராக அவதரித்திருக்கும் மெய்கண்டதேவ சிவாசாரியரை இந்தச் சிவஞானபோதத்தை மொழிபெயர்த்துத் தமிழாகச்செய்து பக்குவான்மாக்களுக் குபதேசியுமென்று அநுக்கிரகம்பண்ண, அவ்வாறே மொழிபெயர்த்து முன்னூற்பெயராகவே யுரைத்துத் தம்முடைய சிஷியர்கள் ௪௯-பேருக்கு மநுக்கிரகித்துத் தம்முடைய ப்ரதான சிஷியராகிய அருணந்திதேவசிவாசாரியாரை யிதை விஸ்தரித் தொரு க்ர

தைச்செய்யும்படி ஆஞ்ஞாபிக்க; அவரும் சகலவேதாகமபுராண இதிகாச யதார்த்தமாக வறிந்துலோகாநுக்கிரகார்த்த மாகச் சிவஞானசித்திக்கும்பொருட்டாகப் பண்ணினதாகையால் சிவஞானசித்தியென்று நாமமாக பூர்வபக்ஷ சித்தாந்தத்துடனே பிரமாணத்திரயங்களினுடைய இலக்ஷணங்களையும், பிரமேயத்திரயமாகிய பதிபசுபாசத்தினுடைய உத்தேசலக்ஷண பரீக்ஷைகளையும், சரியை கிரியை யோக ஞானமென்னுஞ் சாதன சதுஷ்டயத்தையும், சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியமென்னும் சதுர்வித க்ரமமுத்தியையும், ஜீவன்முத்தி பரமுத்தி லக்ஷணத்தையும், இத்யாதியான வுண்மைகளையெல்லாம் விளங்கவருளிச்செய்தார்:—இதன்பொருளை யளப்பரிதாயினு மென்னுடைய குருசரணநியோகிக் கையினாலே குருவாக்கியலங்கனபயத்தினாலே சமுத்திரகலசநியாயமாக நானறிந்தளவு உரையிடுகின்றேன். இதைப் பெரியோர்களேக்கிப் பிழைதீர்த்தருள்வர்.

திருவண்ணாமலை ஆதீனம்
ஞானப்பிரகாசர் உரை.

காப்பு.

சிவமுற நமக்கு முத்தித் தந்திவத் திரளைச் சித்தித்
தவணைமயில் சிவனெப் பில்லா வுமைகுரு குலங்கண் மற்றெண்
ணிவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக் கேற்ப
நவமுறு முரை யுரைப்பா முன்னுரை நலங்கொள் ளார்க்கே.

திருமறைஞானதேசிகர் ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியர் இவர்கள் சிவஞானசித்திக்குச்செய்த வுரைகள் விரிந்தபடியினாலே எழுவாய் பயனிலை பொருட்புணர்ச்சி பொள்ளெனத்

தோன்றுதாகிலுந் தீவ்ரதர புத்திமான்கள் தங்கள் தங்கள் சம்ப்ரதாயத்துக்கு மாறிச் சிறிது விரோதித்ததுமாத்திர நீக்கி நீர்நீக்கிப் பால்கொள்ளு மன்னம்போலப் பொருள்கொள்ளு வார்க ளாகையாலும், வேறு மற்றுள்ளபேர்க ளுரைத்தவுரைக ள் தூரம்போய்ச் சுஷ்கதர்க்கமாய் முடியும் ஆதலானும், மந்த மதிகட்கு மயக்கம்போக்கும்பொருட்டுச் சுருக்கமா வேறுரை சொல்லுவாம் என்ற திதன்பொருள்.

சிவஞானயோகியர் உரை.

குருவணக்கம்.

பண்ணிசைபோல் பரிதிமதி நிலைதயினைத் திரும்பு பாணிவு ப்பு, விண்ணவிய முடனுயிர்நீர் நிறுனுச்சிப் பணிக்குபகல் வின க்குப் பானீர், கண்ணிரவி புணர்வொளிபோற் பிரிவரிய வத்து விதக் கலவிகாட்டித், தண்ணளியைத் தெனையாண்ட துறை நமச்சிவாயகுரு சரணம்போற்றி.

நிரம்பவழகியர் உரை.

காப்பு.

உன்னும் புறம்புமொருதன்மைத் தாயுணர்வார்
தென்னுஞ் சிவஞான சித்திக்கு—மென்ன
விரிக்கும் பதவுரைக்கு வேழத்தா னைச்சக்
கரிக்குங் கரிமுகனே காப்பு.
தேருஞ் சிவஞான சித்திப் பதவுரைக்குக்
காரு மதமுங் கடும்பாம்பும்—பேருலகிற்

பொய்வஞ்ச முள்ளார் புகழும் புகினுலுங்
கைவஞ்ச முள்ளானே காப்பு.

தனியன் — நேரிசையாசிரியப்பா.

உலகம்புனைந்த பலமலர்தழீஇ - பூன்றுதலைவு கோன்றுட்
செல்வப் - பகலொளிகிளரு மகலிடமுழுதக் - கத்திடுமலைதா ன
ந்தங்கமழும் -பாராளைக்கஞ்ச மொராலுமொ ராரனு - நெய்யுறத்
தழுவுங் கையுறுகாட்டத் - தேய்த்தறமோதிப் பாய்ந்தடர்ந்
தெரியுங் - கொழுந்தழலலைதாங் கெழுந்தயிர்த்தாடி - ய
ஞ்சாநெஞ்சி னஞ்சங்கிளர்ந்து - பொங்குந்தங்க செங்கட்செ
வியி - னவ்வுழிதயிலுஞ் செவ்வியமானு - மெய்யுறகாட்ட
டையிருநூற்று - ஞெவறநோக்கும் தேவர்கடேவுந் - தம்மையு
மலையுந் தம்முட்டம்மையுஞ் - செம்மையினுடிச் சிவமுதற்
றென்றுங் - கைம்புலற்காய்ந்து செம்பொருடேர்ந்து - நம்
மற்செய்குவ நம்மறிவேதுள - னம்மாற்கேயுணு னையுறும
மாருங் - கற்றுங்கற்றிலா முற்றும்பெற்றில - மியாமாரன்பா
ர் கோமானெவ்வுழி - பெண்போர்கணமு முன்போர்கணமும்
பயிலுங்கயிலைச் சயிலத்தவ்வையி - னண்பாலெய்த்த பெண்பா
லெம்மான் - முன்னங்கலைகள் பன்னினபலவே - யங்கைதக்கன்
னற்றெருகுதிமுடிக்கி - யாடியகாலைக் கூடியவட்டாங் - கெங்
கையெம்பெருமா னந்திதலைவர்க் - காதிரண்டாகக் கூறிய
வஞ்ஞான் - றிண்மைகொணந்தி மூனிவர்கணத்தாங் - கருணுப
தேசப் பொருளெனவவையச் - சினக்குழுனுறுஞ் சனற்குமரா
திப - னன்னூனெறியைத் தன்னுளந்தழீஇ - மாயிருஞாலத்
தேயிருடீயத் - தோன்றியம்மொழியைச் சான்றோர்பெரி
பன் - விண்ணைக்கவர்ந்த டெண்ணைக்கவர்ந்த - கண்ணிக்கவி
க்கும் வெண்ணெய்க்கதிபன் - மெய்ப்பொருடழீஇப் பொய்ப்
பொருளொருவிக் - கைகண்டிடலான் மெய்கண்டானென - நாம

க்தோய்ந்த காமங்காய்ந்தோன் - தன்னுழிதழுவ வந்துஞ்
றை- வலைதோரம்மா னன்னூலுடா - விகாரி இப்பாயிர மெய்
திடதொன்று - முன்னருஞ்சூத்திரம் பன்னிரண்டெனவு-மொ
ப்பருஞ்சூரணை முப்பத்தொன்பது - மரிதெனவிதனுக் கரையு
மூதாரண - மொருபதுமெழுபது மொருமூன்றெனவுங் - கூறு
வங்க ளாறுளாறு - வாறூர்பத்தோ ரேறகாடித் - தன்ன
டிமலரைச் சென்னியின்மிலையுங் - கூறியபோதத் தாரியர்கண்
டோர் - யிருமருணந்த வருமருணக்திக் - கன்பானுவரப் பின்பு
ணைசெய்யுஞ் - செழுஞ்சிவஞான சித்தியினற்பா - வெழுந்த
வறுநூற் றிருபத்தேழாம் - விரிவாமஸைது மிருபாலாகும்- மொ
ருபால்முன்னூ றுளவாமஸைதும் - பரபாலாகப் பாடினவா
கு - மின்பாலோது மினியோர்பாலுக் - தன்பாலாகச் சாற்றின
வாகுஞ் - சொல்லுமிவ்வழியிற் சுபக்கவிருத்த - மெல்லையில்
முன்னூற் றிருபத்தேழா - மிவ்வகைநூலுக் கேய்ந்தபொருளு -
மெய்வகைபிறங்கி மேவரும்பதமு - மெழிற்றெருந்தனையு மிதனு
ற்சொல்லு - மொழிப்பிரமாணமு முள்ளிடைச்செல்லுஞ் -
சமையச்செல்வர்க ளமையக்கூறுத் - தர்க்கமும்விடையு நிற்கநி
றுத்திப் - பைம்பைத்தோய்ந்த வெம்பர்குண்டலி-மெய்க்கட்டு
உங்குமுக்கட்டேவு - மும்மலந்தழீஇய மம்மர்க்கிழவரு- மம்மர்
செய்தொளிரு மும்மலமைந்து - மார்கலிதீருப் பவையொருமூ
ன்றும் -பரவுமதனுற் போலாமெனவு - முற்றுன்மூன்றும் வற்
றுதேயினு - மற்றுமலமொன் றறியாவெனவு - மானுமானுயி
ரறிவித்தன்றித் - தானுவொன்றைச் சாராதெனவு - மவனிவ
னுள்ளு மறிவாய்நிற்றல் - புவனியினுண்மைப் பொருளாமென
வுந் - தாயாங்கெனவிரு மாயாமகளி - ரிருட்டலமகளிர் வெ
ருட்டவமுங்கும் - பூதந்தலையா காதங்கடையாக் - கூறிய
தத்துவ மாறுதொருவத் - தோன்றியவறிவே நோன்றுளென
வுங் - கட்டுண்டோடாக் கண்டக்குழுவை - விட்டிடிலோவா

வேலையினுடி - யாண்டோய்ந்தொருகா லீண்டியமுதாங் - கிப்
புலனீத்து மெய்ப்பொருடோய்ந்த - வீரர்களிவ்வுழி வாரா
ரெனவு - மறையின்பொருளின் - முறைபிறழாம - லிந்நூலொ
ளிர மன்னுரைசெய்தோன் - பைஞ்ஞாட்போவு மெய்ஞ்ஞான
த்தோர்க் - கருமறைமருதத் திருமறைஞானன் - வாடாமின்
ருள் கோடாதேய்ந்த - கருமஞ்சலையுந் திருமலியிஞ்சி - யிரு
தலைபொருதாங் கொருவரையெள்ளா - வாடகமிளிரு மா
டகக்கோபுரத் - தில்லைப்பதியி னெல்லைக்குணபாற் - றொற்ற
ங்குடிநகர் பற்றியசெல்வன் - பதமலரோய்ந்த முதலவர்கணத்
தோ - ரறிவால்மிக்க நெறிசேர்செல்வ - னகலிடமருவுஞ் சக
லச்செல்வரை - யாடல்பொருட்டா நீடைபுக்குப் - படரொ
ளிஞாயிறு சுடர்வானுலவப் - பக்குவக்கஞ்ச மிக்கலர்ந்தாங்கு -
செற்றஞ்செற்ற நற்றவர்விடா - நிலைமையினிற்குந் தலைமைய
ளிப்போன் - பஃறுளியோடாக் கஃறுளித்தாங்கெ - னுருகா
வாயி லுருகாநிற்கக் - கருதாஞானக் கனிநனியிட்டோன் -
வெம்பகலெங்கு மம்பரமாருக் - கார்கொணீரரி யார்கலிதழீ
இ - வாயுழிமாணுத் தோயந்தாங்கி - விசும்பிடைவீசப் பசுங்
காலாடிக் - கொழுந்துளிபூவின் விழுந்தாங்கம்மா - னறை
நூலாற்றின் துறைபுக்கவ்வையின் - ஞானத்தோய மானந்
தேற்ற - திருவாயம லாருள்சேர்குரவன் - கவரேவும்பே
ழவரேய்ப்பட்டக் - காட்டாட்டாமரை மாட்டாந்தவ்வுழி
ச் - செந்தாதுலவும் பைந்தாளறுகால் - மானத்தோதுங் கா
னச்சும்மைய - மண்டங்கிளர்ந்த தண்டலைமிசையி - னுண்டா
தேய்ந்து வண்டேனுண்டு - தத்தையிசைக்குஞ் சுத்தவிரட்டு
ஞ் - சூர்த்தநெஞ்சக் கூர்த்தகண்ணியர் - தீபத்தூமுங்
கோடாந்தன்ன - காழகம்புனைந்த வாழியமங்கை - யாடற்சும்
மையும் பாடற்சும்மையுந் - தன்னுணர்ந்துலக மின்னெனக்கண்
டோ - ரோதவெழுந்த வேதச்சும்மையுங் - கடுவோடமிர்த

முங் கம்புந்தழங்கும் - படுகடலேழிற் படாரற்புரமு - மளவி
ல்காட்சியு மகோகாமேனுங்கும் - வளனுங்கோய்ந்த மதனைத்தலை
வ - னிர்க்குணனின்மலன் சிற்குணன்சின்மயன் - காரணகாவ
லன் பூரணபுண்ணிய - ஞானனுகம ஞானநாயக - னந்த
னநாகுல னித்தனிராமையன் - சேவுடைச்சேவக ஞவுண-
நாயக - னற்புதனாதிபன் கற்பகநகர்சா - னாம்பதிஞானத்
தெளிவோ - னிரம்பவழகனென் னெஞ்சகத்தோனே.

கலித்துறை.

அறியும்பொருளுக் கறிவாவனவு மருந்தவத்தோர்
நெறியுநெறிக்கு நிலையாவனவு நினைப்பரிதாங்
குறியுங்குறிக்கக் குணமாவனவுங் குவளைவயற்
செறியுந்திருத்தில்லை யம்பலவாணன் றிருவடியே.

மெய்கண்டமேவும் பெருமானடியை மருவியருள்
கைகண்டுணருஞ் சிவஞானசித்திக் கடற்சுபக்கம்
பொய்கண்டுழுதவர் போற்றவியான்சொற் பொருட்குதவி
மெய்கண்டதேவ னடித்தாமரையன்றி வேறிலையே.

வெண்பா.

ஆரணமு மெக்கலையு மாகமமுங் கற்றுணர்க்
சேருமுதன் மூன்றுந் தெரியாதே—பாரிற்
கருணைபொழி ஞானப்ர காசன் கமலச்
சரணமிரண் டில்லையேற் றான்.

சுப்ரமண்யதேசிகர் உரை.

சிவஞானமுனிவர் கூறிய குருவணக்கத்தையே இவரும் காப்பாகக் கொண்டனர்.

உரையாசிரியர்களின் தெய்வ வணக்க முதலிய
முற்றிற்று.

சிவமயம்.

சிவஞானசித்தியார்

சுபக்ஷம்.

மறைஞானதேசிகர் உரை.

நூல் — காப்பு.

விநாயகஸ்துதி.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னால்வாயை
ங் கரத்தனாறு, தருகோட்டம் பிறைபிதழித் தாழ்சடை
பான் றருமொருவா ரணத்தின்றாள்க, ளுருகோட்டன்
பொடும்வணங்கி யோவாதே யிரவுபக லுணர்வோர்சி
ந்தைத், திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொ
ன் றோவென்னச் செய்யுந்தேவே.

ஒருகோட்டன்........தேவே. எ-து. ஒருகொம்பையுமிரண்டுசெவியினையு மூன்று தானத்தினின்று பொழியாநின்ற மூன்று மதத்தினையு நான்றவாயினையுந் துதிக்கையுடனைந்து கையினையு முடையனாய், கங்காதேவியையும் வளைவுபெற்ற ஞானசந்திர கலையினையுங் கொன்றைமாலையையு நீண்ட திருச்சடாபாரத்தின்கட் டரித்த வுருத்திரமூர்த்தியும் பார்வதியாருங் களிறும் பிடியுமாகக் கூடிப் புணர்ந் துண்டாக்காநின்ற வொப்பில்லாத வாரணத்தினது தாள்களை ; யுருகாநின்ற வன்புடனே வணங்கி, இடையறுமலவரதமுந் தியா

நிப்போர்கள் சிந்தையிலுண்டாகிய மலமாயாதி குற்றத்தை யகற்றிப் பிரமன் மான் முதலாயினோர் செல்வமுஞ் ¶சரக்கல்ல வென்று மதித்து, மேலான ஞானத்தைக் கொடாநிற்கும் இச் சிறப்பினையுடைய கர்த்தா என்றவாறு.

¶ சரக்கல்ல - பொருளல்ல, இதனை "நற்குஞ்சரக்கன்று நண்ணிற்கலைஞானங்,— கற்குஞ்சரக்கல்லகாண் என்னும் திருவருட்பயன் நிரம்பவழகியர் உரை காப்பானுணர்க.

தேவே என்பது எழுவாய். செய்யும் என்பது பயனிலை. ஏகாரம் ஈற்றசை. உம்மை சிறப்பு. ஓகாரம் எதிர்மறை.

இவ்வாசிரியர் சிவதுதி, சத்திவணக்கம், கணபதிவணக்கம், கந்தர்வணக்கம், குருதுதி, அவையடக்கம், நூற்சிறப்பு, குருமரபு, நூற்பெயர், நூற்கருத் திவைகளைப் பத்துச்செய்யுளாற் பாயிரமாக வுணர்த்தி; உலோகாயிதன்முதற் பாஞ்சராத்திரியீறான பரசமயிகள் பதினல்வர் மதத்தையு மவரவர் மத மறுப்பினையு மிருநூற்றுத் தொண்ணூறு விருத்தத்தா லுணர்த்தி, அதன்பின் றமது மதத்தையே தாபித்தற் பொருட்டுப் பரமதந் தன்மதமாகிய விரண்டினையும் வினவிடையாக்கி ஸ்வம்மதத்தினை முந்நூற் றிருபத்தொரு செய்யுளா லுணர்த்தினமையா லிதற்குச் சுபக்கமெனவு மதற்குப் பரபக்கமெனவும் பெயராயிற்று.

இதனுடைய பரபக்கமானது சங்கராசாரியார் செய்த சர்வதரிசந சங்க்ரஹத்தும், சர்வமதோப நியாசத்தும், இராமநாதாசாரியர் பண்ணின பரமத நிராகரணத்தும், சர்வான்மசம்பு பண்ணின சித்தாந்த தீபிகையினும், அகோரசிவாசாரியர் பண்ணின சித்தாந்தார்த்த சமுசயத்தும் பார்த்து; அவைகளின் கருத்தைப்பற்றிச் செய்ததென வறிக.

சுபக்கமானது முன்னூலாகிய சிவஞானபோதத்தின் கருத்தினையும், வழிநூலாகிய சூத்திரஞ் - சூரணி - வெண்பாவிவைகளையும், சிவாகமங்களையு முற்றுநோக்கி; அவ்வழியே பன்னிரண்டு சூத்திரமாகச் செய்ததெனவறிக.

சூத்திரமென்ற சொற்குப் பொருள் சூசனையாகச் சொல்லுகையாற் சூத்திரமெனப் பெயராயிற்று. அஃதாவது:—"அவற்றுட் சூத்திரந்தானே, யாடிநிழலி னறியத்தோன்றி, நாடுதலின்றிப் பொருணனிவிளக்கி, யாப்பினுட் டோன்ற யாத்தமைப்பதுவே" என்றார் தொல்காப்பியனார். (௪)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

———o———

மேலிந்தச் சாஸ்திரத்தி லாதியிலே நிர்விக்நபரி சமாப்தியின் பொருட்டும், சிஷியசந்தானபி விர்த்தியின் பொருட்டும், இந்தச்சாஸ்திரம் லோகத்திலே பிரகாசிக்கையின் பொருட்டும்; ஆதியிலே அருணந்திதேவ சிவாசாரியர் பண்ணின

விநாயகஸ்துதி.

(இ - ள்.) கங்கையையும் வளர்ந்த பிறையையுங் கொன்றை மாலையையுந் தரித்த நெடிய சடையையுடைய பரமேஸ்வரனுடைய வருளினாலே தரப்பட்டொரு கொம்பையு மிரண்டு செவிகளையு மிச்சாஞானக்கிரியையென்னு மூன்றுமதத்தையு நான்றவாயினையு மைந்து கரங்களையுமுடையரா யானைபோன்ற திருமுகத்தராய்த் தமக்கொரு நாயகனில்லாமையால் விநாயகனென்னுந் திருநாமத்தை யுடையராய், ஒப்பற்றவருடைய பாதார விந்தங்களிலே கனாந்த பத்தியுடனே யிரவுபகலிடைபறாமற் றியானிப்போருடைய திருக்காகிய வஞ்ஞானத்தை

யொழித்துப்பரமப்பிரயோசனமாகிய மோக்ஷத்தையும், ப்ரம்ம விஷ்ணுக்கள் செல்வமுஞ் சிறிதென்னும்படிக்கு அவாந்தரப் பிரயோசனமாகிய போகத்தையுங் கொடுப்பவராகையா லத்தேவனே யிந்நூலுக்குக் காப்பு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இந்நூல் தடையின்றிப் பூரணமாகும்பொருட்டுக் கடவுள் வாழ்த்துச் சொல்லுகின்றாராய் மூர்த்தி விநாயகவணக்கஞ் செய்கின்றார்.

ஒருகோட்டன் வாரணமென்று விசேடிக்கப்பட்டதாகையால் ஐங்கரத்த னென்றதோடு விசேடித் தைங்கரத்தனாகிய வாரணமென்று ரூபகம்பண்ணுக. ஒருகோட்டன் - என்பது - ஒற்றைக் கொம்பையுடையனாகியும்,—இருசெவியன். எ - து. இரண்டு கன்னங்களையுடையனாயும்,—மும்மதத்தன். எ - து. மூன்று மதசலங்களையுடையனாயு மிருக்கின்ற,—நால்வாயைங்கரத்தன். எ - து. நான்றவாயினையு மைந்து கரங்களையுமுடைய (விநாயகனாகிய)—ஆறு தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொரு வாரணத்தின். எ - து. கங்காதேவியையுங் கோட்டந்தரும் பிறையென்று கூட்டுதலாற் குனிப்பாகிய சந்திரகலையையுங் கொன்றை மாலையையுஞ் சூட்டாகவுடைய பின்றூங்காநின்ற சடையையுடைய சிவனாற்பவித்த குஞ்சரத்தினது,—தாள்கள். எ - து. பாதாரவிந்தங்கள் (தம்மை)—உருகோட்டன்பொடு வணங்கி. எ - து. மிகுந்த பத்தியோடுந்தாழ்ந் தந்தவணக்கத்தினாலே யடையப்பட்ட சிவதீக்ஷாவான்களாய்,—ஓவாதே. எ-து. நீங்காதே,—

இரவுபகல். எ-து. அகோராத்திரம்,—உணர்வோர். எ-து. அந்தப்பாதத்தியாக முன்னாகச் சிவத்தியாகம்பண்ணுவோர்,—சிந்தைத் திருகோட்டூர். எ-து. அந்தச் சிவத்தியானத் துவாரத்தினாலே சிற்சத்தியினது விரிந்த அறிவுதொழில்களை மறைத்த மலசத்தியினது வியாபாரத்தைத் தடுத்ததனாற் பண்ணப்பட்ட வஞ்ஞானத்தைத் தூரத்தும்,—அயன்றிருமால் செல்வமுமொன்றோ வென்ன. எ-து. பிரமத்வம் விஷ்ணுத்வமென்கின்ற வைஶ்வரியமு மொருபொருளோ வென்ன,—செய்யுந் தேவே. எ-து. (தேவேசெய்யும்) எனமாறுக-தேவாந்தன்மையைச் செய்யும். முன்னிருந்த சிவத்துவத்தைத் தானே விளக்கித் தனித்தனி யவர்களைச் சிவன்களாகத் தானே பண்ணும்; முத்தி வியத்தி யிரண்டு மோக்ஷமென்கையால்.

திருகோட்டுமென்றதனாற் பாசமுத்தியும்,செய்யுந்தேவேயென்றதனால் சிவத்வாபி வியத்தியுஞ் சொல்லப்பட்டதறிக. தாள்கள். எ-து. எழுவாய். ஓட்டும் என்பதும், செய்யும் என்பதும், பயனிலை.

சிவஞானயோகியருரை வருமாறு.

சிவஞானபோதநூற்பொருள் பிற்காலத்தார்க்கு இனிது விளங்குமாறு விரித்தல்பாப்பான் நூல்செய்வான் புகுந்தவாசிரியர், எடுத்துக்கொண்டபொருள் இடையூறு நீங்கினிதுமுடிதற்பொருட்டும், இந்நூனின்று நிலவுதற்பொருட்டும், முதற்கட் செய்துகொண்ட கடவுள்வாழ்த்து மாணாக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டுச் செய்யுளாற்றெரிக்கின்றார்.

என்பது கங்கையும்பிறையுங் கொன்றையு மணிந்த சடையானளித்தருளிய ஒருகோடு முதலியவற்றை யுடையவனாகிய

வாரணமுகத்தானுடைய திருவடிகள், பேரன்பானிடையறுது தம்மை வழிபட்டுத் தியானிப்போரறிவின்கண்ணதாகிய மல க்கோணைத் தூரக்கும்; அதுவேயுமன்றி அயனரிமுதலியோர் வாழ்வு மொருபொருளன்றென வெறுப்பச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையுந் தருமென்பதாம்.

சிந்தைத் திருகோட்டித் தெய்வத்தன்மை செய்யவல்ல தாள்களுக்கு, இடையூற்றையோட்டி இந்நூல் முடிவுபெறச் செய்தல் அருமையன்றென்பது கருத்து.

கங்கையின் செருக்கடக்கிப் பிறையை வாழ்வித்த பெருமான் மகனுதலானும் அச்சீலமுடைமை தெளியப்படுமென்பார், ஆறு கருகோட்டம் பிறையிதழித்தாழ்சடையான்றருமொரு வாரணமென்றார்.

இதழியுமுடன் கூறினார், திருவடையாள மாலையாதலின்.

இதழித்துணர்போலத் தாழ்ந்த சடையானென உவமத் தொகையாகக் கொண்டுரைத்தலுமொன்று.

தருகோட்டம்பிறை- தன்னூர்தரப்பட்ட வளைவானழகு பெற்ற பிறை.

இருசெவிப்பென்றது,இசைபெச்சத்தால் இரண்டு *முறம்போலுஞ் செவியெனப் பொருட்ந்து நிற்றலின், ஒரு கோடுமுதலியனபோலப் பிறிதினியைபுநீக்கிய விசேடணமாதற்கிழுக்கின்மையுணர்க.

* முறம்போலுஞ் செவி எனச் செவிக்கு முறத்தை உவமித்ததை, சூற்பகர்ணம் என்னும் விநாயகர் ஷோடசநாம விதியிற் காண்க.

யானையுறுப்புக் கழுத்திற்கு மேலன்றியின்மையான் மும்மதத்தனுதல் யாங்ஙனமென்பார்க்கு மும்மதம் யானைக்கு அ

டையென்பாரும், ஒருகோட்டன் முதலியனபோல மும்மதத் தனென விநாயகப்பிரானுக்கேயடையாய் நிற்றலின் யானைக்க டையாமாறு யாங்ஙனமெனமறுத்து இச்சாஞானக்கிரியைகள் ஈண்டு மும்மதமென உருவகஞ் செய்யப்பட்டனவென்றுரைப் பாரும், ஒருகோடு முதலியவேனையடையெல்லாம் உறுப்பினை யேயுணர்த்தி நிற்றலின் இது மாத்திரமினம்பற்றாதுருவகமாத ல் செல்லாமையானும் உருவகஞ் செய்தற்குரியதோரியைபுவிசே டமின்மையானுங் கந்தன் முதலியோரையு மக்கருத்துப்பற்றி மும்மதத்தனெனல் யாண்டுமின்மையானும் அதுவுமுறையன் றென மறுத்துப் பஞ்சாக்கரத்தின் பேதமாகிய எட்டெழுத் தா றெழுத்து நாலெழுத்துமுதலியனவும் பஞ்சாக்கரமென வழங் கப்படுமாறுபோல மும்மதத்தின் வகையாகிய ஒருமதமு மிரும தங்களு மும்மதமென வழங்கப்படுமாகலின் அதுபற்றி ஆசங் கை யென்னையென்றொழிவாருமுளர்.

வாரணமுஞ் சிந்தையும் ஆகுபெயர்.

திருகு முதனிலைப்பெயர்.

ஓகாரம் எதிர்மறை.

இஃதெண்ணலங்காரம்.

ஈண்டு "இறைவனையுமிறைவனாலியம்பு நூலு மீண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி-முறைமைகளும் பெத்த மொடு முத்தியெல்லாம்" என்றெடுத்துக்கொண்ட முறையே வைத்துப்பரபக்கங்களை யெடுத்தோதி மறுத்தவாசிரியர், இனிய ம்முறையே சுபக்கங் கூறுகின்றார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

(இ-ள்) ஒருகோட்டன் எ-து. ஒரு கொம்பினையுமுடையனாய்,—இருசெவியன். எ-து. இரண்டு செவியினையுமுடையனாய்,—மும்மதத்தன். எ-து. மூன்று மதங்களையுமுடையனாய்,—நால்வாயன். எ-து. நான்றவாயினையுமுடையனாய்,—ஐங்கரத்தன். எ-து. துதிக்கையுடனே ஐந்துகரங்களையுமுடையனாய்,— ஆறுதருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்றருமொரு வாரணத்தின்றாள்கள். எ-து. கங்காதேவியினையும் வளைவுபெற்ற பிறையினையுங் கொன்றைப்பூவினையுமுடைய நீண்ட திருச்சடாபாரத்தினையுமுடைய தம்பிரானார் தரப்பட்ட வொப்பில்லாத மூத்தநாயனாரது ஸ்ரீபாதங்களை,—உருகோட்டன்பொடும்வணங்கி. எ-து. உருகியோடப்படாநின்ற பக்தியுடனே தண்டன்பண்ணி,— ஓவாதே யிரவுபக லுணர்வோர். எ-து. ஒழியாதே யிரவுபகல் நினைக்கிற பெரியோர்களுடைய,—சிந்தைத் திருகோட்டும். எ-து. இருதயங்களின் மலமாயாதிகன்மமென்கிற குணங்களைப்போக்கும்,— அயன் திருமால் செல்வமுமொன்றோவென்னச் செய்யும். எ-து. ப்ரம்ம விஷ்ணுக்களுடைய மாயாபோகமாகிய ஐஸ்வரியமும் ஒரு பொருளோவென்னும்படி ஞானச்செல்வமாகிய பரமபோகத்தைக் கொடாநிற்கும்,—தேவே. எ-து. ஆகையா லிவனே கர்த்தாவென்று சொல்லப்படுமென்றவாறு.

என்னவே யானு மிந்நூலைக் காப்பாற்று நிமித்தமாக வந்தச்சீர்பாதங்களை யொழியாதே யநவரதமு மென்னிருதயத்திலே வைத்துக்கொள்ளா நின்றேனென்பது கருத்து.

இது காப்பு.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(இ-ள்.) ஆறு. எ-து. கங்கையும்,—தருகோட்டம்பிறை. எ-து. தன்னாற்றரப்பட்டவளைவான் அழகுபெற்றபிறையும்,—இதழி. எ-து. கொன்றைமாலையுமணிந்த,—தாழ்சடையான்றருட். எ-து. தாழ்ந்த சடையையுடைய சிவபிரான் அளித்தருளிய,—ஒருகோட்டன். எ-து. ஒற்றைக்கொம்பை யுடையானும்,—இருசெவியன். எ-து. இரண்டுமுறம்போலும் காதையுடையானும்,—மும்மதத்தன். எ-து. மூன்றுமதத்தை யுடையானும்,—நால்வாயைங்கரத்தன். எ-து. நான்றவாயையும் ஐந்துகரத்தை யுமுடையவனுமாகிய,—ஒருவாரணத்தின்றாள்கள். எ-து. ஒப்பற்றவாரணமுகத்தானுடைய தாள்கள்,—உருகோட்டன்பொடும். எ-து. உருகியோடுதற்கு ஏதுவாகிய பேரன்போடும்,—ஓவாதே வணங்கி. எ-து. இடையறாதுதம்மனம் வழிபட்டு,—இரவுபகல். எ-து. இரவும் பகலும்,—உணர்வோர் சிந்தை. தியானிப்போ ரறிவின்கண்ணதாகிய,— திருகோட்டும். எ-து. மலக்கோணைத் தூர்க்கும்—அதுவேயுமன்றி,— அயன்றிருமாற் செல்வமும். எ-து. அயனரி முதலியோர் வாழ்வும்,—ஒன்றோ வென்ன. எ-து. ஒருபொருளன்றெனவெறுப்ப,—தேவுசெய்யும். எ-து. சிவமாந்தன்மைப் பெருவாழ்வையுந்தரும்.

சிந்தைத்திருகோட்டித் தெய்வத்தன்மை செய்யவல்ல தாள்களுக்கு இடையூற்றையோட்டி இந்நூன் முடிவுபெறச் செய்வ தருமையன்றென்பது கருத்து.

இது விநாயகர் துதிகூறியது.

பரபக்ஷச்செய்யுட்டொகை.

முகவுரையிற்றசமெழுமூன்றதன்முப்பானொன்று
மூதுலகன்முப்பானொன்றெண்ணைந்தாம்புத்தன்
றிகழ்மூவர்க்கோரெட்டாநிகண்டனுக்கெட்டிரேழ்
சீவகனுக்கீரைந்தோடிருமூன்றாம்பாட்டன்
பகர்பதின்மூன்றீரைந்தேப்ரபாகரனீரிரண்டாம்
பரிணாமநான்கிருநான்கேமாயாவாத
நிகழும்மூன்றாறுமூன்றும்பாற்கரியற்கேழா
நிரீசுரற்குச்சதுராத்திரியெழுமுப்பானொன்றே.

சுபக்ஷசெய்யுட்டொகை.

ஐந்துதுதி யீரேழு மளவையாகு
மாதிதனி லெழுபதுபின் றொண்ணூற்றாறு
நந்துசதுட்டைய நாற்பானவமும் பின்னவமு
னனிநான்கு நாற்பதினி லொன்றிழிந்தீராறுங்
கந்தன்முக மோராறுங் கரமங்கீராறுங்
கருதிடுவங் கணபதியைங் கரமுமிருபதமுஞ்
சிந்தையிவை மூவொன்ப தொடுமுந்நூறுஞ்
சிவஞான சித்திசுவ பக்கமெனத்தெளியே.

இதற்கு
மறைஞானதேசிகர் கருத்து.

இதன்கருத் தியாதெனில்?

சித்திதன்பரமதஞ் செப்புங்காலை - மையுறுமுலகாயதன் முதன்மதமு - மெய்யுறுசைவ மேன்மையுமாகும் - ஸ்வம்மதந் தன்னைத் துலங்கவுரைக்கிற் - கற்புறுமளவை காண்டலாதியா

ய்ச் - சொற்பயின்மூன்றுக் தொல்சிவன்படைத்து - மூத்தமவ ளிப்புட னெழித்தருள்செய்து - மவனதுவாணையி னூன்மாக்க ன்மம் - புவனந்தோறும் புசித்தவுடம்பின் - மன்னியவான்மா மலத்துடனந்தப் - புண்ணியமூர்த்தியைப் புகலருஞ்சிவனைக் - காணவுங்காணுப் பொருளதுமின்றி - விறியபரமும் பாசமும் வேறு - யீதெனவான்மா வியல்புடனுணர்ந்து - மெழிற்றருதுரு வா லிவ்வகைதெரிந்து - முழுதுணர்வாகி முத்தியையறிந்துஞ்- சீருடன்குருவாற் சீவன்முத்தனு - யரனடிநிழனின் றிஞ்செழு த்துணர்ந்து - மகலருமும்மலத் தழுக்கினையகற்றியும் - புகலரு ஞ்சுவாறு பூதியையடைந்து - மொழிவறுமின்ப முதலியபரன் பாற் - பழுதறுமடிமைப் பத்திசெய்துஞ் - சிவனடியாரையுஞ் சிவாலயந்தனையு - நவையறவழிபடு நன்மையுமுரைத்தும் - ப ன்னிருத்திரப் பயனதுதன்னையு - முன்னிபாகமப் படியுரைத் ததுவே. எனவறிக.

இதற்கு மூலாகமங்க ளெழுதில் விரியுமென்று வேறேதிரு ஷ்டாந்தமாக விருத்தந்தோறுங் காட்டினம்; அண்டுக்காண்க

சிவாக்ரயோகியருளை வருமாறு.

———ℓ———

சிவஸ்துதி.

ஆதிநடுவந்தமிலாவளவில்சோதி
யருண்ஞானமூர்த்தியாயகிலமீன்ற
மாதினையுமொருபாகத்தடக்கிவானோர்
மகுடசூடாமணியாய்வையம்போற்றப்
பாதிமதியணிபவளச்சடைகடாழப்
படரொளியம்பலத்தாடும்பரனார்பாதத்
தாதுமலிதாமரைகள்சிரத்தேவைத்துத்
தளராதபேரன்புவளராநிற்பாம்.

மேலிந்தச் சாஸ்திரத்தில் பிரதிபாத்யரான சிவனை ஸ்வரூபதடஸ்தமென்னு மிரண்டு லக்ஷணங்களினாலும் ஸ்தோத்திரம் பண்ணுகின்றது.

(இ-ள்.) ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி - உற்பத்தி திதி நாசமின்றிக் காலதேசவஸ்துக்களினாலே யபரிச்சின்னமாய் ஒன்றாய் சுத்தமாய் விபுவாய் ஸ்வயம் ப்ரகாசஞானாநந்த ஸ்வரூபமாய் ஸ்வாநுபவைகவேத்தியமான பரமசிவம்

*[illegible]

இது ஸ்வரூபலக்ஷணம்.

மேல் தடஸ்தலக்ஷணம்:—சத்தர் உத்தியுக்தர் ப்ரவிர்த்தர் என்று மூன்றுவிதம். இவ்வாறு பஹுவிதமாகில் அநேகேஸ்வரத்வமா மென்னில்? சத்திப்பிரவிர்த்தி பேதத்தினாலே பேத முபசாரமாகச் சொன்னதன்றி வஸ்துபேத மில்லை.

[illegible]

அருண்ஞான மூர்த்தியாய்-அப்படிப்பட்ட சிவன் ஆன்மாக்களை யநுக்கிரஹிக்கவேணுமென்னுங் க்ருபையினாலே பஞ்சசத்திகளுக்குள் ஞானசத்தி மூர்த்திமானாகிச் சததமென்னு நாமத்தை யுடையராய் ரூபமாய் ஞானப்பிரகாசரா யிருப்பர்.

*[illegible]

அகிலமீன்ற மாதினையுமொரு பாகத்தடக்கி - விஸ்வத்திற்கு அபின்ன நிமித்தோபாதாநமாகிய தனது சமவாய ஆதிசத்தி வாமபாகமுந் தான் தக்ஷண பாகமுமாக விந்திர தநுசுபோல நீலமும் பொன்மையுமாகி, யொருமுதலிலே யிருவகை நிறமுமாகி, ஞானக்கிரியா சமமாய், அகளமாகிய பராயாதிசத்திகள் சகளமாகிய சுத்தமாயையிலே தர்ப்பணத்தில் பிரதிபிம்பம்போலே பொருந்துகையால் சகளாகளமாகி, விஸ்வத்திற்குப் பரமகாரணமாகி, யநேகசந்த்ரப்பிரகாசமுமாகி, மாயாதீதமாய், உத்தியுத்தமொன்றும் சதாசிவமொன்றும் பரியாய நாமத்தையுடையராய், சுத்த மாயாக்ருத்தியத்தைப் பண்ணுவர். இவர்க்குத் திருமேனி பஞ்சசத்திகளுடைய பத்திலொரு அம்சமாக நிஷ்களமாகிய சிவசாதாக்யம் அமூர்த்திசாதாக்யம், மூர்த்திசாக்யம், கர்த்ருசாதாக்யம், கர்மசாதாக்யமுண்டாம்; அது நிஷ்களம். சகளம் விந்துவிலே நின்றும் ஈசாநன் ஈஸ்வரன் ப்ரம்மன் சிவன் சதாசிவனென்னும் சகளமூர்த்திகளுண்டாம். இந்த விரண்டுவகை நிஷ்கள சகளத் திருமேனியிலே சிவனினது சுத்தமாயாஸ்தூல க்ருத்யத்தைப் டண்ணுவர். சுத்தமாயையில் சூக்கும க்ருத்யத்தை சத்தர் பண்ணுவர் எனவறிக.

*[illegible]

ஶக்திஸமாயோகேந ஶக்திதத்வஸம்பவ: || இச்சா
ஶக்திஸமாயோகேநாமூர்த்தி ஸாதாக்யம் ப்ரோச்ய
தே | ஜ்ஞாநஶக்திஸமாயோகேந கர்த்ருஸாதாக்ய
ஸம்பவ: || க்ரியாஶக்திஸமாயோகேந கர்மஸாதாக்ய
ஸம்பவ:—

வானோர் மகுடசூடாமணியாய் வையம்போற்றப் பாதி மதி யணிபவளச் சடைகடாழப் படரொளி யம்பலத்தாடும் பரனார்பாதத் தாதுமலி தாமரைகள் சிரத்தேவைத்துத் தளராத பேரன்பு வளராநிற்பாம் - பிரம்மாதிதேவர்கள் (அபிஷேகத்திற்கு சிகாரத்நமாய்) சர்வலோகப்பிராணிகளுந் தோத்திரம்பண்ணும்படிக்குத் தனதிச்சையாற் றிருமேனியை யாக்கிக் கொண்டு அஷ்டகலாப் பிரசாதரூபமாகிய வர்த்தசந்த்ரனை அழகுபொருந்தச் சிவந்த திருச்சடாபாரத்திலே தரித்துக் கொண்டு அந்தச்சடைகள் தாழ்ந்து தொங்க சோமசூரியாக்கினிப் பிரகாசங்கள் மழுங்கும்படிக்கு மிகுத்தப்பிரகாசமாய் வ்யாபியுள்ள சிற்சபையிலே பஞ்சக்ருத்யமே நிர்த்தமாகப்பண்ணுஞ் சிவனது தாதுசெறிந்த பாதாரவிந்தங்களிலே சிரசினால்வணங்கி தளர்ச்சியில்லாத மிகுந்த வன்புடனே கூடுவோம். இது ப்ரவிர்த்தனைச் சொன்னது.

இதற்கு வேறுவிதமாய்ப் பொருளுரைப்பாருமுளர். அஃதுவருமாறு:—ஸ்வரூபம் தடஸ்தமெனனும் பரிபூரணம் சத்தர், உத்தியுத்தர், ப்ரவிர்த்தரென்று சொன்னதன்றி அம்பலத்தாடும் சிவனையே தோத்திரம்பண்ணினதாக வுரைப்பார்கள். (ஆதிநடு......நிற்பாம்.) எ - து. ஆதிமத்யாந்த்ரஹிதமாய் அளவிட அரிதாயுள்ள வொளியானது க்ருபையருளுகிற ஞானசத்தியினை வடிவாக வுடைத்தாய் விஶ்வத்தைத் தோற்றுவிக்கி

க்ரியாசத்தியைத் தன்னுடைய பாரிசத்திலே யுடைத்தாய்தே வர்களுடைய அபிஷேகத்திற்கு ரத்நமாயுலகத்தார் தோத்திரம்பண்ண அர்த்தசந்த்ரனைத் தரிக்கப்பட்ட பவளம்போன்ற நிறத்தினையுடைய சடைகளைத் தாழவிட்டு;ஒளியாக்கப்படாநின்ற அம்பலத்துள்ளே நிருத்தம்பயிலாநிற்கிற பரமேஸ்வரனுடைய தாதுசெறிந்த கமலம்போன்ற ஸ்ரீபாதங்களைத் தலைமேற்கொண்டு, தாழ்வுபடாத வன்பினை மிகவும் அவன்பாதத்திலே யுண்டாக்காநிற்பேம். எ - று.

திருவம்பலத்து நிர்த்தம்பண்ணுகையாவது, பூமிக்குச் சுழுமுனைநாடி சிதம்பரமாதலால் அதிலாடுகை அஜபாஸ்வர இபமாமிரண்டக்கரமாகிய திருவடிகளா லாடுவதனால், உலகத்திற் குயிருமாய் நிற்பனென்பது கருத்து. உயிர்களுக்கு பலமாயிருப்பனென்பது அஷ்டமூர்த்த வடிவாதலால் "தானுடத் தன்தசையாடும்" என்னும் பழவார்த்தையு மிதனைநோக்கி யெனக்கொள்க "தேவர்கள் தானவர் சித்தவித்தியாதரர், மூவர்களாதி முப்பத்துமூவர்கள், தாபதர்சத்தர் சமயஞ்சராசரம் யாவையுமாடிடு மெம்மிறையாடவே." "தத்துவமாட சதாசிவந்தானுடச், சித்திகளாடத் திசைகளுமாடிட, வைத்தசராசரமாட மறையாட, வத்தனுமாடினு னானந்தக்கூத்தே." திருமந்திரம் திருக்கூத்துத்தரிசனம்.

*இச்செய்யுளும் பின்வரும் சத்திவணக்கம் கந்தர்வணக்கங்களும் பரபக்ஷத்திற் கூறப்பட்டுள்ளது. இவற்றிற்கு சிவாக்ரயோகிகள்,ஞானப்பிரகாசர் இவர்களிருவரும் இங்ஙனம் வருவித்துரையிட்டிருக்கின்றனர். ஒருகோட்டன் என்பது முதல் பரபக்ஷப்பாயிரச்செய்யுளிற் பிறவும் உரையாசிரியர்கள் சிலவற்றைத் தழுவியும் விடுத்துமிருப்பதை ஆங்காங்கு குறிப்பிக்கப்படும்.

வானோர் மகுடசூடாமணியாய்- பிரமாதிதேவர்க்கு மதி தேவராகிய ஸ்ரீகண்டாதிதேவர் தேவராகிய அநந்தாதிகட்குத் தேவனாய்,—

வையம்போற்ற - உலகங்களெல்லாந் துதிப்ப,—

பாதிமதி யணிபவளச் சடைகடாழ - (பாதி - சம்பாகமன்று ஓரங்கிசமாதலால்) சந்த்ரகலையைத்தரித்த விரிந்த பவளக்கொடிபோன்ற சடைகள் பின்றாங்க,—

படரொளியம்பலத்து-பராசத்தியா லதிஷ்டிக்கப்பட்டுப் பரம்பாநின்ற ப்ரகாசத்தையுடைய சுத்த மாயாமயமாகிய சபையின்கண்ணே,—

ஆடும் - நடிக்கும்,—

பரனார் - சுத்த சிவனாரது,—

பாதத்தாதுமலி தாமரைகள் - பாதாரவிந்தங்களை,—

சிரத்தேவைத்து - சென்னியிற் றரித்து,—

தளராத பேரன்பு வளராநிற்பாம் - யாம் நீங்காத மிகுந்த பத்திநிறை வாக்காநிற்பாம். எ - று.

யாம்—தோன்றா யெழுவாய்.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

ஈசனருளிச்சையறிவியற்றலின்ப
 மிலயமொடுபோகமதிகாரமாகித்
தேசருவமருவுருவமுருவமாகித்
 தேவியுமாய்த்தேசமொருசெல்வகிமாப்

பேசரியவுயிரையெலாம்பெற்றுநோக்கிப்
பெரும்போகமவையளித்துப்பிறப்பினையுமொழித்திட்
டாசகலுமடியருளத்தப்பனுடனிருக்கு
மன்னையருட்பாதமலர்சென்னிவைப்பாம்.

மேலிந்தச் சிவனுடைய *சமவாயசத்தியையும் §தத்பேதங்களையுங் கூறுகின்றது.

*சமவாயசத்தி - அபின்னசத்தி, §தத்பேதம் - அதன்றுபேதம்.

(இ - ள்.) ஈசனருள் - பரமேஸ்வரனுக்கு அக்நிக்கூஷ்ணம்போல + அவிநாபாவமாயிருக்கிற க்ருபாசத்தியானது பஞ்ச ¶ க்ருத்ய நிமித்தமாக க்ருத்யபேதங்களினாலே யஞ்சுபேதம்.

*தஞ்சக்தே ஸ்துஸஹஸ்ராம்ஶ வஸ்துதஸ்ஸ்வீ யாஸக்தி ரிதிரூபிணா। சுவிநாஹாவி நீஸம்ஹொஸ்ஸவெரா ஷ்டிவஸ்தூஹொரிகி॥

பரமசிவத்தி லாயிரத்தொருகூறு பராசத்தி,—

+ அவிநாபாவம் - பிரிவில்லாமை, ¶க்ருத்யம் - தொழில்.

இன்பம் - ஆன்மாக்களுக்கு விஷயசுகத்தைப் பொருத்துமாதிசத்தியானது அந்தப் பராசத்தியி லாயிரத்தொரு கூறுகத்தோன்றும்,—

இச்சை - ச்ருஷ்டியாதியைப் பண்ணவேணுமென்னு மிச்சாசத்தியானது அந்த வாதிசத்தியி லாயிரத்தொரு கூறுகத் தோன்றும்,—

அறிவு-சர்வான்மாக்களுடைய கன்மங்களையு மந்தக் கன்மங்களுக்கிடான தநுகரண புவநபோகங்களையு முபாதாநத்ர

யங்களினின்று முண்டாக்கும். அதையுமேககாலத்திலே ‡யதர்வத்தாக வறியு ஞானசத்தியானது இச்சாசத்தியி லாயிரத்தொரு கூறாகத்தோன்றும்;—

‡ அதர்வத் - உள்ளபடி.

இயற்றல் - †ச்ருஷ்டியாதி க்ருத்யங்களைப் பண்ணுங் க்ரியாசத்தியானது ஞானசத்தியி லாயிரத்தொரு கூறாகத்தோன்றும்.

† ச்ருஷ்டியாதி யென்றதனால் பஞ்சக்ருத்யங்களையும் எனவறிக.

இது சிவச்ருஷ்டி. இந்தச் சிவசத்திகளைந்து நிஷ்களமே.

*𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍 𑌪𑌰𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌦𑌜𑌾𑌯𑌤 ‖ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌦𑌾𑌦𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌦𑌿𑌚𑍍𑌛𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ‖ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ‖ 𑌏𑌤𑌾𑌶𑍍𑌚 𑌶𑌕𑍍𑌤𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 । 𑌶𑌿𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌇𑌤𑌿. *

இவ்வாறு பஞ்சசத்திகளு மொன்றுக்கொன்று சஹஸ்ராம்சமென்றது க்ருத்ய ¶ தாரதம்மியதையினாலே சொன்னதன்றி § பரிச்சின்னமாகச் சொன்னதல்ல வெனவறிக. இப்படி தோன்றின பஞ்சசத்திகளிலே பராசத்தியானது பக்வம

ளராகிய வான்மாக்களை யநுக்ரஹிக்கும். ஆதிசத்தியானது ஆணவமலம் பக்வமாம்படிக்குச் செலுத்தும்,—

¶ தாரதம்மியம் - ஏற்றக்குறைச்சல், § பரிச்சின்னம் - கண்டிப்பு.

இலயமொடு போகமதிகாரமாகித் தேசருவ மருவுருவ முருவமாகி - ஞானசத்தியானது சத்தற்கு ஞானப்பிரகாசமாகி சர்மசக்ஷுராதி *யக்ராஹ்யமான தேஜோரூபமாம். இந்தப் பஞ்சசத்திகளினுடைய தசாம்சங்களினாலே சகளா ‡ களமாகிய சதாசிவரூபமாம். இவர் உத்தியுக்தர். இவருடைய சகளரூபம் பிறகே சொல்லுகிறார். இவ்விடத்திலே நிஷ்கள ரூபத்தைச் சொல்லுகிறார். இவர் சுத்தமாயாக்ருத்யம் பண்ணுவர்; இவர்க்கு அந்த சத்தியில்லை. பத்திலொன்று என்னவே பத்திலொரு பங்கு நிஷ்களத்திருமேனியான சாதாக்யமென்றறிக.

* அக்ராஹ்யம் - க்ரஹிக்கப்படாமை, ‡ அகளம் - நிஷ்களம்.

* ததுக்தம் தத்த்வத்ரயே — பராஶக்திதஶாம்ஶேந ஶிவஸாதாக்யஸம்பவ:। பராஶக்த்யுத்பவம் ஸாதாக்யம் ஶிவ உச்யதே ॥ ஆதிஶக்திதஶாம்ஶேநாமூர்த்தஸாதாக்யஸம்பவ: ॥ ஆதிஶக்த்யுத்பவாமூர்த்தஸாதாக்யம் த்வமூர்த்திதம் ॥ இச்சாஶக்திதஶாம்ஶேந மூர்த்தஸாதாக்யஸம்பவ: । இச்சாஶக்த்யுத்பவம் ஸாதாக்யம் மூர்த்திரூபதா ॥ ஜ்ஞாநஶக்திதஶாம்ஶேந கர்த்ருஸாதாக்யஸம்பவ: ॥ ஜ்ஞாநம் கர்த்ருஸ்வபாவ

𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌨𑌾𑌥𑍇𑌤𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 || 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌰𑍂𑌪𑌂
𑌭𑍇𑌦𑌨 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌦𑌾𑌶𑌿𑌵𑍋 𑌹𑍍𑌯𑌸𑍌 | 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌵𑌿
𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌨𑌾𑌦𑍍𑌯𑌤𑌃 || 𑌸𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 | 𑌸𑌾 𑌶𑌿𑌵𑌭𑍇𑌦𑌂 𑌭𑍇-
𑌦𑌾𑌤𑍍 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 ||

க்ரியாசத்தியினாலே சதாசிவத்தில் சஹஸ்ராம்சமாகச் சகளமாகிய மஹேஶ்வரரூபமாய் இருபத்தைந்து விக்ரஹபேதமாகிய சுத்தமாயா க்ருத்யத்தைப் பண்ணுவர்.

இவர் ப்ரவிர்த்தர். இவர்க் கநந்தேஶ்வரர் என்றும் பெயர்.

* 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 — 𑌕𑌲𑍍𑌪𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂
𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 𑌮𑌹𑍇𑌶𑌸𑍍𑌯 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃 | 𑌮𑌹𑍇𑌶𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍
𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 | 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵
𑌤𑌿𑌷𑍍𑌠𑌃 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 || 𑌸𑌏𑌵 𑌨𑌿𑌶𑍍𑌶𑌿𑌵𑌃 𑌕𑌤𑍍𑌤𑌾 𑌭𑍇𑌦𑌾
𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑌥𑌾 𑌹𑌰𑌿𑌃 ||

சேவியுமாய் - சதாசிவாதி மூர்த்திகளுக்கு மனோன்மனி யாதி போகசத்திகளுமாய்,—

தேசமொடு செல்வமாகி-சிவனுக் காதாரதேக கரண வஸ்த்ராபரண ஆயுத ஐஸ்வரியங்களுந்தானேயாகி.

* 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑌂𑌭𑍋𑌸𑍍𑌤𑍇 — 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 𑌦𑍇𑌵𑌤
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌸𑌨𑌜𑌾𑌤𑌸𑍍𑌥𑌾 |
𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌯𑌤𑌨𑌾 𑌵𑌰𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌯 𑌭𑍇𑌜𑍍𑌞𑍇𑌯𑌹𑍍𑌵𑌯𑌿
𑌦𑍇𑌵𑌿𑌶𑌸𑌂𑌕𑌲𑌮𑌿𑌤𑌿 ||

*

பேசரிய வுயிரையெலாம் பெற்றுநோக்கிப் பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட் டாசகலு மடியருளா த் தப்பனுடனிருக்கு மன்னையருட் பாதமலர் சென்னிவைப்பா ம் - (இவ்வளவென் றிலக்கஞ்சொல்ல வரிதாகிய) அதாவது அ ளவிடப்படாத ஆன்மாக்களையெல்லா மீன்றும் வளர்த்து ம லபரிபாகத்திலே பேரின்பத்தையுங் கொடுத்து மேல் ஜநநமில் லாதபடியும் பண்ணி யாணவாதிகுற்ற நீங்கின வான்மாக்களி டத்திலே சர்வான்மாக்களுக்கும் பிதாவாகிய சிவத்துடனே பேதமற ப்ரகாசித்திருக்கும் லோகமாதாவினுடைய பாதார விந்தத்தைத் தலையின்மேற் பாவிப்பாம். எ-று.

பதியைப்போல் பசுவு மநாதி, அதற்கு உற்பத்தி நாசமுமி ல்லையென்று சாஸ்த்ரங்களிலே சொல்ல, இவ்விடத் தீஸ்வர னான்மாக்களுக்குப் பிதாவென்றும் ஈஸ்வரியார் மாதாவென் றுஞ் சர்வப்பிராணிகளையும் பெற்றாளென்றுஞ் சொல்வது வி ரோதமென்னில்? விரோதமில்லாதபடி கூறுவாம்! ஆன்மாக்க ள் மஹாப்ரளயகாலத்தி லாணவகேவலமாக விருந்தபொழுது ஞானம் ப்ரகாசியாதபடியாலே யான்மாவென்ப தொன்றில் லை யென்பதுபோல நின்றது; அதை ச்ருஷ்டிகாலத்திலே ¶ ஈ ஸ்வரா விநாபூதையான சத்தி, சுத்தாசுத்த மாயைகளிலே த த்ததாகாரமான கலாதிகளை யுதிப்பித்து, அந்தக் கலாதிகரண ங்களினாலே யாணவமல சத்தியைச் சிறிதுநீக்கி, யான்மஞான த்தைத்தான் பேதமறநின்று ப்ரகாசிப்பிக்கையால்; ஈஸ்வரசத் தி யான்மாக்களைப் பெற்றதென்றது. அந்தச்சத்தி ஈஸ்வரா வி நாபூதையில் வேறற விருக்கையா லீஸ்வரநிமித்தகாரணமாகிய பிதாவென்றது. ஆணவமல பரிபாகத்திலே யான்மாக்களை வி ஷயசுகங்களான சிற்றின்பத்திற்கேதுவாகிய ஸ்தூல சூக்கும சரீரங்களினின்றும் வாங்கிப் பேரின்பஸ்வரூபமாகிய சிவனுடன் றன்னைப்போ லவிநாபூதமாக வேறற நிற்கப்பண்ணி, இவ்வாறு

ண்டான வான்மாக்களுக்கு ஸ்ருஷ்டிகாலத்திலே யாணவகேவலத்திலே நின்றுநீங்கித் தன்னிடத்திலே ஜநிப்பதையும் (பிறப்பினையும் என்றவும்மையால், ப்ரளயகாலத்திலே யாணவகேவலமாகையான் மரிப்பது போன்றதையு) மொழித்து; திகையட்படாத ப்ரகாச ஞானஸ்வரூபமாகி, தானும் பரமாநந்த ஸ்வரூபமாகிய சிவமும், தனைவற்று ஞாதிருஸ்வரூபமான வான்மாக்களிடத்திற் பேதமற நிற்பார்கள்.

¶ ஈஸ்வரா விநாபூதா - ஈஸ்வர அவிநாபூதை எனப்பிரித்து ஈஸ்வரனுக்கு பின்னமற்றிருத்தல் எனப்பொருள்கூறுக.

பௌதிகதேகத்திற் கபிவியத்தி யேதுவானது கொண்டு பிதா நிமித்தகாரணமென்றும்; மாதா வுபாதாநகாரணமென்றும், பிள்ளை யவ்விருவர் காரியமென்றும் விவகாரம் §ஆபாலகோபால ப்ரசித்தமாகையால் முத்திபரியந்தஞ் ச்ருஷ்டிகாலங்கடோறும் சந்தாநமாக ஸ்வரூபாபி வியக்தியைப்பண்ணின வீஸ்வரசத்தியை யு மீஸ்வரனையு மாதாபிதா வென்பதும்; அவர்கள் காரணம் ஆன்மா காரியமென்பது முசிதம். ஆகையா லீஸ்வரன் பிதாவென்றும் ஈஸ்வரி மாதாவென்றுஞ் சொல்லுகிறது சர்வசாஸ்த்ரப் பிரசித்தம். ஈஸ்வரன் காரணமென்பதும் ஆன்மா காரியமென்பது முத்தி பரியந்தமுண்டு. முத்தியிலே ஈஸ்வரன் காரணமாகினு முத்தியந்த்ர மான்மா சிவஸ்வரூபமே ஆகையாற் காரணகாரிய பாவமில்லை. ஆகில் பாசச் † சேத மொருகாலமு மான்மஸ்வரூபப் பிரகாச மொருகாலமோ வென்னில்? அப்படியல்ல! பாம்பு * குப்பாசங் கழற்றினபொழுது குப்பாசங் கழன்ற தொருகாலமும் பாம்பினுடைய ப்ரகாச மொருகாலமு மல்லாததுபோல; பாச ‡ சேதமும் ஸ்வரூபாபி வியத்தியு மேககாலமே.

§ ஆபால கோபால நியாயம் பால்யாள் முதல் அறிஞரான இடையரீறாக. எ-து, † சேதம்-நீக்கம், * குப்பாசம் - சட்டை, ‡ களகம் - நீக்கம்.

* [illegible] *

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஓதனத்தினது பாகஞ் சாத்தனது பாகமென்கிறதுபோல க் கர்த்தாவாகிய சிவனுற் கன்மமாகிய ஜடசித்துக்களிலே க்ரியையாகப் பண்ணப்படுகையால் சிவனது ச்ருஷ்டி திதி சங்காரம் த்ரோபாவம் அநுக்கிரகம், ஜடசித்துகளது ச்ருஷ்டி திதி சங்காரம் த்ரோபாவம் அநுக்கிரகமென்றுஞ் சொல்லப்படுமென்றறிக. (ஆகி யென்பதனைப்பிரித் தெங்குங்கூட்டுக. ஈசனுக்கு அருளாகி அருளென்பதாகு பெயராதலால்.) அருளாகி - சித்தாகிய வரன்மாவிலிடத்திலே சிவனுக்கொப்பாகு முத்தி சித்திக்கும்பொருட்டு மலநீங்க முன்றடைபட்டிருந்த பேரறிவு பெருந்தொழிலாகிய சிவத்துவவிருத்தி விளக்கமென்னு மருளை அநுக்கிரகத்தைப் பண்ணும் பராசத்தியாகி,—

இன்பமாகி - க்ரமத்திலே பேரின்பமாவதாய் அந்தப்பேரின்பத்துக்குக் காரணமாகுஞ் சிற்றின்பத்துக்கு நிமித்தமாகிய ச்ருஷ்டி திதி சங்காரம் த்ரோபாவமென்கிற நாலு க்ருத்யங்களை ஆரணி ஜநநீ ரோதயித்திரிரூபமாயிருந்து பண்ணுந் த்ரோதானசத்தியென்னு மாதிசத்தியாகி. (பரசிவாதீதமாகிய சிவனுக் கின்பத்தைப்பண்ணும் பராசத்திபதீதமாகிய வின்பசத்தியாகிய என்னும் தொகிப்பொருளுமாம்.) இப்படிப் பஞ்சக்ருத்யம் பண்ணுமிடத்து நியமித் தறிந் துத்தியோகித்துச் சங்கற்பித்துப் பண்ணவேண்டுகையால்,—

இச்சையாகி - இந்தப்பொரு ளிப்படியாம் இந்தப்பொருளிப்படியாகாதென்னு நியமத்தைப்பண்ணு மிச்சாசத்தியாகி,—

அறிவாகி-இதுகாரண மிதுகரண மிதுகாரிய மிதுப்ரயோசநமென்னுஞ் சாத்த சவிகற்பஞானத்தைப் பண்ணு ஞானசத்தியாகி,—

இயற்றலாகி - க்ரியாசத்தியாயிருந் திதைநான் பண்ணுகிற்பேனென் றுத்தியோகித்தலாகிய சாத்த சவிகற்பக் கிரியையைப்பண்ணி, திரும்ப விச்சாசத்தி ரூபமாகியிருந் திந்தவஸ்திப்படியாகக் கடவதென்று சங்கர்பத்தைப் பண்ணும் க்ரியாசத்தியாகி, யந்தத் தூலபஞ்சக்ருத்யங்களையும் அந்தத் தூலபஞ்க்ருத்யங்களுக்கு யோக்கியத்தைப் பண்ணுமதாகிய சூக்கும பஞ்சக்ருத்யங்களையும் பண்ணுமிடத்தில் லயபோக வதிகார காலங்களிலே பண்ணவேண்டும தாகையால்,—

இலயமொடு போகமதிகாரமாகி - லயபோக வதிகாரங்களுக்குள் லயத்தைச் சொல்வாம். (அர்த்தமாத்ரயோசன நிர்விகற்பக்காட்சி, ப்ரத்தியர்த்தக்காட்சிமாத்ர சவிகற்பப் பார்வைபார்க்குஞ் சுத்தசிவன்போ லிருந்தாலும் போகரையுமதிகாரரையு மநுக்ரஹ க்ருத்யமாத்ரங் குறித் ததிருக்குமிப்

பித் துள்வைத் ததிரூக்குமயோசக சாத்த சவிகற்ப ஞானக்கிரி யா சங்கற்பவாளு யிருக்கின்ற விந்துவைநீங்காத விலயருக்கு முத்திபண்ணு மநுக்ரக க்ருத்ய மப்படியிருக்கும். விந்துவை நீங்கிய விலயருக்கு வியத்திபண்ணு மநுக்ரக க்ருத்ய மெப் போது மியற்கையா யிருக்கின்றதாகிலுந் தூலபஞ்ச க்ருத்யத் துக்கு யோக்கியத்தைப் பண்ணுமதாகிய சூக்கும பஞ்சக்ருத்ய த்தைப் பண்ணும்படி இலயகாலத்திலே போகரையும் அதிகா ரரையுஞ் சூக்குமிப்பித் துள்வைத்துச் சிருஷ்டிகாலத்திலே தா னவர்க் குள்ளுமாயிருப்பர். இலயராதலால் அந்த முத்திவி யத்தி க்ருத்யமு முடித்துத் தூலபஞ்ச க்ருத்யநிமித்தமாகிய சூக்குமபஞ்ச க்ருத்யத்தையும் பண்ணுவர். ஆகையால், மஹா ப் பிரளயத்திலே தூலபஞ்ச க்ருத்யங்களை விட்டிருக்குங் க் ரியாசத்திக்குச் சூக்கும பஞ்சக்ருத்ய நிமித்தஞ் சூக்குமித்து நியமித்தல், சற்றே சவிகற்பித்தறிதல், அப்படி யுத்தியோகித்த ல், நிர்விகற்ப சவிகற்ப வேற்றுமைதோற்றச் சங்கற்பித்தலெ ன்னுந் தொழில்களைப்பண்ணு மிச்சாசத்தி ஞானசத்தி க்ரியா சத்தி; அந்தக் கிரியாசத்தி பேதமாகிய விச்சாசத்திகளை யநி யமன்றித் தனக்குள்வைத்து நிர்விகற்பவறிவு மாத்ரத்தைப்ப ண்ணு ஞானசத்தி மாத்ரமாயிருத்தல் லயம்) (போகத் தைச் சொல்வாம். அந்தக் கிரியாசத்திக்கு சிருஷ்டியாதி தூ லபஞ்ச க்ருத்யங்களைப் பண்ணும்படி நியமித்தல் அறிதல் உத் தியோகித்தலென்னுந் தூலயோசக பவுத்த சவிகற்ப வேற்று மைதோற்றுஞ் சூக்கும யோசக சாத்தசவிகற்பத் தொழில்க ளின துள்ளுத்திரேகத்தைப் பண்ணி இச்சாசத்தியாயு ஞான சத்தியாயுங் க்ரியாசத்தியாயு மிருத்தல் போகம்.) (அதிகார த்தைச் சொல்வாம். அந்தக் கிரியாசத்திக்குச் சொல்லிய சா த்த சவிகற்ப நிர்விகற்ப வேற்றுமைதோற்றுஞ் சூக்கும யோச க சாத்தசவிகற்ப சங்கற்பத்தினது அந்தர் ருத்ரேகத்தைப்

பண்ணிக் கிரியாசத்தி பேதமாகிய விச்சாசத்தியாயிருத்தல் அ
திகாரம்.) ஆகையாற் றன்னைக்குறித்துப் பிரபஞ்சம் ப்ரயோஜ
நமாகத் தோற்றுதாதலாற் றன்னைக்குறியாமற் ப்ரபஞ்சத்
தை ஸ்வரூபமாத்ரமாகப் பார்த்தலைப்பண்ணுவது, "ஆதிநடு
வந்தமிலா வளவில்சோதி." என்று முன்சொல்லியது சுத்தசி
வச்சுபாவம். பிறர் ப்ரயோஜநத்தைக் குறித்துப் பார்த்தலைப்
பண்ணுதலைச் செய்வ திப்போதுசொல்லிய விலயபோக அதி
காரச் சிவச்சுபாவம். இந்த விலயபோக அதிகாரச்சுபாவமு
ம் சர்வ கருத்ருத்வத்துக்குட் சிறப்பு க்ருத்ருத்வ மாதலால்
ஔபாதிகத் தடத்த லக்ஷணமன்று, நிருபாதிக மிருவகை பொ
ருவகைச் சுபாவமும் சொரூபலக்ஷணமே. ஆதலால், இந்த விலய
போக வதிகாரங்கள் விருத்தி பரிணதி விவர்த்தாரம்பங்களி
னொன்றாகிய நித்தியங்கள் சோபாதிகங்கள் சத்தியங்களன்
று: பஹிரங்கபேதமாய்ப் பிரித்தற்கரிதாகி அந்தரங்கபேதமா யி
ருக்கின்ற சிவபேதமாயும் சிவசத்திபேதமாயும் சிவசத்தி வ்யா
பாரபேதமாயு மிருத்தலால் வ்யாபாரங்கட்கு இலயபோக வ
திகாரமென்னு மந்தரங்கபேதமுண்டு: சிவனுக்குஞ் சிவசத்திக்
கு மில்லையென்று சொல்லப்படாது. காரணபேத மில்லாதிரு
ந்தாற் காரியபேத மில்லையாதலால் சிவ சிவசத்தி சிவசத்தி வ்
யாபாரங்கள் மூன்றிற்குந் தனித்தனி இலயபோக வதிகாரங்
கள் பிரித்தலில்லாத வந்தரங்க பேதமாயும் பகிரங்கத் தபேத
மாயும் நித்தியங்களாயுஞ் சத்தியங்களாயு மிருக்கும்; கற்பிதமூ
ர்த்தி வடிவுமாத்ரத்தாற் கற்பிதவநித்தியங்களாயு மசத்தியங்
களாயு மிருக்குமெனவறிக. விந்துவுக்கும் வைந்தவ சரீரிகட்கு
மாத்ரம் இலயபோக வதிகாரங்கள் பிரித்தற்கெளிதாகிய பகி
ரங்கபேதமா யச்சற்காரியத்தால் நித்தியங்களாயு மனுமூர்த்
திவடிவுமுதற் காரியமாத்ரத்தா லநித்தியங்களாயு மசத்தியங்

களாயு மிருக்குமெனவறிக. திரும்ப விலயபோக வதிகாக் கிரமங்களிலே,—

நேசருவ மருவுருவ முருவமாகி - சோதியாம் நிஷ்கள சகளநிஷ்கள சகளமாகிப் பின்னு மதிகாரத்துக்குப் புறம்புமுள்ளுமாயிருக்கும் பரசிவனனு மகாகதசிவனனு மோர்கலை யீரிருகலைக் கிரமத்திலே யதிஷ்டிக்கப்பட்ட சாந்தியதீதை சாந்தி வித்தை ப்ரதிஷ்டை நிவிர்த்தியென்னுங் கலைகளில் விழுந்து பஞ்ச சாதாக்கியங்களையும் பஞ்சமூர்த்திகளையு மிந்த விருகலைப் பினுள்ள பஞ்சப்பிரமங்களையு முற்பவிப்பிக்கும் நூலகாரிய பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி க்ரியாசத்திகளுமாகி, பின்னும் ஈசானியாதி மூர்த்தியந்தமாகிய பஞ்சசத்திகளுமாகி, வாமாதி சர்வபூததமனியந்தமாகிய வஷ்டசத்திகளுமாகி, பின்னு மனோன்மனிபாதி சரஸ்வதியந்தமாகிய பஞ்சசத்திகளுமாகி,—

தேவியுமாய் - போகசத்தியுமாய்,—

தேசமொடு செல்வமாகி-யோகசத்தியொடு வீரசத்தியுமாகிப் பின்,—

பேசரி வுயிரையெலாம் பெற்று - எண்ணிறந்த வான்மாக்களுக்குப் பரதேகமென்றும் சூக்குமதேகமென்றும் தூலதேகமென்றுஞ் சொல்லப்படுந் திரிதேகங்களோடுங் கூட்டி அறிவு விளங்கச் சிருஷ்டித்து,—

நோக்கி - இரக்ஷித்து,—

பெரும்போகமவையளித்து - புவனபதிகளா யிருக்கின்ற பரபோகங்களையும் புவனவாசிகளா யிருக்கின்ற வபரபோகங்களையுங்கொடுத்துத் திரோபவித்து,—

பிறப்பினையு மொழித்திட்டு - சங்கரித்துச் சிவனுக்கொப்பாகி யிருக்கும் பரமுத்தியையும் சுத்த மாயாபுவனப் பிராப்தி

யாகிய பரமுத்தியையுங் கொடுத் தநுக்ரஹித்து,—

ஆசகலு மடியருளத்து - தீக்ஷாசுத்தராகிய சாதகர் இருதயகமலத்திலே யவரவர் யோக்கியாநுகுணமாய்ச் சகள நிஷ்களசகள நிஷ்களநிருத்த மத்தியதிலக நிஷ்களாதீதமென்று முன்சொன்ன ஸ்வரூபங்களாய்,—

அப்பனுடனிருக்கும் - சிவனோடுகூட தியாநம்பண்ணப்படும்,—

அன்னையருட் பாதமலர் - உலகமாதாவினது பாதாரவிந்தங்களை,—

சென்னிவைப்பாம் - சிரசிலே சூட்டிக்கொள்ளா நிற்கின்றோம். எ - று.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

கந்தன்வணக்கம்.

அருமறையாகமமங்கமருங்கலைநூறெரித்த
வகத்தியனுக்கோத்துரைக்குமருட்குருவாங்குருளை
திருமறைமாமுனிவர்முனிதேவர்கடந்தேவன்
சிவனருள்சேர்திருமதலைகவலிலைபோர்தெய்வம்
பொருமறையார்கழல்வீரர்வீரன்கையிற்
பூநீர்கொண்டோவாதுபோற்றுமடியவர்கள்
கருமறையாவகையருளிக்கதிவழங்குங்கந்தன்
கழலிணைகளென்சிரத்திற்கருத்தில்வைப்பாம்.

(இ-ள்.) அருமறையாகம மங்கமருங்கலை நூலறிந்த- ஓதியுணர்தற்கரிய நாலுவேதங்களையு மிருபத்தெட்டு சிவகாமங்களையு மாறங்கங்களையு மற்று மரிதாகிய கலைஞானங்களையு முதலே போதியுணர்ந்த,—அகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருளை-அகத்தியமஹாருஷிக்கு வேதாந்த ஞானத்தை யநுக்கிரகம் பண்ணப்படாநின்ற க்ருபாமூர்த்தியாகிய நித்தியபாலனாகிய குரு,—திருமறைமாமுனிவர்முனி § வேதோக்தாசாரயுக்தரா யிருக்கிற ருஷிகளுக்கெல்லாம் ப்ராதாநமாகிய முனி,— * தேவர்கடந் தேவன் சிவனருள்சேர் திருமகலை-தேவர்களுக்கெல்லா நாயகமாகிய சிவன், தாரகாசூரனைச் சங்கரித்து அவனாற் பீடிக்கப்பட்ட தேவாதிகளை யிரக்ஷிக்கவேண்டுமென்கிற க்ருபையினாலே தரப்பட்ட, ஸ்ரீமத் குமாரமூர்த்தி,—தவநிலைபோர் தெய்வம்-தபசினுடைய நிலைமைக்குப் பிரதிஷ்டையான வொப்பற்றதேவன்,—பொருமறையார் கழல்வீரர் வீரன்-வேதத்தினாற் றுதிக்கப்பட்ட ஸ்ரீபாதங்களையுடையவன் மஹாவீரர்க்கெல்லா † மக்ரகண்யன்,—கையிற் பூநீர் கொண் டோவாது போற்று மடியவர்கள்-சர்வகாலமுங் கையிலே புஷ்பத்தையும் ஜலத்தையுங்கொண் டர்ச்சித்துத் தோத்திரவழிபாடுசெய்யுந் தொண்டர்கள்,—கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன்-ஜநநாதிதுக்கங்களினாற் றங்களுடைய ஸ்வரூபஞானத்தை மறைக்கப்படாதபடிக்கு சத்கதியை க்ருபைபண்ணுமவன், சத்ருக்களைச் ¶ சோஷிப்பிக்கையினாலே கந்தனென்னுந் திருநாமத்தையுடையவன்,—கழலிணைக ளென்சிரத்திற் கருத்தில்வைப்பாம்-வீரக்கழலைப்பொருந்திய விரண்டு ஸ்ரீபாதங்களையு மென்னுடைய சிரசினுமிருதயத்தினும் பொருந்த பாவிப்பாம்.

§ வேதோக்தா சாரயுக்தர்-வேதத்தினாலே சொல்லப்பட்ட வாசாரங்களை யநுஷ்டிப்போர், * தேவர்கடந் தேவ

ன்என்பதனை யொருமுடிபாக்கி இந்த்ராதிதேவர்கட்கெல்லா மதிதேவனுயுள்ளவன் எனவும் இப்பாடல் முழுமைக்கும் பொழிப்புரையாகவும் சில ப்ரதியி லெழுதப்பட்டிருக்கிறது. †அக்ரகண்ணியன்-முதன்மைபெற்றவன், ¶ சோஷிப்பிக்கை - உலர்த்தல், வற்றுதல், வாட்டுதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அருமறையாகமமங்கம் - தனதிடத்திற் சிவதீக்ஷைபெற்ற பின் ஆகமம், அதற்குமுன் வேதவேதாங்கங்கள், அதற்குமுன் ருன் பின் ருன்,—அருங்கலை - அரிதாகிய அறுபத்துநான்கா யிருக்கின்ற கலைஞானங்கள்,—நூல் - சத்ததர்க்க மீமாங்கிச வேதாந்தமென்கிற சாத்திர மிவைகளைத் தான்போதிக்க,—தெரிந்த- அவைகளிலே சொல்லப்பட்ட பதார்த்தங்களை உத்தேச லக்ஷண பரீக்ஷைகளோடேகூட வறிந்த,—அகத்தியனுக்கு - அகத்தியமாமுனிக்கு,—ஓத்துணைக்கும் - பிரணவத்தை யுபதேசம்பண்ணி யதன்முடிவிற் சித்தாந்த மஹாவாக்கிய வுபதேசஞ்செய்யும்,—அருட்குருவாங்குருவை - அநுக்ரக விக்ரக குருவாகிய குமாரன்,—திருமறைமாமுனிவர் முனி - வேதவித்தாகிய முனீஸ்வரர்களுக்கு முனீஸ்வரன்,—தேவர்கட்டேவன் - தேவர்க்குந் தேவன்,—சிவனருள்சேர் திருமதலை - சிவனது க்ருபைபொருந்திய புத்திரன்,—தவநிலைபோர் தெய்வம் - தவசைப்பண்ணுகிறபேர்க்குப் பலன்கொடுக்கிற தேவன்,—பொருமறையார் கழல்வீரர் வீரன் - பொராநின் றறைந் தார்ப்பரியாநின்ற வீரவண்டயத்தையுடைய வீரர்க்கும் வீரன்,—கையிற் பூநீர்கொண் டோவாது போற்றுமடியார்கள் - கரத்திற் புஷ்பந் தீர்த்தங்கொண்டு இடைவிடாது பூசிக்கும் பத்தர்களுக்கு,—கரும

றையர்வகையருளி - ஜநநமரணங்களுக்குக் காரணமாகிய மல மறையாதபடி க்ருபைபண்ணி,—கதிவழங்கும்-சிவஸ்வரூப விளக்கமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும்,—கந்தன் - நமது குமாரஸ்வாமியினது,—கழலிணைகள் - இருபாதங்களை,—என்சிரத்திற் கருத்தில்வைப்பாம் - எமது சென்னியில்வைத்து வணங்கி மனசில்வைத்து த்யாநம்பண்ணுவாம்.

மறைஞானதேசிகர் உரை.

சுபக்ஷப் பாயிரம்.

மேற் சுபக்ஷஞ் சொல்லுவான் றொடங்கித்
தெய்வவணக்க முணர்த்துகிறார்.

அறுவகைச் சமையத்தோர்க்கு மவ்வவர் பொருளாய்வேறாங், குறியது வுடைத்தாய்வேதா கமங்களின் குறியிறந்தங், கறிவினி லருளான்மன்னி யம்மையோடப்பனாகிச், செறிவொழி யாதுநின்ற சிவனடி சென்னிவைப்பாம். (க)

இ-ள். அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய்	உலோகாயிதன் பௌத்தன் அருகன் மீமாஞ்சகன் மாயாவாதி பஞ்சராத்ரியாகிய புறச்சமயிக ளறுவருந் தாந்தாங்கொண்ட கோட்பாட்டிக்குத் தக்க மூர்த்திகளுமாய்
வேறாங் குறியது வுடைத்தாய்	முற்கூறிய சமயிக ளிதுவே பரமமான மூர்த்தியென்று குறிக்கத்தக்க கோட்பாட்டிக்கெட்டாத முதலுமாய்
வேதாகமங்களின் குறியிறந்து	வேதாகமங்களிற் கூறிய நினைவுகளுக் கெட்டாத பொருளுமாய், ஆயினறியப்படாதோவென்னில் ?

அறிவினி லருளான்மன்னி	சிவன் றனது காருண்யத்தினாலே பக்குவான்மாக்களுடைய வறிவிலே யநவரதமு நிலைபெற்று
அம்மையோ டப்பனாகிச் செறி வொழியாது நின்ற சிவனடி சென்னி வைப் பாம்.	பார்வதியாரும் பரமசிவனுமாய் விட்டுநீங்காம லநவரதமுஞ் சராசரங்களாகிய வான்மாக்கடோறும் வியாத்தியினாலே யந்நியமா யிருக்கிற சிவனுடைய சீர்பாதங்களை யாஞ் சென்னியில் வைப்பாம்—எ-று.

யாமென்ப தெழுவாய், வைப்பாமென்பது பயனிலை. "தன்மைப்பெயரு முன்னிலைப்பெயருந் தானுந்தொகலுமா மின்னிசைச்செய்யுளினென்றன" என்பதனாற் றன்மைப்பெயர் தொக்கதெனவறிக.

பசுக்களினது நிறம் பலவானாலும் பால் ஒன்றானாற்போலச் சமயங்கள் பலவானாலும் பலத்தைக் கொடுக்கிறவன் சிவனொருவ னென்பதுகருத்து. "அறிவினான்மிக்க வறுவகைச் சமயத்-தவ்வவர்க்கங்கே யாரருள்புரிந்து" என்னுந் திருவாக்கினு முணர்க.

சிவன் சைவத்திற்குத் தாண்டவபூஷணனென்னு மூர்த்தியாயும், பாசுபதத்திற்குத் திருநீறுஞ் சடைமுடியுந்தரித்த மூர்த்தியாயும், மாவிரதத்திற்கென்புமாலைதரித்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்குப் படிகம் புத்ரதீபமணிகடரித்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்நியுமுபவீதமுந்தரித்த மூர்த்தியாயும், பைரவத்திற்குத் தமருகமுஞ் சிலம்புந்தரித்த மூர்த்தியாயும், இவர்களெல்லா முக்கண்ணையு முடையராயிருத்தலால் அவ்வவர் பொருளெனச் சிறப்பித்தார். (௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

---o---

எ - து. புரச்சமயமாகிய உலகாயிதன் புத்தன் சமண ன் மீமாம்சன் மாயாவாதி பஞ்சராத்தி அறுவர்க்கும், சைவம் பாசுபதம் மாவிரதங் காளாமுகம் வாமம் பைரவம் என்னு ம றுவர்க்கு மவரவர்கோட்பாட்டுக்குத்தக்க மூர்த்திகளும் பொ ருளுமாய், அவர்கள் கோட்பாட்டுக் கெட்டாத அடையாளமுள் ள முதலுமாய்; வேதாகமங்களிற் கூறிய அடையாளங்க ளினை வுக்கெட்டாததா யிருக்குமாறு லறியப்படாத சூந்யமோவெ ன்னில்? பக்குவான்மாக்களுடைய வறிவினுள்ளே சிவன் காரு ண்யத்தினாலே விளங்கி நிலைபெற்றுநின்றுள்ளவன். மற்றவி டத்தி லில்லையோவென்னில்? பார்வதியும் பரமேஶ்வரனுமாகி ய விருவரும் சடசித்துக்க ளியாவையினும் வ்யாபகமா யந்தி யமாகவிருக்கிற சிவனுடைய சீர்பாதகமலங்களை யென்தலைமே ல்வைப்பாம்—எ-று.

யாம் - எழுவாய் வைப்பாம் பயனிலை.

பசுக்களின்து நிறம்பலவானாலும் பாலொன்றானாற்போல் சமயங்கள் பலவானாலுஞ் சமயத்துக்குக் கொண்டதெய்வங்க ள் பலவானாலு மதிலே நின்றும் பலத்தைக்கொடுக்குஞ் சிவ னொருவனே! என்பது கருத்து.

இதற்குச்சம்மதி—"அறிவினான்மிக்க வறுவகைச்சமையத்-தவ்வவர்கங்கே யாரருள்புரிந்து" என்னும் பாட்டாலும் "யா தொருதெய்வங்கொண்டி ரத்தெய்வமாகியங்கே, மாதொருபா கனார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள், வேதனைப்படுமிற க்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யும் என்பதனாலுமறிக. சித்- உ—சு, உரு—செ.

வேறுங்குறியது வுடைத்தாயென்றது, சைவத்திற்குத் தா ண்டவபூஷணனென்னு மூர்த்தியாயும், பாசுபதற்குத் திருநீறு

ஞ் சடையுந்தரித்த மூர்த்தியாயும், மாவிரதற்கு என்புமாலைதரி த்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்குப் படிகம் புத்ரதீபந்தரி த்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்நியும் உபவீதத்தையுந் தரி த்த மூர்த்தியாயுட், பைரவத்திற்குத் தமருகமுஞ் சிலம்புந்தரித் த மூர்த்தியாயும்; இவர்களெல்லா முக்கண்ணுமுடையரா யிருத் தலா லவ்வவர்பொருளாய் வேறுங்குறியது வுடைத்தாயென் று சிறப்பித்தாரெனவறிக

* இப்பாட்டும் உரையும் சிலப்ரதிகளிலில்லை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சுபக்ஷ சிவதோத்ரஞ்செய்கிறார்.

அறுவகைச் சமயத்தோர்க்கும் - புறச்சமயிகளறுவர் க்குள் உலோகாயிதன் ப்ருதிவு அப்பு தேயு வாயு நாலுபூதங் களுமே கர்த்தாவென்பன், அருகன் உலகமெலா மிந்தப்படி நித் யமாயிருக்கும்-தானே அருகேசுரன் குருத்வமாத்திரத்திலே கர் த்தாவாயிருப்பனென்பன், புத்தனு மப்படி தானே சுகதா கர் த்தாவென்பன், மீமாங்கிசன் உலகமெலா மிந்தப்படி தானே நித்யமாயிருக்கும்-சரீராதியுற்பத்தியிலே கன்மந் தானே கர்த் தா வென்பன், பாஞ்சராத்ரி ஸ்ரீமத் நாராயணர் தானே யபி ன்னநிமித்தோபாதாநராய் ஜகத்கர்த்தாவாயிருப்பாரென்பன், மாயாவாதி பிரமந் தானே தன்விடத்திலே பரிணாமத்தினாலே தான் விவர்த்தத்தினாலேதான் ஜகத்கர்த்தாவாயிருக்குமென்ப ன், இப்படிச் சொல்லாநின்ற அறுவகைச் சமயத்தோர்க்கும்,— அவ்வவர் பொருளாய் - அவரவர்களாலே சொல்லப்பட்ட கர் த்ருகாரணங்களை யதிஷ்டித்துக்கொண்டு அந்தக் கர்த்ருகார ணஸ்வரூபியாய், பின்னு முட்சமயிகளறுவர் ; அவர்கட்குச் சிவனே தேவதையாகையாற் சைவர்க்குத் தாண்டவபூஷண

னென்னு மூர்த்தியாய், பாசுபதர்க்குத் திருநீறுஞ் சடையுந் தரித்த மூர்த்தியாய், மஹாவிரதர்க்கு என்புமாலைதரித்தமூர்த்தியாய், காளாமுகர்க்குப் படிகம் புத்ரதீபமணிகள்தரித்த மூர்த்தியாய், வாமர்க்கு அக்கியு முபவீதமுந்தரித்த மூர்த்தியாய்; பைரவர்க்குத் தமருகமுஞ் சிலம்புந்தரித்த மூர்த்தியாய்,—வேருங்குறிபது வுடைத்தாய் - வைதிகசைவர்க்கு உருத்ராகாரமாய், சைவசித்தாந்திகட்குச் சதாசிவாதியாகாரமாய், அதின்மிகுந்த பக்குவர்க்கு,—வேதாகமங்களின் குறியிறந்து - வேதாகமங்களிற் கற்பிக்கப்பட்ட மூர்த்திகளைக் கடந்து,—அங்கு - அவ்விடத்தில்,—(அறிவினி லருளான்மன்னி) - அருளால் - சிவசத்தியால் விளக்கப்பட்டு மனோவாக்கதீதமாயிருக்கின்ற,—அறிவினில் - தீக்ஷாவான்களுடைய சிற்சத்தியிலே,—மன்னி - தோற்றி,—அம்மையோடப்பனாகி - சிவசத்திமாத்ரசொரூபமாகி,—செறிவொழி யாதுநின்ற - எங்கும் வ்யாபகமாயிராநின்ற,—சிவனடி - சிவனது ஞானக்கிரியாசொரூபமா யிராநின்ற சத்திரூபசாமர்த்தியத்தை,—சென்னிவைப்பாம் - உன்மனகலைக்குமேலே த்யானம் பண்ணுமற் றியானம்பண்ணுவாம்: நிர்விகற்பமாகச் சிந்திப்பாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ - து. புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னு நான்கனுள் அகச்சமய மொழித் தொழிந்த முக்கூற்றுப்புறங்களிற் றனித்தனி யறுவகைப்பட்ட சமயங்களினின்றுகொண் டவற்றுள்ளும் பலவேறுவகைப்பட வோர்த்துணர்கின்ற அவரவர்கொண்ட முதற்பொருளாய்; அவரின்வேறாகிய பாடாணவாதமுதலிய அகச்சமயத்தார்க்கு இலயம் போகமதிகாரமென்னு மூன்றவத்தையின் முறையே சத்தியு முத்தியோகமும் ப்ரவிர்த்தியு

மென்னுந் தொழில் வேறுபாடுபற்றிச் சிவன் சதாசிவன் மகேசனென்னும் பெயருடைய அருவம் அருவுருவம் உருவமென்னுந் தடத்தக்குறியே குறியாகவுடைத்தாய், சித்தாந்தசைவர்க்கு அத்தடத்தக்குறியேயன்றி வேதாகமங்களின் கருத்திற்கிதமாய், உயிர்க்குயிராய், உயிர்கட்செல்லாமறிவைப் பிறப்பிக்கும் அம்மையப்பனுமாகி, எங்கணுமெக்காலமுஞ் செறிந்து வியாபகமாய் நின்ற சிவபிரான் திருவடியைச் சிரமேற்கொள்வாமென்பதாம்.

பரபக்கத்துட் புறப்புறச்சமயத்தாரையும் புறச்சமயத்தாரையு மறுப்பவே, அம்முறைபற்றி அகப்புறச்சமயத்தாரும் மறுக்கப்பட்டாரே யாவரென்னுங் கருத்தான்; அவரையுமுடன்றழுவ அறுவகைச்சமயத்தெனப் பொதுப்படக் கூறினார்.

ஓர்த்தல் ஆராய்தல்.

விசேடியமடியாகலின் உடைத்தாயென்றார்.

சிவனடியென்றது உபசாரம்.

இதனுள், அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாயெனவே மேற்கூறிப்போந்த பரபக்கத்துப் பொருளும், வேறாங்குறியது வுடைத்தாயெனவே முதற்சூத்திர முதலியவைந்து சூத்திரத்திற் பெறப்படுந் தடத்தப்பொருளும், வேதாகமங்களின் குறியிறந்தெனவே இரண்டுமன்றி யேனைச்சொரூபலக்கணங் கூறும் ஆறாஞ் சூத்திரப்பொருளும், அறிவினிலெனவே ஆன்மஸ்வரூபங்கூறு மேழாஞ் சூத்திரப்பொருளும், அருளான் மன்னியெனவே ஞானதரிசனங்கூறு மெட்டாஞ் சூத்திரப்பொருளும், அம்மையோடப்பனாகியெனவே ஞானமுஞேயமு ஞாதிருவுமாகக் காணப்படு மொன்பதாஞ் சூத்திரப்பொருளும், செறிவொழியாது நின்றவெனவே ஏகனாகிநிற்றல் கூறும் பத்தாஞ்

சூத்ரப்பொருளும் சிவனடி சென்னிவைப்பாமெனவே அரன் மலரடிக்கீழிருத்தல் கூறும் பதினொராஞ் சூத்ரப்பொருளும், சென்னிவைப்பா மென்னுஞ் சொல்லியல்பான் அணைந்தோர்தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்ரப்பொருளுங் குறிப்பான றியக் கிடந்தன.

இங்ஙனந்தொகுத்துக் காட்டுதல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென வுணர்க.

இனி, இதனுட் கூறப்படுமறுவகை வினையெச்சங்களானும் முதல்வனுடைய அறுவகைக் குணங்களுங் கூறப்பட்டன வென்றுரைத்தலுமொன்று. அதுகாட்டுதும்:—

அவ்வவர் பொருளாயென்றதனால் அங்ஙனம் பலவேறுவகைப்பட நிற்கு மநந்தசத்தியாகிய அளவிலாற்றலுடைமை கூறப்பட்டது.

வேறுங்குறியது வுடைத்தாயென்றதனால் அநாதிபோதமநாதிமுத்தத் தன்மையெனப்படும் இயல்பாகவே பாசங்களினீங்குதல் கூறப்பட்டது, நிராமயான்மா வெனப்படும் இயற்கையுணர்வினனாதலு மீண்டேயடங்கும்.

வேதாகமங்களின் குறியிறந்தென்றதனாற் சுதந்திரனெனப்படுந் தன்வயத்தனாதல் கூறப்பட்டது.

அறிவினிலருளான் மன்னியென்றதனாற் சர்வஞ்ஞத்வமெனப்படும் முற்றுமுணர்தல் கூறப்பட்டது.

அம்மையோடப்பனாகி யென்றதனால் அலுத்தசத்தியெனப்படும் பேரருளுடைமை கூறப்பட்டது, விசுத்ததேகமெனப்படுந் தூயவுடம்பினனாதலு மீண்டேயடங்கும்.

செறிவொழிபாதென்றதனாற் பூர்த்தியெனப்படும் வரம்பிலின்பமுடைமை கூறப்பட்டதென் றுணர்க.

இன்னும் விரிப்பிற்பெருகும்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் -
சைவம் பாசுபதம் மஹாவிரதம் காளாமுகம் வாமம் வயிரவம்
என்று சொல்லப்பட்ட வாறுவகைப்பட்ட சமயத்துள்ளார்
க்கும் அவ்வவர்கொண்ட கொண்ட கோட்பாடுகளுக்குத் தக்
கதாக வநுக்கிரகஞ்செய்கிறவத்தமாய்,— வேறுங்குறியது வு
டைத்தாய் - இந்தச்சமயங்கள் குறிக்கத்தக்க கோட்பாடு
களுக்கெல்லைப்படாத சுகஸ்வரூபத்தையுடைத்தாய்,—வேதாக
மங்களின் குறியிறந்து - வேதாகமங்களினாலே யறுதியிடப்ப
ட்ட பொருளுக்கு மெட்டாததுமாய்,— அறிவினிலருளால்மன்
னி - தனது காருண்யத்தினாலே யான்மாக்கள்தோறு நிலைபெ
ற்று நிற்பதாய்,—அம்மைபோடப்பனாகி - ப்ரபஞ்சத்திலுள்ள
வான்மாக்களுக்கெல்லாம் மாதாவும் பிதாவுமாகி,---செறிவொ
ழியாதுநின்ற சிவனடிசென்னிவைப்பாம் - இப்படி சித்தசித்
துக் ளிரண்டினும்விட்டு நீங்காமல் நிற்கிற தம்பிரானுருடைய
ஸ்ரீபாதங்க ளிரண்டையு மென்னுடைய தலையின்மேல் வைத்து
க்கொள்ளாநின்றேன்—எ-று.

அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய். எ-
து. உலகாயிதன் புத்தன் க்ஷமணன் மீமாங்கிசன் மாயாவாதி
பஞ்சராத்ரி என்றுசொல்லப்பட்ட புறச்சமயிகள் சிவனைக்
கத்தாவாகக் கொள்ளாதபடியினாலே யவர்கள்கொண்ட கோ
ட்பாடுகளுக் கறியப்படாத வத்தமாய்; சைவம் பாசுபதம் ம
ஹாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம்என்று சொல்லப்பட்
ட வறுவகைச்சமயத்துள்ளார்க்கு மவ்வவர்கொண்ட கோ
ட்பாடுகளுக்குத் தக்கதாக அநுக்கிரகஞ்செய்கிற வத்தமாயிரு
க்கும் என்றது. இதற்குப்பிரமாணம் திருவாசகம் திருவண்

டப்பகுதி—"இருமுச்சமயத்தொருபேய்த்தேரினை - நீர்நசை தரவருநெடுங்கண்மான்கணம்" எ-ம். "திருத்தகு - மறுவகைச்சமயத்தறுவகையோர்க்கும் - வீடுபேறாய்நின்ற" எ-ம். சித் - பரபக்ஷம் பாயிரம் - ௪௦ - செ.—"இறைவனையுமிறைவனூலியம்பநூலும், மீண்டளவும்பொருளியல்பும்வேண்டுஞ்செய்தி, முறைமைகளும்பெத்தமொடுமுத்தியெல்லா, முதலகிலமக்கியன்றமுயற்சியாலே, சிறையுலவும்புனலிலவத்தோன்றும்பேய்த்தேர்ச், செப்பைபோலுண்டாயபொய்கொண்மார்க்கத், துறைபலவுங்கடாவிடையாற்சொல்லிப்போக்கித், துகடீரவிந்நூலிற்சொல்லகிற்பாம்" எ-ம். சங்கற்பநிராகரணம் பாயிரம்—"அஃதாலந்நூற் றன்மையுன்னிய - மாந்தரிதுவேபொருளென்றதனிலை - யறைதலின்வேற்றோர்பனுவலேற்றோர்க் - கிசையாமாறுபாடுகூறுவரதனாற் - புறச்சமயங்கள்சிறப்பிலவாகி - யருளின்மாந்தரைவெருளுறமயக்கி - யலகைத்தேரினிலையிற்றீரு - மீங்கிவைநிற்க" எ-ம். "நீங்காச்சமய - மூவிருதகுதிமேவியதாமு - மொன்றோடொன்றுசென்றுறுநிலையி - லாறுமாறுவீறுடைத்து" என்னுமதுங் கண்டுகொள்க.

வேறுங்குறியதுவுடைத்தாய். எ-து. இந்தவுட்சமயத்திலுள்ளவிவர்களுக்குஞ் சிவனைக் கத்தாவாகக்கொண்ட வம்மாத்ரமொழிந்து த்ரிபதார்த்த நிர்ணயமுடையவர்க ளல்லவென்றறிக.

வேதாகமங்களின் குறியிறந்து. எ-து. வேதாகமங்கள் மனவாக்குக்காயங்களினு லறிகையினு லப்பாசஞானமெனக் கொள்க.

நெறிவொழிபாதுநின்ற சிவன். எ-து. பெத்தமுத்தியிரண்டிடத்திலும் விட்டுநீங்காமை நிற்பனெனக்கொள்க.

இதுவரை நிர்ணயம்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

அறுவகைச்சமயத்தும் - புறப்புறம் புறம் அகப்புறம் அகமென்று நான்கனு ளகச்சமயமொழித் தொழிந்த முக்கூற்றுப் புறங்களிற் றனித்தனி யறுவகைப்பட்ட சமயங்களினின்று கொண்டு,—ஓர்க்கும் - அவற்றுள்ளும் பலவேறுவகைப்படவர வியந்தறிகின்ற,—அவ்வவர்பொருளாய் - அவரவர்கொண்ட முதற்பொருளாய்,—வேறுங்குறியது உடைத்தாய் - அவரின்வேறாகிய பாடாணவாதமுதலிய அகச்சமயத்தார்க்கு இலயபோகமதிகாரமென்னு மூன்றவத்தையின், முறையே சத்தியு முத்தி யோகமும் ப்ரவிர்த்தியுமென்னுந் தொழில் வேறுபாடுபற்றி சிவன் சதாசிவன் மகேஸ்வரன்என்னும் பெயருடைய அருவம் அருவுருவம் உருவமென்னுந் தடத்தக்குறியே குறியாகவுடைத்தாய்,—வேதாகமங்களின் குறியிறந்து - சித்தாந்தசைவருக்குத் தடத்தக்குறியேயன்றி வேதாகமங்களின்கருத்துக் சுதந்தமாய்,—அங்கறிவினில் - அவ்விடத்துயிர்க்குயிராய்,—அருளான் மன்னி - அருளானிலைபெற்றுயிர்கட்கெல்லா மறிவைப்பிறப்பிக்கும்,—அம்மையோடப்பனாகி - அம்மையப்பனாகி,—நெறிவொழியாதுநின்ற - எஞ்ஞு டெக்காலமுஞ்செறிந்து வ்யாபகமாய்நின்ற,—சிவனடி சென்னிவைப்பாம் - சிவபிரான் திருவடிகளைச் சிரமேற்கொள்வாம்—எ - று.

இஃது கடவுள்வணக்கம் கூறியது.

* இவ்வுரை சிவஞானயோகியர் பொழிப்பிற் கிணங்கச் செய்திருப்பதை அவ்வுரையாற்காண்க.

மறைஞானதேசிகர் உரை.

இதற்குமேன் முன்னூற்சிறப் புணர்த்துகிறார்.

என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத் தென் சித்தத்தே, தன்னைவைத் தருளினாலே தாளிணை தலைமேற்சூட்டி, மின்னமர் பொழில்சூழ்வெண்ணை மேவி வாழ் மெய்கண்டானூல், சென்னியிற் கொண்டுசைவத் திறத்தினைத் தெறிக்கலுற்றாம். (உ)

என்னையிப்பவத்தில்.........தெரிக்கலுற்றாம். எ-து. ஒன்றுக்கு மாகாமலான ஜநநமரணசமுத்ரத்திலே கிடந் தடிபடுகிறவென்னைத் தனது ஞானமாகிற கையைக்கொடுத்தென்னுடைய விதயகமலத்திலே தன்னை யநவரதமு நினைக்கும்படி யிருத்திப் பாசநாசம் பிறக்கும்படி தனது காருண்யத்தினாலே சீர்பாதங்க ளிரண்டினையு மென் றலைமேல் வைத்தருளி; மேகம் பொருந்திய சோலைகள்சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரே பதியாகவிராநின்ற ஸ்ரீ மெய்கண்டதேவநாயனா ரருளிச்செய்த ஞானசாத்ரமான சிவஞானபோதத்தை யெமதுதலைமேல் வைத்துக்கொண் டதன்வழியே சைவசித்தாந்தத்தி னுண்மையின் றிறத்தை யாம் தமிழாலே சொல்லப்புகாநின்றோம்—எ-று.

யாமென்ப தெழுவாய், தெரிக்கலுற்றாமென்பது பயனிலை. "சொல்லேயாயினுங் குறிப்பேயாயினுஞ் சொல்லிமுடிப்ப வேண்டுவதெச்சம்." என்பதனால் தமிழாலென்பது சொல்லெச்சம்.

வடமொழி ப்ராக்ருதம் சௌரஜந்யாத்கதி பைசாசி சூசிகாபைசாசி அவப்பிரஞ்சம் தேசி எனப்பாடபேதம் பலவாயிருக்கவு மிவ்வாசிரியர் தமிழாற் கூறியதென்னெனில்? வட

வேங்கடந்தென்குமரி நடுத்தமிழ்வழங்கும்பூமி யாதலாற் காமிகமுதலிய விருபத்தெட்டுத் திவ்வியாகமங்களை யான்மாக்களறிதற்குச் சிற்றறிவாதலால் ஸ்ரீநந்திகேஸ்வரநாயனார் பன்னிரண்டு சூத்ரமாகச் சநற்குமாரபகவானுக் கநுக்கிரகஞ் செய்தருளினார்.

அதனைச் சர்வான்மாக்களு மெளிதிலறிந் தீடேறும்படிக்கு ஞானசிந்தாமணியாகிய மெய்கண்டதேவநாயனார் பார்த்து முதனூல் கருத்தனளவு மிகுதிப்பொருள் செய்வித்தோன் என்னுமிலக்கணத்தால் முதனூற்பெயரிட்டு வழிநூலாக்கியருளிச்செய்தார்.

அவர் மாணாக்கராகிய வருணந்திதேவநாயனார்திருத்துறையூரென்னுந் திருப்படைவீட்டி லெழுந்தருளியிருந் தம் முன்னூல்வழியே பன்னிரண்டு சூத்ரமாக்கிச் சிவஞானசித்தியென்னுஞ் சிறப்புத்திருநாமஞ் சாத்தித் தமிழாலருளிச்செய்தார்.

அஃதெக்காரணத்தாலென்னில ?—

"சீரார்கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமங்கற்
றோராய்வதுவட சொற்பயின் றோர்க்கெளி தமமொழியைச்
சாராதவருக்குத் தத்துவஞானந் தலைப்படுதற்
கோரார்தமிழ்ச்செய்யுளான் மைந்திர வெழுதுவனே."

என்பதனாலறிக. (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

குருஸ்துதி.

மேகம்பொருந்துஞ் சோலைசூழ்ந்துள்ள திருவெண்ணெய் நல்லூரிலே திருவவதாரஞ்செய்து ஒன்றுக்கும் பற்றுதவென்னை யெழுவகைப்பிறப்பாகிய கடலிலழுந்தாதவகை தனது ஞானமாகிய கையினாலே யெடுத்து ஸந்ததமுந் தன்னை யென்னிது

யத்திலே சிந்திக்கவைத்துக் கிருபையினாலே தம்முடைய ஸ்ரீ பாதங்களை யென்னுடைய புன்றலைமேல்வைத்தருளும் மெய் கண்டதேவநாயனா ரருளிச்செய்த சிவஞானபோதமென்னுஞ் சாத்திரத்தை சிரஸாகவஹித்துக்கொண்டு சைவத்திற்றிரிபதார்த்த சதுஷ்பாதங்களையுஞ் சொல்லாநின்றேன் என்றிதன்பொருள்.

யாம் - எழுவாய், பயனிலை - தரிக்கலுற்றும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தமது குருவணக்கங்கூறி முன்னூற்சிறப்பு முரைக்கின்றார்.

(செம்பரத்தைப் பூநிறமா யொருமுகமு மிருபுயமுமுடையராகிச் செம்பட்டுஞ் செஞ்சந்தனமுஞ் சிவந்தமாலையுந் தரித்தவராகிய குருமூர்த்திபா லதிஷ்டிக்கப்பட் டிருந்த ரூபியாயிருந்து) அருளினாலே - தனது தீக்ஷாகன்மத்திலே விளங்காநின்று தீக்ஷையென்னு மியர்சைப்பெயராயுடைய சிவசத்தியால்,—என்னை - அநாதியிலே பசுத்துவத்தினாலே யஞ்ஞானியாயிருக்கிற வென்னை,—இப்பவத்திற் சேராவகை - இந்த ஜநநமரணங்களுக் கேதுவாயிருக்கின்ற மலமாயாகன்மங்களோடு பொருந்தாமலிருக்கும்படி ஜடத்வசோதனைசெய்து,—எடுத்து - சமனாந் தம் பாசக்கூட்டங் கூடாதவகை சின்மாத்ர சுத்தகேவலமாய்ச் சேவிக்கப்பண்ணிச் சேவித்துநின்ற,--என் சிந்தைத்தே- வித்யாதத்வமென் றிசைக்கப்படு முன்மனமூலத்துச் சின்மாத்ரமா யான்மாவென்று செப்பப்படு மெனதான்ம தத்வத்திலே,—தன்னைவைத்து - உன்மனகார வித்யாதத்வத்து பரியுறுந் தனைத்து பரசிவஸ்வரூபத்திற் கொத்து விரிதல்முதலாகிய குணங்களோடுகூடிப் பரமென்றுரைக்கப்படு மெனது வித்யா தத்வத்தை விளக்கித் திரும்ப,—அருளினாலே - தனது சத்தி

சங்கற்பத்தினாலே,—தாளிணை-ஒவ்வொன்று மும்மூன்றாய்ச் சுத்தசிவ சாட்குண்ணியரூபமாகிய ஞானசத்தி க்ரியாசத்தி யிருசத்தியாகிய வொருசத்திக்கொத்து, அப்படி சாட்குண்ணிய பரிபூரணமாகிய சிவத்வத்தோடு கூட்டிச் சுத்தசிவமென்று செப்பப்படுமெனது சிவதத்வத்தை,—தலைமேற்சூட்டும் - முன் சொன்ன பரமாகிய வித்யாதத்வத்துக்கும் பரிமுடிபோலச் சிறப்பித்துப் பிரகாசிப்பிக்கும்,—மின்னமர் பொழில்சூழ்வெண்ணெய்- மின்பொருந்திய மேகங்கள் படியாநின்ற சோலைசுற்றிய திருவெண்ணெய்நல்லூரின் கண்ணே,-மேவிவாழ் மெய்கண்டான் - பொருந்திவாசம்பண்ணுநின்ற சத்தியதரிசியென்னும் பெயருடைய பரமாசாரியனது,—நூல் - வடமொழிச் சிவஞான போதத்தைத்திரித்த தென்மொழிச் சிவஞானபோதத்தை,— சென்னியிற்கொண்டு (சென்னியிற்கொண்டென்பது பூஜ்ய வார்த்தை)செவிக்கேற்கக்கேட்டு மனதிலுட்படுத்திச் சிந்தித்துத்தெளிந்து,—சைவத்திறத்தினை - சைவாகமத்திலே சொல்லுந் திரிபதார்த்த லக்ஷணத்தை,—தெரிக்கலுற்றாம் - விரித்துச் சொல்வாம்.

இந்த விருத்தத்திற் கிதுவே கருத்தென்பது காண்பிப்பாம்.

"என்னை யிப்பவத்திற் சேராவகையெடுத்து" என்பதனாற் சமனாந்தபாசமுத்தி சொல்லப்பட்டது.

" என்சித்தத்தே தன்னைவைத்து" என்பதனால் உன்மனாவதியுள்ள சிகாச்சேதமுன்னாக நிஷ்கள சர்வாதிக்கிராந்த விந்துக பரசிவத்திலே யோசனைசொல்லப்பட்டது.

"தாளிணை தலைமேற்சூட்டும்" என்பதனால் சிவதீவ்யாபிவியத்தி லக்ஷண நிஷ்களாதீத சுத்தசிவமாதல் சொல்லப்பட்டது.

இதுவன்றி "என்சித்தத்தே தன்னைவைத் தருளினாலே"
என்றது, இருதயத்திற் சிவரூப ஸ்வரூப குருத்யானஞ்செய்
வித்து என்றுபொருளுரைத்தாற் சமனாந்த முத்திப் பொரு
ள்கொடுக்கும் எடுத்து என்றதோடு மாறுபடும்.

"தாளிணைதலைமேற் சூட்டும்" என்பதற்குத்தனதுபாதங்க
ளைச் சிரசிலேவைக்கும்என்று பொருளுரைத்தாலுமப்படிப் பொ
ருள் பகைத்து மாறுபடும்.

அதனாற் பொருள் பகைத்தவிடத்தில் லக்ஷணையினா
ற் பொருளுரைப்பதே யியல்பு. அதுவன்றிப் பொருள் பகை
த்தவிடத்துஞ் சொற்பொருளிருந்தபடி பொருளுரைக்கிற் க
ட்டில் கூப்பிட்டதென்றவிடத்து முக்யப்பொருளுரைத்தா ல
ப்பொருள் பகைக்கும்; ஆதலா லப்பொருள்விட் டாதா
ரலக்ஷணையிற் கட்டிலிருக்கும் புருடன்என்று சவுணப்பொரு
ளுரைக்கவேண்டுமிடத்து மப்பொருள்விட்டுக் கட்டில் தானே
கூப்பிட்டதென்று முக்கியப்பொருளுரைக்கவேண்டும். ஆயுக்கி
ருதம் என்றவிடத்துங் காரணவிலக்கணையினாலே ஆயுவுக்குக
காரணமாகிய க்ருதமென்று பொருளுரையாது ஆயுத்தானே க்
ருதமென்று பொருளுரைக்கவேண்டும். நூலுடுப்புடையன் எ
ன்றவிடத்துங் காரியவிலக்ஷணையினாலே நூலினுண்டாகிய பு
டவையென்று பொருளுரையாது நூல்தானே யுடுப்பனென்று
பொருளுரைக்கவேண்டும். கங்கையிலே யிடைச்சேரி என்றவிட
த்துஞ் சமீபவிலக்ஷணையினாலே கங்காதீரத்திலே யிடைச்சேரி
யென்று பொருளுரையாது கங்காஜலப் பிரவாகத்தில் யிடைச்
சேரியென்று பொருளுரைக்கவேண்டும். பிச்சை சிதம்பரத்தில்
வசிப்பிக்குது என்றவிடத்து முபகாரவிலக்ஷணையினாலே பிச்
சை வாசோபகாரமா யிருந்ததென்று பொருளுரையாது பிச்
சையிடித் திருத்தித்தென்று பொருளுரைக்கவேண்டும். சிங்க

ந்தானே புருடனென்றவிடத்துஞ் சாமர்த்திய சாதுர்யவிலக்ஷணையினாலே சிங்கத்திற்கொத்த சாமர்த்தியவா னென்று பொருளுரையாது சிங்கந்தானே புருடனென்று பொருளுரைக்கவேண்டும். இதுவுமன்றி விடத்தைப்புசி இவன்வீட்டிற் புசியாதே என்பதுமுதலர்த்தவாதத்தும், மலைதலையினாற் பிளப்பன் என்பதுமுதல் துதிவாதத்தும், சொற்பொருளிருந்தபடி பொருளுரைக்கவேண்டும்; அப்படி யுரைத்தா லெல்லாநியம முறைமை தப்பும். ஆதலால் தாளிணைதலைமேற்சூட்டும் என்றவிடத்துஞ் சாம்பவதீக்ஷையிற் றிருவடி சிரசிற்சூட்டுமிடத்துச் சிவசத்தி குருபாதத்திற் பூசிக்கப்படுமாதலாற் குருபாதமாகிய வாதாரவிலக்ஷணையினாற் சிவசத்தியென்றே பொருளுரைக்கவேண்டும். அப்படிப் பொருளுரைத்தாலுஞ் சிவசத்தி, சங்கிராந்திசொல்லும் பாசுபதிமதமாம். சிவனைக்குறித்தென்றலும் சிவாவேசஞ்சொல்லுங் காபாலமதமாம். ஆதலாற் காரியவிலக்ஷணையினாலே சிவசத்தியால் விளக்கப்பட்ட சிவத்வரூப வான்ம சிற்சத்தியைச் சூட்டும்என்று முன்னுரைத்தபடிக்கே பொருளுரைக்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. பவமாயக்கடலிலழுந்துகின்ற வென்னை அதன்கணழுந்தாதவண்ணங் கருணைக்கையாலெடுத்து, என்னறிவின்கண்ணே தற்சொரூபத்தை விளக்குதற்கெழுந்தருளிவந்து, திருவடி சென்னியிற் சூட்டித் தீக்ஷைசெய்தருளிய வெண்ணெய் மெய்கண்டதேவன் மொழிபெயர்த்துரைத்தருளிச்செய்த சிவஞானபோதநூலை; ஏனையாசிரியன்மார் செய்த பிரமாணநூல்கட்கெல்லாஞ் சிரத்தானமாகக் கொண்டு, அதனிற் கூறப்படுஞ் சைவாகமப் பொருட்கூற்றை விளக்குவா மென்பதாம்.

இந்நூலுக்கு வழிகூறியவாறு.

எடுத்தென்றது குறிப்புருவகம்.

வைத்தென்றது உபசாரவழக்கு; "அன்போடிபைந்த வழக்கு" என்றாற்போல.

சென்னியின் இன் உவமவுருபு.

நிரம்பவழகியருரை வருமாறு.

இதனாற்சொல்லியது சிவஞானபோதத்தி லருளிச்செய்யப்பட்ட சைவசித்தாந்தத்தி னுண்மையை யானு மிந்நூலிலே விரித்துச்சொல்லுகிறேனென்னு முறைமையை யறிவித்தது.

என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத்து - ஒன்றுக்கும் பற்றாதவென்னை யிந்தச்சின்னங்களில்வந்து பிரவாதபடி யெடுத்து,—என்சித்தத்தே தன்னைவைத்து - என்னுடைய விதயத்திலே தன்னை யிருத்தி,—அருளினாலே தாளிணை தலைமேற்சூட்டும் - தன்னுடைய காருண்யத்தினாலே தனது சீபாதங்க ளிரண்டையு மென்னுடைய பொல்லாத தலையின்மேல் வைத்தருளின,—மின்னமர்பொழில்சூழ் வெண்ணெய்மேவிவாழ் மெய்கண்டானூல் - மின்பொருந்தப்பட்ட சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரைத் திருப்பதியாகப்பொருந்தி வாழ்கின்ற மெய்கண்டதேவ நாயனா ரருளிச்செய்த சிவஞானபோதத்தை,—சென்னியிற்கொண்டு - என்னுடைய தலைமேல் வைத்துக்கொண்டு,—சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம் - சைவசித்தாந்தத்தி னுண்மையைச் சொல்லப்புகாநின்றேன்—எ-று.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

என்னை - பவமாயக்கடலு ளழுந்துகின்ற வென்னை,—இப்பவத்திற் சேராவகை - இப்பவக்கடற்க ணழுந்தாதவண்ணம்,—அருளினாலெடுத்து - கருணைக்கையா லெடுத்து,—என்சித்தத்தே - என்னறிவின்கண்ணே,—தன்னைவைத்து - தற்சொரூபத்தை விளக்குதற் கெழுந்தருளிவந்து,—தாளினை - திருவடிகளை,—தலைமேற்சூட்டும் - சென்னியிற்சூட்டித் தீக்கைசெய்தருளிய,—மின்னமர் - மின்பொருந்திய மேகந்தங்குதற் கிடமாகிய,—பொழில்சூழ்-சோலைகள் சூழ்ந்த,—வெண்ணெய்மேவிவாழ் - திருவெண்ணெய்நல்லூரென்னுந் திருப்பதியில் விரும்பிவாழ்கின்ற,—மெய்கண்டானூல் - மெய்கண்டதேவன் மொழிபெயர்த்துவைத்தருளிச்செய்த சிவஞானபோத நூலை,—சென்னியிற்கொண்டு - ஏனையஆசிரியர்கள்செய்த ப்ரமாணநூல்கட்கெல்லாஞ் சிரத்தாநமாகக்கொண்டு,—சைவத்திறத்தினை - அதனிற் கூறப்படுஞ் சைவாகமப்பொருட்கூற்றை,— தெரிக்கலுற்றாம் - விளக்குவாமென்பதாம்.

இது நூற்கு வழிகூறியது.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

அவையடக்கம்.

நீடுபுகழுலகுதனின் மைந்தர்மாதர்
    நேயமொடுதாம்பயந்தபுதல்வர்வாயிற்
கூடுமொழிமழலையொடுகுழறியொன்றுங்
    குறிப்பரிதாயிடினுமிகக்குலவிப்போற்றி   ௯

மாடுநமிக்கிதுவென்றுகொண்டுவாழ்வ
ரதுபோலமன்னுதமிழ்ப்புலமையோரென்
பாடுகவிக்குற்றங்கள்பாராரிந்நூல்
பாராட்டாநிற்பரருட்பரிசினாலே.

பெரிதாகிய புகழையுடைய வுலகத்தின்கண் மக்களு மகளிர்களும் விருப்பத்தினாலே தாங்கள்பெற்ற குழந்தையினது வாக்கிலுண்டா மதலைச்சொல்லானது அவ்யத்தமாகச் சந்தத்தையு மருத்தத்தையுந் தெரியவரிதாயினு மகிழ்ந்து துதித்திதர வாக்கினாலே வியத்தமாயிருக்கிற சப்தங்களைக்கேட்பினு மிப்பிள்ளையினுடைய மழலைச்சொல்லே நமக்கினிதென்று சந்தோஷித்துக்கொண்டு வாழ்வர். அதுபோலத் தமிழுணர்ந்த பெரியோருமென்னாற் சொல்லப்பட்ட விந்நூலுக் கெழுத்துச் சொற்பொருளியாப் பலங்காரமென்னப்பட்ட பஞ்சாதிகாரக் குற்றங்கள் பாரார்கள்; சிவனருளாற்பண்ணுங் க்ருத்யங்களை யிந்நூலிற் கூறுகையா லவ்வியல்பினு லிந்நூலைப் பரிபாலனம் பண்ணுநிற்பர்.

௰

நூற்கதிகாரியும் - நூல்வழியும் - நூற்பெயரும்.

போதமிகுத்தோர்தொகுத்தபேதமைக்கே
பொருந்தினோரிவர்க்கன்றிக்கதிப்பாற்செல்ல
வேதநெறியெனு மவர்கட்கறியமுன்னு
ளிறைவனருணந்திகணத்தியம்பநந்தி
கோதிலருட்சநற்குமாரர்க்குக்கூறக்
குவலயத்தினவ்வழியெங்குருநாதன்கொண்டு
தீதகலவெமக்களித்தஞானநூலைத்
தேர்ந்துரைப்பன்சிவஞானசித்தியென்றே

ஞானாதிகாரியாகிய சாம்சித்தர்க்கும், உலகவாழ்வே மெய்யென்றுந் தேகமே யான்மாவென்றுமிருக்கும் ப்ராக்ருத ஜநங்களுக்குமன்றி; மோக்ஷத்துக்கேது வென்னையென்று சிந்திக்கும் வைநயிகர்க்கறியும்படி யாதிகாலத்திற் சர்வலோக ஸ்வாமியாகிய ஸ்ரீகண்டபரமேஸ்வரன் ஸ்ரீநந்திகேஸ்வரர்க் கநுக்கிரகம்பண்ண: அவர் க்ருபாமூர்த்தியாகிய சநற்குமாரபகவானுக்கு அநுக்கிரஹிக்க, அக்குருபரம்பரையினா லென்னுடைய குருவாகிய மெய்கண்டதேவ சிவாசாரியனெனக் குபதேசம்பண்ணின ஞானசாஸ்த்ரத்தை யதர்வத்தாகவுணர்ந்து சிவஞானசித்தியென்னு நாமமாக விச்சாஸ்த்ரத்தைக் கூறுகின்றேன்.

சாம்சித்தராவார் - சாமாந்யமான இஷ்டாபூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான விசிஷ்ட சிவதருமமாகிய சரியை க்ரியா யோக மியற்றி யதனான் நின்மலாந்தக்கரணராய்; அந்தத் தேகம்விட்டு மந்த்ரஞானங்கெடாமல் மீளவும் ஜநிக்கும்பொழுது மந்த்ரஞானத்துடனே ஜநித்து சிவபாவனை பண்ணுமவர்.

வைநயிகராவார் - விநயசீலரா யுலகத்துக்குயர்ந்தோர் போதிக்குஞானத்தினானுங் குருபதேசத்தினானுஞ் சிவசாஸ்திரத்தினானு நித்யாநித்யவஸ்து விவேகிகளாய், மனோவாக்குக்காய வ்யாபாரங்களினாற் சர்வகன்மங்களையுந் துடைக்கப்பட்டவர்களாகிக் கிரமத்தின் மோக்ஷத்தையடைபவர்.

ப்ராக்ருதராவார் - பூமியில்ஜநித்த மேற்சொற்பனத்தின் ஞானம்போ லறிந்தறியாமலுங் கிளிஞ்சலை வெள்ளியென்று அறிவதுபோல விபரீதஞானியுமா யதனாலே தேகாதிகளை யான்மாவென்றும் ப்ரகிருதி § ஜந்யவஸ்துக்களையே பரமென்று மெண்ணுமவர்.

*ததோக்தம் ஶ்ரீமத்பௌஷ்கரே—விஶிஷ்டசேஷ்டாஸம்ஸ்கார ஸஞ்ஜீவிதசேதஸ:। ஶக்த்யம்ஶோந்மேஷிதே ஸாதிதே ஹ்ருதயாப்ஜே விசக்ஷண:॥ போதயேச் சக்திபாதேந ஸ்ரீகுரு ஸஹஜாதிர்வேதயிதா ஶக்த்யா। ஸம்ஸாரஜீர்ணதா வேதயிதா ஶிவாத்மகவேஷ்டயா॥ ப்ராக்ருத தாதேஹஸம்பந்தேவ த்வகஸம்பாத்யநோபாயஸித்தி.

§ ஜந்நியவஸ்துக்கள் - உண்டானவஸ்துக்கள்.

* "நீடுபுகழ்" "போதமிகுத்தோர்" என்னுமிவ் விரண்டு செய்யுளும் பரபக்ஷத்தன; இவ்வுரையாசிரியர் இதனை வருவித் துரையுரைத்தனர்.

மறைஞானதேசிகர் உரை.

மேனூற்பய னுணர்த்துகின்றார்.

பண்டைநற் றவத்தாற்றேன்றிப் பரமனைப் பத்திபண்ணும், தொண்டரைத்தானேநாய கதியினிற் றெருகுப்பன் மார்க்கர், கண்டநூ லோதிவீடு காதலிப் பவர்கட்கீசன், புண்டரி கத்தாள்சேரும் பரிசினைப் புகலலுற்றும். (க)

(இ-ள்.) பண்டைநற் றவத்தாற்றோன்றிப் பரமனைப் — ஆன்மாக்கள் முன்ஜநநத்தி லார்ஜ்ஜித்த தபோபலத்தாற் பூமியின்கணற்சாதியிற்றேன்றி ஞாநசாரியனை யடைந்து சரியை முதலியவற்றாற் சிவனை வழிபடாநின்

பத்தி பண்ணுந் தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன் — ற வெண்வகைப்பத்திமையுடைய பக்தஜநங்களைச் சிவன் றானே தூயகதியாகிய சுத்தாத்வாவினுண்டாகிய போகங்களைப் புசிப்பிப்பன்

மார்க்கர் கண்ட நூலோதி விடுகாதலிப்பவர்கட்கீசன் புண்டரிகத் தாள்சேரும் பரிசினைப் புகலலுற்றாம் — அணு சதாசிவ ரட்டவித்யேஶ்வரர்களாற் பரம்பரையாக வுண்டாக்கப்பட்ட இவ் யாகமங்களை யோதி மோட்சத்தை யடைவோமென் றிச்சையுடைய வான்மாக்கட்கு முன்னுள்ள சிவத்வாபிவியத்தியைப் பொருந்துமுறைமையை யாஞ் சொல்லப்புகாநின்றாம்—எ-று.

மார்க்கரென்பது ஆசாரியர்களையுஞ் சொல்லப்பெறும்.

ஈசன் - எழுவாய், தொகுப்பன் - பயனிலை.

யாம்-தோன்றாவெழுவாய், புகலலுற்றாம்-பயனிலை. (௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல்விஷயப் பிரயோசந சம்பந்தாதிகாரிகளைக் கூறுகின்றது.

பண்டைநற் றவத்தாற்றோன்றிப் பரமனைப்பத்திபண்ணுந் தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன் - பூர்வஜந்மத்திற் சரிதை கிரியா யோகங்களைச்சாதித்த பெயர் வரப்பிரசாதத்தினாற் சுக வாமதேவ ஜடபரதாதிகளைப்போற் பூர்வ ஜந்ம ஸ்மரணையுடனே பிறந்து,சிவனிடத்தநந்ய பத்திபண்ணுஞ் சாம்சித்தரை; யாசாரியமூர்த்தியை யபேக்ஷியாமற் சிவன்

றன்மையிற்றுனே விஞ்ஞானகலர் ப்ரளயாகலர்க் கநுக்கிரஹம் பண்ணுவதுபோல வநுக்கிரகம் பண்ணுவர்,—மார்க்கர்கண்டநூலோதி வீடுகாதலிப்பவர்கட் கீசன் புண்டரீகத்தாள்சேரும் பரிசினைப்புகலலுற்றும் - பூர்வஜந்மத்திலே சிவதர்மங்களை யநுஷ்டித்து ஞானசித்தியின்பொருட்டு பூமியிலே ஜநித்து குருவினாலே தீக்ஷிதராகிச் சன்மார்க்கஸ்தரா யுள்ளவர்கள் பண்ணப்பட்ட ஞானசாஸ்த்ரத்தை யோதி யறிந்து மோக்ஷத்தை யடையவேணுமென்கிற விச்சையுடைய வைநயிகர்ச்கு பரமேஸ்வரனுடைய ஸ்ரீபாதகமலங்களைப் பொருந்துமுறைமையைச் சொல்லுகின்றேன்.

சிவன் - எ-ய், தொகுப்பன் - ப-ஸ. யாம் - தோ-எ-ய், புகலலுற்றும் - ப-ஸ.

ஈசன் எனவே பதி, புண்டரீகத்தாள்சேர எனவே சேர்பவன்-பசு என்று சொன்னது, சேரும் பரிசு எனவே பாசத்தை நீங்குமுறைமை என்றது; இது த்ரிபதார்த்தம்.

இந்தச் சாஸ்த்ரத்திற்கு விஷயம் திரிபதார்த்தம், ப்ரயோசநம் - சிவசாயுச்யம், அதிகாரி - வைநயிகன், சம்பந்தம்- சொல்லப்படுகிறதுஞ் சொல்கிறது என்னும் ப்ரதிபாத்ய ப்ரதிபாவகபாவம், நற்றவம் - கன்மநிஷ்ட தபசன்றியின் ஞானநிஷ்டமான தபசை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பண்டைநற்றவத்தால் - மாயாதேகபோக சம்பந்தத்தினாலே முந்திய ஜன்மத்திலே மலபரிபாகமானது சற்றே தோற்றுநின்றளவி லதற்கநுகூலமாகிய தீக்ஷைமுன்னாகத்தா னில்லாமற்றான் சைவப்பிரகாரமாய்த்தான் வைதிகப்பிரகாரமாய்த்தான் பூசாவிரதமுதலியவற்றினாலே சிவலோகமுதலாகிய தாநங்களிலே போகம்புசித்துத் திரும்ப,—தோன்றி - பூலோ

கத்திலே வந்து ஜன்மித்துத் தீவிர தீவிரதர மலபரிபாகத்தினாலே,—பரமனைப் பத்திபண்ணும் - சிவனைக்குறித்துத் தியானம்பண்ணும்,—தொண்டரை - அடியார்களை,—தானே - குருவதிஷ்டானமன்றியிலே நிரதிகரணமாகத் தானே சத்திசங்கற்பமாத்திரமாயிருக்கின்ற நிரதிகரணதீக்ஷையினாலே தீக்ஷித்துச் சுத்தபுவனத் திருத்தியு மிருத்தாமலும்,—தூயகதியினில் - சிச்சமானரூபவியத்த சிற்சத்திரூப சிவதத்வத்திலே,—தொகுப்பன் - கூட்டுவன், சாத்திரந் தேவையில்லை. தீவிர தீவிரதர மந்த மந்ததர மலபாகத்தினாலே சாதி கரணசத்தியோ நிர்வாணதீக்ஷையினாலேதான், சத்தியோ போகதீக்ஷையினாலேதான், தீக்ஷிதற்கட்கு மொன்றும் வேண்டுவதில்லை யாதலால் சாதி கரணவசத்தியோ நிர்வாணதீக்ஷையினாலே தீக்ஷித்துக் கொண்டு ஆரியபாஷை தெறியாதபடியால்,—மார்க்கர் - சைவசித்தாந்தமார்க்கசரிசிகளா யிருக்கின்ற தேசிகர்,—கண்டநூலோதி - தமிழ்ப்பாஷையிற் பண்ணின சாத்திரத்தைப்படித்ததனாற் பதிபசுபாசலக்ஷணங்களை யறிந்துதான், ஒருபிரதேசங்களை யறிந்துதான், அவரவர் மரியாதியில்வந்த வந்தந்த ஞானங்கொண்டு—அந்தந்தஞானஞ் சாக்ஷாத்காரரூபமாய்ப் பலத்துக்குவரும்பொருட்டு ஒன்றுக்கொன்று ஜககாரியாயிருக்கின்ற சரிதை க்ரியை ஸாலம்ப நிராலம்ப சிவயோகங்களை யநுஷ்டித்து,—வீடுகாதலிப்பவர்கட்கு-முத்தியை விரும்புமவர்களுக்குச் சாக்ஷாத்தான பதமுத்தியிலிருந்து பாரம்பரியத்தினாலேதான்,—ஈசன்புண்டரீகித்தாள் - ஓதனத்தினது பாகந் தேவதத்தனதுபாகம் என்பதுபோல ஈசன் புண்டரீகத்தாள் என்றுஞ் சொல்லப்படுமாதலால், இருளினூர்க்கு விந்து சூரியனது கிரணத்தினா லலர்ந்த தாமரைப்பூபோன்று மலசத்தியினூர்க்கு விந்தீசனது சத்தியா லலர்ந்த ஞானக்கிரியாரூபசொரூப சிற்

சத்ருபவியத்த சிவதத்வத்தை,—சேரும்பரிசின் - பொருந்து முறைமையை,—புகலலுற்றும் - சொல்லுவாம்.

ஆகையாலன்றோ சத்தியோ நிர்வாணதீக்ஷையிலே தேசிகனுக்கன்றி சாதகனுக்கு ஞானம் வேண்டுவதில்லை; யாதலாற் றேசிகனுக்கு ஞானம் ப்ரதாநம்.

சாதகர்களுக்கு தீக்ஷை ப்ரதாநமென்றும் ஸ்வாயம்புவ வியாக்நத்திற் சத்தியச்சோதிபாதங்களால் விஸ்தரித்திருக்கையூல், ஞானம் தீக்ஷாகன்மத்துக்கங்கம், தீக்ஷாகன்மமங்கியென்பதும்; மலந் திரவ்யமாதலால் நேத்திரபடலம்போல ஞானகோடிகளாலும் போகாதென்பதும் மேல்விஸ்தரித்துச்சொல்வாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. சாமுசித்தர் வைநயிகர் ப்ராகிருதரென்னுமிவருள், ஆற்றலுமறிவுங்காதலுமில்லாத ப்ராகிருதரையொழித்து, ஒழிந்தவிருவரின் முற்செய்தவவிசேடத்தாற் சாமுசித்தராய்ப் பிறந்து விடுகாதலிக்குஞ் சிவபத்தரை: விஞ்ஞாநகலர் ப்ரளயாகலரைப்போல நூல்வழியானன்றித் தானே சிவகதியிற் சேர்த்துவனாகலின் அவர்க்கு நூல் வேண்டாமையான், முறைமையின் மந்ததரமுதலிய சத்திநிபாதமுடையவராய் நூல்வழியான் முத்தி பெற விரும்பும் வைநயிகராயினார்க்குச் சிவகதி கூடு முறைமையினை ஈண்டு வகுத்துக் கூறுகின்றாமென்பதாம்.

சன்மார்க்கரை மார்க்கரென்றது தலைக் குறை.

சன்மார்க்கராவார் ஞானிகள்.

கண்ட நூல் அவர்களெல்லாம் பிரமாணமென்றறிந்து கைக்கொண்ட நூல்.

இதனானே நுதலியபொருளுங்கேட்போரும்பயனுங் கூறியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இதனாற் சொல்லியது இந்நூ லார்க்குச் சொன்னதென்ன? விண்ணோர்க்கென்று மேலருளிச்செய்கிறார்.

பண்டைநற் றவத்தாற்றோன்றி - முன்ஜநநங்களிற் சாத்திரஞ்சொன்ன முறைமையிலே நன்றாக தவசுகளைப்பண்ணி யந்த் பலத்தாலே பூமியின்கண்ணே வந்தவதரித்து,—பரமனைப் பத்திபண்ணுந் தொண்டரை - பரமேஸ்வரனளவிலே மிகுந்த வழிபாடுசெய்யு மடியார்களாயுள்ளார்களை,—தானேதூய கதியினிற்சேருப்பன் - அந்தப் பரமேஸ்வரன் றானே சுத்தமாயிருக்கிற சாயுச்சயத்திலே கூட்டுவன்,—மார்க்கர் கண்டநூலோதிவீடு காதலிப்பவர்கட்கு - சன்மார்க்கத்தி லுள்ளா ராராயப்பட்ட ஞானசாத்ரங்களையோதி மோக்ஷத்தை யெப்படியே பெறுவோமென்கிற வாசையினுடனே தேட்டத்தையுடையவர்களுக்கு,—யீசன் புண்டரீகத்தாள் சேரும் டரிசினைப் புகலலுற்றாம் - தம்பிரானுருடைய சீபாதகமலங்களைப் பொருந்து முறைமையைச் சொல்லப்புகாநின்றேன்—எ-று.

இதனாற் சொல்லியது இந்நூலுத்தமர்க்கு மதமர்க்கும் வேண்டாவேண்டும் மத்திமர்க்கு வேண்டுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(சாமுசித்தர், வைநயிகர், ப்ராகிருதரொன்னுமிவரூ ளாற்றலு மறிவுங் காதலுமில்லாத ப்ராகிருதரை யொழித் தொழிந்த இருவரில்) பண்டைநற்றவத்தால் - முற்செய்த தவவிசேடத்

தால்,—தோன்றி - சாம்சித்தராய்ப் பிறந்து,—பரமனை - முத ல்வனிடத்தில்,—பத்திபண்ணும் - வீடுகாதலித்துப் பத்திபண்ணுகின்ற,—தொண்டரை - சிவபத்தரை,—தானே-விஞ்ஞான கலர் ப்ரளயாகலரைப்போல நூல்வழியானன்றித் தானே,—தூயகதியினிற் செருகுப்பன் - சிவகதியினிற் சேர்த்துவருகலின் அவர்க்கு நூல்வேண்டாமையின்,—மார்க்கர் - ஞானிகள்,—கண்ட நூலோதி-ப்ரமாணமென் றறிந்தகைக்கொண்ட நூலோதி யதன்வழியான்,—வீடுகாதலிப்பவர்கட்கு - முறைமையின் மந்ததரமுதலிய சத்திநிபாதமுடையவராய் முத்திபெறவிரும்பும் வைநயிகராயினூர்க்கு,—ஈசன் - சிவனுடைய,—புண்டரிகத்தாள்சேரும் பரிசினை - தாமரைமலர்போன்ற திருவடிகூடுமுறைமையினை,—புகலலுற்றும் - வகுத்துக்கூறலுற்றும் என்பதாம்.

இதனானே நுதலியபொருளுங் கேட்போரும் பயனும் கூறியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

மேலவையடக்க முணர்த்துகிறார்.

மறையினு லயனுன்மாலான் மனத்தினுன் வாக்கான்மற்றுங், குறைவிலா வளவினுலுங் கூறெரணு தாகிநின்ற, விறைவனர் கமலபாத மின்றியா னியம்புமாசை, நிறையினர் குணத்தோர்க்கெல்லா நகையினை நிறுத்துமன்றே. (ச)

மறையினுல்.........நிறுத்துமன்றே. எ-து. நாலுவேதங்களாலும் பிரமாவாலு மாயனுலு முக்குணங்களுடன் கூடிய

சங்கிலிட்ட முதலிய சூக்ஷ்மமான மனத்தினாலும் வாக்கியமாகிய வுரையளவைகளாலு மற்றக் காண்டன்முதலிய வளவைகளாலு மின்னபடியென் றளவிடுதற் கரிதாகிநின் றிவைகளாலளவிடப்படாதிருக்கின மிப்பொழுதியான் கர்த்தாவினுடைய ஸ்ரீபாதகமலங்களை யடைகையின்பொருட் டிந்நாலின்க ணவ்சம்பித்துச்சொல்லு மாத்ரவுமெத் ன்மைக்காக்கு மெனின்? நிறைவினையடைந்த வியற்கையையுடைய ஞாதாக்களானவர்க்குஞ் சிரிப்பையுண்டாக்கும்—எ-று.

அவையகத்தாரொல்லார்க்கும் வழிபடுகிளவிசொல்லுத லவையடக்கமெனப்பெறும். "அவையடக்கியலே யரிறபத்தெரியின்-வல்லார்கூறினும்வகுத்தனர்கொண்மினென் - றெல்லாமாந்தர்க்கும் வழிமொழிந்தன்றே" என்றார்தொல்காப்பியனாரெனவுறிக.

அன்றென்கிளவியு மின்றென்கிளவியு மாமென்கிளவியு மாருமென்ப.

ஆசை - எழுவாய், நிறுத்தும் - பயனிலை. (ச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலவையடக்கமும், சிவன் வாச்சூமனதீதனென்பது மு-து.

வேதாகமங்களினுலு மனத்தினாலுங் குற்றமற்ற வறுமானங்களினாலும் ச்ருஷ்டி ஸ்திதி கர்த்தாக்களாகிய ப்ரம்ம விஷ்ணுக்களினாலு மறியப்போகாத கர்த்தாவினுடைய கமலமலர்போன்ற ஸ்ரீபாதத்தினுடைய தன்மையை யானிவ்விடத் தாசையுடனே சொல்லுகிறேன் என்கிறது;பரிபூரணஞானமுடையவர்களுக்கு ஒழிவற்ற வின்பத்தை யுண்டாக்குமென்றிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

அவையடக்கம்கூறுகின்றார்.

மறையினால்-பதியினாற் பாரம்பரியமா யதிஷ்டிக்கப்பட்டுத் தனதவதி சர்வஞ்ஞனாயிருக்கின்ற பசுவினாற் பண்ணப்பட்டபடியாற் சிறிதிடத்து பதிஞானமென்றும் பசுஞானமென்றும் பதிப்பிரமாணமென்றும் பசுப்பிரமாணமென்றுஞ் சொல்லப்பட்டிருந்தாலும், இயற்கையால் சாதரூப பாசரூபமாதலானும் ஆன்மஞானத்தை விளக்குதலால் ஞானமென் றுபசரித்தலானும் பாசஞானமென்றும் பாசப்பிரமாணமென்றுஞ் சொல்லப்பட்டியல்பினா லான்மசிற்சத்தியைப் பொருந்திப் பசுபாச பதார்த்தமாத்திரத்தையே படிக்கும் வேதங்களால்,—கூறொணாதாகி - சிறிதிடத் தொருப்ரகாரத்துப் பதிபதார்த்தத்தைக் கூறி வேறாய்க்கூறுமாகினு மியல்பாகிய விலக்ஷணத்தாற் சொல்லப்படாததாகி,—அயனால்மாலால் - சிவானுக்கிரகம்பெற்ற நிரஞ்சனவிதி விஷ்ணுக்களுக்கு வேறாகிச் சாஞ்சனராயிருக்கின்ற விதிவிஷ்ணுக்களுக்குப் பசுத்துவ நீங்காதபடியினாலே பாசஞானத்தால் விளங்கிப் பசுஞானப் பசுப்பிரமாணமாகிக் காண்டல்முதலிய த்ரிப்பிரமாணமாகி யவரவர்களது சிற்சத்திமானங்களா லவர்களா லறியப்படாதாகி,—மனத்தினால் - பாசஞானம் பாசப்பிரமாணமென்கின்ற மனமுதலிய வுட்கருவிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் நேத்ரமுதலிய புறக்கருவிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் பாசயோகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும் பசுயோகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலு மறியப்படாததாகி,—வாக்கால் - உலோகவாதஞ் சத்தியமு மசத்தியமுமா யிருக்குமாதலால், அதற்குட் சத்தியமாகமப்பிரமாணத்தி லடங்குமாதலாற் பொதுவாகு மந்த உலோகவாதத்தினா லறியப்படாதாகி,—மற்றுங்குறைவிலா

ளவினாலும் - பசுசாத்திரங்களிற் படிக்கப்பட்டுப் பசுப்பிர மாணங்களாகிப் புத்திப்பிரகாசமாகிய லிங்கபார மரிச்சித்த விருத்திமுதலாகிய பஞ்சாவயவங்களினால் நிறைந்த பாசா நுமானங்களினாலும்,—கூறொணாதாகி - அறியப்படாததாகி,— நின்ற - நிலைபெற்ற,—இறைவனாற் - சிவனாரது,—கமலபாதம்- தாமரைபோல விரிந்த சத்தியென்னுஞ் சிவத்துவ லக்ஷணத் தை,—இன்றியா னியம்புமாசை - இப்போது நான்சொல்லவே ணுமென்கிற விருப்பம்,—நிறையினாற் குணத்தோர்க்கெல்லாம்- சமத்திலே நிறைந்த நீர்மையராகிய சகலர்க்கும்,— நகை யினை - சிரிப்பினை,—நிறுத்துமன்றே - நீங்காதுண்டாக்குந் தானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

ஏ-து. வேதமுதலியவற்றானு மறிதற்கரிய முதல்வனதியல் பை யான் சொல்லுவலென்றெழுந்த எனது புல்லியவாசை; சா ல்புடையா ரெல்லாரும் ஏயே! யிஃதோவிவனறிவென் றெள்ளி நகையாடுதற்கேதுவா மென்பதாம்.

அயனான் மாலான் மனத்தினான் வாக்கானென்புழி, ஆனு ருபு முன்னையவிரண்டும் வினைமுதற்பொருண்மையினும், பின்னை யவிரண்டுங் கருவிப் பொருண்மையினும் வந்தன: சாத்தனாற் கண்ணானோக்கப்பட்டதென்றாற்போல.

ஈண்டளவென்றது அநுமானப்பிரமாணத்தை. அயன்மா லென்றது உபலக்கணம்.

கூறொணாதென்றது உபசாரம்.

இனி, அயனென்றது அவ்வேதத்திற் கங்கமாய் அயனாற் செய்யப்பட்ட பதினெண் புராணநூலையும், மாலென்றது

மாயோனவதாரமாகிய வியாதனாற் செய்யப்பட்ட இதிகாசநூலையும், மனமென்றது மனுமுதலியஇருடிகளான் மனத்தானினைந்து செய்யப்பட்ட மிருதிநூலையும், வாக்கென்றது அவ்வேதத்தைக் கருமகாண்டம் ஞானகாண்டமென் றிருவகைப் படுத்தெடுத்துக்கொண்டு அதன்பொருளை நிச்சயித்துரைக்குஞ் சாத்திரமாகிய பூர்வமீமாஞ்சை யுத்தரமீமாஞ்சைகளையும், அளவென்றது அளவைநூலாகிய தர்க்கசாத்திரத்தையும். ஆகுபெயரா னுணர்ந்தினவெனக்கொண்டு, வேதத்தானு மதற்கங்கமான புராணமிதிகாசமிருதி மீமாஞ்சை தருக்கங்களானுங் கூறொணாத பாதமென்றுரைத்தலுமொன்று.

அவையடக்கங் கூறியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேலவையடக்க மருளிச்செய்கிறார்.

மறையினால் - இருக்கு எசுசு சாமம் அதர்வம் என்கிற நாலுவேதங்களினாலும்,—அயனால் - பிரமாவாலும்,—மாலால் விஷ்ணுவாலும்,— மனத்தினால் - மனத்தாலும்;—வாக்கால் - வாக்கினாலும்,— மற்றுங் குறைவிலா வளவினாலும் - வேறுங் குறைவற்ற வளவைப் பிரமாணங்களினாலும்,—கூறொணாதாகிநின்ற - சொல்லப்படாத தொன்றாயெங்கும் பரிபூரணமாய்ச் சற்றுமசைவற்றுநின்ற,—இறைவனார் கமலபாதம் - அப்படி குறைவற்றுநின்ற தம்பிரானாருடைய சீபாதகமலங்களை,—இன்றியானியம்புமாசை - இப்போ தொன்று மறியாதயான் ஒருசாத்திரத்திலே சொல்லுவதாகத் துணிந்தவாதரவு,—நிறையினார் குணத்தோர்க்கெல்லாம் நகையினை நிறுத்து

மன்றே- சர்வகுண சம்பந்தராயிருக்கிற ஞாதாக்களுக்கெல்லா மெப்பொழுதுஞ் சிரிப்பினையுண்டாக்காநிற்கும்—எ-று.

இதனாற் சொல்லியது வேதங்களாலு மரிப் பிரம்மாதிகளாலு மளவைகளாலு மறியப்படாம லிருப்பதொருவத்துத்தை யான் சொல்லுவேனென்கிற வாசை பெரியோர்களுக்கு சிரிப்பினையுண்டாக்குமென்னு முறைமை யறிவித்தது.

இது சான்றோர் அவையடக்கம்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

மறையினால் - வேதங்களினாலும்,—அயனால் - அயனாலும்,—மாலால் - மாலாலும்,—மனத்தினால் - மனத்தினாலும்,—வாக்கால் - வாக்காலும்,—மற்றுங் குறைவிலா வளவினாலும்- வேறுங்குறைவில்லாத ப்ரமாணங்களினாலும்,—கூறொணாதாகின்ற -அரிதற்கரிதாகின்ற,—இறைவனார் - முதல்வனது,—கமலபாதம் - கமலம்போலும் பாதமென் றுபசரித்துக் கூறப்படு மருளிபல்லை,—இன்றியானியம்புமாசை - இன்றியான்சொல்லுவேனென்று எழுந்த எனது புல்லியவாசை,—நிறையினார் குணத்தோர்க்கெல்லாம் - சால்புடையராய குணத்தினை யுடையாரொல்லார்க்கும்,—நகையினை நிறுத்துமன்றே - ஏயே? இஃதோ இவனறிவென் றெள்ளி நகையாடுதற்கேதுவாமென்பதாம்.

(இனிமற்றொருவிதம்.)

மறையினால் - வேதங்களாலும்,—அயனால் - அவ்வேதத்திற்கங்கமாய் அயனாற்செய்யப்பட்ட பதினெண்புராணங்களாலும்,—மாலால் - மாயோனவதாரமாகிய வ்யாதனாற் செய்யப்பட்ட இதிகாசங்களாலும்,— மனத்தினால் - மனுமுதலிய

விருடிகள் மனத்தால் நினைந்து செய்யப்பட்ட மிருதி நூல்களாலும்,—வாக்கால் - அவ்வேதத்தை கருமகாண்ட ஞானகாண்டமென் றிருவகைப் படுத்தெடுத்துக்கொண் டதன் பொருளை நிச்சயித்துரைக்குஞ் சாத்திரமாகிய பூர்வமீமாம்சைகளாலும்,—மற்றுங் குறைவிலாவளவினாலும் - வேறுங்குறைவில்லாத அளவைநூலாகிய தருக்கசாத்திரங்களாலும்,— கூறொணாதாகிநின்ற - சொல்லுதற் கரிதாகிநின்ற இறைவனுற் கமலபாதம் என்றலுமொன்று

இதனானே அவையடக்கங் கூறியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

இப்படிச் சிவனை யறிதப்போகாதென்பீராயி னுகாசத்திற் பூப்போ லபாவபதார்த்தமாய்விடுமென்ற மாணாக்கனைக்குறித் தாகமமுதலியவற்றா லறியலாமென் றுணர்த்துகிறார்.

அருளினா லாகமத்தே யறியலா மளவினாலுந், தெருளலாஞ் சிவனைஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே, மருளெலா நீங்கிக்கண்டு வாழலாம் பிறவிமாயா, விருளெலா மிரிக்கலாகு மடியரோ டிருக்கலாமே. (ரு)

(இ-ள்.) அருளினா லாகமத்தே யறியலாம் — ஞானசாரிய னநுக்கிரகத்தைப் பெற்றவர்கள் அபரஞானத்திற் சொல்லப்பட்ட வாகமப் பிரமாணத்தாலும் சிவனை யறியலாம்.

அளவினாலுந் தெருளலாஞ் சிவனை — புகையைக்கொண் டனலை யநுமித்தறிந்தாற்போலச் சத்தியினது காரியத்தைக்கொண்டு சத்திமானாகிய சிவனையு மறியலாம்

ஞானச்செய் தியாற் சிந்தை யுள்ளே மருளெலா நீங்கிக்கண்டு வாழலாம்	ஞானமாகிற தீபம் பிரகாசிக்கவே யாண வாதியாலுண்டாகிய மயக்கவிகற்பநீங்கித் தன்னுள்ளே பலகாலு மநுசந்தானம்பண் ணிக்கொண்டு பரமமான நிட்டையைப்பொ ருந்தி நாடோறும் வாழவே
பிறவிமாயா விருளெலா மிரி க்கலாகும்	பிறப்பை யுண்டாக்குகிறதற்குக் காரண மாகிய கன்மமு மாயையு மாணவமு மோ ட்டலாம். இங்ஙனம் பாசக்ஷயம்பிறக்கவே
அடியரோ டிருக்கலாமே.	சிவாநுக்கிரஹத்தைப் பெற்ற முத்தான் மாக்களைப்போலச் சிவானந்தாநுபூதியைத் திளைத்திருப்பார்கள்—எ-று.

அளவினாலுமென்ற வுண்மையால் யோகக்காட்சியாலுஞ் சிவனை யறியலாமெனவறிக.

சிவனை எ-து. நடுநிலைத்தீடமெனவறிக.

இவை யைந்தும் பாயிரம்.

"ஆயிரமுகத்தாலகன்றதாயினும் - பாயிரமில்லதுபனுவ லன்றே". "வணக்கமதிகாரமென்றிரண்டுஞ் சொல்லச் சிறப் பென்னும் பாயிரமாஞ்சீர்" என்றாராகலிற் சிறப்புப்பாயிர மாயிற்று.

*"ஆக்கியோன்பெயரேவழியேயெல்லை - நூற்பெயர்யாப் பேநுதலியபொருளே - கேட்போர்பயனொடாயெண்பொருளுந் ம் - வாய்ப்பக்காட்டல்பாயிரத்தியல்பே" என்பதனால் ஆக்கி யோன்பெயர் - அருணந்திதேவநாயனார், வழி - சிவஞான போதம், எல்லை - நடுநாட்டுட் டிருத்துறையூர், நூற்பெயர் - சிவஞானசித்தி, யாப்புத்தொகைவிரிநுதலியபொருள் - பதிமு தலிய முப்பொருளினதிலக்கணம், கேட்போர் - அவர் மாண

க்கருட் டலைமையாகிய மறைஞானசம்பந்தநாயனார், பயன்வீடு பேறு; மேல்வந்தவாறுகாண்க. * தொல்காப்பியம் பாயிரம்.

யாதானு மொருநூற்குப் பொருளுரைக்குங்கால் உரைவகை விருத்திவகை காண்டிகைவகையென மூவிதப்படும். ஈண்டிந்நூற் குரைக்கப்பட்டது காண்டிகைவகையெனவறிக.

அஃதாவது:—"பழிப்பில்சூத்திரப்பட்டபண்பிற் - கரப்பின்றிமுடிப்பதுகாண்டிகையாகும் - விட்டகல்வின்றிவிரிவொடுபொருந்திச் - சுட்டியசூத்திரமுடித்தற்பொருட்டா - வேதுநடையினுமெடுத்துக்காட்டினு - மேவாங்கமைந்தமெய்ந்நெறித்ததுவே" என்றார் தொல்காப்பியனார்; பொருள்-மரபியல். (ரு)

உரையாசிரியர் அவையடக்கம்.

"ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையார்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்".

ஓர்வகையானே பாயிர முற்றிற்று.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

இப்படி யறியப்படாதபொருள் கர்த்தாவென்னில்? இல்லையாம்; அதனாற் பயனுமில்லையாம். அஃதன்றியும்வேத சிவாகமங்களும் ப்ரமாணங்களு மேதுக்காகவென்னில்? அவைகளெல்லாம் * அர்வாசீநபதாவாச்யமாய் ஜகத்சிருஷ்டியாதிகளைப் பண்ணுஞ் ஸதாசிவாதிமூர்த்திகளைப்போதிக்கும்பரமசிவம் † ஸ்வரூபஞானாநுபவைகவேத்ய மென்பதை மேற்கூறுகின்றது.

* அர்வாசீநபதவாச்சியமாய் - கீழ்ப்பட்ட பதத்தினாலே சொல்லப்படுகிறதாய், † ஸ்வரூபஞானாநுபவைகவேத்யம் - ஸ்வரூபஞானத்தினாலே யுண்டாகிற யநுபவமொன்றினாலே யறியப்படும்.

அருளினா லாகமத்தே யறியலாம் - கருணையினாலே தரித்த சதாசிவ மஹேஸ்வராதி மூர்த்திகளினுடைய லக்ஷணங்களை யாகமத்திலே யறியலாம்,—அளவினாலுந் தெருளலாம் - ப்ரத்யக்ஷமன்றி யாகமங்களினாலு மநுமானங்களினாலு முணரலாம்,—சிவனை ஞானச்செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலா நீங்கிக்கண்டு வாழலாம்-பரமசிவனை யவனது க்ரியாசத்தி ‡ சம்யோகத்தா லான்மக் கிரியாசத்தியினாலே பாசங்களைநீங்கி, யவனது ஞானசத்தி சம்யோகத்தா லான்மஸ்வரூப ஞானசத்தியினாலே யான்மாவிற் சிவனை யநந்நியமாகக்கண்டு, சிவாநந்தாநுபவியாகலாம். ஆதலாற் பரமசிவம் அநுபவைகவேத்யம்,—பிறவிமாயா விருளெலா மிரிக்கலாகும் - அவ்வாறு சிவாநுபவமுண்டாகவே ஜன்மத்துக்கேதுவாகிய § மலமாயாகன்மங்க ளெல்லாவற்றையுங் கெடுக்கலாம், இப்படிப்பட்ட ஞானத்திற்குப் பக்குவமுண்டா மாறெங்ஙனமென்னில்? அடியரோடிருக்கலாமே - சிவபத்தர்களுடனேகூடி யவர்களை வணங்கி வழிபட்டு அவர்களுபதேசித்தபடி நடக்கவுண்டாம். இவ் விரண்டு விருத்தத்திற்கும் சம்மதி.

‡ சம்யோகம் - கூட்டரவு, § மல மாயா கன்மம் - ஆணவம் மாயை வினை.

*ஊஹி3ந ஸதவெ—ககீதஃ வஂஶாநஜெவ உஹிஶா வாஜநஸமெயாரஹ்யா வஹ்ாய ஜுகிஉவீயெஶஷு—ஸிரவீ ஸகஸெ்ு ஜெஷாவஃ கதிவியஷ—

ணஃ கலஸ்ரவிஷயஃ வஜெகூடிவாஷிநெ வதகிநஃநஃ கலஸ்ரநவதஃ ॥ *

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவனிப்படி ப்ரமாணதிதரானுற் சூந்யப்பொருளோவெ ன்ன? அன்று; பதிப்பிரமாணத்தாற் பார்க்கப்படும் பொருளெ ன்று கூறுகின்றார்.

ஆகமத்தே-பிறன்படிக்கும் வன்னபதவாச்யங்களைக் கே ட்கும் வ்யோமபௌதிகாகம வெழுத்தைப்பார்க்கு நினைக்குந் திக்ஷாவான்களாகிய நமது மனச்சங்கற்பத்தினுல், வ்யோம பௌதிகத்தொனியோடு கிளம்பிய புத்தியினுற்பொருந்தப்பட்ட வன்னபதவாக்யமயமா யுள்ளுணரோசையாகிய மத்திமைவா க்குரூபமா யிருதயத்திற்றோற்று மாத்மியான்மிக சடாகமத்தி ல், கரியிலக்கினிபோலவந்து வன்னபதவாக்யக் கிரமத்தி லாவிர்ப்பவித்துப் பொருள் போதிப்பதாய்; மஹாப்ரளய பரியந்த நாசமில்லாமற் சுத்தவித்தையிலிருக்கு மாதிதைவிக திவ்யாக மத்திலேவந்து சாநித்யமாகிய,—அருளினுல் - சிவசத்தியாகிய வாதிதைவிக திவ்யசிதாகமத்தினுல், திரும்ப விதுகாரியலக்ஷணையாதலா லதினுல் விளக்கப்பட்ட நமது சிற்சத்தியாகிய வாதியான்மிக சிவாகமத்தினுற் சிவனை,—அறியலாம் - பரோ க்ஷமாய் நிச்சயிக்கலாம்,—அளவினுலும் - திவ்யசிவாகமத்திற் சிவனுற் காண்பிக்கப்படுஞ் சிவசத்தி யதிஷ்டித புத்திப்பிர காச கலுஷித லிங்கபராமரிச வ்யாபாரசீலமான நமது சிற்ச த்தி யநுமானத்தினுலும்,—தெருளலாஞ் சிவனை - பரோக்ஷ மாயறியலாம்,—த்யானசமாதிபெனு மங்கயோகவாசனையில்வ ந்து பதிந்த சிவசத்தியினு லந்தசமாதிசமய மாத்திரத்தி

ல்,—மருளெலாநீங்க - மலமூல வஞ்ஞானங்களெல்லாம் போக,—சிந்தையுள்ளே - திரும்பவந்தச் சிவசத்தியினால் விளங்கிய நமது சிற்சத்தியிலே,—ஞானச்செய்தியால் - அந்த நமதுசிற்சத்தி விருத்திலக்ஷண சதேகஜீவன் முத்தி சாக்ஷாத்காரத்தினால்,—கண்டு - சாக்ஷாத்கரித்த பரோக்ஷமாகப் பார்த்து,—வாழலாம் - நமதந்தச் சிற்சத்தி வ்யாபார சாக்ஷாத்காராகார சிவாநுபூதியினது பூரித்தலாகிய நமது சிவாநந்தத்தின தநுபூதிலக்ஷண ஸ்வாநுபூதிமான்களா யிருக்கலாம்,—சரீராந்தசமயத்திலே யந்தஜீவன்முத்தி சாக்ஷாத்கார சாமர்த்யத்தினாலே சேஷித்துத் திரும்பத்திரும்பவாராதபடி, பிறவி மாயாவிருளெலாம் - (பிறவிஎன்றதாகுபெயர்.) ஆதலால், பிறவிக்கேதுவாகிய கன்மமலம்,—மாயாவிருள் - மாயாமலம், திரும்பமாயாவிருள் என்றெடுத்துக்கொண்டு மாயாவிருள் - கெடாத வநாதிசித்தவாணவமல மிவைகளெல்லாம்,—இரிக்கலாகும் - நம்மைப் பந்தியாமற் பொருளுண்மைமாத்ரமா யிருக்கப்பண்ணலாம்,—அடியரோ டிருக்கலாமே - நிரதிசயவிதேக பரமுத்தி பலசர்வார்த்தவிஷய சிவசாக்ஷாத்கார வ்யாபாரகாரமா யிருக்கின்ற நமது சிற்சத்தி சமவேத சிவாநுபூதியினது பூரித்தலாகிய சிவாநந்தாநுபூதியாகிய ஸ்வாநுபூதிமான்களாய்க் கொண்டு அடியை சிவசத்திசமான தமது சிற்சத்தியையுடையராகிய முத்தான்மாக்களோ டொத்து நாம்வ்யாபிக்கலாமே.

முன்சொன்ன ஜீவன்முத்தியவத்தையிலேயாகிற் சிவபத்தர்களோடு கூடியிருக்கலாம். பரமுத்தியிலே பரதந்திரியங் களைகழிபந்தமென்று ஞானமிர்தத்தி விருத்தலினா லடிமைத்திரமில்லாதபடியினாலே சிவன்களென்றல்லா தடியர்களென்று சிவசமான முத்தான்மாக்களைச் சொல்லப்பட்டா தென்பதறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

ஏ-து இறைவனியல்பு அப்பெற்றித்தாயினும், அவனை அவ்விறைவனூலெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தினநுபவமுடைய தேசிகரருளிச்செய்யும் உபதேசத்தாற் கேட்டறியலாம்;கேட்டதனை அதற்கநுகூலமானவளவையாற் சிந்தித்துமறியலாம்: சிந்தித்ததனைத்தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான் மாசறத்தெளிந்துமறியலாம்; அதனாற் பாசக்ஷயம்பண்ணி வீட்டை கூடிச் சிவானந்தாநுபூதியும்பெறலாமென்பதாம்.

உம்மை எண்ணின்கண் வந்தது. மேல் அவையடக்கத்துட் கூறியதுபற்றி நிகழுமாசங்கையை நீக்கிற்று.

இக்கடவுள்வணக்க முதலாயினவெல்லாம் பரபக்கத்தூன்முகத்தாற் கூறிப் போந்தனவேயாயினும்; பரபக்கஞ் சுபக்கமென விதனை இருநூலாதலுங் கொள்ள வைத்தமையின் ஈண்டும் வேறு கூறினார்.

அறுவகைச்சமயத்தொன்று முதற்செய்யுளிற் கடவுள்வணக்கங்கூறுமுகத்தாற் சுபக்கத்தி னிறைவனுவானிவனென்பதூஉம், ஏனை நான்குசெய்யுளினும் வழிமுதலியன கூறுமுகத்தான் அவ்விறைவனுலியம்பப்படும் நூலிவையென்பதூஉம், அவற்றுட் பொதுநூல்சிறப்புநூலென்னும் வேறுபாடுமுணர்த்தப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்தவத்தந்தன்னை யறியுமுறைமை யெங்ஙனேயென்ற மாணக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

அருளினு லாகமத்தே யறியலாம் - தம்பிரானார் திருவருளுண்டானவர்களுக்கு வேதாகமங்களினாலு மந்தப்பொருளையறிந் தநுபவிக்கலாம்,—அளவினாலும் தெருளலாம் - அளவை

ப்பிரமாணங்களினாலும்சிந்தித்தறியலாம்,—சிவனை ஞானச்செய்தியாற் சிந்தையுள்ளே மருளொலாநீங்கக்கண்டு வாழலாம்- மந்தகத்தாவை யிப்படி ஞானம் ப்ரகாசித்தமுறைமையாலே அஞ்ஞானங்களெல்லாம் விட்டுநீங்கத் தன்னுடைய விருகபத்திலே பேரின்பத்தையுந் தரிசித்தநுபவிக்கலாம்,—பிறவிமாயா விருளெலாமிரிக்கலாகும் - ஜகதங்களை யுண்டாக்குகிற மலமாயாதிகன்மங்களையு மோட்டலாம்,—அடியரோடிருக்கலாமே - இப்படிப்பெற்ற திருவடியடியார் திரட்சியிலே கூடியிருக்கலாம்—எ-று.

இதனாற் சொல்லியது சிவனுடைய திருவருளுண்டானவர்களுக்கு வேதாகமங்களினாலு மளவைப்பிரமாணங்களினாலுந் தங்களிருதயத்திலுங்கண் டநுபவிக்கலாமென்றுஞ் சகதங்களையுண்டாக்குகிற மலங்களைப் போக்கிக்கொள்ளலாமென்றும், இப்படிப்பெற்ற வடியார்களுடைய கூட்டத்திலுங் கூடியிருக்கலாமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(இறைவனியல்புஅப்பெற்றித்தாயினும்)சிவனை - அவ்விறைவனை,—ஆகமத்தே - அவ்விறைவனாலெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தை,—அருளினா லறியலாம் - அநுபவமுடைய தேசிகர் அருளிச்செய்யு முபதேசத்தால் கேட்டறியலாம்,—அளவினாலும் - கேட்டதனை யதற்கநுகூலமான அளவையானும்,—தெருளலாம்-சிந்தித்து மறியலாம்,—சிந்தையுள்ளே - சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே,—ஞானச்செய்தியால் - சிவஞானத்தால்,—மருளெலாநீங்கிக் கண்டுவாழலாம் -மாசறத் தெளிந்து மறியலாம்,— பிறவிமாயா விருளெலா மிரிக்கலாகும் - அதனால் பிறவிமாயாமைக்கேதுவாகிய பாசக்ஷயமும் பண்ணலாகும்,—அடியரோடிருக்கலாமே - அதனா லவனடியாரோடு கலந்து நிட்டைகூடிச்சிவானந்தாநுபூதியும் பெற்றிருக்கலாம்.

இதனானே பொதுநூல் சிறப்புநூலென்று வேறுபாடுகூறியவாறு.

“ஐந்துதி”
என்னும்பாயிரம் ஐந்தும்
முற்றிற்று.

---

* ‘ஐந்துதி’ என்னும் சுபக்ஷசெய்யுட்டொகைச்செய்யுள் வரையறுத்தது ‘அறுவகை’ ‘என்னை’ ‘பண்டை’ ‘மறையினால்’ ‘அருளினால்’ என்னும் ஐந்து செய்யுட்களையே! இச்செய்யுட்களைந்தினையும் பெரியவெழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு எல்லாவுரையாசிரியரும் உரையிட்டிருக்கின்றனர்.

மற்ற ‘ஆதிநடு’ ‘ஈசனருள்’ ‘அருமறை’ ‘நீடுபுகழ்’ ‘போதமிகு’ இவ்வைந்தும் பரபக்ஷ செய்யுட்டொகைச்செய்யுள் வரையறுத்த ‘முகவுரையிற்றசம்’ என்பதனுளடங்கியவை. இவற்றில் முதல் மூன்றுசெய்யுட்கும் சிவாக்ரயோகியர் ஞானப்பிரகாசர் இருவரும் உரையிட்டிருக்கின்றனர். பின் இரண்டிற்கு சிவாக்ரயோகியர் ஒருவரே உரையிட்டனர். இச்செய்யுட்களைச் சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

‘ஒருகோட்டன்’ என்னுஞ் செய்யுள் தொகைச்செய்யுளிரண்டினு மடங்காமையானும், விநாயகரை யெவ்வெக்காரியங்கட்கு மிடையூறு நீங்குதற்பொருட்டு முன்னர்த் தியானிக்கவேண்டுகையானும், உரையாசிரியர் யாவரும் பரபக்ஷ சுபக்ஷ மிரண்டிடத்தும் வைத்துரையிட்டனர். ஆதலால் இச்செய்யுளையும் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டது.

‘முகவுரையிற்றசம்’ ஐந்துதி’ என்னும்இரண்டுசெய்யுளும் பரபக்ஷத்திற்கு முன்னர்க் கூறியிருப்பதை மறைஞானதேசிகர் ‘ஒருகோட்டன்’ என்னுங்காப்புச்செய்யுட்குப்பின்னர்க்கூறி, இவற்றின் கருத்தாய ‘சித்திதன்’ என்னும் அகவலைக்கூறினர், சுபக்ஷ அதிகார மினிது விளங்குதற்பொருட்டு. இதனையும் சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டது.

உ

சிவமயம்.

அளவை.

மறைஞானதேசிகர் உரை.

மேலதிகார மென்னுதலிற்றோவெனின்? பதிமுதலிய முப்பொருளையும் விளக்குவதாயுள்ள வளவைப்பிரமாணங்களைப் பதினொரு திருவிருத்தத்தாற் பெயரு முறையுந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

அளவையென்பது - அளந்தறியப்படுவது. அஃதெவ்வாறுமெனின்? உலகத்துப்பதார்த்தங்களை யெண்ண லெடுத்தன் முகத்த னீட்டலென்னு நால்வகையளவினு லளந்தறியுமாறு போலப் பதிமுதலிய பொருள்களைப் பக்குவான்மாக்கட்களந் தறிவிக்கையின்பொருட் டளவைப்பிரமாணங்களை முதற்கட் கூறியதெனவறிக. "பண்ணிலாற்கில்லாத பாட்டிற்பயப்போன்று, கண்ணிலார்க்கில்லாக் கவின்போன்று—மெண்ணிலா, வஞ்சொலளவை யறியாதவர்க்கில்லை, செஞ்சொலளவின் சிறப்பு." என வளவைவிளக்கத்தி லறிக.

இத்தலைச்செய்யு ளென்னுதலிற்றோவெனின்? காண்டன்
முதலிய வளவைப்பிரமாணங்களைப் பத்துவகை
யானே பெயரு முறையுந் தொகுத்துக்கூறி
அவைகளைக் காண்டன் முதலிய
மூன்றி லடக்கியுணர்த்திற்று.

அளவைகாண்டல் கருதலுரை யபாவம்பொரு
ளொப் பாறென்ப, ரளவைமேலு மொழிபுண்மை யை
திகத்தோ டியல்பெனநான், களவைகாண்ப ரவையிற்
றின் மேலுமறைவ ரவையெல்லா, மளவைகாண்டல்
கருதலுரை யென்றிம்மூன்றி னடங்கிடுமே. (௧)

(இ-ள்.) அளவை காண்டல் கருதலு ரை யபாவ ம் பொருளொப் பாறென்பர் அளவைப்பிரமாணம் வல்லார்கள் அறுவகைத்தென்பர்கள். அவையாவன? காண்டலெனவு மநுமானமெனவு முரையெனவு மபாவமெனவும் அருத்தாபத்தியெனவும் உபமானமெனவும்வரும். அவை வருமாறு:—

காண்டலாவது - ப்ரத்தியக்ஷம், மறைந்து மலத்திற் கரணம் வாய்த்திடவு மத்தமறிந்திடுங்கால் காண்டலாம்.

கருதலாவது - கண்டபொருளை யநுமித்தறிதல்.

உரையாவது - ஆகமப்பிரமாணம்.

அபாவமாவது - "ஒன்றனைமற்றொன்றென்றொருவிப்பி னுண்மையிலேனொன்றனபாவமெனவோர்". இதனை விரித்தறியி லைவகைப்படும். என்றுமபாவமு மில்லதனபாவமு மொன்றிலொன்றபாவமு முள்ளதனபாவமு மழிவுபட்டபாவமு மென வைந்தபாவம்.

முயற்குக்கோடில்லையென்கை என்று மபாவம்.
பெரியோர்வாயிற் பொய்யில்லையென்கை இல்லதனபாவம்.

கடத்தின்கட் படமில்லை படத்தின்கட் கடமில்லை
யென்கை ஒன்றினொன்றபாவம்.

ஆனைப்பந்தியிற்சண்டிலமென்கை உள்ளதனபாவம்.

கட முடைந்தா லஃதில்லையென்கை அழிவுபட்ட
பாவம். எனவுணர்க.

பொருளென்பது - அருத்தாபத்தி, அஃதாவது? "அடுத்துலகோதும் பொருளருத்தாபத்தி யாமிதுதா, னெடுத்தமொழியினஞ் செப்புவதாகும் இவ்வூரிலருள், படைத்தவனென்னிற் படையாதவருள ரொன்றுமிவன், கொடுப்பவனென்னிற் கொடாதாருமுண்டென்று கொள்வதுவே". எனவறிக.

ஒப்பாவது - "கண்ணன்கருமுகில்போல் வண்ணனெனக் கேட்டவனைக் - கண்ணுமுணர் வொப்பனவேகாண்" எனவறிக.

அளவைமேலு மொழிபுண்மை யைதிகத்தோடி யல்பெனநான்க ளவைகாண்பர்

இங்ஙனங் கூறிய வறுவகைப் பிரமாணத்தில் மொழிபெனவு முண்மையெனவு மைதிகமெனவு மியல்பெனவும் நால்வகைப் பிரமாணங் கூறுவர்கள்.

அவையிற்றில் ஒழிபாவது:— "சீராரொழிபென்று
செப்பப்படுவது திண்புவிமேற், போராடிநின்று
பொருதாரிருவர்தம் போர்க்களத்துப், பாராளிராக
கவன் வென்றானெனிற்றன் பரிசழிந்து, நேராமி
ராவணன் றோற்றச்சொல்லாயி னிகழ்வதுவே"
எனவறிக.

உண்மையாவது - சம்பவம், அஃதாவது:— நயக்க
ரவுண்மை பெனநாவலர்கடுணிந்துரைப்ப, நிய
ற்கைப்பொருளினையிற்றெனவாமிது தானுரைக்கி

ண், வியக்குற்றகால்சலிக்குந் தீச்சுடு நீர்குளிரும், வயக்குற்றமண்வலி தென்றுபட்டாங்கு வழங்குவதே" எனவறிக.

ஐதிகமாவது:— கொன்பயில்வேலைக் கடல்புடைசூழுங் குவலயத்தோரன்புடனுலி லலகையுண்டெனபர்களென்பதுவு,மின்பயில்புற்றில் விடநாகமுண்டென்ப தென்பதுவு, மென்பர்களுவல தென்ப,' தைதிகமென்பர்களே". எனவறிக.

இயல்பாவது:— "மாமேலிருந்தொரு கோருவெளிற்சுள்ளிக் கோறரலுந், தூமேலிருந்தொரு கோருவெளிற் றரவேதணிந்து, பூமேவுங்கண்ணழுத்தங்கோல்கொடுத்சலும் பூதலத்தே, நாமேவியல்பென்று கூறுவர்நல்லசொன் னுவலரோ".

இங்ஙன நால்வகைப் பிரமாணங்களையுமறிக.

அவையிற்றின் மேலு மறைவர்

இங்ஙனங்கூறிய பத்துப்பிரமாணத்தின் மேலும் ப்ரமாணமுண்டென்று சொல்லுவர்கள்.

அவையெல்லா மளவை காண்டல் கருதலுரை யென்றிம்மூன்றி னடங்கிடுமே.

அந்தக்காண்டன்முதலிய பத்தும் ப்ரத்தியக்ஷ மநுமான மாகமம் மூன்றினுள்ளுமடங்கும்—எ-று.

முற்கூறிய வபாவமு மியல்புங் காண்டலிலடங்கும். அஃதெங்ஙனமென்னில்? இங்ஙனங்கூறிய வபாவம் இருவிதப்படும்; கண்ணாற் காணப்படுவதெனவும் காணப்படாததெனவுமென்.

இதன்முந்தியது கண்ணாற் காணப்பட்டிருக்கிற கடாதியினுடைய தோற்றரவு கண்ணுக்குக் காணப்படுகையினாலே காண்டலிலடங்கும். மற்றையது கண்ணாற் காணப்படுவதற்கு விடயமாகாதிருக்கிற பரமாணுவாதிகளினுடைய தோற்றரவின்றியிருத்தலா லநுமானத்திலடங்கும்.

இயல்பும் பதாதிவதித்துக்கொடுக்கையாற் காண்டலிலடங்கும்.

மற்றவநுமானத்தி லருத்தாபத்தியு முண்மையு மொழிபும் அடங்கும்.

அஃதெங்ஙனமெனில்? தேவதத்தன் பருத்திருக்கையா லிராத்திரி புசிப்பன்; பகற் புசியாதிருக்கையினும் பருத்திருக்கிறானென்னும் வியாத்தியைக்கிரிக்கையா லநுமானத்திலடங்கும்.

ஒழிபு - பாரிசேடம். அஃதெங்ஙனமென்னில்? ஜகத்கர்த்தா மாயையுங் கர்மமு மான்மாவு மன்றெனவே, சிவனே கர்த்தாவென்று பாரிசேடத்தால் அநுமித்தறிதலால் அநுமானத்திலடங்கும். அஃதெக்காரணத்தாலென்னில்? மாயையுங் கன்மமுஞ் சடமாதலானு மான்மா தானாக வறியு மறிவிலாமையானும் சர்வஞ்ஞன கர்த்தாவே சிவனெனவறிக.

சம்பவம் ஆயிரத்தினூறென்னு மெண்ணிக்கையான தவிநாபாவமாயிருக்கையா லநுமானத்தி லடங்கும்.

ஐதிகம் அப்ரமாணமெனவும் ப்ரமாணமெனவு மிருவிதமாம்.

இதன் முந்தியது ஆலின்கட் பேயுண்டென்கை யொருவருமதனைக் காணாதிருத்தலால் அப்பிரமாணமெனப்பெறும். மற்றது சான்றோர் வாக்கியமே மூலமாக விந்தவாலிற் பேயுண்டென் றுறுதியிட் டறிகையா லிதுவு முமையி லடங்குமெனவறிக.

சமயிக ளிந்தப்பிரமாணங்களை வேறுபடுத்திக் கூறுவர்கள்.

உலகாயிதன் - காண்டலொன்றுமே கொள்வன்.

பௌத்தனும் வைசேடிகனும் - காண்டலுட னநுமானமுங் கொள்வன்.

சாங்கியன் - காண்டலு மநுமானமு முரையுமாக மூன்று ப்ரமாணமுங் கொள்வன்.

நையாயிகன் - அம்மூன்றுட னுபமானமுங்கொள்வன்.

அருசனும் ப்ரபாகரனும் - அந்நாலு டனருத்தாபத்தியுங் கொள்வன்.

பாட்டனும் வேதாந்தியும்- அவ்வைந்துடன் அபாவமுங் கொள்வன்.

பௌராணிகன் அவ்வாறுடன் சம்பவமு மைதிகமுங் கொள்வன்.

இப்படிச் சமயிகள் பேதப்படுத்திக் கூறுகையா லிவ்வாசிரியரும் பத்துப் பிரமாண முண்டென்று ஓதினாரெனவறிக.

இதனுட் பலவெழுவாயும், பலபயனிலையுங் காண்க. (ச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் ப்ரமாணங்களினாலே ப்ரமேயங்களை யறியவேண்டுகையான் முதல் ப்ரமாணங்களினுத்தேசலக்ஷணாதிகளைக் கூறுகின்றது.

அளவையென்பது அளந்தறியப்படுமது. அஃதெவ்வாற்றுமெனின்? உலகத்துப் பதார்த்தங்களையெல்லா மளக்குமிடத்து எண்ண லெடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகையானின் றளந்தறியுமாறுபோலப் பதிபசு பாசமுதலிய பொரு

ள்களைப் பக்குவான்மாக்களுக் களந்தறிவிக்கையின் பொருட்டு அளவைப்பிரமாணங்களை முதற்கண் கூறியதெனவறிக.

அல்லாமலுந் தர்க்கயுக்திபாயுள்ளவையு மிந்தவளவையிலே சொல்லப்படுமதறிந்து அர்த்தப்பிரயோகம் பண்ணவேணுமாகையான் முதற்கண் கூறிடதெனவுமறிக.

"இராகமறியார் இசைப்பயன் தானறியார்
தராதரமறியார் சர்க்காரியமறியார்
ஓராரளவை யொருபப்பனுந் தானறியார்
ராராய்ந்தளவை யறிந்துகொளீரோ."

அளவை-ப்ரமாணம். ப்ரமாணமாவது சிற்சத்தி.—அச்சிற்சத்திக் கதிஷ்டானங்களாவன? காண்டல் கருதலுரை - ப்ரத்யக்ஷம் அநுமானம் ஆகமம் என்று மூன்றுவிதமாம்.—இதற்குமேல் நையாயிகாதிகள் சொல்லும் ப்ரமாணம், (அபாவம் பொருளொப் பாறென்பர்) அபாவமானது - உண்டென்னு ஞானத்தினில்லாமை, அநுபலத்தி;—பொருள் - அர்த்தாபத்தி,— ஒப்பு - உவமானம், இவைகள்கூட வாறென்று சொல்லுவர்கள்,—(மேலுமளவை மொழிபுண்மை யைதிகத்தோடியல்பென நான்களவை காண்பர்) பௌராணிகாதிகள் முன்சொன்னவாறு ப்ரமாணத்திற்கு) மேலுமளவை ஒழிபு-பாரிசேஷம்,—உண்மை-சம்பவம்,—ஐதிகம் - கர்ணபரம்பரையாகவரும் வாக்கியம்,—இயல்பு-ஸ்வபாவலிங்கம், என்றிந்நாலுங்கூடப் பத்தாகச்சொல்வர்கள்,—அவையிற்றின் மேலுரைவர் - இந்தப் பத்துக்குமேலும் ப்ரமாணமுண்டென்று சொல்வாருமுளர் (அவைகள் "போதுநாற்றத்தா லறிதல்" என்னும் இதன்பின்வரும் - கஉ - வது விருத்தத்திற் காட்டுதும்.) அவையெல்லாம் - இவ்வாறுசொல்லும் ப்ரமாணங்களனைத்தும்,—காண்டல் கருதலுரையென் றிம்மூன்றிலடங்கிடுமே -ப்ர

த்யக்ஷம் அநுமானம் ஆகமமென்று மூன்று ப்ரமாணத்திலு * மந்தர்ப்பவிக்கும். * அந்தர்ப்பவிக்கும் - அடங்கும்.

மேலிதற்கு விரிவுரை — இதன்மேல் ப்ரத்யக்ஷமொன்றே ப்ரமாணமென்னுஞ் சார்வாகனையும், ப்ரத்யக்ஷமு மநுமானமுமொழிந் தாகமம் ப்ரமாணமல்லவென்னும் பௌத்தனைய மூன்று ப்ரமாணமுண்டென்று காட்டி நிராகரித்து; ப்ரத்யக்ஷாநுமானாகமங்களுக்கு மேற்சொல்லும் ப்ரமாணங்களையும், இம்மூன்றுப்ரமாணங்களிற்குள்ளே யந்தர்ப்பவித்து, இம்மூன்று ப்ரமாணங்களினுடைய ஸ்வரூபங்களையுங் கிஞ்சித் விஸ்தரித்துக்கூறுவாம்.

அளவையென்பது ப்ரமாணம். ப்ரமாணத்தின் ஸாமாந்ய லக்ஷணம், சம்சய விபரிய ஸ்மிருதி வ்யதிரிக்தையான ஆன்ம சிற்சத்தியே.

* [illegible]

இந்தவிருத்தத்திலே ப்ரத்யக்ஷம் அநுமானம் ஆகம மூன்றும் ப்ரமாணமென்று சொல்லியிருக்கச் ¶ சிற்சத்தி ப்ரமாணமென்று சாதித்ததென்னையோவென்னில்? இம்மூன்றுஞ் சிற்சத்திக் * கபிவியஞ்சகமாகையா லுபகாரலக்ஷணையாக வவைகளைப் பிரமாணமாகக் கூறியதே! இப்பிரமாணங்களினா லறியப்பட்ட வஸ்துக்களில் அநிஷ்டமானதை விடுகையும் இஷ்டமானதைப் பற்றுகையும் இஷ்டாநிஷ்டமிரண்டுமல்லாததை உபேக்ஷிக்கையும் ப்ரமாணத்துக்குப் பலம்; ப்ரமாண சாமாந்யலக்ஷணம்.

¶ சிற்சத்தி-ஞானசத்தி, * அபிவியஞ்சகம்-விளக்குவது

† ப்ரமாகரணம் - ப்ரமாணமென்று நையாயிகர் சொல்லுவர்கள், ப்ரமைக்குக் கரணமாகிற்று; ‡ சக்ஷுராதி ப்ரமா

ணமாம்பொழுது தீபாதிகளும் ப்ரமாணமாம், ஆகையால் சக்ஷுராதிகள் சிற்சத்திக்கு ப்ரமேயமுமாய் § பதார்த்தாபிவியஞ்சகமுமாவதன்றி ப்ரமாணமாகமாட்டாது.

† ப்ரமா-ஞானம் ‡ சக்ஷு - கண், § பதார்த் தாபிவியஞ்சகம் - பொருள்களை விளக்குவது,

ஆகில் கண்ணாலே காண்கிறேனென்கிற தெப்படியென்னில்? விளக்காலே காண்கிறேனென்கிறதுபோல வுபகாரம். ஆகையினாலே சக்ஷுவானது சப்தத்தையறியாது + ஸ்ரோத்ரமானது ரூபத்தையறியாது இவ்வாறு பஞ்சேந்த்ரியங்களு மொன்றையொன் றறியமாட்டாதபடியாலும், ஒன்றினுடைய விஷயத்தை யொன்றறியாதபடியாலும், எல்லாவிஷயத்தையு மறிகிறதியாதொன் றது ப்ரமாணமாக வேண்டும். ஆகில் எல்லாவற்றையு மறிகிறது புத்தியாகையால் புத்தியே ப்ரமாணமென்னில்? புத்தியும் ப்ரகிருதி ஜந்யமாகையால் சக்ஷுராதிகளுக்கு மதற்கும் பேதமில்லை. இதன்றியும் புத்தியானது சுகதுக்கரூபையாய் சிற்சத்திக்குப் பிரமேயமானபடியாலும், ஜடமேயல்லது சித்ரூபமான ப்ரமாணமாகமாட்டாது. ஆகையால் சிற்சத்திக்குப் பிரத்தியக்ஷாதி ப்ரமாணங்களிலே அவ்யாத்திதோஷமும், நாநாப்பிரகாரமாயிருக்கிற ப்ரமேயங்களிலே அதிவ்யாத்திதோஷமும், தான் நித்தியவ்யாபக சித்ரூபமாகையாலசம்பவதோஷமு மில்லாதபடியாலே இந்ததோஷத் திரய ரஹிதமான ஆன்மசிற்சத்தியே ப்ரமாணம்.

+ ஸ்ரோத்ரம் - காது.

* 𑌤𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑌂 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — 𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇𑌯 𑌸𑌾𑌵𑌾𑌦𑍀
𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 𑌤𑍇। 𑌨𑌨𑍁 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌤𑌾
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌂 ॥ 𑌸𑌚𑍍𑌚 𑌜𑍀𑌵 𑌜𑍍𑌞𑌮𑌾

𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌂𑌗𑌤𑌃 । 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌗𑌤𑌂
𑌧𑍇𑌯𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ॥ 𑌉𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑍀𑌯
𑌤𑌤𑌤𑍍𑌵 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌯𑌤𑌃 । 𑌯𑌦𑍍𑌧𑍇𑌯𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑌂
𑌨𑌂 𑌯𑌦𑍇𑌤𑌾𑌦𑍇𑌨𑍍𑌨𑍀𑌯𑌤𑍇 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍀𑌤𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌾
𑌘𑍋𑌗𑍇 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌣𑌃 । 𑌨𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌦𑌾𑌰𑍍,
𑌶𑍍𑌚𑍇𑌤𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌨𑌾𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾 ॥ 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍇𑌷𑍍𑌵 𑌜𑍍𑌞𑍁
𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑍍 𑌨𑌤𑌾𑌦𑍃𑌶𑌂 । 𑌨𑌚𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇
𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑌂 𑌰𑌾𑌗𑌦𑍇𑌵𑍇𑌨 ॥ 𑌸𑌵𑍍𑌯𑌤𑍍 𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑍀
𑌸𑌂𑌵𑌿𑌤𑍍 𑌸𑌸𑌵𑌾𑌨𑍇𑌤𑌾𑌸𑌤𑍍 । 𑌯𑌤𑍍𑌸𑌿𑌦𑌾 𑌵𑌿𑌦𑌂𑌸𑌿
𑌵𑌿𑌯𑌤𑍍𑌰𑌦𑌸𑌿𑌦𑍍𑌧 𑌨𑌕𑌿𑌞𑍍𑌚𑌨 ॥ 𑌬𑌾𑌧𑌿𑌸𑌵𑍍𑌯𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑍀 𑌦𑍇𑌕𑌸𑍍𑌯
𑌨𑌕𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌨 𑌚𑌷𑍍𑌟𑍇𑌤 । 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌤𑌕𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷
𑌷𑌣 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌦 𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ 𑌸𑌂𑌵𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌕
𑌕𑌸𑍍𑌯𑌨 𑌨𑌹𑌿𑌬𑌾𑌧𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌾 । 𑌬𑌾𑌧𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌵
𑌤𑍍𑌰𑍇𑌤𑌿𑌜𑍍𑌞 𑌸𑌾𑌵𑌦𑌾𑌵𑌾𑌦𑌿 𑌰𑍂𑌪𑌤𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇
𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌤𑍇𑌨 𑌬𑌾𑌧𑍇𑌰𑌵𑌿𑌨 𑌸𑌂𑌦𑌾 ॥ 𑌕𑌤𑍍𑌰𑌾
𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌣𑌾𑌂 𑌕𑌦𑌾𑌚𑌨 𑌸𑌂𑌭𑌵𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌤𑍍𑌰
𑌕𑍍𑌷𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌷𑍁 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌦𑍂𑌷𑌣𑌂 ।
𑌨𑌾𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌧𑍇𑌧𑍍𑌯𑌷𑍁 𑌨𑌾𑌨𑌾𑌹𑌾𑌵𑍇𑌷𑍍𑌵𑌤𑍍𑌤𑌿
𑌨𑌾𑌸𑍍 ॥ 𑌨𑌾𑌨𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌪𑍍𑌯𑌪𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌷𑍁
𑌤𑍍𑌤𑌦𑍃𑌶𑌂 𑌇𑌤𑌿.

பின்னுமொருவன் அந்தக்கரணங்களும் * பாஹ்யேந்த்ரியங்களும் விஷயங்களும் ப்ரமாதாவும் இந்தநாலுமுண்டானாலொன்றையொன் றறிகையு மிவைகளிலே யொன்றில்லாவிடினு மறியமாட்டாமையு மாகையால் ப்ரமா சாமக்கிரியே ப்ராமாணமென்னில்? மறுத்தால் அப்பொழுது †ப்ரமாணம் ப்ரமேயம் ப்ரமாதா ப்ரமிதியென்னும் வ்யவஹாரமில்லாமற்போம். யாதொன்று யாதொன்றைக் காட்டிலுமதிக மதுவதற்குப் ¶ பின்னமென்கிற வ்யாப்தியுமில்லையாம். ஒன்றினாலே யொன்றையொன் றறிகிறதென்கிறது மில்லையாம். ஆகையாலே சந்தேகாதிகளில்லாத ஆன்மசிற்சத்தியே ப்ரமாணம்.

* பாஹ்யேந்த்ரியங்கள்-வெளியே தோற்றுவிக்கும் பஞ்சேந்த்ரியங்கள், †ப்ரமாணம்-அளவை, ப்ரமேயம்-அறியப்படும் பொருள், ப்ரமாதா-அறிகிறவன், ப்ரமிதி - மெய்யறிவு, ¶ பின்னமென்கிற வ்யாப்தி - வேறென்கிறநியமம்.

* தஸ்மாத் தமேத்ரவ்யாநுப்ரமேய ஸம்விதேஷா ஸா ஹி ஸ்ரீகண்டேந நிர்திஷ்டேதி । ப்ரமாத்ராதி பதார்த்தேஷு ஸக்ஷேவ பதார்த்யாஸ் ॥ ந தஸ்ய ப்ரமாத்ருப்ரமாதி வ்யவஹாராத் யோபதஃ । மாத்ருமாந ப்ரமேயாணாந்தே உத்தேஸாவத்ஸ்திதஃ ॥ தேஷாஞ்ச வ்ருத்திரேகேண ஸாஹி ந ஸம்ஸ்ருதே । யஸ்மாத் வ்ருத்திஸித்தித்தேதாஸ்ய ஸாஸ்வதவ்யவஸ் ॥ ஸம்ஸயாதி விஹீநாதோ விஸமஸ்த உபாநிஷ்ட்டாழு ஐக்கி.

ஆசிறுக்கு *உக்ததோஷமுண்டு, உம்முடைய மதத்திலே ஆன்மா ஞானஸ்வரூபனாகையால் ப்ரமாணமும் ப்ரமாதாவும்

ப்ரமையுந் தானேயாகவேண்டு மாகையாலென்னில்? அப்படிய ன்று; ஆன்மசிற்சத்தியானது வித்யாராகாதி †கலுஷிதையாய் ‡ விஷயாபிமுகியானபொழுது கலுஷிதாம்ச சிற்சத்தி ப்ரமாணமேயாம். புத்தியின் § வ்ருத்திபோடேகூடி விஷயத்தைப் பரிச்சேதிக்கிறபோது ப்ரமையாம். இந்தவுபாதிகளிலுமே ¶ அகலுஷித சைதந்நியம் ப்ரமாதாவாம். இந்த வுபாதிவ்ருத்தியின்றி சிற்சத்தி × சிவோன்முகியானபொழுது சிவஞ்ஞானு + பிவியத்தியினாற் சூரியகிரணத்தாற் சூரியனையும் சர்வபதார்த்தத்தையுங் கண்டதுபோலச் சிவனையு மந்தச்சிவஞானத்தையுந் தன்னையுந் தானேகாணும்பொழுது அது ப்ரமையாய் அந்த ப்ரமையை யறிவிக்கிற சிவஞானம் ப்ரமாணமும், சிவைக்கியாநு சந்தானம் ப்ரமிதியும், ஆன்மா ப்ரமாதாவுமேயாம்.

* உக்ததோஷம் - மேற்சொன்னதோஷம், † கலுஷிதை - கூடிக்கலங்கல், ‡ விஷயாபிமுகியாதல் - விஷயத்தை யிச்சித்தல் § வ்ருத்தி - வ்யாபாரம், ¶ அகலுஷிதம் - கூடிக்கலங்காதது. × சிவோன்முகியாதல் - சிவனை விஷயமாகப்பண்ணுதல், + அபிவியத்தி - ப்ரகாசம்.

இதனால் ஆன்மசிற்சத்தி கலுஷிதமாய் விஷயாபிமுகியானபொழுது அந்தவம்சம் ப்ரமாணமேயொழிய ப்ரமாதா வாகாதென்றும், அகலுஷிதையாய் பரோன்முகி யானபொழுது ப்ரமாதாவொழிய ப்ரமாணமாகாதென்றுங் கூறப்பட்டது.

* [illegible]

[illegible] । [illegible]

[illegible] ॥ [illegible]

[illegible] । [illegible]

ஶைவதந்த்ரம் ப்ரமாணம் ஶைவ நப்ரமாணஞ்ச ஜதியோ ஜநா || *

* ஸந்த்ராவி — ஶிவாகம் ஶக்தீயித்வா ஸஞ்ஜஸ க்ருத விஞ்ஞா ஶா | ஶிவம் ஶக்த்யாதி ஹிம்ஸாஜம் ப்ரஶ்ருத்யாத்ம மதாவ்ருதிரிதி.

அத்ர சிற்சத்திப் பிரமாணமென்றும் பொதுப்பிரமாணமானது ப்ரமிதியாகாது, ப்ரமிதியானது ப்ரமையாகாது, ப்ரமையானது ப்ரமாதாவாகாது; பெத்தமுத்தி யிரண்டிலுமாத்ரம் ப்ரமாதா அத்ரப்ரதிக்ஞான பேதத்திலே ப்ரமிதியாம்.

ஸ்வரூபஞானமான சிற்சத்தி முகத்திலே ப்ரமிதிபேதத்திலே சிவனுடைய இச்சாஞானக்கிரியை ப்ரமாணம். முத்தியிலே சிவனுடைய பராசத்தியாகிய ஸ்வரூபசத்தி சிற்சத்திப்பிரமாண பேதத்திலே மாயாபதார்த்தங்களே ப்ரமேயம். முத்தியிலே சிவனே ப்ரமேயம். இப்படியன்றி அத்ரசிற்சத்தியைத்தானே யோரவசரத்திலே ப்ரமாணமென்றும், ஓரவசரத்திலே ப்ரமைபென்றும், ஓரவசரத்திலே ப்ரமாதாவென்றும், ஓரவசரத்திலே ப்ரமதிபென்றுஞ் சொல்வது விருத்தம். மமத்வாச்ரயம் ஒரு வஸ்துவுக்குச் சொல்லுகிறது உசிதமல்ல. இதற்குச் சம்மதி சிவப்பிரகாசத்திலே “இத்தகையயிறையருளால்” என்னும் பாட்டிலே “பொருந்தியிம்வகை புணரும்புனிதசத்திபுணர்ந்தே” என்றும் “பேசரிபவராகந்தன் கன்மத்துச்கிடாய்” என்னும் பாட்டிலே “இறைசத்தியுடனாய் நின்றே” என்றும், “பன்னிறங்கவருந்தன்மை” என்னும்பாட்டிலே படிகத்தின் ப்ரகாசத்தை விளக்குவிக்கிற ஆதித்தப் பிரகாசம் அது பல வன்னத்தைக் கூட்டியும் உருமத்திலே

அதை நீக்கித் தனது பிரகாசத்தைப் பதித்தும் நின்றதுபோலச் சிவஞானம் பெத்தத்திலே விஷயத்தைக்கூட்டியு முத்தியிலே யதை நீக்கி ஞானமாய்நின்று நேயத்தைக்காட்டி நிற்பதுஞ் சொல்லுகையானும்; சிவசத்தியே ப்ரமாணமாத்ரசத்தி ப்ரமிதியெனறே கொள்ளவேணுமெனவறிக.

அவ்யாத்தி அதிவ்யாத்தி அசம்பவதோஷ முண்டாயிருக்கையாலு மத்ரசிற்சத்தியைப் பிரமாணமென்பது கூடாது. அஃதெப்படியென்னில்? சிவனை அந்த ஆன்மசிற்சத்தி யறியப்போகாது என்கையினாலே யவ்யாத்தி தோஷமும், சிவஞானமானது விஷயாதிகளையு மறிவித்துச் சிவனையு மறிவிக்கையினாலே ப்ரமேயமல்லாதவஸ்த்துச் சிவனென்பதொன்றுண்டாகையினாலே அதிவ்யாப்திதோஷமும் வந்தது. ஆன்மசிற்சத்தி தானே சிவனை யறியமாட்டாதாகையினாலே அசம்பவதோஷமுண்டு. நித்யவ்யாபக சித்ரூபனான்மாவானாலும் சிவஞானத்தினாலே மலதோஷம் நீங்கியும் சிவஞானமறிவித்தாலல்லது தன்னையும் சிவனையும் பாசத்தையு மறியமாட்டாதபடியாலும் அசம்பவதோஷமுண்டு. ஆகையால் சிவசத்தியே பெத்தமுத்தி யிரண்டிலும் ப்ரமாணமெனவறிக.

* ஶிவாக்²யஶக்திரீயிதா ஸர்வஜ்ஞகர்த்ரு வித்³யா । ஶிவம் ஶக்தாத்மா ஹிஸாக்ஷம் பஶ்யதாத்மா ஹ்ருதாவ்ருதிதி.

என்றது சிவரூப ஆதித்தனானவன் சத்தியினாலே அத்ர சிற்சத்தி மலம் நீங்கினவிடத்துச் சிவனையு மந்தச் சத்தியையும் ஆன்மாவையும் பாசங்களையு மறியுமென்றார்.

பௌத்தர் † அவிசம்வாதியானவர்கள் அறிவு விஞ்ஞானம் ப்ரமாணமென்பர்கள். அப்படிசொல்லி ஆகமப்பிரமா

ணமில்லையென்பன்; அப்படியன்று. பரலோக பாதாளலோகங்களை யறிவிப்பது ஆகமமாதலால் ஆகமப்பிரமாணமுண்டெனவறிக. அதாவன?—அர்த்தக்கிரியாஸ்திதி. இதன்பொருள், யாதொருபதார்த்த * தரிசனத்தினாலே ஞானமானது † பாதிக்கப்படாமலிருக்கும் அதுவே அர்த்தக்கிரியாஸ்திதி. அதுகூடாது, ‡ பூதபௌஷியத் விஷயங்களாயிருக்கிற அநுமானங்களிலே அவ்யாப்திபாதகையாலே இந்தஆற்றில் வெள்ள மழைபெய்துண்டானது என்கிறவிடத்தில் வெள்ளமுண்டு, அவ்விடத்து மழையில்லாதபடியாலே அர்த்தமுண்டு, க்ரியையில்லையாகையால் அந்தகாலத்தில் இது அவ்யாப்தி, அவன் § ஸ்மிருதிஞானமும் சவிகற்பஞானமும் ப்ரமாணமல்லவென்கையாலவனுக்கலக்ஷியமான இவ்விரண்டினு மர்த்தக்கிரியா காரித்வமுண்டாயிருக்கையா லதிவ்யாப்தியுமாமாகையால் ¶ பூர்வோக்த சிற்சத்தியே ப்ரமாணம்.

‖ அவிசம்வாதி விஞ்ஞானம் - யாதொருபதார்த்தத்தைக் கண்டதனாலே ஞானமானது கெடுக்கப்படாமலிருத்தல், * தரிசனம் - காண்பது, † பாதிக்கப்படாமல் - கெடுக்கப்படாமல், ‡ பூதபவிஷியத்விஷயம் - செல்கால எதிர்காலவிஷயம், § ஸ்ம்ருதிஞானம் - முன்நினைவு, ¶ பூர்வோக்தம் - முன்சொன்னது.

மேல் ப்ரபாகரர்-அநுபூதியே ப்ரமாணமென்பர்கள். அநுபூதியாவது-¶ ஸ்மிருதி வியதிரிக்தஞானம். ஸ்மிருதியாவதேதென்னில்? § பூர்வாநுபவ ஜநிதசமஸ்கார ஜந்யஞானமென்பர்கள்; அதுகூடாது. அஃதெவ்வாறென்னில்? * பதார்த்தஸ்மரண பூர்வகமாக வேதவாக்யார்த்த ஞானத்துக்கு ஸ்வதப்ரமாண்யம் சாதித்தவனே ஸ்ம்ருதிவ்யதிரிக்தஞானம் ப்ரமாணமென்கையால் ‡ பூர்வோத்தரவிரோதம். மேலும் ஸ்ம்ருதிகளுக்கு

ம் × ஆன்மஸ்வாத்மாம்சங்களிற் ப்ரமாண்யமு மில்லையாமாகில் தோஷமேதென்னில்? + ஸ்வமதத்தி லபசித்தாந்தமாகையால் அநுபூதியே ப்ரமாணமென்பது † நிரஸ்தம்.

¶ ஸ்ம்ருதி வ்யதிரிக்தஞானம் - முன்னினைவில்லாதஞானம், § பூர்வாநுபவ ஜநித சமஸ்கார ஜந்யம் - முன்னால்தக்கநுபவித் ததனாலே யுண்டா யிருக்கிற, * பதார்த்த ஸ்மரணபூர்வகம் - சப்தார்த்தத்தை நினைத்து அதுமுன்னாக, ‡ பூர்வோத்தரவிரோதம் - முன்சொன்னதற்கு பின்சொன்னது விரோதம் × ஆன்மஸ்வாத்மாம்சம் - தன்னுடைய வேகதேசம், + ஸ்வமதம்-தன்னுடையமதம், †நிரஸ்தம்-கூடாமை.

மேல்பாட்டர் - அநதிகதார்த்தகந்த்ருப்ரமாணமென்பர்கள். இதன்பொருள் ஒருக்காலுமறியாதவஸ்துவை யறிவிக்கிறது ப்ரமாணம்; அதுகூடாது. ஒருகாற்கண்டகடத்தை யிதுகடம் இதுகடமென் றொழுங்காகவருகிற ஞானங்களிலே யிரண்டாவது முதலாயிருக்கிற ஞானங்களுக்கு ப்ரமாண்யமில்லையாம் இஃதன்றியும் தையாதீனமாக § அர்த்தசம்வாதத்தை உண்டில்லையென்றவாதம்உடைத்தாயிருக்கிறதோஷத்தையுடைய சக்ஷுராதிகளுக்கும் *ப்ராந்தவிப்ரலம்பக வாக்யங்களுக்கும் ப்ரமாண்யம்வந்துவிடும்: ஆகையாலி துவுநிரஸ்தம். பூர்வோக்த ஆன்மசிற்சத்தியே ப்ரமாணமாகில் சிற்சத்தியானது இந்த்ரியாந்தக்கரணங்கள் சம்பந்தமன்றி தானே ¶ பதார்த்த தாபிமுகியாகாது. ஆகையாலே சிற்சத்திக்குக் கடாதிவிஷயங்களோடு சம்பந்தமெப்படியென்னில்? ஒக்கும். சிற்சத்தியான தாணவமலத்தாற் றகையப்படுகையாலே † ஸ்வநிஷ்டமாகவே யிருக்கும். கலையினாலே ‡ கிஞ்சித்சஞ்ஞான நீக்கப்பட்டு வித்தையு மராகமுங்கூடினபொழுது புத்தியாதியோடேகூடி விஷயா பிமுகியாய் ஞானேந்த்ரியங்களோடேகூடி விஷயசம்பந்தமாம்.

இவ்வாறன்றித் தனியே + கேவலபதார்த்தேந்த்ரிய × சம்யோகங் கொண்டு ப்ரத்யக்ஷப் பிரமையுமுண்டாமென்று சொல்லப்போகாது. பதார்த்தேந்த்ரிய சம்யோகமுண்டாகியும் புருஷனுக்கு விஷயசுகமுண்டானபொழுது அந்தப்பதார்த்த ஞ ஞானமில்லாமல் சம்யோகம் ‖ நிஷ்பலமாகையாலே சிற்சத்தி விஷயசம்யோகமே ┼ ப்ரத்யக்ஷாதி ப்ரமாணம்.

§ அர்த்தசம்வாதம் - உண்டில்லையென்னும் வாதம், * ப்ராந்த விப்ரலம்பகவாக்யம் - பித்தர் விகடர்சொல்லும் வார்த்தை, ¶ பதார்த்தாபிமுகம்-பதார்த்தத்திற் கெதிர்முகம், † ஸ்வநிஷ்டம்-தன்னிஷ்டம், ‡ கிஞ்சித்தஞ்ஞான நீக்கப்பட்டும் - சற்றேமலத்தை நீக்கப்பட்டு, ǂ அபிமுகம்-எதிர்முகம், + கேவலபதார்த்தேந்த்ரியம் - தனியே பதார்த்தங்களும் இந்த்ரியங்களும், × சம்யோகம்-கூட்டுறவு, ஞ ஞானம்-அறிவு, ‖ நிஷ்பலம் - ப்ரயோசனமில்லாமை, ┼ ப்ரத்யக்ஷம்-காண்டல்.

*𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 — [illegible]

𑌇𑌤𑌿.

இந்தப்ரமாணம் § நிர்விகற்பகமென்றும் *சவிகற்பகமென்று மிரண்டுவிதமாம். நிர்விகற்பமாவது ¶ சாமாந்யமாகவொரு, ‡ வஸ்துவைக்காண்பது. பிறகு † சம்சய ◯ விபர்யயஸ்மிருதி ● நிவிர்த்தியின்பொருட்டு ⁕ நாம ╚ ஜாதியாதி போசனைடைப்பண்ணு 1மவாந்தர வ்யாபாரம். இந்த நாமஜாதியாதி விகற் 2 பாநந்தரம் வஸ்துவை 3 யதர்வத்தாக வறிகிறது சவிகற்பகஞானம். இந்த ப்ரத்யக்ஷந்தான் இந்த்ரிய 4 சாபேக்ஷமென்றும் அந்தக்கரண சாபேக்ஷமென்றும் இந்த்ரியாந்தக்கரண 0 நிரபேக்ஷமென்று மூன்றுவிதமாம். இதில் இந்த்ரியாந்தக்கரண நிரபேக்ஷ ப்ரத்யக்ஷமாவது ஒருக்காலு ¶¶ மாவரணலேசமற்றிருக்கிற ஈஸ்வர சிற்சத்தியாலே சிவாநந்தத்தை ஆன்மா வநந்நியமாக வநுபவிப்பது. இதற் கந்யமான விந்த்ரியசாபேக்ஷ ப்ரத்யக்ஷமாவது ஆணவமலா §§ வ்ருத்தியைக் கலையாலே சிஞ்சித் நீக்கப்பட்டு அந்தக்கரண ஞானேந்த்ரிய †† த்வாரா வஸ்துக்களை யறிவது. அந்தக்கரண சாபேக்ஷமாவது ‡‡ பாக்யேந்த்ரியங்களினாலே கண்டபதார்த்தங்களை சிற்சத்தியானது அந்தக்கரணங்களோடுகூடிநின்று சிந்திப்பது.

§ நிர்விகற்பம் - விகற்பமில்லாதது, * சவிகற்பம் - விகற்பத்துடனே கூடினது, ¶ சாமாந்யம் - பொது, ‡ வஸ்து - பொருள், † சம்சயம் - ஐயம், ◯ விபர்யயம் - திரிவு, ● நிவிர்த்தி - இல்லாமை, ⁕ நாமம் - பெயர், ╚ ஜாதியாதி - குலம் குணமுதலான, 1 அவாந்தரம் - நடுவேயுண்டானது. 2 அநந்தரம் - பிற்பாடு, 3 அதர்வத் - உள்ளபடி, 4 சாபேக்ஷம் - கூடினது, 0 நிரபேக்ஷம் - கூடாதது, ¶¶ ஆவரணலேசமற்றிருக்கிற - மறைப்பில்லாமலிருக்கிற, §§ வ்ருத்தி - அதிகமாதல் அதாவது மறைத்தல், †† த்வாரா - வழி, ‡‡ பாக்யேந்த்ரியம் - வெளியிந்த்ரியம். அதாவது கண்முதலிய ஞானேந்த்ரியங்களை.

* ததா²சோக்தம் — [illegible] இதி.

இந்தப்ரமாணம் ¶ அபிவியஞ்சகமானது ப்ரத்யக்ஷமென்றும் அநுமானமென்றும் சப்தமென்றும் சைவத்திற்கு மூன்றுவிதமாம்.

¶ அபிவியஞ்சகம் - வெளிப்படத்தோற்றுகிறது.

* ததா²சோக்தம் [illegible] இதி.

மேல் உலோகாயிதன் ப்ரத்யக்ஷமொன்றுமே யொழிந்தநுமானாகமங்கள் ப்ரமாணமல்லவென்பன். அதற் கவனுடைய மதத்தை நிராகரித் தநுமானாகம ப்ரமாணங்களுண்டென்பது பரபக்ஷத்தி லவனுடைய மதநிராகரணத்திலே கூறப்பட்டது.

நாலு பூதங்கூடினதே ஆன்மாவென்பன். "பூதங்கூடினதைக் கண்டாயோ இந்தப் பூண்டபூத வுடம்பின்வக்கெழு போகமென்கொடு கண்டனே" இதெல்லாம் அநுமானமெனவறிக.

அராவாரையுங் க்ரஹணந்தீண்டலும் சத்தப்ரமாணத்தினுலேயே அறிந்தாய்; ஆகையால் உரையுண்டு.

இனி ப்ரத்தியக்ஷாநுமானுகமங்க ளல்லாமல் உபமானம் § ப்ரதக்ப்ரமாணமென்று நையாயிகர் சொல்லுவர்கள். அந்த உபமானம் அநுமானத்திலே * யந்தர்ப்பவிக்கும்படி ‡ ப்ரதிபாதிப்பாம். உபமானமாவது கவ்யமாகிய மரையை யறியவேண்டின பட்டணஸ்தனுனவன் வநத்துக்குப்போய் வநத்திலுள்ளவனுன வொருவனை மரையெப்படியிருக்குமென்று கேட்கப் பசுவைப்போ லிருக்குமென் றவன் சொல்லக்கேட்டு வநத்திற்குப்போய் மரையைக்கண்டு இது ¶ கோசத்ருஶ்யமாயிருக்கிற மரை கவ்யமென்றறிகிறது. இது ப்ரத்யக்ஷாநுமானுகமங்களினுலே † யசாத்யமாகைபாலே ப்ரதக்ப்ரமாணமென்னில்? சாஸ்த்ரஸ்யஞான முபமானமேயாமென்னில்? இந்தமரை பசுவுக்கு சமானமாமென்கிறபொழுது ப்ரத்யக்ஷமேயாம். அல்லது 1அதிதேசவாக்ய ச்ரவணத்திற்குப் பிற்பாடு கவ்ய 2வாச்சியத்வ பரிச்சேதமான துபமானமென்னில்? அநுசப்தத்தினுலே தானேவரும். இந்தப்பசுவுக்குச்சமான மரை யென்கிற துபமானமென்னில்? அந்தமரை யிந்தப்பசுவுக்குச் சமானம் தக்கத சாஸ்த்ரஸ்ய ப்ரயோகியாலே யென்றுசொல்லி யறுமிக்கைபாலே அஃநுமானத்தி லந்தர்ப்பவிக்கும்; ப்ரதக் ப்ரமாணமல்ல.

§ ப்ரதக் - தனியே, * அந்தர்ப்பவித்தல்-அடங்குதல், ‡ ப்ரதிபாதித்தல் - சொல்லுதல், ¶ கோஸத்ருஶ்யம் - பசுவுக்கு சரிபாயிருக்கிறது, † அசாத்யம் - (அறிகிறது) கஷ்டம், அநா

வது அறியக்கூடாதென்பது கருத்து, 1 அதிதேசவாக்ய ச்ரவணம்-வநத்திலிருப்பவன் சொன்னதைக் கேட்டது, 2 வாச்சிய த்வபரிச்சேதம் -சொல்லினாலே சொல்லப்படுகிறது.

ப்ரபாகரர் *அர்த்தாபத்தி ப்ரதக்ப்ரமாணமென்பர்கள். அர்த்தாபத்தியாவது ஒருபுருஷன் பகலெல்லாம் போஜநம் பண்ணவில்லை பருத்துமிருக்கிறான் என்றதுகொண்டு பகல் போஜநம் பண்ணாதவனுக்கு தேகபுஷ்டி ராத்ரி புசியாவிட்டால் கூடாதாகையா லிந்த வநுபவத்தினாலே ராத்ரிபுசிப்பானென்று நிச்சயிக்கப்படுவது. இதுப்ரத்யக்ஷாதி ப்ரமாண சதுஷ்டயங்களிலு x மகம்மியமானபடியாலே அர்த்தாபத்தி ப்ரதக்ப்ரமாணமெனின்? அஃதல்ல. இந்த அர்த்தாபத்தியானது கேவல வ்யதிரேக்கியநுமாநத்தி லந்தர்ப்பவிக்கும். அஃதெப்படியென்னில்? தேவதத்த னிராத்ரி புசிப்பன், பகல்புசியாமலிருக்கவும் பருத்திருக்கையாலே. எவன் ¶திவாராத்ரம் புசியாமலிருந்தா னவனுக்கு ‡ பீநத்வங்கூடாது, § மாசோபவாசியைப்போல வென்கையால் கேவல வ்யதிரேகியி லந்தர்ப்பவிக்கும். ஆகையாலே ப்ரதக் ப்ரமாணமல்ல.

* அர்த்தாபத்தி - பொருள், x அகம்மியம் - அறியப்படாதது, ¶ திவாராத்ரம் - பகலுமிரவும், ‡ பீநத்வம் - பருத்திருத்தல், § மாசோபவாசி - மாசப்பட்டிணி யிருப்பவன்.

மேல் பட்டாசாரியர் ப்ரத்யக்ஷாதிக ளைந்தும் ப்ரமாணமுமன்றி யபாவமான † தநுபலப்தி வேத்யமாகையா லபாவம் ப்ரதக் ப்ரமாணமென்பர்கள்; அதுகூடாது. சக்ஷுசம்யுக்தமான விந்தபூதலம் ¶ கடா பாவத்தையுடையதென்று பூதலத்துக்கு விசேஷணமாகத்தான், இந்த பூதலத்திலே கடமில்லையென்று பூதலத்துக்கு விசேஷியமாகத்தான், க்ரஹி

க்கப்படுகையா லிந்த வபாவம் ப்ரத்யக்ஷத்தி லந்தர்ப்பவிக்கும்; ஆகையாலே ப்ரதக் ப்ரமாணமல்ல.

† அநுபலப்திவேத்யம் - இல்லாமையைக்கொண் டறியப்படுகை, ¶ கடாபாவம் - (கட அபாவம்) கடமில்லாமை.

பௌராணிகர் பாரிசேஷமும் சம்பவமும் ஐதிகமும் ஸ்வபாவலிங்கம் இவைநாலும் ப்ரதக் ப்ரமாணமென்பர்கள். இவைகள் முன்சொன்ன மூன்றுப்ரமாண த்ரயத்தி லந்தர்ப்பவிக்கையால் ப்ரதக்ப்ரமாணங்களல்ல. அதெங்ஙனமென்னில்? ஆயிரமியானையின் பலமுடையவர்கள் சல்லியன் சராசந்தன் கீசகன் பீமசேனன் இந்த நாலுபேருமாகையா லிவர்களுக்குள்ளே கீசகனை வதைத்தவனாறென்றவிடத்தில் அவ்விடத்தில் சல்லியனுஞ் சராசந்தனு மில்லாதபடியால் * அஞ்ஞாதவாசியாகிய பீமசேனனேயென்று நிச்சயிப்பது பாரிசேஷம். ஆயிரமியானையின் பலமுண்டான கீசகன் தனக்கு சமபலமானவன் கையாலே கொல்லப்படுவன்; அத்தன்மைபலத்தை யுடைத்தாகையாலே சராசந்தனைப்போலே யென்கிறது வ்யாப்திமூலகமானபடியாலே யிந்தப்பாரிசேஷம் அநுமானத்தி லந்தர்ப்பவிக்கும். சம்பவமானது ஆயிரத்திலே நூறுண்டென்கிறது; இதுவும் வ்யாப்திமூலகமாகையா லநுமானத்தி லந்தர்ப்பவிக்கும். ஸ்வபாவலிங்கமானது - தேமா ¶ வ்ருக்ஷமாம். தேமா ஸ்வபாவ மாகையால் வ்ருக்ஷமாகாதபோது தேமாவாகாது. ‡ சிலைபோல என்பது அந்வய வ்யதிரேக வ்யாப்தியுண்டாயிருக்கையால் இதுவும் அநுமானத்தி லந்தர்ப்பவிக்கும். ஐதிகமாவது இந்தஅரசிலே † ரக்ஷ வுண்டென்பது. இது ப்ரத்யக்ஷமுமல்லாமல் அநுமானமுமல்லாமல் வாக்யமூலமாகையால் சப்தத்தி லந்தர்ப்பவிக்கும்; ஆகையால் முன்சொன்ன ப்ரத்யக்ஷநுமாநாகமங்கள் மூன்றுமே ப்ரமாணம். இந்தப்பிரமாணங்களி

னுடைய ப்ரமாண்யமானது § ஸ்வதோவா பரதோவாவென்னில்? இந்த மூன்றுப்ரமாணத்திலும் ‖ அநுகூதமாயிருக்கிறவான்மசிற்சத்தியானது + ஸ்வசம்வேத்ய மாகையாலே × ஸ்வதக்ப்ரமாணமே.

* அஞ்ஞாதவாசி - அறியாமல் வநவாசம்பண்ணுவோன், ¶ வ்ருக்ஷம் - மரம், ‡ சிலை - கல்லு, † ரக்ஷை - பேய், § ஸ்வதோவா பரதோவா-தன்னைக்கொண்டுவருமோ வேறொன்று கொண்டுவருமோ, ‖ அநுகூதம்-கூடியிருத்தல், + ஸ்வசம்வேத்யம் - தன்னாலே யறியப்படுகிறது, × ஸ்வதக்ப்ரமாணம் - தன்னைக்கொண்டறிகிறதே ப்ரமாணம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பதிபசுபாச த்ரிபதார்த்தமாகிய ப்ரமேயசித்தி ப்ரமாணமன்றி யில்லை யென்பதனாற் ப்ரமாணங் கூறுகின்றார்.

அளவை - ப்ரமாணம், ஆறென்பர்,—காண்டல் - ப்ரத்தியக்ஷம்,—கருதல் - அநுமாநம்,—உரை - ஆகமம்,—அபாவம் - அநுபலத்தி,—பொருள் - அர்த்தாபத்தி,—ஒப்பு - உபமாநம், இப்படி பாட்டனும் வேதாந்தியும் ப்ரமாணமாறென்பர்கள். அருகனும் ப்ரபாகரனும் அவைகளுக்குள் அபாவப் பிரமாண மொன்றையுந் தள்ளிப்பிரமாணம் ஐந்தென்பர்கள், நையாயிகன் அவற்றுள் அர்த்தாபத்திப் பிரமாண மொன்றையுந்தள்ளி நாலென்பன், சாங்கியன் அவைகளுள் உபமானப் பிரமாண மொன்றையுந் தள்ளிப் பிரமாண மூன்றென்பன், பௌத்தனும் வைசேஷிகனும் அவையிற்றுள் ஆகமப்பிரமாண மொன்றையுந்தள்ளிப் பிர

மாண மிரண்டென்பர்கள்,உலோகாயிதன் அவற்றினுள் அநுமா னப்பிரமாண மொன்றையுந்தள்ளிப் பிரமாண மொன்றென்ப ன்,—அளவைமேலும் - சொல்லியவாறுப் பிரமாணங்களுக்கு மேலுங்,—ஒழிவு - பாரிசேஷ்யம்,—உண்மை - சம்பவம்,— ஐதிகம் - உலோகவாதம்,—அதனோடியல்பு - ஸ்வபாவம் என நான்களவை காண்பர்,—அவையிற்றின்மேலு மறைவர் - சொ ல்லிய விப்பத்து ப்ரமாணங்களுக்கு மேலும் ப்ரமாணங்களைச் சொல்லுவார்கள்,—அவையெல்லாமளவை - அந்த வெல்லாப் பிரமாணங்களுஞ் சாங்கியத்திலேபோல சைவசித்தாந்தத்தி லே,—காண்டல் கருதலுரை யென்றிம்மூன்றின் - ப்ரத்தியக்ஷ ம் அநுமானம் ஆகமமென்கின்ற மூன்று ப்ரமாணங்களின்,— அடங்கிடுமே - அந்தர்ப்பவிக்குந்தானே.

இத்தப் பிரமாணங்களினது பகுப்பிலக்ஷணம் அடக்கம் உ தாஹரணங்கள் விரித்து,சுருங்கியவுரையி லுரைக்கில் விபரீதமா ய் விரியும்; அதலால் முன்சொல்லிய முன்னோருரையில் முதிர்ந் தோ ருரைக்க வொருநெறிபாலறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி,நிறுத்தமுறையானே பொருளுண்மைக் களவுகூறுவா னொருடங்கி, அவ்வளவையினியல் புணர்ந்தார்க்கன்றி அதனை யெடுத்துக்காட்டலாகாமையின், முதற்கண் அளவையினியல்பு பதினொன்கு செய்யுளாற் கூறுகின்றார்.

எ-து. பிரமாணமாவது காட்சிமுதல் அறுவகைப்படுமெ ன்பாரும்,அவ்வறுவகைப் பிரமாணங்கட்குமேலும் பாரிசேடமு தலிய நான்குபிரமாணமுளவென்பாரும், அப்பத்துக்குமேலும்

பிரமாணங்களுளவென்பாருமுளர். அவையெல்லாம் பிரமாண மேயாயினுங் காட்சிமுதலிய மூன்றனுளடங்குவனவன்றி வேறுவனவல்லவென்பதாம்.

இம்முறைபற்றி ஆகமமு மநுமானத்தி லடங்குமெனப் புத்தர் முதலாயினூர் கூறுப. அஃததனுளடங்காதென்பது "நூலுரைத்தானொருவனுளன்" என்னும் பரபக்கத்துச் செய்யுளானுணர்க. பௌத் - சௌத் - மறுதலை - கஉ—செ.

இது சொற்பொருட்பின்வருநிலை.

இதனானே பிரமாணமிளைத்தென்பது கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

அளவைப்பிரமாணங்களினாலு மறியலாமென்றதெப்படியென்ற மாணுக்கனைநோக்கி மேலருளிச்செய்கிறார்.

அளவை - அளந்தறியத்தக்க ப்ரமாணம்,—காண்டல் - ப்ரத்தியக்ஷம்,—கருதல் - அநுமானம்,—உரை - ஆகமம்,—அபாவம் - உள்ளதை யில்லையென்கை,—பொருள் - அர்த்தாபத்தி,—ஒப்பு - உவமானம்,—ஆறென்பர் - இப்படி ஆறுவகையாகச் சொல்லுவர்கள்,—அளவைமேலும் - இந்தப்பிரமாணங்களையொழிய மேலும்,—ஒழிவு - பாரிசேஷம் (பாரிசேஷம் - மூன்றுபெயரிலே யிருவரைக் கள்வரல்லவென்றால் நின்றவொருவனைக் கள்வனென்றறிகை),—உண்மை - சம்பவம் (சம்பவம் - நூற்றிலே தொண்ணூறுண்டென் றறிகை),—ஐதிகம் - மரத்திலே பே யுண்டென்று லதுபோல் ப்ரதிவாதிக்கை,—இயல்பு - மா பூத்ததென்றால் மரத்தின்மேல் நிற்றல்,—என

தான் களவைகாண்பர் - என்று நாலுவகையாகவு மளந்தறிவர்கள்,—அவையிற்றின்மேலு மறைவர் - அவையிற்றுடனே வேறேயுஞ் சொல்லுவர்கள்,—அவையெல்லா மளவை - அப்படிச் சொல்லப்பட்டவையெல்லாம் ப்ரமாணங்கள்,—காண்டல் கருதலுரை யென்றிம்மூன்றி னடங்கிடுமே - இவைதான் ப்ரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் என்றுசொல்லப்பட்ட மூன்றினுள்ளுமடங்கும்:

இதனாற்சொல்லியது ப்ரத்தியக்ஷம்முதலான பத்தும் மற்றுமுள்ள ப்ரமாணங்களுங் காண்டல் கருதலுரை யென்னு மூன்றினுள்ளு மடங்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அளவை இலக்கணம்.

அளவை - ப்ரமாணமாவது,—காண்டல் - காட்சியும்,—கருதல் - அநுமானமும்,—உரை - ஆகமமும்,—அபாவம் - இன்மையும்,—பொருள் - அருத்தாபத்தியும்,—ஒப்பு - உவமையுமென,—ஆறென்பர் - ஆறுவகைப்படுமென்பர்,—அளவைமேலும் - அவ்வாறுவகைப் பிரமாணங்களுக்கு மேலும்,—ஒழிபு - பாரிசேஷமும்,—உண்மை - சம்பவமும்,—ஐதிகத்தோடு - உலகவாதத்துடன்,—இயல்பென - சகசமுமென,—நான்களவை காண்பர் - நான்குப் பிரமாணமுளவென்பாரும்,—அவையிற்றின் மேலுரைவர் - அப்பத்திற்கு மேலும் ப்ரமாணங்களுளவென்பாருமுளர்,—அவையெல்லா மளவை - அவையெல்லாம் ப்ரமாணமேயாயினும்,—காண்டல் - காட்சியும்,—கருதல் - அநுமானமும்,—உரை - ஆகமமும்,—என்றிம்மூன்றி னடங்கிடுமே - என்ற இம்மூன்றி னடங்குவனவன்றி வேறுவனவல்லவென்பதாம்.

இதனானே ப்ரமாணமினைத்தெனக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேனிறுத்த முறையானே காண்டன் முதலிய மூன்றினையும் வகுத்துணர்த்துகிறார்.

மாசறு காட்சியையந் திரிபின்றி விகற்பமுன்று,
வாசற வறிவதாகு மநுமான மவினுபாவம், பேசுறு
மேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகுங்,காசறு
முரையிம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும்.(உ)

(இ-ள்.) மாசறு காட்சியையந்திரிபின்றி விகற்டமுன்று வாசற வறிவதாகும்	குற்றமில்லாத காட்சியாவது,ஐயந் திரிபு மிகுதி முதலிய குற்றத்தையின்றி யான்மாவினது சிற்சத்தியா லறிவது.
அநுமான மவினுபாவம் பேசுறு மேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகும்	அநுமானமாவது தன்னைவிட்டு நீங்காத வ்யாத்தி பொருந்தின வேதுவைக்கொண்டு மறைந்தபொருளை யறிவது
காசறுமுரையிம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும்.	குற்றமற்ற வாகமப்பிரமாணமாவது முற்கூறிய காட்சியானு மநுமானத்தானு மறியப்படாதிருக்கிற ஸ்வர்க்க நரகாதிகளையீதென் றுறுதியிடுவிப்பது—எ-று.

விநு - விட்டுநீங்குவது, அவிநு - விட்டுநீங்காதது, பாவம் - உள்ளது; இது வடமொழி.

பசு சாத்திரஞ் சொன்னவர்கள் சர்வஞ்ஞரல்லாதபடியாலு மிராகத்வேஷத்துடன் கூடினவர்களாதலானுஞ் சிவனுக்கீஃதில்லாமையாற் சிவவாக்கியங் குற்றமில்லாதவாக்கியம் ஆதலாற் காசறுமுறையெனச் சிறப்பித்ததெனவறிக. (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ப்ரத்யக்ஷாநுமானாகமங்களுடைய லக்ஷணங்கூறுகின்றது.

மாசறுகாட்சி - குற்றமற்றப் பிரத்யக்ஷமாவது,—ஐயம் - சந்தேகம்,—திரிவு - ஒன்றை மற்றொன்றாகக் காண்பது,— ¶ அன்றி - பூர்வஸ்மரணையன்றி,—விகற்பமுன்னு - நிர்விகற்ப * நிசனந்தரம் சவிகற்பமாக விசாரித்து,—ஆசறவறிவதாகும் - முன்சொன்ன ‡ சம்சயாதிதோஷங்களின்றிக்காண்பதாம்,—அநுமானம் - அநுமானமாவது,— † அவிநாபாவம் - காரணகாரியங்களுடைய பிரிவின்மை,—பேசுறுமேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகும் - த்ரடவ்யாப்தியாகச் சொல்லப்பட்ட ப்ரத்யக்ஷமாகிய காரியவேதுவைக்கொண்டு அப்ரத்யக்ஷமாகிய காரண மவ்விடத்துண்டென்று நிச்சயிப்பது,—காசறுமுறையின் மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும் - சிற்றறிவனும் வஞ்சகனுமன்றி சர்வஞ்ஞனுக்கு சர்வாந்த்ரியாமியுஞ் சர்வஜீவ தயாபரனுமாகிய வீஸ்வரன் வாக்யமான வேதாகமங்கள் ப்ரத்யக்ஷாநுமானமாகிய விவ்விரண்டினாலு மறியப்படாதபொருளை யறிவிக்கும்.

¶ அன்றி - இன்றியெனவும்பாடம், இன்றி - இவ்விரண்டுமி ன்றி எனப் பொருளுரைப்பதுவுமொன்று, * தரிசனந்தரம் - க ண்டபிறகு, ‡ சம்சயாதி தோஷங்கள் - ஐயந்திரிவுகளாகிய கு ற்றம், † அவிநாபாவம் பேசுறுமேதுக்கொண்டு - எனவொன்றாகச் சேர்த்து பிரிவின்மைசொல்லுகிற காரியகாரணத்தைக்கொண் டு திருடவ்யாப்தியாகச் சொல்லப்பட்ட,—மனைபொருள் பெ றுவதாகும் எனக் கூட்டிமுடிக்கவும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மேனிருத்தமுறையானே காண்டல்முதலிய ப்ரமாண மூ ன்றினையும் வகுத் துணர்த்துகின்றார்.

மாசறுகாட்சி - குற்றமில்லாதபொறி புணர்ந்த சிற்சத்தி க்குறி ப்ரத்யக்ஷமாவது,—ஐயந்திரிவின்றி - சந்தேகவிபரீத மி ருதிகளன்றி;—விகற்பமுன்னு - நிர்விகற்பத்துக்குமேற் சவிக ற்பமாக,—ஆசற - குற்றமின்றி,—அறிவதாகும் - பொருளைப் போதிப்பதாகும்,—அநுமானம் - தூமமுதற்சாதநம் புணர்ந்த சிற்சத்திக்குறி யநுமானமாவது,—அவிநாபாவம் பேசுறுமே துக்கொண்டு-வ்யாத்தியோடு சொல்லப்படுமந்த தூமமுதற்சா தநங்கொண்டு,—மனைபொருள் பெறுவதாகும் - ப்ரத்யக்ஷத்து க்கு போக்யமு மயோக்யமுமா யொளித்தவஸ்துவை யறிவிப்ப தாகும்,—காசறுமுறை - குற்றமற்ற அர்த்தவாக்யம் புணர்ந்த சிற்சத்திச்குறிச் சிவாகமமாவது,—இம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும் - ப்ரத்யக்ஷத்தைக் கடந்து அநுமானாதீத மாகிய பதார்த்தத்தையும் போதிக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

---o---

எ-று. அம்மூன்றனுள், நிருவிகற்பவுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு ஐயவுணர்வும் விபரீதவுணர்வுமின்றி விடயங்களை நேரேயறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி காட்சியளவையெனப்படும். அங்ஙனம் நேரேயறியப்படுவதன்றிச் சாதித்துப் பெறற்பாலதாய் மறைந்துநின்ற பொருளை அதனை விட்டு நீங்காது யாண்டுமுடனாய் நிகழுமேதுவைக்கொண்டு அவ்வாறுணர்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி கருதலளவையெனப்படும். இவ்விரண்டானுமறியப்படாத பொருள்களை ஆத்தன்வாக்கியங்கொண்டு அவ்வாறுணரச்செய்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி உரையளவையெனப்படுமென்பதாம்.

அடங்கிடாப்பொருள் பரலோக பாதாளலோகமுதலாயின. இம்மானத்தடங்கிடும் பொருளையும் ஆத்தவாக்கியங்கொண்டறிவது அருத்தவாதம். ஐயந்திரிவின்றி விகற்பமுன்னாவென்பதனை யாண்டுங் கூட்டியுரைத்துக்கொள்க.

விகற்பமென்றது தலைக்குறை.

இதனானே இம்மூன்றற்கும் இலக்கணங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

---o---

காண்டல் கருதலுரைஎன்ற விம்மூன்றினு மெல்லா மடங்குமென்னில்? இம்மூன்றையும் விரித்துணர்க்கவேணுமென்ற மாணாக்கனைநோக்கி மேலருளிச்செய்கின்றார்.

மாசறுகாட்சி - குற்றமற்றப் பிரத்யட்சமானது,— ஐயந்திரிவின்றி விகற்பமுன்னா வாசறவறிவதாகும் - ஐயக்கா

ட்சியுந் திரிவுகாட்சியுமற விகற்பக் காட்சியும் விசாரியாமல் பொருளைக்கண்ட மாத்ரத்திலே குற்றமற வறிவதாகும்,—அநுமானம் - அநுமானமானது,— அவிநாபாவம் - அவிநாபாவமென்றும்,-பேசுறுமேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகும்-பிரிவில்லாதகுணமாகச்சொல்லப்பட்ட வேதுக்களைக் கொண்டு காணாதபொருள்களைக் காணப்படுவதாகும்,—காசறு முறையிம் மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும் - குற்றமற்ற வாகமமானது முன்சொல்லப்பட்ட விரண்டுப்ரமாணங்களினு மடங்காதவத்தத்தைக் காட்டாநிற்கும்.

இதனாற்சொல்லியது ஐயக்காட்சி திரிவுக்காட்சி விகற்பக்காட்சி மூன்றுங்கூடாமற்காண்கிறது மாசறுகாட்சியென்றும், அநுமானம் ஏதுக்களைக்கொண்டு மறைந்தபொருள்களைக் காண்கிறதென்றும், ஆகமம் இந்தவிரண்டு ப்ரமாணத்திலு மடங்காத பொருளைக் காட்டிநிற்குமென்னு முறைமையுமறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

(அ·மூன்றுனுள்) விகற்பமுமுன்னா-நிருவிகற்பவுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு,—ஐயந்திரிபின்றி - ஐயவுணர்வும் விபரீதவுணர்வுமில்லாமல்,—ஆசறஅறிவது-விடயங்களை நேரே யறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி,—மாசறுகாட்சியாகும்-குற்றமற்ற காட்சி யளவையெனப்படும்,—மறைபொருள்-அங்ஙன நேரே யறியப்படுவதின்றிச்சாதித்துப்பெறற்பாலதாய் மறைந்துநின்ற பொருளை,--அவிநாபாவம் பேசுறுமேதுக்கொண்டு -அதனைவிட்டுநீங்காது யாண்டுமுட னிகழுமேதுவைக்கொண்டு,—விகற்பமுன்னா வையந்திரிபின்றிப் பெறுவது - அவ்வாறு நிருவிகற்ப வுணர்வைத்தனக்கு முன்னாகக்கொண் டையவிப

ரீதக்குற்றமின்றியுணர்வதாகியஆன்மாவினது ஞானசத்தி,—அநுமானமாகும்-கருதலளவையெனப்படும்,—இம்மானத்தடங்கிடாப்பொருளை - இவ்விரண்டு ப்ரமாணங்களாலு மறியப்படாதபொருளை ஆப்தவாக்கியங்கொண்டு,— விகற்பமுன்று வையந்திரிபின்றிக்காட்டும் - அவ்வாறு நிருவிகற்பத்தைத் தனக்குமுன்னாகக்கொண்டு ஐயவிபரீதச்குற்ற மின்றியுணரச்செய்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி,—காசறுமுரை - குற்றமற்ற வுரையளவை யெனப்படும் - எ-று.

மறைஞானதேசிகர் உரை.

ஐயக்காட்சி திரிவுகாட்சி யிருவிதமென்பதும் சவிகற்ப நிர்விகற்ப மிருவிதமென்பது முணர்த்துகிருர்.

கண்டபொருளை யிரட்டுறவே கருதலையந் திரியவே, கொண்டறிரிவாம் பெயர்சாதி குணமேகன்மம் பொருளெனவைந், துண்டவ்விகற்ப வுணர்வினுக்குப் பொளினுண்மை மாத்திரத்தின், விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே. (ரு)

(இ-ள்.) கண்டபொருளை யிரட்டுறவே கருதலையம் — ஐயக்காட்சியாவது - தோன்றினதொரு பொருளைக் குற்றிகொல்லோ மகன்கொல்லோவென் றிரண்டுறக்கருதுமது

திரியவே கொண்டறிரிவாம் — திரிவுகாட்சியாவது - தோன்றினதொரு பொருளை விபரீதமாகக் கருதுகை.

அஃதாவது? இருளின்கண் மயக்கத்தாற் பழுதையைக் கண்டு பாம்பென் றச்சமுறுதல். இங்ஙன மாறுகொளக் கருதல் பிறவும் வந்தழிக்காண்க. விகற்பகாட்சி இருவிதமாம் அஃதாவது?

பெயர்சாதி குணமே கன்மம் பொருளெனவைந் துண்டவ்விகற் பவுணர்வினுக்கு

பெயர்முதலிய வைந்தையுங் கூடி யறியு மறிவு சவிகற்பக்காட்சி. அஃதாவது? பெயர் மாவென்பது, சாதி மாவினதுதன்மை. குணம் வண்ணம் வடிவு முதலாயின, கன்மம் அசைதல் நிற்றன் முதலாயின, பொருள் மரம்

பொருளினுண்மை மாத்திரத்தின் விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே.

சவிகற்பம்போலப் பெயர்முதலியவற்றைக் கூட்டி யுணராமற் பொருளினுண்மை மாத்திர முணரு முணர்வு நிர்விகற்பக்காட்சியாம்—எ-று.

அஃதாவது இஃதொன்றென்கை. இப்படி யைந்துவகையாக விகற்பியாதறிகை யெனவறிக.

ஆனாலிதுதான் பாலமூகாதிகள் ஞானத்தைப்போலவோ வென்னில்? அவர்களுக்குள்ளே விகற்பித்தறியு மறிவும் பிரியாப் பிரியமு முண்டாகையால் விகற்பஞானமெனவறிக.

ஏகார மீற்றசை.

உதாரணம் "அவிகற்பஞ் சவிகற்பமென்றிரண்டா மக் காட்சி-யிவிகற்பங் காட்டுவம்பா ரீண்டு."

"அவிகற்ப மத்தமுள தென்றறிகை பின்பறிகை- சவிகற்ப நாமாதி சார்ந்து" எனவறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் ப்ரத்யக்ஷலக்ஷணம் கூறுகின்றது.

கண்டபொருளை யிரட்டுறவே கருதலையம்-இரண்டு †வஸ்துவுக்குப் பொதுவாயுள்ள வடையாளத்தை யொன்றினிடத்திலேகண்டிது வெதுவோவென்பதவும், ஒருதருமத்தை யிரண்டு வஸ்துக்களிடத்திலே கண்டு சந்தேகப்படுவதும். அஃதாவன்? சாயம் ப்ராதம் சந்தியாகாலத்திலே தூரத்திலே மரையைக் கண்டிதுமரையோ பசுவோவென்பதாதியும், கடக மகுடகேயூராதி ராஜச்சின்னாபரணங்களை சமனாகத்தரித்துள்ள ராஜாவும் தண்டநாயகனுமோரிடத்திலிற்பதைக்கண்டு இவன்ராஜாவோ இவன்தண்டநாயகனோ வென்பதாதியும்,—திரியவே கொண்டறிவாம்-மரையைப் பசுவெனக்கருதலும் தண்டநாயகனை ராஜாவாகக் காண்பதாதியுந் திரிவுக்காக்ஷி, இவ்விரண்டுடனே கூடி யேற்றப்பட்ட * பூர்வாநுபவ ஜநிதமாகிய முன்வினைவும் "ஒருமொழியொழிதனினங்கொளற் குரித்தே" என்னுஞ் சூத்ரத்தாற் கூட்டிப் பொருளுரைக்கவேண்டியது. அதுவருமாறு:—காமுகனுக்குக் காமினியுருவெளியாதி. இதுவும் ப்ரத்யக்ஷாபாசம். மேல்புத்தி கூடாமல் வித்யாதத்வமாத்ரங்கொண்டு காண்பது சாமாந்ய ப்ரத்யக்ஷமென்பதற்காக,—பொருளினுண்மைமாத்திரத்தின் விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக்காட்சியே - ஒருவஸ்துவை நாமஜாதியாதி நிர்த்தேசமன்றி யிஃதொன்றென்று காண்பது நிர்விகற்பக ப்ரத்யக்ஷம், மேல் புத்திதத்வத்தைக்கூட்டி நாம ¶ஜாதியாதி விசேஷத்தோடேகாண்பது விசேஷ ப்ரத்யக்ஷமென்பதற்காக,— § விகற்பவுணர்வினுக்குப் பெயர்சாதிகுணமே கன்மம்பொருளென வைந்துண்டு - சவிகற்பக ப்ரத்யக்ஷத்துக்கு நாமஜாதிகுண ‡ கன்

மவஸ்துவென்று மைவகையும் பகுத்தறிவது நல்லப்ரத்யக்ஷம். அஃதாவது மதனபாணமான புஷ்பத்தையும், பரிமளத்தையும், கோகில ० கூஜிதத்தையு முடைத்தாகையா லிந்தவ்ருக்ஷம் தேமாவென்றறிவது.

ஏகாரம் ஈற்றசை.

† வஸ்து - பொருள், * பூர்வாநுபவ ஜநிதம் - முன்னநுபவத்தா லுண்டாயது, ¶ ஜாதியாதி விசேஷத்தோடே - ஜாதிகுணக்கிரியையுடனே என்பதாம், § இம்மூன்றாவது கண்ணழிவை இரண்டாவதினும் இரண்டாவதை மூன்றாவதினும் பாட்டிற் கேற்ப சிலப்ரதிகளி லுமையிட்டிருக்கும், ‡ கன்மம் - க்ரியை, ० கூஜிதம் - த்வனி, ஓசை.

❋ தது³க்தம் வளக்ஷ்மீரே — அப்ராமாண்ய ஸம்ஶயாபாவ [illegible] நாகார உபஸ்துநாக: । விஶேஷணோயோ ந்ரு யாஜ்ஞாந ஜநித ஜ்ஞாநவ ப்ரதிபத்தம் ॥ ஸந்தி ஸந்தா ஸ்வவிஷயாபேக்ஷிதா ப்ரதிபேத்யாதே ।

❋ காரிகேச — காரிகத்வாக்ஷக்ஷாவிஸ்வம் காரிகீஜய ஜீக்ஷ்யதே ।

❋ தது³க்தம் வளக்ஷ்மீரே — விகல்ப்யோமாந: ஸாமாந்ய க்ரமேணாப்யவதாரயேத் ஸத்யப்ரஹணம் நிர்விகல்பகம் ॥ நாமஜாத்யாதி ஸம்பந்த ஸம்யோஜிதம் ஸவிகல்பகம் । ஜ்ஞாநவஸ்து ஸம்யோகாதாநோதோ நிர்விகல்பகம் ॥ ஸவிகல்பதயா ஜ்ஞேயோபேக்ஷ வஸ்துப்ரவ்ருத்திதம் । தஸ்மாத் தத்ராவிவேக ஸ்வஸ்வோ வஸ்த்ரநிஷ்யாதகம்தி.

பெயர் - மா வென்பது, ஜாதி - வ்ருக்ஷஜாதி, குணம் - வண்ணம் - வடிவு - பூக்காய் பழமுதலாயினவை, கன்மம் - அசைதல் - நிற்றல் - பூத்தல் - காய்க்குமது, பொருளாவது - இன்னது பெறும் விலை - இன்னத்துக்கானபொருளென்பது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஐயந்திரிவின திலக்கணமும், நிர்விகற்பஞானம் சவிகற்ப ஞானமென்று ஞான மிருவிதமென்றும்பண்ணி யதிலக்கணமும், உணர்த்துகின்றார்.

ஐயம் - சந்தேகமாவது,—கண்டபொருளை - பொதுவிலக்ஷணமாகப் பார்த்த பதார்த்தத்தை,—இரட்டுறவேகருதல் - குற்றிகொல்லோ மகன்கொல்லோவென்று குறித்தல்,—திரிவு - விபரீதம்,—திரியவே கொண்டலாம் - சிப்பியை வெள்ளியென்று க்ரகித்தலாம்,—அவ்விகற்ப வுணர்விலுக்கு - அந்தச்சவிகற்ப ஞானத்துக்கு,—பெயர்சாதிகுணமே கன்மம் பொருளென வைந்துண்டு - தாண்டவனென்னும் பெயர், ப்ராம்மணனென்னுஞ் ஜாதி, சிவப்பனென்னுங் குணம், தேவபூஜகனென்னுங் கன்மம், இவனென்னும் பொருளெனவைந்துண்டு,—விகற்பமில்லாக்காட்சியே - நிர்விகற்பஞானமாவது,—பொருளினுண்மைமாத்திரத்தின் - ஒன்றிதென்று வஸ்துவினது சத்வமாத்திரத்திலே,—விண்டலில்லா வறிவாகும் - முன்நிர்விகற்ப காரணத்திலே சவிகற்பகாரியந் தோற்றுதாகி லுத்தரகாலஞ்சவிகற்பமுண்டாகாதாமென்னுஞ் சற்காரியவாதவார்த்தையினாலே நாமஜாதி குண க்ரியைகட்குத் தன்னிடத்திற் சற்றேதோற்றுத லுண்டாயிருந்தாலும் வசனித்தலுக் கேதுவல்லாத ஞானமாகும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ - து. மேற்கூறிப்போந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள், பெயர்முதலியவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றுநின்றதெனப் பொருளுண்மை மாத்திரையேயறியும் ஞானசத்தி நிருவிகற்ப மெனப்படும். அங்ஙனமறிந்த பொருளை இஃதியாதோவென ஒன்றிற்றுணிவுபிறவா தாராயும் ஞானசத்தி ஐயமெனப்படும். அதனை அதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஞானசத்தி திரிவெனப்படும். பெயர்முதலியவைந்தும் பொருடோறுமுண்மையின் அவ்வைந்தும் அப்பொருட்கண்ணுள்ளவா றினிதுவிளங்க வுணரும் ஞானசத்தி சவிகற்பமெனப்படு மென்பதாம்.

முன்கண்ட வாதனைபற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வு இவ்விடத்துக் கண்ட பொருளின்கணிகழ்வதன்மையின், அதனையீண்டெடுத்தோதி லிலக்காராயினார்.

இதனானே காட்சிமுதலிய மூன்றினுஞ் சேறற்குரிய நிருவிகற்பமுதலிய நான்கினிலக்கணங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன்சொன்ன ஐயக்காட்சி திரிவுகாட்சி விகற்பக்காட்சி நிருவிகற்பக்காட்சியென்னு நாலு மேலருளிச்செய்கிறார்.

கண்டபொருளை யிரட்டுறவே கருதலையம் - தோன்றினதொருபொருளை யிரண்டுபடக் கருதுகிறது ஐயக்காட்சி,—திரியவே கொண்டல் திரிவாம் - தோன்றின வந்தப்பொருளைத் திரியக்காண்கிறது திரிவுகாட்சி,—பெயர்ச்சாதி குணமேகன்மம் பொருளெனவைந் தண்டவிகற்ப வுணர்விணுக்கு - பெயர்மாவென்றும் சாதிசந்தனமென்றும் குணஞ்சுகந்தமென்றும் இந்த

மரத்தைக்கண்டவ னித்தைக்கொண்டுபோனா லிதனால் நமக்குப் பயனுண்டென்றும் இந்தமர மித்தனைபொன் பெறுமென்றும் இப்படி ஐந்துவகையாக வறிகிறது சவிகற்பப் பிரத்யட்சம்,—பொருளினுண்மை மாத்திரத்தின் விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே - தோன்றின பொருளினுண்மை சற்றுஞ்சொல்லுதற் கொண்ணாத வறிவாயிருக்கிறது நிர்விகற்பப் பிரத்யட்சமாம்.

இதனாற் சொல்லியது ஐயக்காட்சியுந் திரிவுக்காட்சியும் விகற்பக்காட்சியும் நிருவிகற்பக் காட்சியுமென்று சொல்லப்பட்ட நாலினது முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(மேற்கூறிப்போந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள்) விண்டலில்லா - பெயர்முதலியவற்றாற் பகுத்தறிதலின்றி,—பொருளினுண்மை மாத்திரத்தி னறிவாகும் - இஃதொன்று தோன்றாநின்ற தெனப்பொருளுண்மை மாத்திரையே யறியு ஞானசத்தி,—விகற்பமில்லாக்காட்சியே - நிருவிகற்பக்காட்சி யென்னப்படும்,—கண்டபொருளை இரட்டுறவே கருதல் - இஃதியாதோவென வொன்றிற் றுணிவுபிறவாதாராயு ஞானசத்தி,—ஐயம் - ஐயக்காட்சியெனப்படும்,—திரியவேகொண்டல் - அதனையதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கு ஞானசத்தி,—திரிவாம் - திரிவுகாட்சியெனப்படும்,—பெயர்சாதிகுணமே கன்மம்பொருளென வைந்துண்டு - பெயருஞ் சாதியுங் குணமுங் கன்மமும் பொருளுமென வைந்தும் பொருடோறு முண்மையின் அவ்வைந்து மப்பொருட்கணுள்ளவா றினிது விளங்கவுணரு ஞானசத்தி,—அவ்விகற்ப வுணர்வினுக்காம் - சவிகற்பக்காட்சி யெனப்படும் என்பதாம்.

இதனானே காட்சிமுதலிய மூன்றினுஞ் சேறற்கரிய நிருவிகற்பமுதலிய நான்கினிலக்கணம் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேற் காண்டல் நால்வகையென்பதுவு மனுமான மிருவகைத்தென்பதுவு முரை மூவிதமென்பதுவு மிலக்கண மிருவித மென்பதுவு முணர்த்துகிறார்.

காண்டல்வாயின் மனந்தன்வேதனையோ டியோகக்காட்சியென, வீண்டுநான்கா மநுமானந் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டா, மாண்டவுரை தந்திரமந்திரத்தோ டுபதேசச்சொ லெனமூன்றும், பூண்டவளவைக் கெதிர்புலன்றன் னியல்புபொதுவென் றிரண்டாமே. (ச)

(இ-ள்) காண்டல்வாயின் மனந்தன் வேதனையோ டியோகக் காட்சியென வீண்டுநான்காம் காண்டலிவ்விடத்து நால்வகைப்படும் அஃதாவது?—

இந்த்ரியக்காட்சி மானதக்காட்சி வேதனைக்காட்சி யோகக்காட்சி எனவரும். காட்சியென்பதனை முற்றுங்கூட்டுக. ஓடு எண்.

அநுமானந் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டாம். — தன்னநுமானம் பிறரநுமானமெனவு மிருவிதமாம்.

மாண்டவுரை தந்திரமந்திரத் தோடுபதேசச் சொலெனமூன்றும் — அழகிய வாகமப்பிரமாணந் தந்திரகலை மந்திரகலை யுபதேசகலையென மூவிதமாம்.

பூண்டவளவைக் கெதிர்புலன்றன் னியல்புபொதுவென் றிரண்டாமே. — இப்படிச்சொல்லப்பட்ட ப்ரமாணங்களாலே யளந்தறியப்பட்ட பொருள்களிருவிதப்படும். அஃதாவது?—தன்னியல்பென்றும் பொதுவியல்பென்று மிரண்டாம்.

எதிர்தல் - தோன்றுதல், புலன் - ப்ரமேயமெனவறிக.

(சு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ப்ரத்யக்ஷ நாலுவகையு மநுமானமிருவகையு மாகமமூன்றுவகையுமென்னு முறைமை கூறுகின்றது.

காண்டல் வாயில் மனந்தன் வேதனையோ டியோகக்காட்சியென விண்டுநான்காம் - ப்ரத்யக்ஷமாவது, இந்த்ரியப்பிரத்யக்ஷமென்றும் மானஸப்பிரத்யக்ஷமென்றும் ‡ஸ்வவேதனப்ரத்யக்ஷமென்றும் யோகப்ரத்யக்ஷமென்றும் நான்குவகையாம்.

[illegible]

என்றும், ஸதஶ்சேந்த்ரிய ஸாபேக்ஷம் நிரபேக்ஷ தேஶிவம் | ஸஜ்ஞாநஸாபேக்ஷ மித்ரிய விஷ்ரதே || என்றும் ப்ரத்தியக்ஷ மூன்றாக சிவாகம வசநமிருக்க இவ்விடத்தில் ப்ரத்யக்ஷ நாலுவிதமென்று சொன்னது விரோதமென்னில்? ஸ்வவேதநுப்ரத்யக்ஷ மாநஸப்பிரத்யக்ஷத்திலே அந்தர்ப்பவிக்கும். ஆகையால் விரோதமில்லை,—அநுமாநந்தனக்கும் பிறர்க்குமென்றிரண்டாம் - அநுமாநமானது ¶ ஸ்வார்த்தாநுமாந மென்றும் † பரார்த்தாநுமானமென்று மிருவகைப்படும்,—மாண்டவுரைதந்திரமந்திரத்தோபதேசச்சொல்லென மூன்றும்-ஆகாம் க்ஷாதி யழுகையுடைய ஆகமமானது கன்மகாண்டமென்றும் உபாசனகாண்டமென்றும் ஞானகாண்டமென்றும் மூன்றுவிதமாம்,—பூண்டவளவைக்கு - பொருந்தப்பட்ட ப்ரமாணத்துக்கு,—எதிர்புலன் - முன்னேகாணப்பட்ட ப்ரமேயமானது,—தன்னியல்பு பொதுவென்றிரண்டாமே - தன்னியல்பு என்பது அவ்யாப்தி ஸம்பவதோஷ *ரஹிதமான × அசாதாரணலக்ஷணம். பொதுவியல்பு என்பது சாதாரணலக்ஷணம். இயல்புஎன்பது நடுநிலைத்தீபகம். லக்ஷணத்திற்குக் குற்றமூன்றுண்டு அஃதாவன:—அதிவ்யாப்தி லக்ஷணஸ்யாவ்யாப்தி ஸ்யா வ்யாப்தி | அவ்யாப்தி லக்ஷணஸ்ய வ்யாப்தி ஸ்யாவ்யாப்தி | அஸம்பவ லக்ஷணஸ்ய ஸம்பவம் | என்றிதன் பொருள்.

‡ ஸ்வவேதநு - தன்வேதனை, ¶ஸ்வார்த்தம்- தன்பொருட்டு, † பரார்த்தம் - பிறர்பொருட்டு, * ரகிதம்-இல்லாமை, × அசாதாரணம்-உண்மை.

இலக்கியத் தோரிடத்தி லக்ஷணமிராமை யவ்யாப்தி - இலக்கியமில்லாதவிடத்தி லக்ஷணமிருப்ப ததிவ்யாப்தி - இலக்கியத்தோரிடத்து மிலக்ஷணமிராமை யசம்பவம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

---o---

நிர்விகற்ப சவிகற்பஞானமெனும் ப்ரமிதிபலவத்தாகிய ப்ரத்யக்ஷப் பிரமாணமுதலாகிய ப்ரமாணத்தினது பேதங்களைக்கூறுகின்றார்.

காண்டல்-ப்ரத்யக்ஷப்பிரமாணமாவது,—வாயில்-இந்த்ரியப்ரத்யக்ஷம்,—மனம்-மானதப்ரத்யக்ஷம்,—தன்வேதனை-சுவசங்வேதனாப்ரத்யக்ஷம்,—அந்தச்சுவசங்வேதனா ப்ரத்யக்ஷத்தோடு யோகக்காட்சியென-யோகப்பிரத்யக்ஷமென,--ஈண்டு நான்காம்-இந்தசைவத்தில் நான்காம்,--அநுமானம்-அநுமானப்பிரமாணமாவது,—தனக்கும் பிறர்க்குமென்றிரண்டாம்-தன்னநுமானமென்றும் பிறநுமானமென்று மிருவிதமாம்,—மாண்டவுரை-மாட்சிமைபொருந்திய வாகமப்பிரமாணம்,—தந்திரமந்திரத்தோ டுபதேசச்சொல்லென - தந்திரகலை மந்திரகலை யுபதேசகலையென,—மூன்றாம் - மூன்றுவிதமாம்,—பூண்டவளவைக் கெதிர்புலன் - பொருளோடு பொருந்திய ப்ரமாணங்கட்கு முன்னாகிய ப்ரமேயம்,—தன்னியல்பொதுவென்று - அசாதாரணலக்ஷணத்தை யுடையது சாதாரணலக்ஷணத்தை யுடையதென்று,—இரண்டாமே - இரண்டுவிதமேயாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ.- து. அம்மூன்றனுள், காட்சியளவை-வாயிற்காட்சிமு தல் நான்கு வகைப்படும்; கருதலளவை-தன்பொருட்டுப் பிற ர்பொருட்டென இருவகைப்படும்; உரையளவை-தந்திரகலைமு தன் மூவகைப்படும்: இப்ரமாணங்களா னறிபப்படும் ப்ரமேய ங்களதிபல்பு - சிறப்பியல்பு பொதுவியல்பென இருவகைப்படு மென்பதாம்.

இதனானே, காட்சிமுதலிய மூன்றும் படும் பாகுபாடும், அவற்றா னளக்கப்படும் பொருள்களின் பாகுபாடும், தொகுத் துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மீளவும் ப்ரத்யக்ஷ மநுமான மாகமமென்ற மூன்றையும் பாரித்து விரித்தருளிச்செய்கிறார்.

காண்டல்வாயில் மனந் தன்வேதனையோ டியோகக்கா ட்சி யெனவீண்டு நான்காம் - இந்த்ரியப் பிரத்யக்ஷமென்றும் மானதப்பிரத்யக்ஷமென்றும் தன்வேதனா ப்ரத்யக்ஷமென்றும் யோகப்ரத்யக்ஷமென்றும் இவ்விடத்துப் பிரத்யக்ஷம் நாலா ம்,—அநுமானம் - அநுமாநமென்று சொல்லப்பட்டது,—த னக்கும் பிறர்க்கு மென்றிரண்டாம் - அந்தவநுமானந்தான் ஸ்வார்தாநுமானமென்றும் பரார்த்தாநுமானமென்றும் இரண்டு வகையாம்,— மாண்டவுரை தந்திரமந்திரத்தோ டுபதேசச் சொல்லென மூன்றும் - மாட்சிமையுடைத்தாகிய வத்தவாகம மானதுதான் தந்திரகலையென்று மந்திரகலையென்றும் உ

ப்தேசகலையென்று மூன்றுப்பிரகாரமாம்,—பூண்ட வளவைக் கெதிர்புலன் றன்னியல்புபொதுவென் றிரண்டாமே - இப்படி பொருந்தப்பட்டப் பிரமாணங்களுக்கு மாறுபாடாகச்சொல்லப்பட்ட விஷயங்களானது தன்னியல்பென்றும் பொதுவியல்பென்று மிரண்டுவகையாம்.

இதனாற்சொல்லியது ப்ரத்யக்ஷம்நாலுப்பிரகாரமா யிருக்குமென்றும் அநுமானமிரண்டுப்பிரகாரமாயிருக்குமென்றும் ஆகமம் மூன்றுப்ரகாரமா யிருக்குமென்றும் இந்தப் பிரமாணங்கள் தன்னியல்பென்றும் பொதுவென்று மிரண்டுவகையாயிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(அம்மூன்றனுள்) காண்டல் - காட்சியளவையானது,—வாயிற்காட்சி - வாயிர்காட்சியும்,—மனக்காட்சி - மானதக்காட்சியும்,—தன்வேதனைக்காட்சி - தன்வேதனைக்காட்சியும்,—யோகக்காட்சியென - யோகக்காட்சியுமென,—ஈன்நோன்காம் - இவ்வன் நான்குவகைப்படும்;—அநுமானம் - கருதலளவையாவது,—தனக்கும் பிறர்க்கும் - தன்பொருட்டநுமானமும் பிறர்பொருட்டநுமானமும்,—என்றிரண்டாம் - என்றிருவகைப்படும்;—மாண்டவுரை - மாட்சிமைப்பட்ட வுரையளவையாவது,—தந்திரச்சொல் - தந்திரகலையும்,—மந்திரச்சொல்லோடு - மந்திரகலையும்,—உபதேசச்சொல் - உபதேசகலையும்,—எனமூன்றும் - எனமூன்றுவகைப்படும்;—பூண்ட வளவைக் கெதிர்புலன் - இப்பிரமாணங்களால் அறியப்படும் ப்ரமேயங்களி னியல்பு,—தன்னியல்பு பொதுவென்று - சிறப்பியல்பு பொதுவியல்புஎன,—இரண்டாமே - இருவகைப்படுமென்பதாம்.

இதனானே காட்சிமுதலிய மூன்றும் படும்பாகுபாடு மவற்றா னளக்கப்படும் பொருள்களின் பாகுபாடும் தொகுத்துக் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய தன்னியல்பும் பொதுவியல்பு
மென விருவித முணர்த்துகிறார்.

அன்னிய சாதியுந் தன்சாதியு மகன்றுநிற்ற, றன்னியல் பந்நியத்தைத் தவிர்ந்துதன் சாதிக்கொத்த, துன்னிய பொதுவியற்கை சொன்னவிவ் விரண்டினுள்ளே, மன்னிய பொருள்களியாவு மடங்கிடு மானமுற்றால். (௫)

(இ-ள்.) அன்னிய சாதியுந்தன் சாதியு மகன்றுநிற்ற றன்னியல்பு	அந்யசாதியாகிய விருப்பையுந் தன்சாதியாகிய மாவையு மகன்று தேமாவெனச் சிறப்புப்பெயர்பெற்றுநிற்ற றன்னியல்பெனப் பெறும்.
அந்நியத்தைத் தவிர்த்துதன் சாதிக்கொத்த துன்னிய பொதுவியற்கை	அந்யசாதியாகிய விருப்பைமுதலியவொழித்து தன் சாதியாகிய மாமரமெனப் பொதுப்பெயர்பெற்று நிற்றல் பொதுவியல்பெனப்பெறும்
சொன்னவிவ் விரண்டினுள்ளே	இந்தவிசேடஞ் சாமாந்யமெனச் சொல்லிய விரண்டினுள்ளே யுலகத்து நிலைபெற்ற

மன்னிய பொரு பொருள்களெல்லா மளந்தறியுங்கா லிவற்ள்களியாவு மட றினு ளடங்கும்—எ-று.
ங்கிடு மானமுற்
முல்.

ஈண்டிதனாற் ப்ரயோசநமியாதோவெனின்? அந்ய சாதியென்பது - பாசவர்க்கம், தன்சாதியென்பது - ஆன்ம வர்க்கம், தன்னியல்பென்பது - அந்யசாதியாகிய பாசத்தை யொழித்துத் தன்சாதியாகிய விஞ்ஞானகலர் ப்ரளயாகலர் சகலரென நிற்றல், பொதுவியல்பென்பது - அந்யசாதியாகிய பாசத்தைத் தவிர்ந்து தன்சாதியாகிய சகலரென்னும் பெயரையு மொழித்துப் பசுவென நிற்றலெனவறிக. (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் அசாதாரணலக்ஷண மிவ்வாறு சாதாரணலக்ஷண மிவ்வாறு என்பது கூறுகின்றது.

அன்னியசாதியுந் தன்சாதியு மகன்றுநிற்றல் தன்னியல்பு-கபிலைப் பசுவானது அந்யஜாதியான எருமைமுதலானவைகளினுடைய லக்ஷணத்தையுந் தன்சாதியாகிய வெள்ளை கறுப்பு சிவப்புமுதலான வர்ணங்களையுடைய பசுக்களுடைய லக்ஷணங்களையுமன்றிக்கபிலைப்பசுவென்று நிற்பது தன்னியல்பென்னும் ¶ அசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தைத் தவிர்ந்து தன்சாதிக்கொத்த துன்னியபொதுவியற்கை-அந்யஜாதியாகிய வெருமை குதிரை முதலானவைகளின் லக்ஷணங்களையன்றிக் கழுத்திற் றான்ற கொம்பு குளம்பு வால் குட்டேறு இந்த வைந்துலக்ஷணங்களையுமுடையது பசுவென்பது பசுக்களுக்கெல்லாஞ் * சாதாரணலக்ஷணம்,— சொன்ன விவ்விரண்டினுள்ளே மன்னிய

பொருளியாவு மடங்கிடுமானமுற்றால் - இந்த அசாதாரணஞ் சாதாரணமென்னு மிரண்டுலக்ஷணத்துக் குள்ளே ப்ரமேயத்ரி பதார்த்தமான பதார்த்த த்ரயங்களின் பேதங்களெல்லாம் ப்ரமாண § புரஸ்ஸரமாக விசாரிக்குங்காலத்தி லறியப்படுமாகையால் பதியினுடைய ஸ்வரூபலக்ஷணத்தையுஞ் சத்தர் உத்தியுக்தர் ப்ரவர்த்தரென்னும் பதி † யவஸ்தாத்ரயா சாதாரணலக்ஷணங்களையுந் தச்சத்திபேதங்களினுடைய அசாதாரணலக்ஷணங்களையும் விஞ்ஞானகலர் ப்ரளயாகலர் சகலரென்னு மான்மவர்க்கங்களினுடைய அசாதாரணலக்ஷணங்களையு மவஸ்தாத்ரயா சாதாரண லக்ஷணங்களையும் ஆணவாதி ‡ பாசபஞ்சகத்தினுடைய அசாதாரண சாதாரணலக்ஷணங்களையுஞ் சுத்தாசுத்த மாயாகாரியங்களாகிய தத்வதாத்விகங்களினுடைய அசாதாரண சாதாரண லக்ஷணங்களையும் × பரீக்ஷாபூர்வகமாக வறிந்தவன் + ப்ரமாணஞ்ஞன் ஆகையாலிந்த ஸாஸ்திரத்தில் முதல்சூத்ரந் தொடங்கி ஏழாஞ்சூத்ரபரியந்தம் இந்த லக்ஷணங்கள்வந்த விடங்டோறுங்கண்டுகொள்க.

¶ அசாதாரணலக்ஷணம் - உண்மைலக்ஷணம், * சாதாரணலக்ஷணம் - பொதுலக்ஷணம், § புரஸ்ஸரமாக - முன்னிட்டுக்கொண்டு, † அவஸ்தாத்ரயம் - மூன்றவத்தைகள், ‡ பாசபஞ்சகம்-பஞ்சபாசமெனமாறுக, × பரீக்ஷாபூர்வகமாக வறிந்து-பரிக்ஷித்துப்பார்த்து, + ப்ரமாணஞ்ஞன் - ப்ரமாணத்தையறிந்தவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தன்னியல்பு பொதுவியல்பென்று சொல்லிய ப்ரமேயப்பொருளின தியற்கையைக் கூறுகின்றார்.

பதிபதார்த்தத்துள் - அநாதிமுத்த சிவனுக்கு:—அன்னிய சாதியும் - பசுபாசங்களையும்,—தன்சாதியும்-ஆதிமுத்தசிவன் அபரமுத்தசிவ னிவர்களையும்,—அகன்று - நீங்கி அநாதிமுத்தசிவனென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பசுபாசங்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - ஆதிமுத்தசிவன் அபரமுத்தசிவ னிவர்களுக்குச் சமமாகிச்சிவனென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

ஆதிமுத்தசிவனுக்கு:—அன்னிசாதியும் - பசுபாசங்களையும்,—தன்சாதியும் - அநாதிமுத்தசிவன் அபரமுத்தசிவ னிவர்களையும்,—அகன்று - நீங்கி, ஆதிமுத்தசிவனென்று,—நிற்றல்- இருத்தல்,— தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பசுபாசங்களை மாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,— தன்சாதிக்கொத்தல் - அநாதிமுத்தசிவன் அபரமுத்தசிவ னிவர்களுக்குச் சமமாகிச் சிவனென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

அபரமுத்திசிவனுக்கு:—அன்னியசாதியும் -பசுபாசங்களையும்,—தன்சாதியும் - அநாதிமுத்தசிவன் ஆதிமுத்தசிவ னிவர்களையும்,—அகன்று - நீங்கி, அபரமுத்தசிவனென்று,—நிற்றல்- இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை- பசுபாசங்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - அநாதிமுத்தசிவன் ஆதிமுத்த னிவர்களுக்குச் சமமாகிச் சிவனென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

பசுபதார்த்தத்துள் விஞ்ஞானகலனுக்கு:—அன்னியசாதியும்-பதிபாசங்களையும்,—தன்சாதியும் - ப்ரளயாகலன் சகல

னிவர்களையும்,—அகன்று - நீங்கி விஞ்ஞானகலனென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு-தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பதிபாசங்களைமாத்ரம்,— தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல்-ப்ரளயாகலன்சகலனிவர்களுக்குச்சமமாகிப் பசுவென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை-பொருந்திபசாதாரணலக்ஷணம்.

ப்ரளயாகலனுக்கு:— அன்னியசாதியும் - பதிபாசங்களையும்,— தன்சாதியும் - விஞ்ஞானகலன் சகலனிவர்களையும்,—அகன்று - நீங்கி,—ப்ரளயாகலனென்று,—நிற்றல் - இருத்தல்,— தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பதிபாசங்களை மாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - விஞ்ஞானகலன் சகலனிவர்களுக்குச் சமமாகிப் பசுவென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை - பொருந்திப சாதாரணலக்ஷணம்.

சகலனுக்கு:—அன்னியசாதியும் -பதிபாசங்களையும்,—தன்சாதியும் - விஞ்ஞானகலன் ப்ரளயாகல னிவர்களையும்,—அகன்று - நீங்கி சகலனென்று,—நிற்றல் - இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை -பதிபாசங்களைமாத்ரம்,—தவிர்ந்து- நீங்கி,—தன்சாதிக்கொத்தல்-விஞ்ஞானகல ப்ரளயாகல னிவர்களுக்குச் சமமாகிப் பசுவென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

பாசபதார்த்தத்துள், மலத்துக்கு:—அன்னியசாதியும் - பதிபசுக்களையும்,—தன்சாதியும்-மாயாகன்மங்களையும்,—அகன்று-நீங்கி மலமென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு- தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை- பதிபசுக்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - மாயாகன்மங்களுக்

குச் சமமாகிப் பாசமென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னிய பொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

மாயைக்கு:—அன்னியசாதியும்-பதிபசுக்களையும்,--தன்சாதியும்-மலகன்மங்களையும்,—அகன்று-நீங்கிமாயையென்று,—நிற்றல்-இருத்தல்,—தன்னியல்பு-தனதசாதாரணலக்ஷணம்,--அங்யநித்தை - பதிபசுக்களைமாத்ரம்,—தவிர்ந்து-நீங்கி,—தன்சாதிக்கொத்தல்-மலகன்மங்களுக்குச் சமமாகிப் பாசமென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியற்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்.

கன்மத்துக்கு:—அன்னியசாதியும் - பதிபசுக்களையும்,—தன்சாதியும் - மலமாயைகளையும்,—அகன்று - நீங்கிக் கன்மமென்று,— நிற்றல் - இருத்தல்,—தன்னியல்பு - தனதசாதாரணலக்ஷணம்,—அந்நியத்தை - பதிபசுக்களைமாத்ரம்,—தவிர்ந்து - நீங்கி,—தன்சாதிக்கொத்தல் - மலமாயைகளுக்குச் சமமாகிப் பாசமென்று,—நிற்றல் - இருத்தல்,—துன்னியபொதுவியர்கை - பொருந்திய சாதாரணலக்ஷணம்,—

சொன்ன விவ்விரண்டினுள்ளே-கூறிய பொதுச்சிறப்பென்கின்ற விந்தவிரண்டினுள்ளே,—மன்னிய பொருளியாவும்-நிலைபெற்ற பதார்த்தங்களெல்லாம்,—மானமுற்றால் - அளவைப்பொருந்தில்,—அடங்கிடும் - அந்தர்ப்பவிக்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இ-ள். சிறப்பியல்பு பொதுவியல்பென்ற இரண்டனுள், ஒருபொருட்கு வேற்றுச்சாதிப்பொருளினுந் தன்சாதிப்பொருளினுஞ் செல்லாது தனக்குமாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந் தன்மை சிறப்பியல்பெனவும், வேற்றுச்சாதிப்பொருண்மாத்திரையிற் செல்லாது தன்சாதிப்பொருட்கெல்லாம் ஒப்ப நிலை

பெறுந்தன்மை பொதுவியல்பெனவுங் கூறப்படும். காட்சிமுதலிய பிரமாணங்களாற் பிரமேயப்பொருள்களை யறிதலுறுமிடத்து அவையெல்லாம் இவ்விரண்டியல்பினு ளொன்றுபற்றி அறியப்படுமென்பதாம்.

எனவே, இவ்விரண்டின் வேருகிய வேற்றியல்புபற்றி அறியப்படுமாயின், அவ்வறிவு பிரமாணியமன்ருய்ப் போமென்பதாயிற்று. பிரமேயத்தை யறிந்தவறிவே தான் பிரமாணியமென்பதனையு மறியுமெனவும், தான் பிரமாணியமாகாதவழி அவ்வாகாமைமாத்திரையே பிறிதொன்ருனறியப்படுமெனவும், இவ்வாறன்றித் தனது பிரமாணியம் பிறிதொன்ரு னறியப்படுவதேயென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதம் அடாதெனவுங் கொள்க. இவற்றை வடநூலார் சுதத்துவம் பரதத்துவமென வழங்குப.

சாதிபாவது ஒருநிகரனவாகிய பலபொருட்குப் பொதுவாவதோர் தன்மை.

இதனுனே, மேற்றன்னியல்பு பொதுவியல்பென்றவற்றினிலக்கணங் கூறப்பட்டது.

இச்செய்யுள் சூசிகடாக நயம்பற்றி முன் வைத்தவாறு.

திரம்பவழகியருணை வருமாறு.

தன்னியல்பென்றதெது பொதுவென்றதெது என்னமேலிரண்டு மருளிச்செய்கிருர்.

அன்னிய சாதியுந் தன்சாதியு மகன்றுநிற்றல் தன்னியல்பு - தனக்குவேருன சாதியென்றுசொல்லப்பட்ட விருப்பையும் தனக்கு வேறற்றிருக்கிற தன்சாதியாயிருக்கிற மாவையு மிவையிரண்டையு நீக்கித் தேமாவெனநிற்றல் தனக்குள்ள விய

ல்பு,—அந்நியத்தைத் தவிர்ந்துதன் சாதிக்கோற்றல் துன்னிய பொதுவியற்கை-தனக்குவேறான சாதியென்றுசொல்லப்பட்ட விருப்பை யொழிந்து தனக்கு அந்யசாதியென்று சொல்லப்பட்ட மாயெனநிற்றல் பொருந்தின சாமாந்யத்தினுடைய வியல்பாம்,—சொன்னவிவ் விரண்டினுள்ளே மன்னிய பொருளியாவு மடங்கிடு மானமுற்றால் - இப்படிச்சொல்லப்பட்ட தன்னியல்பு பொதுவென்ற விரண்டினுள்ளு நிலைபெற்ற பொருள்களெல்லா மடங்கிடு மளக்குங்காலத்தில்.

இதனாற்சொல்லியது தன்னியல்பு பொதுவென்று சொல்லப்பட்ட விரண்டினுள்ளு மெல்லாப் பிரமாணங்களு மடங்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

(சிறப்பியல்பு பொதுவியல்பு எனவிரண்டனுள்)அன்னியசாதியும் -ஒருபொருட்கு வேற்றுச்சாதிப்பொருளினும்,—தன்சாதியும்-தன்சாதிப்பொருளினும் செல்லாது,—அகன்றுநிற்றல்-தனக்கு மாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந்தன்மை,—தன்னியல்பு-சிறப்பியல்பு எனவும்,—அந்நியத்தைத் தவிர்ந்து - வேற்றுச் சாதிப்பொருண் மாத்திரையின் செல்லாது,—தன்சாதிக்கொத்தல் - தன்சாதிப் பொருட்கெல்லா மெய்நிலைபெறுந் தன்மை,—துன்னிய பொதுவியற்க - பொருந்திய பொதுவியல்பெனவுங் கற்கப்படும்,—மானம் - காட்சிமுதலிய பிரமாணங்களால்,—பொருள்கள்-பொருந்திய பிரமேயப்பொருள்களை,—உற்றால் - அறியலுறுமிடத்து,—யாவும் - அவையெல்லாம்,—சொன்னவிவ் விரண்டினுள்ளே யடங்கிடும் - ஈண்டுக்கூறிய விவ்விரண் டியல்பினு ளொன்றுபற்றி யறியப்படும்.

இதனானே மேற் றன்னியல்பு பொதுவியல்பென்றவற்றி னிலக்கணம் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேல் வரன்முறையானே யிந்த்ரியக்காட்சி மானதக்
காட்சி யிரண்டினையு முணர்த்துகின்றார்.

உயிரினோ டுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றி
ச், செயிரொடு விகற்பமின்றித் தெரிவதிந் திரியக்கா
ட்சி, யயர்விலிந் திரியஞான மைம்புலன் சார்ந்துயிர்க்
கண், மயர்வற வந்தஞான மானதக் காண்டலாமே.(சு)

(இ-ள்) உயிரினோ டுணர்வு வாயிலொளியுரு வாதிபற்றிச் செயிரொடு விகற்பமின்றித் தெரிவதிந் திரியக்காட்சி — ஆன்மாவுடனே விட்டுநீங்காத சிற்சத்தியாலே யிந்திரியமுங் கலாதிகளுஞ் சோம சூரியாக்கினிப் பிரகாசங்களுமாகக் கூடி யுருவமுதலியவற்றை யையக்காட்சிமுதலிய குற்றமின்றி யறிவ திந்திரியக்காட்சி;

"வாயிலிடனும்புலனுமாகும்" என்பதனா லிந்திரியக்காட்சி யெனினும் வாயிற்காட்சியெனினு மிழுக்கா.

சாமானிய விசேடமென விருவிதமாம்.

இதிற் சாமாந்யமாவது - சமுதாயமாயறிவது. அஃதாவது? சமவாயகுணத்தோடேகூடித் தூலகன்மங்களை யறிகை.

விசேடமாவது - அதனைப்பிரித்தறிகை. அஃதாவது? ஆன்மா மனதோடேகூடித் தேசகால வவத்தைகளுட னிந்திரிய விதத்துக்கு விடயமானபொருளை யறிகை.

இந்த விந்திரியக்காட்சியினுடைய சம்பந்தத்தை யறியுமிடந் தறுவகைப்படும். சையோகம் - சையுத்தசமவாயம் - சையுத்தசமவேதசமவாயம் - சமவாயம் - சமவேதசமவாயம் - விசேடணவிசேடியபாவம்.

இவையிற்றிற் சையோகமாவது - யாதொருபொழுது கடம் விடயமாயிருக்கிற ஞானமான துண்டாகாநின்ற தப்பொழுது கண் இந்திரியம் கடம் விடயம் இந்த விரண்டினுடைய கூட்டரவு. இது பிரிந்திருக்கிற வத்துக்களினுடைய சம்பந்தமாகையாலே சையோகமெனப் பெயராயிற்று

சையுத்தசமவாயமாவது - யாதொருபொழுது கண்ணாலே கடத்திலே யிருக்கிற ரூபமான தறியப்படுகின்ற தப்பொழுது கண் இந்திரியம் கடத்தையடைந்திருக்கிற நீலாதிரூபம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம். அஃதென்போலவென்னில்? கண்ணுடனே கூடியிருக்கிற கடத்திலே ரூபமானது சமவாயமா யிருக்கையினாலே யெனவறிக.

சையுத்தசமவேதசமவாயமாவது - யாதொருபொழுது கண்ணாலே கடத்தை யடைந்திருக்கிற ரூபத்திலேயிருக்கிற ரூபத்துவமான தறியப்படுகிறது, அப்பொழுது கண் இந்திரியம் உருவத்துவம் விடயம் இவைகளினுடைய சம்பந்தமெனவறிக.

சமவாயமாவது - யாதொருபொழுது சோத்திரேந்திரியத்தினாலே சத்தமான தறியப்படுகிறது, அப்பொழுது சோத்திரம் இந்திரியம் சத்தம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம் சோத்திர மாகாசமிடமாக வறிகையினாலெனவறிக.

சமவேதசமவாயமாவது - யாதொருபொழுது சோத்திரத்திலே சத்தத்தின் றன்மையைக் காணப்படுகிறது, அப்பொழுது சோத்திரமிந்திரியம் சத்தத்வசாமாநியம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம் சோத்திரத்திலே சமவேதமாயிருக்கிற சத்தத்திலே சத்தத்துவஞ் சமவாயசம்பந்தமாயிருக்கையினுலெனவறிக.

விசேடணவிசேடியபாவமாவது - யாதொருபொழுது கண்ணுடனே கூடியிருக்கிற பூமியிலே கடத்தினுடைய வில்லாமையான தறியப்படுகிறது. அஃதாவது, இந்தப்பூமியிற் கடமில்லையென்றால் அப்பொழுது கண்ணுடனேகூடின பூமி விசேடணம், கடாபாவம் விசேஷியம்; கடாபாவத்தையுடையது பூதலம் என்றபொழுது கண்ணுடனே கூடினபூமி விசேஷியம், கடாபாவம் விசேடணம்

இங்ஙனமிந்திரியக்காட்சி யறுவிதமான சம்பந்தமாய்வந்தவாறுகாண்க. சம்பந்தமெனினும் சன்னிகரிடமெனினுமிழுக்கா. உ-ம். "இந்திரியமத்தத்திணங்கும்பொழுதாறு-பந்தமுறும் பாரறிவிப்பாம்" "இந்திரியமத்தத் திணங்குதலேசையோக-மிந்தப் பொருளுணர்ச்சியாம்" "சாதிகுணந்தன்னிற் சையோகசமவாயமாம்-போதமுளார் தாங்காணும்போது" "சையுத்தசமவேத சமவாயசம்பந்த-மெய்துங்குணதத்துவத்திலே" "சத்தஞ்சமவேதத் தாலேசெவிப்புலத்துக்-கத்தமா மென்றேயறி" "சத்தத்திற்சாமாநியத்தைத்தருமதனில்-வைத்தசமவேதசமவாயம்" "தவாதசமவாய சம்பந்தந்தருங்கா-ணபாவவிசேடணத்துவம்". இதனைப் பௌட்கரத்திற் கூறினு ராண்டுக்காண்க.

அயர்வி லிந்தி   குற்றமில்லாத ஞானேந்திரியங்களினது
ரியஞான மைம்   ஞானமானது சத்தாதிவிடயங்களைப் பொ
புலன் சார்ந்துயி   ருந்தி யான்மாவினிடத்து மயக்கமறவந்து

ர்க்கண் மயர்வற அந்த மனத்தா லறியுமறிவு மானதக்காட்சி வந்தனான மா யாம்—எ-று. (௬)

னதக் காண்ட
லர்மே.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிந்த்ரியப்பிரத்யக்ஷ மானஸப்பிரத்யக்ஷங்களினுடைய க்ரமங்கூறுகின்றது.

உயிரினோடு ணர்வுவாயி லொளியுநவாதிபற்றிச் செயிரின்றி விகற்பமோடு தெரிவதிந்திரியக்காட்சி—ஆன்ம சிற்சத்தியானது ப்ராணவாயு மனசுடனே §பாஹ்யேந்த்ரியத்வாரா சூரியாதிப் பிரகாசங்கள் சகாயமாக ரூபாதியானவஸ்துக்களை சம்பந்தித்துக் குற்றமாகிய ‡சம்சயமும் ¶ விபர்யயமும் †பூர்வாநுபவஜநிதமாகிய ஸ்ம்ருதியுமன்றி நாமஜாதியாதி விசிஷ்டமாகக் காண்கிறது இந்த்ரியப்ரத்யக்ஷம். "வாயிலிடனும் புலனுமாகும்" எனவறிக.

§ பாஹ்யேந்த்ரியத்வாரா -புறவிந்த்ரியங்களை முன்னிட்டுக்கொண்டு, ‡ சம்சயம் - ஐயம், ¶ விபர்யயம் - திரிவு, † பூர்வாநுபவஜநிதம் - முன்னினைவு.

இவ்விந்த்ரியப் பிரத்யக்ஷத்திற் கேதுவான விஷயேந்த்ரிய சந்நிகர்ஷம் விஷயபேதத்தினாற் சம்பந்தபேதமாறும். அவையாவன ? சம்யோகம் சம்யுக்தசமவாயம் சம்யுக்தசமவேதசமவாயம் சமவாயம் சமவேதசமவாயம் விசேஷணவிசேஷ்யபாவம்.

மேலிவையிற்றின் தரிசநம்:—கடதரிசநத்திலே சக்ஷுவுக்கும் கடத்துக்குமுண்டான சம்பந்தம் * சையோகம்.

* சம்என்னுஞ்சொல்-சையெனத்திரிந்தது.

கடத்ருபத்திற்குஞ் சக்ஷுவுக்குமுண்டான சம்பந்தம் சையுக்தசமவாயம்.

கடத்ருபத்தில் ருபத்வாதி சாமாந்யத்திற்கும் சக்ஷுவுக்குமுண்டான சம்பந்தம் சையுக்த சமவேத சமவாயம்.

சப்தத்திற்குஞ் ஸ்ரோத்ரத்திற்கு முண்டான சம்பந்தம் சமவாயம்.

சப்தத்வஜாதிக்கும் ஸ்ரோத்ரத்துக்கு முண்டான சம்பந்தம் சமவேதசமவாயம்.

அபாவத்தையும் சமவாயத்தையுங் க்ரஹிக்கிறபொழுது சக்ஷுவுக்கும் சமவாயாதாரமான படத்திற்கும் அபாவாதாரமான பூதலத்திற்கு முண்டாகின சம்பந்தம் சையோகம்.

சக்ஷு சையுக்தமானபடத்தில் படத்துவம் சமவாயமென்கிறபொழுது சையுக்தவிசேஷ்யத்வம் சம்பந்தம்.

இந்தபடத்திலே படத்வம் சமவேதமென்று க்ரஹிக்கிறபொழுது சையுக்தவிசேஷணத்தை சம்பந்தம்.

சக்ஷு சையுக்தமானபூதலத்தி லிப்பூமியிலே கடமில்லையென்கிறபோது பூதலம் விசேஷணம், கடாபாவம்விசேஷ்யம்.

அந்த அபாவத்துக்கும் சக்ஷுவுக்கும் சையுக்தவிசேஷ்யதை சம்பந்தம் கடாபாவத்தையுடையது பூதலமென்கிறபோது, அபாவம் விசேஷணம், பூதலம் விசேஷ்யம். இதற்குண்டான சம்பந்தஞ் சையுக்தவிசேஷணத்தை

✱ [illegible] 𑌸𑌂𑌬𑌂𑌧𑌃 𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑍋 [illegible]
[illegible] 𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌃 । 𑌘𑌟𑌾𑌦𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌸𑌂
𑌯𑍋𑌗𑌜𑌾𑌤𑌃 ॥ 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑌮𑌵𑌾𑌯𑌾𑌤𑍍𑌤𑍁 𑌗𑍁𑌣
[illegible] । 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑌮𑌵𑍇𑌤𑌾𑌚𑍍𑌚 𑌸𑌮

வாயாத் குணத்வயோ: || ஶப்தஸ்ய க்ரஹணம் ஶ்ரோத்ர ஸமவேத தயா ஸ்திதம் | ஶப்தத்வ ஸமவேதாயாஸ்ஸமவாயாத் ப்ரதீயதே || விஶேஷண தயாபாவ ஸமவாய ஸ்திதிஸ்திதா | விஶேஷ்யத்வேந வாபாவ ஸமவாய ஸ்திதிஸ்திதே இதி,—

சம்பந்தமெனினும் சந்நிகர்ஷமெனினுமொக்குமெனவறிக.

அயர்வி லிந்திரியஞான மைம்புலன் சார்ந்துயிர்க்கண் மயர்வற வந்தஞான மானதக் காண்டலாமே-குற்றமில்லாமற் பார்க்கிற ஞானேந்த்ரியமானது சப்தாதி பஞ்சவிஷயங்களைப் பொருந்தி சம்சயாதி மயக்கங்களற வுண்டான அநுபவத்தை மனசினாலே அநுசந்தாநம்பண்ணுவது மானசப்பிரத்தியக்ஷம்.

“இந்திரியமத்தத் திணங்கும்பொழுதாறு- பந்தமுறும் பாரறிவிப்பாம்” “இந்திரியமத்தத்திணங்குதல் சையோகமுந-லந்தப் பொருளுணர்ச்சியாம்” “சாதிகுணந்தன்னிற் சையோகசமவாயமாம் - போதமுளார் தாங்காணும்போது” “சையுத்தசமவேத சமவாயசம்பந்த-மெய்துங் குணத்துவத்திலே” “சத்தஞ்சமவேதத் தாலேசெவிப்புலத்துக்-கத்தமா மென்றேயறி” “சத்தத்திற்சாமாநியத்தைத்தருமதனில் - வைத்தசமவேதசமவாயம்” “தவாதசமவாய சம்பந்தந்தருங்கா - ணபாவவிசேடணத்துவம்”.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ப்ரத்தியக்ஷ நான்கின திலக்கண மிரண்டு திருவிருத்தத்தாற் கூறுகின்றார்.

உயிரினோடு - ஆன்மாவாகிய ப்ரமாதாவோடு,—உணர்வு-சிற்சத்தியாகிய ப்ரமாணம்,—வாயில் - மலத்தைச் சிறிதுநீக்கியந்தச் சிற்சத்தியைச் சிறிது விளக்காநின்று தனக்குப் ப்ரேரகமாயிராநிற்குங் கலை வித்தை ராகங்களோடுகூடிய மனசினாலே செலுத்தப்பட்ட விந்திரியம்,—ஒளி - காட்டாகிய சோமசூரியாக்கினிப்பிரகாசம்,—உருவாதி - உருவ சத்த ஸ்பரிச விரச கந்தங்க ளிவைகளை,—பற்றி - பொருந்தி,—செயிரொடு விகற்பமின்றி - ஐயந்திரிவோடு சவிகற்பமின்றி,—தெரிவது - நிர்விகற்பமாகக் காண்பது,—இந்திரியக்காட்சி - வாயிற் ப்ரத்தியக்ஷம்;—அயர்விலிந்திரியஞானம் - முன்சொன்னவாயிற் ப்ரத்தியக்ஷமாகிய நிர்விகற்பஞானம்,—ஐம்புலன்சார்ந்து-சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களைப் பொருந்தி,—மயர்வற-ஐயந்திரிவுகளின்றி,—உயிர்க்கண் -ஆன்மாவினது புத்திகலுஷித சிற்சத்தியினிடத்தது விதுவாய்,—மயர்வறவந்தஞானம் - விளங்கிய சவிகற்பஞானம் பௌத்தப்ரமிதி ப்ரத்தியக்ஷமாயிருந்தாலு மீதின்னரூபமாகவேணுமெனு மனசினது சங்கற்ப சந்தேகஞான முன்னாக வுண்டாதலினால்,—மானதக்காண்டலாமே - மானதப் ப்ரத்தியக்ஷமுமாமே.

புத்திக்கு மனசென்றும் பெயர் பொது, பௌத்தமென்று செம்மைப்பொருள்.

தத்துவ வியாபாரமுறைமை சிறிதுசாற்றுகின்றோம்:—ஒரு சிற்சத்திரூபமாகிய வோர்ஞானந்தானே தற்பொருளறிவென்றும் பிறப்பொருளறிவென்று மிருவிதமாயிருக்கும்.

அப்படியிருந்தாலும் பிறப்பொருளறிவாயிருந்த தான்றானே தற்பொருளறிவாயிருந்து பகுப்பற் றிருதன்மையாயிருக்கும். பிறப்பொருளை யறியுமிடத்துத் தற்பொருளறிவானது தற்பொருளறியுஞ் சமுதாய சித்ரூப மாத்ரூப முள்மணந்த சர்த்ரூப சிவரூப வான்மரூப ப்ரத்தியக்ரூப சிற்சத்தியென்கின்ற

ப்ரமாதா. பிறப்பொருளறிவானது கரணரூப சிவசத்திரூபவான்மசத்திரூப பராக்ரூப சிற்சத்தியென்கின்ற ப்ரமாணம். ப்ரமாணத்தின தறிதற்றொழிலானது க்ரியையென்கின்ற ப்ரமிதி. பிறப்பொருளென்கின்றது கர்த்ருகரணக் கிரியைசட்கங்யமாகிய கன்மமென்கின்ற ப்ரமேயம்.

தற்பொருளை யறியுமிடத்துத் தற்பொருளறிவு பிறப்பொருளறிவென்கின்ற விரண்டிற்கும் பொது நடுச்சித்ரூபமாத்திர வஸ்த ரான்மப்ரேரகவறிவானது கர்த்ரூப மாத்ர சிவரூபான்மரூப சிற்சத்தியென்கின்ற ப்ரமாதா. இப்பிரமாதாவோடு மணந்து பிறப்பொருள் ப்ரமாதாவாயிருந்த தற்பொருளறிவானது கரணரூப சிவசத்திரூபான்மசத்திரூப ப்ரத்யக்ரூப சிற்சத்தியென்கின்ற ப்ரமாணம். ப்ரமாணத்தின தறிதற்றொழிலானது க்ரியையென்கின்ற ப்ரமிதி. பிறப்பொருளறிவான பராக்ரூப சிற்சத்தியென்கின்ற பிறப்பொருட் பிரமேயம்போலல்லாமற் பிறப்பொருட் ப்ரமாணரூபமாக வறியப்படும் ப்ரமேயம்.

சிவன் முத்தசிவன் அபர்முத்தசிவன் ஜீவன்முத்தசிவன் ஜீவான்மாவென்னு மைவர்க்கும் அவரவர்க் கங்யமாகிய வவரவர் பிறப்பொருட் சித்சிற்பிரமேயம் ஸ்வரூபமன்று, பின்னைப் பொருள். அவரவர் ப்ரமாதிரூபம் ப்ரமாணரூப மிரண்டும் ஜீவான்மாவுக்கும் ஜீவன்முத்தசிவனுக்கும் அபரமுத்தசிவனுக்கு மாத்திரஞ் செப்பப்படுமதாகிய தடத்த பௌத்த சவிகற்பஞான மௌபாதிகமாதலாற் பௌத்த தூல விகற்பமாத்திரத்தைத் தள்ளி நீங்காமனிற்குமுன்னற்பசாத்த சவிகற்ப நிர்விகற்பஞான ப்ரமிதிரூபமும், பிறப்பொருட் ப்ரமாணமாகும் தற்பொருட் சித்ப்ரமேயரூபமுமாக நாலும் பகுப்பற்று வேறுவேறு யவரவர்க்கு நான்காய்த் தடத்தலக்ஷணமன்றி ஸ்வரூபலக்ஷணமாய்த் தானேயிருக்கும். ஆகையாற் கலாதத்துவஞ்

சிற்சத்திவிருத்தியிற் சிறிது மலத்தைநீக்கிப் பிறப்பொருளறி
தலைப் பண்ணுதலைக்குறித்துப் பகுப்பற்று ஞானசத்திதன்மே
லிச்சாசத்திகோத்த க்ரியாசத்திரூப வீரொருகரணரூபியா
யிருக்கின்ற பார்க்ரூபிப்பெயரெய்திய வெதிர்முகியாகிய சிற்
சத்தியைப் பொருந்தி யதனிடத்தினுள் ளற்பசவிகற்பநிர்விக
ற்பஞானமா யினிமே லிந்திரியத்வாரத்தால் வித்யாதத்வத்தி
னால் மலவாசனைமாற்றிப் பிறப்பொருளை யிதுவென்றறியும்படி
க்கு மேலிராகதத்வங்கோத்த கலாதத்வமென்கின்ற தன்னால்
மலவாசனையைமாற்றி யிதுகாரியமென் றுத்யோகித் தின்ன
தாகக்கடவதென்று சங்கற்பித்துப் பண்ணும்படிக்கு மறிதல்
பண்ணுதற்றொழில்களை மலவாசனைமணக்கச் சிறிது விளக்கி
யப்போதுமாத்ரங் கரணகாரகமாயிருந்தது.

பின்னுட னுள்முகமாய்த் திரும்பிப் பிறப்பொருளறிதல்
பண்ணுதலைக் குறித்துப் பகுப்பற்று ஞாதிருகர்த்ருரூப வீரொ
ருகர்த்ருரூபியாயிருக்கின்ற பிரத்தியக்ரூபிப் பெயரெய்திய திரு
ம்பியமுக சிற்சத்தியைப் பொருந்தி யதினெதிர்முக சிற்சத்தி
கரணங்கொண் டறிதற் பண்ணுதற்றொழில்களைப் பண்ணுவிக்
குஞ் சாமர்த்தியத்தையு மச்சிற்சத்தி பிறப்பொருள்காட்ட
வச்சிற்சத்திகொண்டு பிறப்பொருளறியும் சாமர்த்தியத்தையும்
விளக்கி யக்கலை கர்த்ருகாரகமாயிருந்தது.

தற்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்துப் பகுப்பற்று
ஞானசத்தி தன்மேலிச்சாசத்திகோத்த க்ரியாசத்திரூப வீ
ரொருகரணரூபியாயிருக்கின்ற ப்ரத்யக்ரூபிப் பெயரெய்திய
திரும்பியமுகமாகிய சிற்சத்தியைப்பொருந்தி யதிலறிதல் பண்
ணுதற்றொழில்களைச் சிறிதுவிளக்கிக் கரணகாரகமாயிருந்தது.

பின் னந்த வெதிர்முகசிற்சத்தி திரும்பியமுகசிற்சத்திக
ளிரண்டிற்கும் பொதுவேச் சித்ரூபமாத்ர வந்தரான்ம கர்த்ரு

ரூபமாத்ர சிற்சத்தியைப்பொருந்தி யதிற் றிரும்பியமுக சிற்சத்தி கரணங்கொண் டறிதல்பண்ணுதற் ருெழில்களைப் பண்ணுவிக்குஞ் சாமர்த்தியத்தையும் அச்சிற்சத்தி தற்பொருள்காட்ட வச்சிற்சத்திகொண்டு தற்பொருளறியுஞ் சாமர்த்தியத்தையும் விளக்கி யக்கலை கர்த்ருகாரகமாயிருந்தது.

அப்படியிருந்து நானறிவேன் நானறியாநிற்கின்றேன் நான் பண்ணுவேன் நான்பண்ணுநிற்கின்றேனென்றும், அறிந்தபின்னும் பண்ணினபின்னும் நானறிந்தேன் நான்பண்ணினேனென்றும், மூன்ற னற்ப சவிகற்ப நிர்விகற்பஞானமாய் அஹங்கார தூலவிகற்பார்ப்பதமா யறிதல் பண்ணுதற் கிரமத்தில் கர்வித்துச் சங்க்ரமப்பித்து நிற்கும்; ஆதலாற் கலை கர்த்ருகாரகமென்பதே முக்கியம்.

பிறப்பொருட் ப்ரமாணமென்கின்ற தற்பொருட் ப்ரமேயந்தான் ருனே ப்ரத்யக்ரூப தற்பொருட்ப்ரமாதிரு ப்ரமாணரூபமா யதி லதிருக்குமித்து மேயவிலக்ஷணமாய்ப் புரித்து ஸ்வயம் ப்ரகாசமாய் நிரந்திரமாய்ச் சடிதிவிளங்கிவிடுதலா லநவத்தையின்றித் தற்பொருட்ப்ரமேய விஷயத்திற் ப்ரமாதாமுதலிய நான்கும் ஸ்வரூபமாயிருந்தாலும் ப்ரமாதாவல்ல; ப்ரமாதா ப்ரமாணமல்ல, ப்ரமாணம் ப்ரமிதியல்ல, ப்ரமிதி ப்ரமேயமல்ல, ப்ரமேயமெனவறிக. பிறப்பொருட் சிற்ப்ரமேயவிஷயத்திலேயுஞ் சிறிது சிறப்பொப்பிருத்தலாலப்படி யொருபடியறிக.

பின்பு வித்தியாதத்வங் கலையினு லொருபடி விளங்கிய கரணரூப பார்க்ரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி மலவாசனையை நீக்கித் தெளிவுபண்ணிக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும். ராகதத்வங் கரணரூப பார்க்ரூப

விச்சாசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி போக்யப்பொருளி லுபரஞ்சிப்பித்துக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

காலதத்வ நியதிதத்வத்தாற் போக்கியப்பொருளில் நியமித்த புருடனை யேவி நியதியோடு கரணகாரகங் கர்த்ருகாரகமுமன்றிக் கரணமாத்திரமாயிருந்தாலு மொருப்ரகாரத்தாற் கர்த்ருகாரகமென்று பெயர்பெற்றுநிற்கும்.

புருடதத்வம் அவிவேக ப்ரதிபத்தி விபரீத சுகதுக்க மோஹ வேதன போகக்கிரியையைப் பண்ணும் போக்தாவாய்க் கலையோடுகூடிக் கர்த்ருகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

ப்ரக்ருதிதத்வஞ் சாதாரணசாதாரணமுமாய்ப் பிரகாசப்பிரவிருத்தி நியம வியாபாரசீல குணகாரியத்வாரத்தினாலே தனக்குக் கீழுள்ள போக்கியபோகப்பொருள்களை யுண்டாக்கி; குணதத்வத்தோடுகூடக் காரணமாத்திரமாய் நிற்கும் தன்மாத்திரைகளும் பூதங்களுமாகிய தேரிற் றேராளிபோலிருக்கும்.

சக்ஷுராதி தத்வமுதலிய ஞானேந்த்ரியம் இச்சாசத்திரூபசிற்சத்தியைப்பொருந்திய விராகதத்வத்தாற் செலுத்தப்பட்டுந் தசிற்சத்தியைப்பொருந்திய விராகதத்வமணந்த மனசினாலே வப்பட்டு பார்க்ரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி முன்சொல்லியபுறபோக்கியப்பொருள்களைக்காண்பித் தந்த சிற்சத்திபொருந்திய வித்யாதத்வத்தினாற் புருஷ னொன்றினு வென் றறியும்படி பண்ணிக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

அந்தவறிவு நிர்விகற்பஞானமென்று மிந்திரியப்பிரத்தியக்ஷமென்றுஞ் சொல்லப்படும்.

அவ்வறிவை யவ்விராகதத்வங் கலக்கும்.

திரும்ப அராகதத்வத்தோடு கோத்துநிற்கும் மனதத்வமந்தநிர்விகற்பஞானத்திற் றோற்றும்பொருள்களி லொன்றைவிகற்பித்துத் தூக்கி யிது வனிதையினது ரூபமாகவேணுமென்றிதுமுதல் ரூபங்களைச் சந்தேகமாய்ச் சங்கற்பித்து அஹங்காரபுத்திப்ரேரகமாய்க் கரணகாரகமென்று பெயர்பெற்றுநிற்கும்.

கலாதத்வத்தோடு கோத்துநிற்கு மஹங்காரதத்வம் புறப்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்து ஞாதிருகர்த்ருரூப ஙர்த்ருரூபீ மாத்திரமாய்த் தற்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்து ஞானசத்திமே லிச்சாசத்திகோத்து க்ரியாசத்திரூப கரணரூபியாயு மிருக்கின்ற ப்ரத்யக்ரூபிப்பெயரொய்திய திரும்பியமுகியாகிய சிற்சத்தியையு மெதிர்முகசிற்சத்தி திரும்பியமுக சிற்சத்திகளிரண்டிற்கு மந்தரான்மசித்கர்த்ருரூபமாத்ர சிற்சத்தியையுங் கலாதத்வத் துவாரத்தாற் பொருந்தி, யதினதினிடத்தி லறிதல் பண்ணுதற்றொழில்களையு மந்தத்தொழில்களைப் பண்ணுவிக்குஞ் சாமர்த்தியத்தையு முறைமையிற் சமர்த்தித்திந்தவிந்திரிய நிர்விகற்பஞான மெனைப்பற்றிவந்ததோ வகைநிச்சயமாய் நானறிவே நானறியாநிற்கின்றேன் நான்பண்ணுவேன் நான்பண்ணுநிற்கின்றேனென்றும்; அறிந்தபின்னும் பண்ணினபின்னு நானறிந்தேன் நான்பண்ணினே னென்றும்: அந்தக் கலையினு லுர்ப்பவித்த தற்பொருள்விஷய நிர்விகற்பஞானத்தைப்பற்றிப் பிறக்குஞ் சவிகற்பஞானமாய்ப் பிறப்பொருள்விஷய வித்தியாகலாகலுஷித பார்க்ரூப ஞானக்கிரியாசத்தியை விஷயீகரித்து கர்வித்து சங்க்ரமப்பித்து நிற்குமாதலா லொருப்ரகாரத்தாற் கரணகாரகமென்றும் ப்ரதாநமாய்க் கர்த்ருகாரகமென்றும் பெயர்பெற்றுநிற்கும்.

பின்பு வித்யாதத்வத்தோடுகோத்துநிற்கும் புத்திதத்வம் கரணரூப பார்க்ரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி

இவள்வனிதை இதுமாலை இதுசந்தனம் இதுசர்ப்பம் இதுமுள் இதுவிடம் இதுசிங்கநாதம் என்றிவைமுதற்பொருள்களை நிச்சயித்துக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

அந்த நிச்சயிக்கப்பட்டபொருள் ஞேயமாத்திரத்தினாலே தான் போகத்துக்குப் பொருந்திய கன்மேந்திரியங்களாற் காரியப்பட்டுத் தான் புத்தியிற் ப்ரதிபிம்பிக்கும்.

புத்தி யதனாற் சுகரூபையாயுந் துக்கரூபையாயும் மோகரூபையாயு மிருக்கும்.

அந்த சுகமுதலாகிய மூன்றை யொவ்வொன்றாய்ப் பார்க்ரூபஞானசத்திபொருந்திய வித்தியாதத்வமொன்றிதுவென்று நிர்விகற்பமாய்ப் பார்க்கும்.

அந்தப்பார்வையைப் பார்க்ரூப விச்சாசத்திபொருந்திய விராகதத்வ முபரஞ்சிப்பித்துக் கலக்கும்.

அந்த விராகதத்வத்தோடுகூடித் தந்தவிச்சாசத்திபொருந்திய மனதத்வ மிது சுகரூபமாகவேணும் இதுதுக்கரூபமாகவேணும் இதுமோகரூபமாகவேணுமென்று விகற்பித்து ஒவ்வொன்றைத் தூக்கிச் சங்கற்பிக்கும்.

கலாதத்வத்தோடுகூடித்து ப்ரத்திபக்ரூபஞானசத்திபொருந்திய வஹங்காரதத்வம் வித்யாதத்வத்தினாற் றோற்றி நிர்விகற்பஞான மதை விஷயீகரித்து வந்ததோ வந்தவஸ்துவை நானிச்சையிப்பேனென்று கர்விக்கும்.

பின்பு தற்ப்ரகாச பிறப்ரகாசமாயிருக்கின்ற புத்திதத்வத்தினது முன் ப்ரபஞ்சித்த பார்க்ரூபசிற்சத்தி விருத்திக்குறி நிர்விகற்ப பிறப்ரகாசத்தோடுகூடித்த தற்ப்ரகாசத்தி லந்தச் சுகதுக்கமோகங்க ளிதுசுக மிதுதுக்க மிதுமோகமென்று தோற்றும்.

அந்தச் சுகதுக்கமோகங்களோடு பகுப்பற்றிருக்கு மந்தப்புத்தி யத்யவசாய சவிகற்பஞானத்தில்நின்று மந்தப்புத்திப்ரகாசத்தோடுகலந்துநின்று அதனறிதற்றொழிலோடும் வித்யாதத்வத்தோடுகோத்துக் கிளம்பி யந்தப்புத்திப்பிரகாசாங்கிச மாத்ர போக்கியத்தின்மேல்விழுந்த வெதிர்முகஞானசத்தியில் அந்தப்புத்திப்ரகாசத்தினது விகற்பந்தோய்ந்து சற்றேசவிகற்பஞானமாய்வரும்புத்தி யத்யவசாய முற்றுப்பொருந்திய பௌத்தசுகதுக்க மோகபோகமென்கின்ற வேதனையினது சுபூர்த்தி துட்பூர்த்திச் சொரூப சுபாநந்த துராநந்தமாய்த் தோற்றும்போகத்தை யாங்காரத்தோடுகோத்துத் திரும்பிய முகசிற்சத்தி,கலையினுற் றன்னிடத்தின் முன்றோற்றிய வுள்ளற்ப சவிகற்பஞானமான சுவசம்வேதன ப்ரத்தியக்ஷத்தை யகங்காரவிகற்ப சவிகற்பமாக்கி, நான்சுகி நான்துக்கி நான்மோகியென்று பெயர்க்கேர்ப்பபோகமாய் ; புசிக்கும் அநுபவிக்கும் பார்க்ரூபியென்றும் பரோன்முகியென்றும் பரசங்வித்தென்றும் சத்தியென்றும் மெதிர்முகசிற்சத்திக்குப் பெயரொன்றறிக.

ப்ரத்யக்ரூபி யென்றும் ஸ்வயோன்முகி யென்றும் ஸ்வசங்வித்தென்றும் சத்திமானென்றும் சிவான்மாவென்றும் திரும்பியமுகசிற்சத்திக்குப் பெயரென்றறிக.

அந்த வெதிர்முகசிற்சத்தித் திரும்பியமுகசிற்சத்திகளிரண்டின தந்தரான்மசித்தான்மாவுக்கு மவரவ ரீரிருசத்திக்குள்ளாகுஞ் சித்தான்மாவென்பதைக் குறித்துச் சிவனென்று மான்மாவென்றும் பெயரொன்றறிக.

பின்னுமொரு சிற்சத்தியினுடைய வெதிர்முகரூபந் திரும்பிய முகரூபமே சத்தியென்றுஞ் சிவனென்றுஞ் சொல்லப்படுமாதலாற் றனதுசத்தியைத்தவிர சிவன் றுனென்பதில்லையென்

பது மப்படியாதலாற் றனதுசத்தியைத்தவிர வான்மாத் தானென்பதில்லையென்பதுமறிக.

திரும்ப வந்தவஹங்காரங் கலையினால் விளங்கிய க்ரியாசத்தியைப்பொருந்தி மனோசங்கற்பமுன்னாகப் ப்ராணவாயு கன்மேந்திரியங்களைச்செலுத்தி ஞானசத்தியாலறிந்த கடமுதற் காரியபதார்த்தங்களைப் பண்ணும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. மேற்கூறிப்போந்த காட்சி நான்கனுள்ளும், தன்னை நோக்கிநிற்குமறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கியோடுமறிவாகிய சிற்சத்தி, கண்முதலிய பொறிகளையும், அவற்றிற்குத் துணையாய் வலிசெய்துடனிற்குந் தேயுமுதலிய பூதங்களையும், அப்பூதங்களுக்கு முதற்காரணமாய் அவற்றைவிட்டு நீங்குதலின்றி உடனாயவுருவமுதலிய தன்மாத்திரைகளையு மதிட்டித்துக்கொண்டு, ஐயவிபரீதக் குற்றங்களும் பெயர்சாதி முதலிய விகற்பமுமின்றி, உருவமுதலியவைம்புலன்களை நிருவிகற்பமாயறியுமறிவு வாயிற்காட்சியெனப்படும். அங்ஙனமைம்புலன்களை இயைந்தறிந்த பின்னர் மீள மறத்தலின்றிச்சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலைபெறுவதாகிய அவ்வாயிற்காட்சியறிவு; பெயர்சாதி முதலியவற்றான் விபரீதமாதலின்றி நிச்சயமாய்ப் புத்திதத்துவத்தின்கண் வருதலானாகிய சவிகற்பவுணர்வாய் உயிரினோடுணர்வு தெரிவது மானதகாட்சியெனப்படுமென்பதாம்.

ஐம்புலன்சார்ந்தயர்விலிந்திரியஞானமென மாறுக.

இன் ஐந்தாமுருபு.

ஓடுணர்வு வினைத்தொகை.

ஒளி ஆகுபெயர்.

ஆதியென்பதனை ஒளிபோடுங் கூட்டுக.

சார்ந்தபினென்பது சார்ந்தெனத்திரிந்து காரியத்தின்மே னின்றது.

உயிர்க்குப் பற்றுக்கோடாகிய புத்தியை உயிரென்றுபசரித்தார்.

வந்தஞானமென்னும் பெயரெச்சம் ஆறுசென்றபெயரென்றாற்போல நின்றது.

மனத்தின்கணிகழ்ச்சிப்பாடு முன்னாக நிகழ்தலின் மானதக்காட்சியெனப்பட்டது.

அதிகாரமுறைமையென்னுமுத்தியான் உயிரினோடுணர்வு தெரிவதென்பதனை அளவையதிகாரமுழுதினு முய்த்துரைக்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

முன்சொன்ன ப்ரத்தியக்ஷப்பிரமாணம் நாலில் வாயிற்காட்சியு மானதக்காட்சியு மேலருளிச்செய்கிறார்.

உயிரினோ டுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றிச் செயிரொடு விகற்பமின்றித் தெரிவ திந்திரியக்காட்சி - ப்ராணவாயுவும் ஆன்மபோதமு மிந்த்ரியங்களுஞ் சோமசூரியாக்கினிப்பிரகாசமுமாக வுருவமுதலானவைகளைப் பொருந்திக் குற்றத்தோடிந்த்ரியவிகற்பமுமின்றியே காண்பது இந்த்ரியப்பிரத்தியக்ஷம்,—அயர்வி லிந்திரிய ஞான மைம்புலன் சார்ந்துயிர்க்கண் மயர்வற வந்தஞான மானதக் காண்டலாமே- குற்றமில்லாத விந்த்ரியங்களினது அறிவுகளானது பஞ்சவிஷயங்களையும்பொரு

க்தியான்மாவினிடத்திலே மயக்கமற வந்தவறிவு மானதப் பிரத்தியக்ஷம்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(மேற்கூறிப்போந்த காட்சிநான்கனுள்ளும்) உயிரின் - தன்னைநோக்கி நிற்குமறிவாகிய வான்மாவினின்றும்,—ஓடுணர்வு - விடயங்களை நோக்கியோடு மறிவாகிய சிற்சத்தி,—வாயில் - கண்முதலிய பொறிகளையும்,—ஒளியாதி - அவற்றிற்குத்துணையாய் வலிசெய் துடனிற்குந் தேயுமுதலிய பூதங்களையும்,—உருவாதிபற்றி - அப்பூதங்களுக்கு முதற்காரணமா யவற்றைவிட்டு நீங்குதலின்றி யுடனாகிய வுருவமுதலிய தன்மாத்திரைகளையு மதிட்டித்துக்கொண்டு,—செயர் - ஐயவிபரீத குற்றங்களும்,—உறுவிகற்பமின்றி - பொருந்திய பெயர்சாதி முதலிய விகற்பமுமின்றி,—தெறிவது - உருவமுதலிய வைம்புலன்களை நிருவிகற்பமா யறியுமறிவு,—இந்திரியக்காட்சி - வாயிற்காட்சியெனப்படும்,—ஐம்புலன்சார்ந்து - அங்ஙனமைம்புலன்களையியைந்தறிந்த பின்னர்,—அயர்வில் - மீளவுமறத்தலின்றி,—இந்திரியஞானம் - சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலைபெறுவதாகிய அவ்வாயிற்காட்சியறிவு,—மயர்வற - பெயர்சாதி முதலியனவற்றான் விபரீதமாதலின்றி நிச்சயமாய்,—உயிர்க்கண் - புத்திதத்து வத்தின்கண்,—வந்தஞானம் - வருதலினாலாகிய சவிகற்ப வுணர்வாயுயிரினோடுணர்வுதெரிவது,—மானதக்காண்டலாமே - மானதக்காட்சியெனப்படும்.

இதனானே வாயிற்காட்சி மானதக்காட்சிகள் இயல்பு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேனிருத்தமுறையானே வேதனைக்காட்சியும்
யோகக்காட்சியு முணர்த்துகிருர்.

அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராக மாதி, தருந்தன்வே தனையாங்காட்சி சமாதியான் மலங் கள்வாட்டிப், பொருந்திய தேசகால வியல்பகல் பொ ருள்களெல்லா, மிருந்துணர் கின்றஞானம் யோகநற் காண்டலாமே. (எ)

(இ-ள்.) அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி தருந்தன்வே தனையாங்காட்சி — ஆன்மஞானத்தாலே யிராகம் வித்தை கலையிவற்ருலுண்டாக்கு மின்பதுன்பங்களைப் புசித்தலே தன்வேதனைக்காட்சி.

சமாதியான் மலங்கள்வாட்டிப் பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்களெல்லா மிருந்துணர் கின்றஞானம் யோகநற் காண்டலாமே — யோகிகள் பலகாலுஞ் சமாதியைப் பண்ணப்பண்ண மலசத்தி தடைப்பட்டுத் தாம் பொருந்தியிருக்குந் தேசங்களுடையவும், செல்காலம் வருகால மதுகளுடைய தன்மையையும், அந்யதேசத்திலுண்டாய வ்யாபாரங்களையு மிருந்தவிடத்திலேயிருந் தெல்லாவற்றையு மறியத்தக்கவறிவு நன்ருன யோகக்காட்சியாம்—எ-று.

சுவசம்வேதநமாகிய தற்சொரூபதரிசநமுஞ் சுவசம்வேத்யமாகிய சிவாநுபூதியு மிவைகள் சாக்ஷாத்காரியாதலால் இவைகாண்டலி லடங்கும்.

இஃதொப்பின் முடித்தலாற் கூறியதெனவறிக. (எ)

காண்டல் முடிந்தது.

சிவாக்ரயோகியருளா வருமாறு.

—o—

மேல் நிருத்தமுறையானே ஸ்வவேதநப்ரத்தியக்ஷம் யோகப்ரத்தியக்ஷங்களுடைய க்ரமங்கூறுகின்றது.

அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி தருந் தன்வே தனைபாங்காட்சி - விஷய * ஜந்யங்களாயிருக்கிற சுகதுக்கங்களை யிராகத்துக்காதியான வித்யாதத்வம் ஆன்மஞானத்தினிடத்திலே செலுத்த நான்சுகி துக்கியென்பது முதலாக வருகிற ஞானம் † ஸ்வவேதநப்ரத்யக்ஷம்,—சமாதியான் மலங்கள்வாட்டி - வித்யாராகாதி நிரபேக்ஷயாக § அநாவிர்த இயம நியம ஆசன ப்ராணாயாம ப்ரத்தியாகார தாரணை தியான சமாதி என்னு மிவையை ‖ சிற்சத்தியாகிய சிவஞானநந்த போகத்தினாலே மலங்களை நீக்கி,— பொருந்திய தேசகால வியல்புகள் பொருள்களெல்லா மிருந்துணர் கின்றஞான மியோகநற் காண்டலாமே - பொருந்தப்பட்ட த்ரிபுவநத்திலுண்டான வஸ்துக்களையும் பூதபௌஷ்ய வர்த்தமாநமென்னும் த்ரிகாலங்களிலே வருகிறவிஷயங்களையும் தூரத்ருஷ்டி தூரச்ரவணங்களை யியல்பாக விரிவுடனேகூட யேககாலத்தி லதீந்த்ரியமாகவே கரதலாமலகம்போல வறிவது ஸவிகற்பஞானம். ஞாநாநந்தாநுபவஸ்வபாவமாகவே நிற்பது நிர்விகற்பஞானம். இப்படி யோக ‡ ப்ரத்யக்ஷ மிரண்டுவகைப்படும். ஸ்வபாவமென்பது தாதாத்மியம்.

* ஜந்யம் - உண்டாதல், † ஸ்வவேதனை - தன்வேதனை, §அநாவிர்தம்-தடையில்லாமல், ‡சிற்சத்தி-ஞானசத்தி, ‡ ப்ரத்தியக்ஷம் -காக்ஷி.

தத்ரோக்தம் — ததேந்த்ரியாணி ப்ரத்யேகம் ஸ்வஸ்வார்த்தைக ஸாதகாந்யபி । விஶேஷாத்ஸர்வதோ மாத்ரு ஸர்வ ஸாக்ஷிசைதந்யமிதி;— ,

இதனாற் பஞ்சேந்த்ரியங்களு மொவ்வொருவிஷயத்தை யறிகிறதொழிய அந்யவிஷயத்தை யறியமாட்டாதபடியாலும், அந்தக்கரணங்களு மப்படியே யொன்றறிந்த தொன்றறியாதாகையாலும், மனசு பற்றவும் அஹங்காரங் க்ரஹிக்கவும் புத்தி நிச்சயிக்கவும் புத்தியினாலே நிச்சயிக்கப்பட்ட விஷயத்திலே யிராக மிச்சையைப்பண்ணுவிக்கவும் வித்தை விஷய ¶ கடகம் பண்ணவுமாய் நிற்பதேயாகையால் இவையெல்லாத்தையும் வியாபித்து சர்வவிஷயத்தையும் பரிச்சேதம்பண்ணுவதாகையினாலும், இந்தக்கரணங்களெல்லாத்தையு நிரபேக்ஷையாகவே × பூதபௌஷியத்வர்த்தமான ‡காலீனமாயிருக்கிற விஷயங்களை யறிகையினாலும், தன்னுடைய ஸ்வரூபத்தையும் சிவனையும் அந்யமாகத் தரிசிக்கையாலும், ஆன்மசிற்சத்தியே *யுபாதிதமான ப்ரமாணம்.

¶ கடகம் - பொருந்துதல், × பூதபௌஷியத்வர்த்தமானம் - செல்கால நிகழ்கால வெதிர்காலம், ‡ காலீனம் -காலங்கள், * யுபாதிதம் - உபாதியில்லாதது.

இவையொழிந்து சொல்வாருமுளர். அவைவருமாறு:— கண்டுணராமை உணர்ந்ததை யுணர்தல் நினைப்பு என்னும் போலிகளும் கூறும்.

கண்டுணராமையாவது - சிலவற்றைக் கண்டதின்பின் பெயரறியாதிருத்தல்.

உணர்ந்ததையுணர்தலாவது - முன்பு குளிர்வந்துற்றகாலத்து நெருப்பு மருந்தென்று அறிந்தான், பின்பு மதற்கிது மருந்தென உள்ளங்கொள்ளல்.

நினைப்பாவது - குழவிப்பருவத்தே தந்தைதாயை யிழந்தோன் காரணங் கருதாது நினக்கின்னார் தந்தைதாயென்று பிறர்சொல்ல விதனைக்கருதிக் கொள்ளல். இதுபோலிகள்; இம்முறை யறியுமாறுங் காண்க.

இதனுடைய பூர்வபக்ஷசித்தாந்தம் விஸ்தாரம், இவ்விடத்து க்ரந்தவிஸ்தாரபயத்தினாற் சொன்னதில்லை; ஆகையால் சித்தாந்ததீபிகையிலே விஸ்தரித்துச்சொன்னோம், கண்டுகொள்க.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

(முன்சொன்ன முறைமையிற் புறம்பே பார்க்குபசிற்சத்தியைப்பொருந்தி நிர்விகற்பமாய்ப்பார்க்கும் வித்யாதத்வத்திற்பின்கோத்த விராகமுதற் புத்திதத்வ முடிவாகிய தத்வங்களினால் முன்சொன்ன முறைமையில்வரும் இதுமாலை இது சந்தனம் இவள்வனிதை இதுபாம்பு இதுமுள்ளு இதுவிஷம் இதுசிங்காதமென்று புத்தி நிச்சயபுத்தி ப்ரதிவிம்பங்களினாற் புத்திதத்வத்துதிக்கும்.)

அருந்தின்பதுன்பம் - போக்கியமாகிய சுகதுக்கமோகங்களை ;—

இராகமாதி - திரும்ப வுள்நிர்விகற்பமாய்ப் பார்க்கும் வித்யாதத்வத்திற்பின்கோத்த விராகதத்வமுதற் புத்திதத்வ ஸ்வப்பிரகாசமந்தமாகிய தத்வங்கள்,—

உள்ளதறிவினுக்கு-ஆன்மாவின தெதிர்முகசிற்சத்திக்கு,—

தரும் - கொடுக்கும், (திரும்பத்தன்னோடு பிரித்த ர்சரிதாகிய சுகமுதலியவற்றைத் தனது சுகாதிவேதனாபூர்த்திச்ருறிபோகத்தோ டெதிர்முகசிற்சத்தி முன்சொல்லியபடிக்குத் திரும்பியமுகசிற்சத்திக்குக் கொடுக்குமது முன்சொல்லியபடியநுபவிக்கு மந்த வநுபவம்),—

தன்வேதனையாங்காட்சி-ஸ்வசம்வேதனாப்ரத்தியக்ஷம்,--

பலவிதமாயிருக்கின்ற சுத்தாவத்தைகளைச்சுருக்கிக் கீழாலவத்தைமுத லவத்தைகளிற் சாக்ராவத்தைமுத லைந்துகளையுந் தனது சாக்ரமுத லைந்தவத்தைகளினால் ஜயம்பண்ணும் சுத்தாவத்தையிற் சாக்ரமாவது:—ஆசநப்ராணாயாமங்களைப்பண்ணி யிந்த்ரியங்களைச் சத்தாதிவிஷயங்களினின்றுந் திரும்பித் தன்வசமாய் நிறுத்தலாகிய ப்ரத்யாகாரம்.

ஸ்வப்நமாவது:—சாலம்ப சிவயோகத்திற் ஸ்வரூப சிவரூப சகள சகளாகள சாகாரசிவனிடத்தில் ப்ராக்ருதமனத்தைவைத்து நிறுத்தலாகிய தாரணை, திரும்ப நிராலம்ப சிவயோகத்திற் ஸ்வரூப சிவரூப நிஷ்கள நிஷ்களாதீத நிராதார நிராகாரசிவனிடத்தில் முறைமையிற் ப்ராகிருதமனதை நிர்விஷயமாய் ஜ்வலிதமாயிருக்கும்படிபண்ணித் தியானத்தினதெடுப்புக்குள்ளும்போய்த் தாக்குஞ் சிவசத்தியாகிய மனசினால் விளங்கிய தனதுசிற்சத்தியாகிய மனதைச் சின்மாத்ரான்மாவில்வைத்து சிவசத்திக்கொப்ப விரித்துத் தேடசிவத்தில் வைத்தலாகிய தாரணையுஞ் சுழுத்திக்குள்ளுந் தாக்குஞ் ஸ்வப்நமாம்.

சுழுத்தியாவது:—சவிகற்பமாயு நிர்விகற்பமாயு மந்தநால்வகை ஸ்வரூப சிவரூப விருசிவங்களை முறைமையிற் சிந்தனைபாவனைபண்ணுவதாகிய வங்கசிவயோகமென்கின்ற தியானம்.

துரியமாவது:—தியானதசை வருதலாகிய வங்கசிவயோகமென்கின்ற சமாதி.

துரியாதீதமாவது:— சமாதிசாமர்த்தியத்தினால் முறைமையிற் சவிகற்பமாயு முன்னற்ப சவிகற்ப நிர்விகற்பமாயு மந்த நால்வகை ஸ்வரூப சிவரூப சிவப்ரத்தியக்ஷமாகுஞ் ஸ்வரூப சிவரூப சிவாபரோக்ஷமென்கின்ற ஸ்வரூப சிவரூப சிவசாக்ஷாத்காரமாகிய வங்கிசிவபோகம்.

இப்படி சிவயோகமுறைமைசுருக்கியிருத்தலால்,—

சமாதியால் மலஞ்சள்வாட்டி - சமாதிசாமர்த்தியத்தினால் மலமாயாகன்ம சாமர்த்தியங்களைத் தடுத்து,—

பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்களெல்லாம் - தானிராநின்றவிடம் தானிராநிற்குங் காலம் இந்ததேசகாலங்களினது முறைமையை நீங்கியு நீங்காமலு மிருக்கின்ற சிவமுதல் நித்தியபதார்த்தமுதற் பதார்த்தங்களையெல்லாம்,—

இருந்து -தானிருந்தவோரிடத்திருந்து,—

உணர்கின்ற ஞானம்-சாலம்ப நிராலம்ப சிவயோக முறைமையிற் சவிகற்பமாயு முள்ளற்பசவிகற்ப நிர்விகற்பமாயுஞ் சாக்ஷாத்காரியாநின்ற சாக்ஷாத்காரம்,—

யோகநற் காண்டலாமே - யோகக்காட்சியென்கின்ற யோகப்பிரத்தியக்ஷமாமே ; அந்த விந்தசுவசங்வேத்யமாம் பராநுபூதி டரியாய பரசங்வேதனாகார சிவரூப சிவாநுபூதி விசேஷலூகமாகிய சுவத்தை விஷயீகரித்துவருஞ்சுவசங்வேதனரூப ஸ்வரூப சிவாநுபூதி ஸ்வாநுபூதி ப்ரத்தியக்ஷமுமாமே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து. அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேம்பட்டு நிகழுஞ் சத்துவகுண முதலியவற்றின் விளக்கமாகிய இன்பத்துன்பங்கள் புருடனதறிவிற்கு விடயமாம்படி அராகமுதலியவைந்து தத்துவங்களானும் புணர்க்கப்படுமதனை உயிரினோடுணர்வு தெரிவது தன்வேதனைக்காட்சி யெனப்படும்; இவ்வாறன்றி அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்திகளை இயமநியமமுதலிய அட்டாங்கயோகசமாதியான் ஒருவாறுகெடுத்து ஒரிடத்தொருகாலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து முக்காலத்துப் பொருள்களையுங் காண்கின்ற காட்சியாய் உயிரினோடுணர்வு தெரிவது யோகக்காட்சியெனப்படுமென்பதாம்.

இவையிரண்டு செய்யுளானும் மேலெடுத்துக்கொண்ட நால்வகைக் காட்சிகளதியல்பு கூறப்பட்டது.

—

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன ப்ரத்தியக்ஷப்பிரமாண நாலில் வாயில்காட்சியு மானதக்காட்சியு மருளிச்செய்து மேல் தன்வேதனைக் காட்சியும் யோகக்காட்சியு மருளிச்செய்கிறார்.

அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி தருந் தன்வேதனையாங்காட்சி - புசிக்கத்தக்க விதாவகிதங்களை யான்மாவினுடைய ஞானத்துக் கிராகத்வேஷாதிகளாலே யுண்டாக்கிறவிது விவனுடைய வேதனாப்பிரத்தியக்ஷம்,—சமாதியால் மலங்கள்வாட்டிப் பொருந்திய தேசகால வியல்பகல்

பொருள்களெல்லா மிருந்தணர் கின்றஞானம் யோகசுற் காண்டலாமே - சமாதியாலே யசைவறவிருந்து அந்தச்சமாதியினாலே மலமாயாதிகன்மங்களைக் கீழ்ப்படுத்தித் தான்பொருந்தப்பட்ட தேசங்களிலுள்ள வியல்புகளுந் தான்பொருந்தப்பட்ட காலங்களிலுள்ள வியல்புகளுந் தான்பொருந்தியிருக்கப்படாத மற்றுமுள்ள விராஜ்யங்களிலுள்ள வியல்புகளுந் திரிகாலங்களிலுள்ள பொருள்களெல்லாத்தையுந் தானிருந்தவிடத்திலே யிருந்தறியத்தக்கவறிவு நன்றானயோகப்பிரத்தியக்ஷம்.

இதனாற்சொல்லியது தன்வேதனைக்காட்சியு மியோகக்காட்சியு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேற்பட்டு நிகழும் சத்துவகுணமுதலியவற்றின் விளக்கமாகிய) அருந்தின்பத்துன்பம் - நுகரப்படு மின்பத்துன்பங்கள்,—உள்ளதறிவினுக்கு - புருடனதறிவிற்கு விடயமாம்படி,—அராகமாதிதரும் - அராக முதலிய வைந்துதத்துவங்களாலும் புணர்க்கப்படுவதனை யுயிரினேடுணர்வுதெரிவது,—தன்வேதனைக் காட்சியாம் - தன்வேதனைக்காட்சியெனப்படும்,—மலங்கள் - இவ்வாறின்றி யறிவைத்தடைசெய்து நின்றமலசத்திகளை,—சமாதியான்வாட்டி-இயம நியமமுதலிய வட்டாங்கயோக சமாதியானொருவாறு கெடுத்து,—இருந்து - ஓரிடத்தொருகாலத் திருந்தாங்கிருந்து,—பொருந்திய - பொருந்தப்பட்ட,— தேசகால வியல்பகல் பொருள்கள் எல்லாம் - மூவிடத்து முக்காலத்து மியல்பாகவிரிந்த

பொருள்கள் எல்லாவற்றையும்,—உணர்கின்றஞானம் - காண்கின்ற காட்சியா யுயிரினோடுணர்வுதெரிவது,—நல்யோகக் காண்டலாமே - நன்மையாகியயோகக்காட்சி யென்பதாம்.

இதனானே தன்வேதனைக்காட்சி யோகக்காட்சிகளி னியல்புகூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலநுமானமுணர்த்துவான்றொடங்கிப்பக்கமூன்றெனவு மியல்புமுதலிய வேதுமூன்றினையுந் தெகுத்துப் பொருந்த வநுமானந் தன்னநுமானம் பிறரநுமானமாக விரண்டினையும் வகுத்து, அந்வயவெதிரேகமிருவித மென்பதனையுந் தொகுத்துணர்த்துகிறார்.

பக்கமூன்றின் மூன்றேது வுடையபொருளைப்
பார்த்துணரத், தக்கஞானந் தன்பொருட்டாம் பிறர்
தம்பொருட்டா மநுமானந், தொக்கவிவற்றாற் பிறர்
தெளியச் சொல்லலாகு மச்சொல்லு, மிக்கவந்நு வய
த்தினொடு வெதிரேகச்சொ லெனவிரண்டாம். (அ)

(இ-ள்.) பக்கமூன்று	பக்கம் சபக்கம் விபக்கம் எனப்பக்கமூன்றும்
மூன்றேது	இயல்பேது காரியவேது அநுபலத்தியேதுஎன வேதுமூன்றும்
உடையபொருளைப் பார்த்துணரத் தக்கஞானம்	இங்ஙனங்கூறியபக்கங்க ளேதுக்களானு மதற்கேற்றப் பொருள்களுடன்கூடத் தானே வியாத்தியைக் கிரகித்தறிகிற தநுமானம் இருவிதப்படும்

தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்டா மனுமானந் தொக்கிவற்றாற் பிறர்தெளியச் சொல்லாகும்

அந்தவனுமானந் தன்னாலனுமித் தறியப் படுவதெனவும், பிறராலனுமித் தறியப்படுவ தெனவும் இருவிதமாம்

சுவார்த்தானுமானமாவது:—சுவர்த்தஞ் சுவப்பிரதிபத்தியேதுவாதையாவது பரோபதேசமன்றி முன்பு தான் புகை கண்டவிடத்திலே யனலைக்கண்டு பின்பு தானேயாதாமோரிடத்திலே புகையுண் டவ்விடத்திலே யனலுமுண்டென்று வியாத்தியைக் கிரகித்தறியு மறிவு தன்னனுமானம். இஃதன்றித் தானே சிவனுண்டென் றறுதியிட் டறிகிறதுமாம்.

முற்கூறிய பக்ஷம், ஏதுக்களினாலும் பிறரறியும்படி யறிவிக்கு மறிவு பரார்த்தனுமானம். இஃதன்றிக் குரவன் மாணாக்கற்குச் சிவனு மான்மாவும் பாசமுமுண்டென் றறிவிக்கு மறிவுமாம்.

அச்சொல்லு மிக்கவந்நுவயத்தினொடு வெதிரேகச்சொ லெனவிரண்டாம்.

அச்சொல்லு மிகுத்த வந்வயச்சொல்லெனவும் வெதிரேகச்சொல்லெனவு மிருவகையாம்—எ-று.

மூன்றுபக்கமும் எ-து. மூன்றும் பாரார்த்தானுமானத்துக்கு வேண்டுகையாற் றொக்கவிவற்றாலெனச் சிறப்பித்தார்.
அந்வயவெதிரேகிக்குப் பஞ்சரூபமுடைத்தாதலின் 'மிக்க வந்வயம்' எனச் சிறப்பித்தாரெனவறிக. (அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

முன்னஞ் ஸ்வார்த்தாநுமாநம் பரார்த்தாநுமாநமென் றுத்தேசங்கூறி யதற்குமே லிலக்ஷணங் கூறுகின்றது.

பக்கமூன்றின் - பக்ஷ சபக்ஷ விபக்ஷ மென்னுமூன்றிலே,— மூன்றேது வுடையபொருளைப் பார்த்துணரத் தக்கஞானம் - இயல்பு காரியம் அநுபலப்தி என்னு மேதுத் * த்ரயங்களினு ¶ லேதுமத்தாகிய சாத்தியங்களைத்ருடவியாப்திகளினுலே நிச் சயிக்கு மநுமிதிஞானம்,—தன்பொருட்டாம் பிறர்பொருட்டா மநுமானம் - † ஸ்வார்த்தாநுமாநமென்றும் ‡ பரார்த்தாநு மாநமென்று மிருவகையாம், ஸ்வார்த்தாநுமாநவாவது பரோ பதேசமின்றி முன்புதான் புகையைக்கண்டவிடத்திலே அன லைக்கண்டு, பின்புதானே யாதாமோரிடத்திலே புகையுண் டவ் விடத்திலே யனலுமுண்டென்று வியாத்தியை க்ரஹித்தறியு மறிவு ஸ்வார்த்தாநுமாநமென்னும் தன்பொருட்டநுமாநம் - இஃதன்றித்தானே சிவனுண்டென் றறுதியிட்டறிகிறதுமாம். முற்கூறிய பக்ஷத்துள் பரார்த்தாநுமாநம்என்பது இவைக ளினுலே பிறரறியும்படி யறிவிக்குமறிவு பரார்த்தாநுமாநம் என்னும் பிறர்பொருட்டநுமாநம்; இஃதன்றிக் குரவன் மா ணாக்கனுக்கு சிவனும் ஆன்மாவும் பாசமு முண்டென்று அறிவிக்கு மறிவுமாம்,— தொக்கவிவர்முற் பிறர்தெளியச் சொல்லலாகும் - பஞ்சாவயவ § யுக்தவாக்யரூபமா யிருக்கிற வநுமாநத்தினு லந்யருக்குத்தெரியும்படி சொல்ல லாம்,—அச்சொல்லு மிக்க + வந்நுவயத்திறெனு வெதிரே கச்சொல்லெனவிரண்டாம்-அந்தப்பஞ்சாவவையவவாக்கியமா னது அந்வயவ்யதிரேகி கேவலவ்யதிரேகியென்னு மேதுவாம்,

*த்ரயம்-மூன்று, ¶ஏதுமத்தாகிய-ஏதுகூடிய, †ஸ்வார்த்தம் - தன்பொருட்டு, ‡பரார்த்தம்-பிறர்பொருட்டு, § யுக்தம் - கூடிய, + அந்நுவயத்தினொடு வெதிரேகச் சொல்லெனவிரண்டாம் - அந்வயமென்று மேதிரேகமென்று மிரண்டுவிதமாம்.

மூன்றுபக்கமும் பதார்த்தாநுமானத்திற்கு வேண்டுகையால் "தொக்கவிவற்றால்" எனச்சிறப்பித்தார்.

அந்வயவெதிரேகிக்கும் பஞ்சரூபமுடைத்தாதலின் "மிக்கவந்நுவயம்" எனச்சிறப்பித்தார் எனவறிக.

அந்வயம் - பொருத்தமுள்ளது, வெதிரேகம் - பொருந்தாது. இவை மேல்விரித்துக்கூறுமிடத்தறிக.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

அநுமானப் பகுப்புணர்த்துகின்றார்.

பக்கமூன்றின் - பக்ஷம் சபக்ஷம் விபக்ஷமென்கின்ற மூன்றினுள் மலை யுலகுமுதலிய பக்ஷத்தின்,—உடையபொருளை - அந்த பக்ஷத்தினது சாத்தியதன்மமாகச் சாதிக்கப்படு மக்நி கர்த்தா முதலிய பதார்த்தங்களை,—பார்த்துணர - ஊகித்தறிய,—மூன்றேது -இபல்பேது காரியவேது அநுபலத்தியேதுவெனக் காரணவேது கன்மவேது வாகமவேது முதலியவேது பேதங்களையுந் தோற்றுவிக்கு மேதுமூன்று, தன்பொருட்டநுமானம் பிறர்பொருட்டநுமானமென வநுமானமிருவிதமாதலால்,—தக்கஞானம் - சொல்லிய மூன்றேதுவினது தகைமைபொருந்திய தனதுசிற்சத்தி,—தன்பொருட்டாம் - தன்பொருட்டநுமானம்,—பிறர்பொருட்டாம்- பிறர்பொருட்டநுமானம்,—தொக்கவிவற்றால் - மூன்றுபக்கத்தோடுகூடின மரியாதிபொரு

ந்திய முன்சொன்ன மூன்றேதுக்களால்,—பிறர்தெளிய - பிற ரது சிற்சத்தியநுமாநம் ப்ரகாசித்துப் பிறர்மறைத்த வக்கி யீஸ்வரன்முதலிய பொருள்களையறிய,—சொல்லலாகும் - ப்ரி திஞ்ஞை யேது திருஷ்டாந்தம் முபநயம் நிகமநமென்னும் பஞ் சாங்கத்தைப் படித்தலாகும்:—அச்சொல்லும் - அந்தப்பட்ச மும்,—மிக்கவந்நு வயத்தினொடு வெதிரேகச்சொல் லெனவிர ண்டாம் - மிக்கவந்வயச்சொல் சாதந சாத்தியங்களினது மேன்மையாகிய வுள்ளமையைச் செப்புதல், வெதிரேகச்சொல் மாறியில்லாமையைச் சொல்லுதல்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து இயல்பு முதலிய மூன்றனுள் ஓரேதுவுடைய சாத்தி யத்தைப்பக்கமுதலிய மூன்றின் வைத்து அவிநாபாவம்பற்றி ஆ ராய்தற்குரிய ஞானமாய் உயிரினோடுணர்வு தெரிவது தன்பொ ருட்டநுமானமாம்: அவ்வேதுக்களானே தானறிந்ததனைப் பிறர றியப்போதித்தலையுயிரினோடுணர்வு தெரிவது பிறர்பொருட்டநு மானமாம். அங்ஙனம் பிறரறியப் போதிக்குஞ் சொல்லும் உட ம்பாடு மறையென்று இருவகைப்படுமென்பதாம்.

இதனானே மேலெடுத்துக்கொண்ட இருவகையநுமானங் களதியல்பு கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன ப்ரத்தியக்ஷப்பிரமாணமானது ஐயக்காட் சி திரிவுகாட்சி விகற்பக்காட்சி நிர்விகற்பக்காட்சி வாயிற்கா

ட்சி மானதக்காட்சி தன்வேதனைக்காட்சி யோகக்காட்சி ஆக எட்டாயிருக்குமென்றுசொல்லி; மேலநுமானமாவது ஏதுக்களைக்கொண்டு மறைந்தபொருளை யறியலாமென்ற தெப்படியென்ன? அநுமானத்தை விரித்தருளிச் செய்கிறார்.

பக்கமூன்றின் மூன்றேது வுடையபொருளைப் பார்த்துணரத் தக்கஞானந் தன்பொருட்டாம் - பக்கமூன்றுமூன்றேதுக்களை யுடைத்தாயிருக்கப்பட்ட பொருள்களை யாராய்ந்தறியத் தக்க வறிவு சுவார்தாநுமானம்,—பிறர்பொருட்டா மநுமானந் தொக்கவிவற்றைப் பிறர்தெளியச் சொல்லாகும் - கூடப்பட்ட பக்கமூன்றுமேதுமூன்றும் பிறர்க்கு மறியும்படி யறிவிக்கத்தக்கது பரார்த்தாநுமானமாம்,—அச்சொல்லு மிக்கவந்நுவயத்தினொடு வெதிரேகச்சொல் லெனவிரண்டாம் -அந்தப்பரார்த்தாநுமானமென்று சொல்லப்பட்ட சொல்லானது மிகுத்த வந்நுவயச்சொல்லென்று மதனோடுகூட வெதிரேகச்சொல் லென்று மிரண்டுவகையாம்.

இதனாற் சொல்லியது தன்பொருட்டா மநுமானமென்று சொன்ன விரண்டின்முறைமையையும் பிறர்பொருட்டாமநுமானந்தான் அந்நுவயமென்றும் வெதிரேகமென்று மிரண்டுவகையாயிருக்குமென்னு முறைமையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மூன்றேது வுடையபொருளை - இயல்புமுதலிய மூன்றனுள் ஓர்ஏதுவுடைய சாத்தியத்தை,—பக்கமூன்றின் - பக்கமுதலிய மூன்றின்வைத்து,—பார்த்துணரத் தக்கஞானம் - அவினாபாவம்பற்றி யாராய்தற்குரிய ஞானமா யுயிரினோடுணர்வுதெரிய

து,—தன்பொருட்டாம் - தன்பொருட் டனுமானமாம்,—தொக்கவிவற்றாற் பிறர்தெளியச் சொல்லல் - அவ்வேதுக்களாலே தான் அறிந்ததனைப் பிறர் அறியப்போதித்தலை யுயிரினோடுணர்வு தெரிவது,—பிறர்தம்பொருட் டனுமானமாகும் - பிறர்பொருட் டனுமானமாம்,—அச்சொல்லும் - அங்ஙனம் பிறர் அறியப் போதிக்கும் சொல்லும்,—மிக்க வந்நுவயத்தினோடு வெதிரேகச் சொல்லென - மேலாகிய உடம்பாடு மறையென,—இரண்டாம் - இருவகைப்படுமென்பதாம்.

இதனானே மேலெடுத்துக்கொண்ட இருவகை யநுமானங் களதியல்பு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேற்றொகுத்துப்போந்த பக்க முதலிய
மூன்றின் பகுதியை யுணர்த்துகின்றார்.

மூன்றுபக்கம் பக்கநிகர் பக்கநிகரில் பக்கமெனத்,
தோன்றும்பக்கந் துணிபொருளுக் கிடமாமுவமை நிகர்பக்க,
மான்றபொருள்சென் றடையாத விடமாநிகரில் பக்கமுத,
லேன்றவிரண்டும் பொருளுண்மைக் கிடமாமொன்று பொருளின்றாம். (௧)

(இ-ள்.) மூன்று பக்கம் — பக்க மூன்றாயிருக்கும். அவையாவன?

பக்க நிகர்பக்க நிகரில்பக்கமெனத் தோன்றும் — பக்கமெனவுஞ் சபக்கமெனவும் விபக்கமெனவு மூன்றாம்

பக்கந் துணி பொருளுக் கிடமாம் — இதிற்பக்கமாவது:—தானறுதியிடப்பட்டதொரு பொருளுக்கிடம் பக்கமாயிருக்கும்.

அஃதாவது? இந்தமலையின்கணெருப்புண்டென்று சுட்டிக்கூறுதல். அஃதெக்காரணத்தாலெனில்? இடையறுமலின்றெழுகிற புகையுண்டாகையினாலெனவறிக.

உவமை நிகர் பக்கம் — உவமானத்துக்கொத்த பக்கமாவது தானொன்றை முன்னறுதியிடப்பட்ட பொருளுக்கொத்திருத்தல்

அஃதாவது:—புகையால் அனலுண்டென்றறிந்ததெவ்வாற்றாலென்னில்? தான்முன்கண்டநுபவித்த வடுக்களைபோலெனக் கூறல்.

நிகர் - உவமையில் வந்தது நேர் நிகரென்பதனாலறிக.

ஆன்றபொருள்சென்றடையாதவிடமா நிகரில் பக்கம் — [விபக்கமாவது - தனக்கொவ்வாத பக்கம்] தானறுதியிடப்பட்டதொருபொருளைச் சென்று பொருந்தாதவிடமாம்

அஃதாவது? யாதொருவிடத்தி லக்நியில்லையவ்விடத்துப் புகையுமில்லை; அஃதென்போலவென்னில்? மடுப்போலெனவறுதியிடுகை.

முதலேன்றவிரண்டும் பொருளுண்மைக் கிடமாம் — முற்கூறிய பக்கமாகிய மலையிடத்தும் நிகர்பக்கமாகிய வடுக்களையிடத்தும் தானறுதியிடப்பட்ட பொருளுண்டாதற் கிடமாயிருத்தல்

ஒன்றுபொருளின்றும். நிகரில் பக்கமாகிய பொருளொன்று தானறுதியிடப்பட்ட பொருள் சாதித்தற்கிடமல்லவாயிருத்தல்—எ-று.

இது மேல்வரும் புறநடைச்சூத்திரத்தாலறிக.

விபக்கமெனினு நிகரில்பக்கமெனினு மிழுக்கா. (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

மேல் முன்சொல்லிய பக்ஷத் ¶ திரயங்களினது ஸ்வரூபங்களைக் கூறுகின்றது.

¶ த்ரயம் - மூன்று.

மூன்றுபக்கம் - பக்ஷமூன்றுவன,—பக்க நிகர்பக்க நிகரிற் பக்கமென - பக்ஷ சபக்ஷ விபக்ஷங்கள். இவற்றுள்,—தோன்றும்பக்கந் துணிபொருளுக் கிடமாம் - முன்னே தோன்றியபக்ஷம் ஏதுவாகிற † தூமத்தையுடைய பர்வதம் நிச்சிதார்த்தமான § வந்நிக் *காச்ரயமாம்,—உவமைநிகர்பக்கம் - சபக்ஷமானது உவமானஸ்தலம். அஃதாவது? இப்பர்வதம் வந்நியையுடையது தூமத்தையுடைத்தாகையால்,பாகசாலைபோலவென்பது,—ஆன்றபொருள்சென்றடையாத விடமாநிகரில்பக்கம் - நிகரிற் பக்ஷமென்று சொல்லப்பட்ட விபக்ஷமானது நிச்சித ‡ சாத்யாபாவன். அஃதாவது, எங்கே யக்நியில்லை யங்கே தூமமில்லை; ஆழமுள்ள மடுவைப்போலென்பது. ஆகையால்,—முதலென்றவிரண்டும் பொருளுண்மைக் கிடமாம் - முன்பொருந்திய பக்ஷ சபக்ஷ மிரண்டுவநுமாநத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலுஞ் ‖ சித்தவஸ்துகம்,—ஒன்றுபொருளின்றும் - பின்சொன்ன விபக்ஷம் ப்ரத்யக்ஷத்தினாலு மநுமாநத்தினாலு ×மசித்தசாத்யம்.

† தூமம் - புகை, § வந்நி - நெருப்பு, * ஆச்ரியம் - இருப்பிடம், ‡ சாத்ய அபாவவான் = சாத்தியாபாவவான் - அஃதாவது நிச்சயமில்லாதது, ⸸ சித்தவஸ்துகம் - சித்தமான பொருளையுடையது, × அசித்தசாத்யம் - சித்தமாகிற பொருளில்லாதது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பக்கமுதல் மூன்றினது பகுப்பிலக்கண முணர்த்துகின்றார்.

மூன்றுபக்கம் - பக்கமூன்றுவன,—பக்க நிகர்பக்க நிகரில் பக்கமெனத் தோன்றும் மூன்றினுள்,—பக்கந்துணிபொருளுக் கிடமாம் - சாதிக்கப்படுமதாகிய வந்நி யீஸ்வரன்முதலிய பதார்த்தத்துக்குத் தானமாகிய மலை யுலகு முதலிய பொருளாம்,—நிகர்பக்கம் - சபக்ஷம்,—உவமை - திருஷ்டாந்தத் தானமாகிய பாகசாலை குடமுதலியவிடம்,—நிகரில்பக்கம் - விபக்ஷம்,—ஆன்ற பொருள் சென்றடையாத விடமாம் - அந்தச் சாத்தியசாதநங்களாகிய வந்நி தூமமுதலிய பதார்த்தங்கள்போய்ப் பொருந்தாத மடுமுதலிய தானமாம்,—முதலென்றவிரண்டும்-முன்பொருந்திய பக்ஷ சபக்ஷங்க ளிரண்டும்,—பொருளுண்மைக் கிடமாம்-சாத்தியசாதநங்களினது ளௌ்ளமைக்குத் தானமாம்,—ஒன்று - விபக்ஷம்,—பொருளின்றும் - சாத்தியசாதநங்க ளில்லாததாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

எ-து. பக்கமூன்றுவன, பக்கஞ் சபக்கம் விபக்கமென்பனவாம். அவற்றுள், ஐயுற்றுத் துணியற்பாலதாய பொருளிருக்குமிடம் பக்கமெனப்படும்; அதற்கெடுத்துக் காட்டப்படுவதாய்த் துணியப்பட்ட பொருளிருக்குமிடம் சபக்கமெனப்படும்: அப்பொருளில்லாதவிடம் விபக்கமெனப்படும். இம்மூன்றனுட் பக்கஞ்சபக்கமிரண்டும் பொருளுண்டென வறிதற்கிடமாம்; விபக்கம் அஃதில்லையென்றறிதற்கிடமாமென்பதாம்.

துணிபொருள் எதிர்காலவினைத்தொகை.

அவினுபாவமறிதற்கண் ஐயமறுத்தற்பொருட்டுச் சபக்க விபக்கமிரண்டும் வேண்டப்படுமென்மார், முதலேன்றவிரண்டும் பொருளுண்மைக்கிடமா மொன்றுபொருளின்றுமென வுங்கூறினர்.

இதனானே மேற்பக்கமூன்றென் றவற்றின்பெயருமியல்புங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இனிமூன்றுபக்க மேதென்ன மேலருளிச்செய்கிறார்.

மூன்றுபக்கம் - பக்கமென்று சொல்லப்பட்டது மூன்று வகைப்பட்டிருக்கும். அஃதேதெனில்?—பக்க நிகர்பக்க நிகரில்பக்கமெனத் தோன்றும்- அதுதான் பட்சபட்சமென்றும் சபட்சபட்சமென்றும் விபட்சபட்சமென்றும் இப்படி மூன்றாகக் காணப்படும். பக்கமென்றதேதென்னில் ?—பக்கந் துணிபொ

ருளுக்கிடமாம் - தன்பட்சமானது தானறுதியிட்டபொருளுக் கிடமாயிருக்கும். நிகர்பக்கமேதென்னில் ?—உவமைநிகர்பக்கம் - தனக்கொற்ற பட்சமானது தானறுதியிட்டபொருளுக்குவமையாயிருக்கும். நிகரில்பக்க மேதென்னில் ?—ஆன்றபொருள்சென் றடையாதவிடமாம் நிகரில்பக்கம் - தனக்கொவ்வாத பட்சந்தான் அறுதியிட்டபொருள் சென்றுபொருந்தாத விடமாம்,—முதலேன்ற விரண்டும் பொருளுண்மைக்கிடமாம்-ஆகையால் முன்னே சொல்லப்பட்ட பட்சமிரண்டுந் தானறுதியிடப்பட்ட பொருளுண்டாதலுக் கிடமாம்,— ஒன்றுபொரு ளின்றும் - பின்சொல்லப்பட்ட நிகரில்பக்கத்துக்குப் பொருளில்லையாம்.

இதனாற்சொல்லியது பக்கம் நிகர்பக்கம் நிகரில்பக்கமென்று சொல்லப்பட்ட மூன்றில் தன்பக்கத்துக்கும் தனக்கொத்தபக்கத்துக்கும் தானறுதியிட்ட பொருளுண்டென்றும்; தனக்கொவ்வாப் பக்கத்துக்குத் தானறுதியிட்ட பொரு ளுண்டாகாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பக்கமூன்று- பக்கமூன்றுவன?—பக்க நிகர்பக்க நிகரில்பக்கமெனத்தோன்றும் -பக்கமும் சபக்கமும் விபக்கமுமெனப்பலவாம்,—துணிபொருளுக்கிடம் பக்கமாம் - அவ்வாறு ஐயுற்றுத் துணியற்பாலதாய பொருளிருக்குமிடம் பக்கமெனப்படும்,—உவமை நிகர்பக்கம்-அதற்கெடுத்துக் காட்டப்படுவதாய்த் துணியப்பட்ட பொருளிருக்குமிடம் சபக்கமெனப்படும்,—ஆன்ற பொருள் சென்றடையாதவிடமா நிகரில்பக்கமாம்-அப்பொருளில்லா

தவிடம் விபக்கமெனப்படும்,—முதலேன்ற விரண்டும்-இம்மூன்றனுள் முதற்கட்பொருந்திய பக்கஞ்சபக்கமிரண்டும்,—பொருளுண்மைக்கிடமாம்-பொருளுண்டென வறிதற்கிடமாம்,—ஒன்று-விபக்கம்,—பொருளின்றும்- அஃதில்லையென்றறிதற்கிடமாமென்பதாம்.

இதனானே மேற்பக்கமூன்றென் றவற்றிற் பெயரு மியல்புங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மே விருத்தமுறையானே யேதுமூன்றையும்
வகுத் துணர்த்துகிறார்.

ஏதுமூன்று மியல்புகாரியத்தோ டநுபலத்தி யி
வை, யோதினியல்பு மாமரத்தைக் காட்டலுறுகா
ரியம்புகைதன்,னூதியான வனல்காட்ட லாகுமநுப லத்
தியது, சீதமின்மை பனியின்மை காட்டல்போலுஞ்
செப்பிடினே. (கo)

(இ-ள்.) ஏதுமூன்றும் — ஏதுக்களின் முறைமை மூன்றுவகையாயிருக்கும். அவையாதெனில்?

இயல்புகாரியத்தோ டநுபலத்தியென — இயல்பேது காரியவேது அநுபலத்தியேது எனமூன்றும்.

இவையோதின் — இவையிற்றையடைவே சொல்லில்

இயல்பு மாமரத்தைக் காட்டல் — இயல்பேதாவது - மாப்பூத்ததென்றுன் மாமரத்தின் மேனிற்றல். மாப்பாய்ந்ததென்றுற் குதிரையின் மேனிற்றல். அவ்வரத்துக்கேற்ற பெயரையிடுவ தியல்பெனப்பெறும்.

உறுகாரியம் புகைதன் னுதியாயானவனல்காட்டலாகும் — மிகவும்பொருந்திய காரியவேதுவாவது - புகை தானே முதற்கண்டநுபவித்தான் மறையநின் றதற்குக் காரணமான வனலையுங் கூடென் றநுமித் தறிவிக்கை. அஃதென்போலவென்னில்?

கலாதி காரியத்தைக்கொண் டதற்குக் காரணமான மாயையுங்கூடென் றறிதலாம்.

அநுபலத்திபது சீதமின்மை பனியின்மை காட்டல்போலுஞ் செப்பிடினே. — அநுபலத்தியென்னு மேதுவைச் சொல்லுமிடத்துக் குளிரில்லாததுகொண்டு பனியின்மையென வநுமித் தறிதல்—எ-று.

ஓடு எண்.

"காரியவேது காரணவேதுதன்மமுமென்-றோரிலொரு மூன்றினுமுண்டு" எனவு மறிக. (௬௦)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலேதுமூன்றினது ஸ்வரூபத்தைக்கூறுகின்றது.

ஏதுமூன்றி னியல்பு காரியத்தோ டநுபலத்தி-ஏதுக்கள் மூன்றுவன? [இயல்பேதுவெனினும், ஸ்வபாவவேதுவெனினு மொக்கும். இது தர்மத்திற்குப் பரியாயநாமம்.] தர்மத்

திலுற் றருமியை யறிவிக்கு மியல்பேதுவொன்று, காரியமாயிருந்து காரணத்தை யறிவிக்கு மேதுவொன்று, அநுபலத்தியாவது அபாவத்தை சாதிக்கிறஹேது (அதுகாரணமாகிய வக்நியில்லாதவிடத்திற் காரியமாகிய தூமமில்லையென்று சொல்லுமதுபோலக் ‡ காரணுபாவத்திலுற் காரியமில்லையென்று அறியப்படுமேது, இவைதர்மாதர்மி யநுமாநம்–காரியாத் காரணுநுமாநம், காரணுத் காரியாநுமாநம்) என்று சொல்லவும்படும்,—

‡ காரணஆபாவம் - காரணுபாவம், அதாவது காரணமில்லாமை.

* [illegible]
[illegible]
[illegible] இதி.

இவையோதின் - இவ்வேது மூன்றிற்கு முதாரணங்கூறின்,—

இயல்புமா மரத்தைக்காட்டல் - மாஎன்றசே இலக்ஷ்மிக்கும் யானைக்கும் குதிரைக்கும் வண்டிற்கும் இவைமுதலிய வநேகவஸ்துக்களுக்குப் பெயராயிருக்க மாதளிர்த்த தென்புழி மர மென் றறிவிக்கும், மாபாய்ந்ததென்றால் யானை, மா அநுமானித்ததென்றால் குதிரை, மா பறந்ததென்றால் வண்டு, என்றறிவது ஸ்வபாவ லிங்காநுமாநத்திலு னறிவிக்கும். இது தாதாத்மியம்.

தாதாத்மியஸ்வரூப மெவ்வாறெனின்?

* [illegible]

சற்றுபேதத்தோடேகூடி யபேதமாயிருத்தல் தாதாத்மியம் என்பது ஸ்லோகப்பொருள். அஃதாவது §குகத்வத்திலுலே பேதமும், வ்ருக்ஷத்வவ்யாப்தியிலுலே யபேதமும்,—

உறுகாரியம் - பொருந்திய காரியஹேதுவானது,—

புகைகன்றுதியான வனல்காட்டலாகும்-புகைதனக்குக் காரணமாகிய வக்நியை யநுமிப்பதாம்,—

அநுபலத்தியது - அநுபலத்திஹேதுவானது,—

சீதமின்மை பனியின்மை காட்டல்-பனிக்குக்காரணம்சம் சீததன்மாத்ரையாகலின் காரணீபூதமான சீதபரிசமில்லாதது தன்காரியமாகிய பனியையில்லையென்று அநுமிப்பது. சீதம் பனியின்குணம். பனிக்குக் காரணமல்லவெனின்? † காரண குணாதி காரியகுணாநாரபந்தே என்னுநியாயத்திறுற் பனிக்குக் காரணஞ் சீததன்மாத்ரமே.

காரணத்தின்குணம் காரியத்திலே யுண்டாக்குமென்பது ஸ்லோகப்பொருள்.

குணாநாரபந்தே மாவது - காரணத்தை யாரம்பிக்கை யெனவறிக,—

போலுஞ் செப்பிடிலே - இப்படிப்பட்ட ஹேதுக்களிறுலே இச்சாஸ்த்ரத்திற் ப்ரமேயமாகிற பாசபசுபதிகளை யநுமிப்பது—எ-று.

*தஜ்ஞம்—குரோரயமிதம் ஜ்ஞேயம் பாஶ: பஶுபதி: இதி.

ஓடு எண்.

பாசபசுபதியென்னும் ¶அவியக்தக் கிரமமாகச்சொன்னது, முதற்பாசதரிசகம் பண்ணி நீங்கினபின்பு பசுதரிசகமாய் அதின்பின்பு பதிகரிசக மாகவேண்டுமாகையால்.

¶ அவியக்தக்கிரமம் - மயக்கமாகச் சொல்லல்.

இயல்புமா மரத்தைக்காட்ட லென்றது - ப்ரபஞ்சத்தோன்றிநிற்கையா லிதற்கொரு பதியுண்டு பசுவுண்டு பாசமுண்டெனப்படுதலாம்.

உறுகாரியம் புகைதன்னுதியான வனல்காட்டலாவது-ப்ரபஞ்சங் காரியமாயிருத்தலால் காரியஞ்செய்வோ னன்றியில்லை யாதலாற் காரியகருத்தாவையும் காட்டிற்று. தேகம் சேதனமாகையால் அதைக்காரியப்படுத்தி நடத்துவானொரு சைதந்நியனுண்டென்று காட்டிற்று. பாசத்துக்குக் காரணமின்றிக் காரியந்தோன்று தென்பதனால் காரியமாகிய ப்ரபஞ்சங் காரணமாகிய மாயையைக் காட்டிற்று.

அநுபலத்தியது சீதமின்மை பனியின்மை காட்டல்போலுமென்றது - யாதொரு டாதொருகாரியத்துக்குக் காரணமில்லை யவ்விடத்தந்தக் காரியமுமில்லையாமெனக் காட்டிற்று. கத்தாவில்லையாகிற் ப்ரபஞ்சகாரியமில்லை, ஆன்மாவில்லையாகில் தேகமில்லை, மாயையில்லையாகில் தத்வதாத்விகங்க ளில்லையென்றதாம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஏதுமூன்றினது பகுப்பிலக்கண முணர்த்துகின்றார்.

ஏதுமூன்றும் - ஏதுக்கள் மூன்றுவகையா யிருக்கும்,—இவை - அவை யாவன? இயல்பு - இயல்பேது,— காரியத்தோடு-காரியவேதுவோடுகூட,— அநுபலத்தி - அநுபலத்தியேது, (இயல்பு - இயற்கை, காரியம் - பண்ணப்படுவது, அநுபலத்தி-ஞா

னுபாவம்,)க்ரமத்திலே யுதகரிக்கின்றார்,—ஓதினியல்பு - சொல்லிய வியல்பேதுவாவது,—மாமரத்தைக்காட்டல்-இது மாமரம்,மா வென்கையா லென்கிறவேதுவால் மனது குதிரை மற்றதிற் செல்லாமல் இயற்கையாய் மரத்திற் செல்லுதலால் மாவென்கை மரத்தைக்காண்பிக்குமேது,—உறுகாரியம்புகை-உற்றகாரியவேதுவாவது, மலையிதுவக்கியுடைத்து, புகை யுடைத்தாதலால் என்னும்,— தன்னாதியான வநல்காட்டலாகும் - தனக்குக் காரணமாகிய வக்நியைக் காண்பிப்பதாகும், புகை தூமவேது,—அநுபலத்திபது - அநுபலத்தி யேதுவாவது,—செப்பிடிலே - பனியில்லை பனிஞானாபாவத்தினாலென்று,—பனியின்மை காட்டலாகும் - பனியினதில்லாமையைக் காண்பிக்கும்சீதமின்மை, சீதமின்மையால்வரும் பனிஞானாபாவமாகிய வேதுபோலும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

எ-து. மேலெடுத்துக்கொண்ட மூன்றேதுவாவன? இயல்புங் காரியமும் அநுபலத்தியுமாம். அவற்றுள், மாமுதலிய சொற்கள் மரமுதலிய பொருளையுணர்த்துதற்கண் வேறு காரணமின்றி அச்சொற்களினியல்பானுளதாகிய ஆற்றல் சகசவேதுவெனப்படும்; புகைமுதலிய காரியங்கள் நெருப்புமுதலிய தத்தங் காரணங்களை யுணர்த்துதற்கண் அவைகாரியவேதுவெனப்படும்: குளிரில்லாமை முதலிய காரியாபாவங்கள் பனியில்லாமைமுதலிய காரணாபாவங்களை யுணர்த்துதற்கண்ணும் பனியில்லாமைமுதலிய காரணாபாவங்கள் குளிர் வாராமைமுதலிய காரியாபாவங்களை யுணர்த்துதற்கண்ணும், அவை அநுபலத்தியேது வெனப்படுமென்பதாம்.

இங்ஙனம் உணர்ச்சி மூவகைப்படுதலின் ஏதுவுமூவகைப்பட்டன. காரியவேதுக்கூறவே, ஒற்றுமைபற்றிக் காரணவேதுவுங் கொள்ளப்படும். அஃதாவது? இடித்து மின்னி இருண்டெழுந்த மேகம் மழைபெய்தலைக்காட்டுதல் போல்வது.

சீதமின்மைபனியின்மை காட்டலென்பது, "வாளைமீனுள்ளறலைப்படல்" என்றாற்போல நின்றது.

போலும் அசை.

இதனானே ஏதுமூன்றென் றவற்றின் பெயரும் இயல்புங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பக்கமூன்றிலே மூன்றேதுவென்றதெப்படியென்ன மேலருளிச்செய்கிறார்.

ஏதுமூன்றும் - ஏதுக்களென்று சொல்லப்பட்டவை மூன்றுவகைப்பட்டிருக்கும். அவையெங்ஙனே யென்னில்?—இயல்பு காரியத்தோ டநுபலத்தி - இயல்பேதுவென்றும் காரியவேதுவென்றும் அநுபலத்தி யேதுவென்றும் மூன்றுப்பிரகாரம்,—இவையோதின் - இவைமூன்றையுஞ் சொல்லுமிடத்து,—இயல்பு மாமரத்தைக்காட்டல் - இயல்பெதுவென்றது மாப்பூத்ததென்றால் மாமரமென் றறிகை,—உறுகாரியம் - பொருந்தப்பட்ட காரியவேதுவானது,—புகைதானுதியான வனல்காட்டலாகும் - புகையானது தனக்குமுதலான வக்கினியையுண்டென் றறிவிக்கையாம்,— அநுபலத்தியது - அநுபலத்தியேதுவானது,—சீதமின்மை பனியின்மை காட்டல்போலுஞ் செப்பிடி

லே - சொல்லுமிடத்துக் குளிரில்லாதது கொண்டு பனியில்லை யென்றறிந்தாற் போலும்.

இதனாற்சொல்லியது இயல்பேதுவென்றும் காரியவேது வென்றும் அநுபலத்தியேதுவென்றும் சொல்லப்பட்ட வேதுக்களிப்படியிருக்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

மூன்றேது-மேலெடுத்துக்கொண்ட மூன்றேதுவாவன,—இயல்புகாரியத்தோ டநுபலத்தியாம்-இயல்பு காரியமு மநுபலத்தியுமாம்,—இவையோதின் - இவற்றிற்கு இலக்கணம் கூறுமிடத்து,—மாமரத்தைக்காட்டல் - மாமுதலிய சொற்கண் மரமுதலிய பொருளை யுணர்த்துதற்கண் வேறுகாரணமின்றியச் சொற்களினியல்பா னுளதாகிய வாற்றல்,—இயல்பு - சகசவேதுவெனப்படும்,—புகைதன்னுதியாயவனல்காட்டல்-புகைமுதலிய காரியங்க ணெருப்புமுதலிய தத்தங் காரணங்களை உணர்த்துதற்கண்,—உறுகாரியமாகும் - அவைபொருந்திய காரியவேது வெனப்படும்,—செப்பிடின் - சொல்லுமிடத்து,—சீதமின்மை பனியின்மைகாட்டல் - குளிரில்லாமை முதலிய காரியாபாவங்கள் பனியில்லாமைமுதலிய காரணாபாவங்களை யுணர்த்துதற்கண்ணும், பனியில்லாமைமுதலிய காரணாபாவங்கள் குளிர்வாராமைமுதலிய காரியாபாவங்களையுணர்த்துதற்கண்ணும்,—அநுபலத்தியது - அநுபலத்தியேதுவெனப்படுமென்பதாம்.

இதனானே யேதுமூன்றென்றவற்றின் பெயருமியல்புங் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேல் விருத்தமுறையானே கேவலாந்வயியையுங் கேவலவெதிரேகியையு முணர்த்துகிறார்.

புகையாலனலுண் டடுக்களைபோ லென்னப்புகற
லந்நுவயம், வகையாமனலின் றாமிடத்துப் புகையின்
றாகு மலரினொடு, முகையார்நீரிற் போலென்று மொ
ழிதல்வெதிரேகச் சொலிவை, தொகையாருறுப்பைந்
தொடுங்கூடச் சொல்லுவாரு முளர்துணிந்தே. (கக)

(இ-ள்.) புகையா லனலுண் டடுக்களைபோ லென்னப்புகற லந்நுவயம் [அனலுண்டுபுகையா லடுக்களைபோலெனப் பதமாறிக்கொள்க] கேவலாந்வயியாவது - மலையின்கணனலுண்டு - இது ப்ரதிஞ்ஞை, அவ்விடத்திடையறாத புகையுண்டாகையால் - இஃதேது, அஃதென்போலவென்னில்? அடுக்களையிடத்துப் புகையுமனலுங் கூடக்காணுந் தன்மைபோலென்கை - இஃது திருட்டாந்தம்;

ஈண்டு தன்னோடொத்த திருட்டாந்தத்தையுடைத்தாதலால் இது கேவலாந்வயியென்றும் பெயராயிற்று. இஃது அந்வயவ்யாத்தியெனப்பெறும்.

வகையாமனலின் றாமிடத்துப் புகையின்றாகு மலரினொடு மு கேவலவெதிரேகியாவது - முறைமையாகச் சொல்லப்பட்ட மலையின்கணெருப்பில்லையென்கை - இது பிரதிஞ்ஞை, அவ்விடத்தனலிலாமையாற் புகையுமில்லையென்பது-

கையார் நீரிற் போலென்று மொழிதல்வெதி ரேகச்சொல்

இஃதேது, அஃதென்போலவென்னில்? தாமரைப்பூவினுடனேயரும்புநிறைந்த மடுப்பக்கம்போலென் றுவமித்துச்சொல்லுதல் - இஃது திட்டாந்தம்;

தன்றோடொவ்வாத் திட்டாந்தத்தை யுடைத்தாதலாற் கேவலவெதிரேகியெனப் பெயராயிற்று: இஃது வெதிரேக வியாத்தியெனப்பெறும்.

இங்ஙனங்கூறிய கேவலாந்வயியையுங் கேவலவெதிரேகியையு மூன்றுறுப்பைக்கூட்டிச் சமயசாத்திரம் வல்லவர்கள் கூறுவர்கள். அஃதெங்ஙனமென்னில்? ப்ரதிக்ஞைமுதலிய மூன்றினையும் பட்டாசாரியன்கொள்வன். உதாரணமும் உபநயமுமாக விரண்டினையும் புத்தன்கொள்வன்.

இவைதொகை யாருறுப் பைந்து டன்கூடச் சொ ல்லுவாருமு ளர் துணிந்தே.

நையாயிகருஞ் - சைவநும், பிரதிஞ்ஞை எது உதாரணம் உபநயம் நிகமநமென்னு மைந்தினையுங்கூட்டி யறுதியிட்டுச் சொல்லுவாருமுளர்—எ-று.

இதனை முதற்சூத்திரத்தில் விளங்கக்கூறுது மாண்டுக்காண்க.

சொல்லுவாருமுளரென்னு மும்மை யெதிர்மறை.

அநுமானத்திற் கவயவமைந்தன்; "மேற்கோளேதுவுபநய - நிகமனமெனமுறைநிகழப்பெறுமே" என்றார் தர்க்கபரிபாஷையிற்காலிங்கராயர். (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன வன்வய வெதிரேகிகளின் உதாரணங் கூறுகின்றது.

புகையாலநலுண் டடுக்களைப்போ லென்னப்புகற லந்நுவயம் - புகையினாலே யிவ்விடத்து நெருப்புண்டு பாகசாலைப்போ லென்பது அந்வயம்,—வகையாமந லில்லாவிடத்துப் புகையின்றாகு மலரினொடு முகையார்நீரிற் போலென்று மொழிதல் வெதிரேகச்சொல் - அக்நியில்லாவிடத்துப் புகையுமில்லை; தாமரைபுஷ்பத்தையு மரும்பையுமுடைய மடுவைப்போல வென்றது வெதிரேகம்,—இவைதொகையாருறுப் பைந்தொடுங்கூடச் சொல்லுவாருமுளர் துணிந்தே - இவ்வந்வய வெதிரேக வநுமாநத்தை திடவ்யாத்தியுடனே பஞ்சாவயவயுக்தமான ஹேதுவினாற் பிற ரறியத்தக்கதாகப் போதிப்பார்கள்.

* [illegible]

பஞ்சாவயவமாவது - ப்ரதிஞ்ஞை - எது - உதாரணம் - உபநயம் - நிகமநம்.

ப்ரதிஞ்ஞையாவது இந்த பர்வதம் அக்நி †மானென்பது.

† மான் - உடையது.

ஏதுவாவது - புகையினாலென்பது.

உதாரணமாவது-எங்கேது மமுண்டோ வங்கெல்லாமக்நியுண்டு பாகசாலைப்போல என்பது.

உபநயமாவது - அப்பாகசாலையைப்போ லிப்பர்வதமுந் ¶ தூமவானென்பது.

¶ தூமவான் - புகையையுடையது.

நிகமநமாவது- ஆகையா லிப்பர்வதமு மக்நிமானென்பது.

இவ்வந்வய வ்யதிரேகி யநுமாநத்திற்கு § பக்ஷதருமத்து வம் -சபக்ஷசத்வம் - விபக்ஷாத்வ்யாவிர்த்தி-அபாதிதவிஷய த்வம் - அசத்ப்ரதிபக்ஷத்வம். என்னுமவயவம் - ரு - உண்டு. அவையாவன:—

§ பக்ஷதருமத்வம்முதல் முறையே பக்ஷத்திலே யுண்டாயிருக்கை-சபக்ஷதிலே யுண்டாயிருக்கை -விபக்ஷத்திலே யில்லாமலிருக்கை - கொடுக்கப்படாத விஷயமாயிருக்கை- ப்ரத்யக்ஷமில்லாமலிருக்கை என்பதுபொருள்.

பக்ஷதருமத்வமாவது-பக்ஷமாகிய பர்வதத்தி × லவிச்சின்னமூலமா +யப்பிரமலிகமா யிருச்கிற தூமமுண்டாயிருக்கை.

× அவிச்சின்னமூலமாய் - இடையறாமல், + அப்பிரமலிகமாய் - ஆகாசத்தையளாவிய.

சபக்ஷசத்வமாவது - பாகசாலையிலே தூமமு மக்நியுமுண்டாயிருக்கை.

விபக்ஷாத் வ்யாவிர்த்தியாவது - விபக்ஷமாகிய மடுவிற் றூமமில்லாம லிருக்கை.

அபாதிதவிஷயத்வமாவது - தூமத்தினால் வக்நியை யநுமிக்கிறதற்குப் ·|· ப்ரமாணாந்தரத்தினூற் பாதையில்லாமலிருக்கை.

·|· ப்ரமாணாந்த்ரம் - வேறொரு ப்ரமாணம்.

அசத்ப்ரதிபக்ஷமாவது - சாத்தியத்திற்கு விபரீதசாதகமாயிருக்கிற o வேதுவந்தரமில்லாமலிருக்கை.

o வேதுவந்த்ரம் - வேறொருவேது.

இவ்வவயவங்களி லொன்றில்லாவிடினுமேதுவாபாசனும்.

ஏதுவாபாசலக்ஷணங்களெல்லா மளவையிற் பதினொன்கா ம் விருத்தத்தில் விரித்துக்கூறுவாம்.

கேவலாந்வயிக்குங் கேவலவ்யதிரேகிக்கும் அவயவகா ன்கு. அவைவருமாறு:—

வ்ருக்ஷமானது ப்ரமேயம் அசத்தாகையினால் பாஷாணம் போல என்னுங் கேவலாந்வயிக்கு, விபக்ஷமில்லை யாகையால் விபக்ஷாத் வ்யாவிர்த்தியில்லை. ஜீவிக்கிறசரீர மான்மாவை, யுடையது ப்ராணாதிவாயுக்களை யுடைத்தாயிருக்கையால், யா தொன்று *ஸ்வாத்மகமல்ல அது †ப்ராணாதிமத்துமல்ல கடம் போல் என்கிறகேவல வ்யதிரேகிக்கு சபக்ஷமில்லாமையாற் சப க்ஷசத்வமில்லை.

* ஸ்வாத்மகம் - ஆன்மாவோடு கூடினது, † ப்ராணாதிம த்து - ப்ராணாதிகளுடனே கூடினது.

சிவாக்ரயோகியர் உரை.

மற்றோர் ப்ரதியில் எழுதியிருப்பது.

புகையாலனலுண் டடுக்களைப்போ லென்னப்புகற லந்துவ யம் - இடையறுப் புகையுண்டு ஆகலா லம்மலையிடத்து நெருப் புண்டு; இது ப்ரதிஞ்ஞை.

ப்ரதிஞ்ஞையெனினும் பக்கமெனினு மொக்கும்; அந்வய மெனினுமது.

எங்ஙனேயென்னில்? அடுக்களையி னிடத்துப் புகையைக்க ண்டுகூட அனலுங் கூடக்காணுந் தன்மைபோல், இது திட்டா ந்தம்.

திட்டாந்தமெனினும் சபக்கமெனினு மொத்தபக்கமெனி னு மொக்கும். இப்படிச் சொல்லுவ தொற்றுமைப்பாட்டை ய றிய வியற்றியது.—

வகையா மனலில்லாவிடத்துப் புகையுண்டாகும் - கூறு

படுத்திச்சொல்லும் நெருப்பில்லாவிடத்துப் புகையில்லையாம். அஃதென்போலென்னில்?

மலரினொடு முகையார்நீரிற் போலென்று மொழிதல் வெதிரேகச்சொல் - அக்கினியில்லாவிடத்துப் புகையில்லையென்பது எப்படிப்போலவென்னில்? மலரினுடனேமுகை, நிறைந்த நீரில்லாவிடத்து இல்லையானாற்போலவென்று கூறுதல்; இது கேவலவெதிரேகி.

இது வேற்றுமைப்பாட்டையுடையது

முகை - தாமரை.

வெதிரேகமெனினும் விபக்கமெனினும் ஒவ்வாத பக்கமெனினும் மீட்சிமொழியெனினு மொக்கும்.

இரண்டாவது மதனை வலியுறுத்தல். அது நெருப்பையுடைத்தல்ல தியாதோரிடம் அவ்விடத்துப் புகையுமில்லை, புனலில்லாவிடத்துத் தாமரையில்லை; அதுபோற்பொருளினது மீட்சியாய் தன்மாதன்மிய திட்டாந்தத்திற்கு நன்றாகிய காரியவேதுவாயிற்று

இனிவிஸ்வம் பொய்யென்றல் தன்னுடைய பக்கம். அஃதென்போலென்னில்? பண்ணப்படுதலால் என்றது பக்கத்தின் கண்ணே யுள்ளதாகிய தோரியல்பானவேது. யாதொருபொருள் யாதொருவன் காரியமாய்ச் செய்யப்பட்டது அது அநித்தம்; அஃதென்போலென்னில்? கடம்போலவென்றல் காரியவேதுவாகிய சபக்கமாம். யாதொன்று பண்ணப்படாதது அனித்தமல்ல; அஃதென்போலென்னில்? பதிபசுபாசம் போலவென்றது.

யாதோரிடத்துப் புகையென்றது அவ்விடத்து நெருப்புண்டென்னு மந்வயத்தாலும், இயாதோரிடத்து நெருப்பில்லையவ்விடத்துப் புகையில்லை-புனலில்லாவிடத்துத் தாமரையில்லையானாற்போலவென்னும் வெதிரேகத்தாலும், புகைநெருப்பையுஞ்சாதித் திடத்தையும் சாதித்தவாறுபோல;யாதொன்று கா

ரியமாயுள்ளது அவ்விடத்துக் காரணமுண்டென்னு மந்வயத்தானும், யாதோரிடத்துக் காரணமில்லை யவ்விடத்துக் காரியமில்லையென்னும் வெதிரேகத்தானும், காரியமானப்ரபஞ்சந் தனக்குக்காரணமான மாயையுஞ் சாதித்துத் தோற்றுவிக்கும் கர்த்தாவையுஞ் சாதித்ததெனவறிக.—

இவை தொகையாருறுப்பைக்தொடுங்கூடச் சொல்லுவாரு முளர் துணிந்தே - தொகை பொருந்திய வைந் தவயவத்தோடுங்கூடச் சொல்லுவாருமுண்டு. தெளிந்தே—எ - று

அஃதாவது, நையாயிகருஞ் சைவரும்-ப்ரதிஞ்ஞை ஹேது உதாரணம் உபநயம் நிகமநமென்னு மைந்தினையுங்கூட்டி யறுதியிட்டுச் சொல்லுவர்கள். அஃதாவது:—

* இவ்விடத்து ப்ரதிஞ்ஞைமுதலிய உதாரணம் முன்னுரையிற் கூறப்பட்டுள்ளதே!

சொல்லுவாருமுளர் துணிந்தே யென்ற வும்மையால் சொல்லாதாருமுளரொன்பதாம். அது உபநயமும் நிகமநமும் முன் சொன்ன மூன்றினு ளடங்குமாதலா லெனவறிக. இதற்குகாரணம் "பூபூகராதி ¦யோவறவுஞற்று - மொருவினையுடைத்துப் பொருவிரிகாரிய - மாதலிற்கடம்போலென்னிற்கோதின் - றிருங்கடமத்தோ டியற்றிடவொருவனை - யொருங்குடன் கண்டோ ரொழிந்திகலிருகடங் - கண்டாலிவையுமவனைக்கொண்டாங்- குண்டோவுலகமுஞற்றுதலொருவற்-கண்டுமற்றறிவுமுண்டிவ னெனவெனிற் - கண்டதில்மான முனக்குக்கொண்டல்கோள் - கிரிவளர்தூமமதனிலெரிவள - ரட்டி லொண்புகை யயலனலுணர்ந்து - மோட்டிலைப்பிறங்கலொள்ளழலோட்டிய - தென்னைவிசேடசமனிபத் தியாகிற்பனென்னில் - விசேடமென்னின் மன்றேகாட்சி - யலதிலசமனிய மாட்சியதென்றிடிற் - செயலொடுசெய்வோர் கண்டோன்மன்ன - மரணவிதந்தனி னென்றேவோதுவ - னொருவன்றீதுகு செயலென்றற்

றேன்-மாகமாகிய வினையாலெற்றெ-பாகமியைதலிற் கடற்றினு டொண்குண - மன்னலிவைபோ லாகியவழியு மழிபவை செய ලலன்-ிருதுறுவஃதுந் தீதறுசெயலே" ஞானுவமிர்தம் பதியில க்கணஞ்சாதிக்குமிடத்து இந்தவைந் துறுப்பும் வந்வாறுகாண்க.

இப்பொருள் முன்விரித்தமுறையே பதிபசுபாச மூன்றிற் கும் வருமாறும் விரித்துப் பொருளுரைக்குமாறும் அறிந்து கொள்க.

* இவ்வுரையு முதாரணமும் சிவஞானபோதத்திற்குப் பாண்டிப்பெருமாள்கூறிய வுரையிலிருந்து எடுத்தெழுதப்பட்ட தாய்க்காணப்படுகிறது. இதனை அப்புத்தகத்தி னுரையாற் கண்டுகொள்க. சிலவிடங்களின் மறைஞானதேசிகருரை விரை விவருதலுங் கண்டுணர்க.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

முன்சொல்லிய வந்வய வெதிரேகவிலக்கணங்கூறுகின்றூர்.

அனலுண்டு - இந்தமலையி லனலுண்டு,-புகையால்— தூம முடைத்தாதலால்,-¶ எங்கேபுகையுண்டு அங்கேயனலுண்டு,அ டுக்களைபோ லென்னப்புகற லந்நுவயம்,—வகையாமனலில்லா விடத்துப்புகையின்றுகும்,மலரிஞெடுமுகையார்நீரிற்போலென் றுமொழிதல்வெதிரேகச்சொல்,—இவை - அந்நுவயச்சொல்வெ திரேகச்சொல்லிவைகளை,-தொகையாருறுப்பைந்தொடுங்கூடச் சொல்லுவாருமுளர் துணிந்தே-முன்சொல்லிய மூன்றுறுப்பி னோ டிரண்டுறுப்புக்கூட்டிக் கூட நிறைந்த பஞ்சாங்கங்களோ டுங்கூட நிச்சயம்பண்ணி யுரைப்பாருமுளர்.

¶இச்செய்யுட்குப் பதத்திற்குப் பொருள்கூறுது பதத்தை யே அந்வதித் துரைத்திருக்கின்றது; இவ்வாறு பிறவும் வந்து ழிக் கண்டுகொள்க.

இதுவருமாறு:— மலையிதுவன்னியுடைத்து - இதுப்ரதிஞ்ஞையென்கின்ற வவயவம்.

புகையுடைத்தாதலால் - இதுஹேதுவென்கின்ற வவயவம்.

எங்கெங்கேபுகையுண் டங்கங்கே வந்நியுண்டு-எப்படி? அடுக்களைப்போல்; இது திருஷ்டாந்தமென்கின்ற வவயவம்.

அப்படி யிந்தமலையும் புகையுடைத்து - இதுவுபநயமென்கின்ற வவயவம்.

ஆகையாலப்படி வன்னியுடைத்து-இதுநிகமனமென்கின்ற வவயவம்.

இப்படி யந்நுவயத்தி லைந் தறுப்புங்காண்க.

மலையிது வன்னியையுடைத்து - இதுப்ரதிஞ்ஞையென்கின்ற வங்கம்.

புகையுடைத் தாதலால் - இது ஏது வென்கிற வங்கம்.

எங்கெங்கேவன்னியில்லை அங்கங்கேபுகையில்லை - எப்படி? மடுப்போல-இதுதிருஷ்டாந்தமென்கின்ற வங்கம்.

அல்லவப்படி இது - உபநயமென்கின்ற வங்கம்.

ஆகையாலல்ல அப்படி இது- நிகமநமென்கின்றவங்கம்.

இப்படி வெதிரேகத்திற் பஞ்சாங்கமுமறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

எ - து. மேலெடுத்துக்கொண்ட சொல்லிரண்டனுள், புகை யுள்ளவிடத் தனலுண்டென உடம்பாடுபற்றி அட்டிலை உவமைகூறுஞ் சொல் அந்நுவயச்சொல்லாம்; நெருப்பில்லாதவிடத்துப் புகையில்லையென மறுதலைப்பற்றித் தாமரையோடையை உவமைகூறுஞ் சொல் வெதிரேகச்சொல்லாம். இவ்விருவகைச் சொற்களையும் மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் உபநயமும் நிகமனமுமென்னும் ஐவகையுறுப்புக்களான் இணங்கவைத்துத் தெளியக் கூறுவாருமுளரென்பதாம்.

அவ்வாறு சொல்வர் தார்க்கிகர் முதலியோர்.

இதனானே சொல்லிரண்டென் றவற்றதியல்பு கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன்னேசொன்ன பிறர்பொருட் டநுமானம் அந்நுவயமென்றும் வெதிரேகமென்றும் சொன்னதெப்படியென்ன, மேலிரண்டையு மருளிச்செய்கிறார்.

புகையாலனலுண் டடுக்களைப்போ லென்னப்புகற லந்நுவயம் - புகையைக்கொண்டே யக்கினியுண்டென்றும் அவ்விடமடுக்களைப்போல விருந்ததென்றும் புகையைக்கண்டு அக்கினியையுண்டென் றநுபவித்துச் சொல்லுகையா லநுபோகமாம்,—வகையாமனலில்லா விடத்துப் புகையின்றாகும் - இந்தவகுப்பினாலே அக்கினியில்லாதவிடத்துப் புகையில்லையாம். அந்நுவயத்தினுடைய முறைமைசொல்லி, மேல் வெதிரேகத்தினுடைய முறைமை யருளிச்செய்கிறார்,— மலரினொடு முகையார் நீரிற் போலென்றுமொழிதல் - பூவுடனேகூடி நிற்கிற வரும்பு பொருந்தியிருக்கப்படாநின்ற குளத்திலே புகையுண்டென்று சொல்லுகிறவிது,— வெதிரேகச்சொல் - மாறுபடச்சொல்லுகிறதாம்,—இவை- இவ்வகை,—தொகையாறுறுப்பைந்தொடுங்கூடச் சொல்லுவாருமுளர் துணிந்தே - ஐந்துறுப்புட னந்நுவயம் வெதிரேகமென்று சொல்லுவாருமுளர்.

உறுப்பைந்தாவன:—பட்சம் ஏது திஷ்டாந்தம் உபநயம் நிகமனம் ஆகவைந்து.

பட்சமென்கிறது நெருப்புண்டென்றது.

ஏதுவென்கிறது புகை.

திட்டாந்தமாவது நெருப்பும் புகையுமுள்ளவிடம் அடுக்களைப்போலு மென்றறிக.

உபநயமாவது அதுபோலவ்விடத்திலே புகையுண்டென்றறிக.

நிகமனமாவது இவ்விடத்திலே நெருப்புண்டென்றறிகை.

இதனாற்சொல்லியது அந்நுவயம் வெதிரேகமென்னு மிரண்டுப்ரமாணத்தையும், இவையன்றியும் பட்சம் ஏது திட்டாந்தம் உபநயம் நிகமனம் என்னுமைந்து ப்ரமாணத்தையுங்கொண்டறிதியிட்டுச் சொல்லுவாருமுளரென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(மேலெடுத்துக்கொண்ட சொல்லிரண்டனுள்) புகையாலனலுண்டு - புகையுள்ளவிடத்து அனலுண்டென வுடம்பாடுபற்றி,—அடுக்கலைப்போலென்னப்புகறல்-அட்டிலை யுவமைகூறுஞ்சொல்,—அந்நுவயம் - அந்நுவயச்சொல்லாம்,—வகையா மனலில்லாவிடத்துப் புகையின்றுரும் - விளங்கிய நெருப்பில்லாவிடத்துப் புகையில்லையென மறுதலைப்பற்றி,—மலரினொடு முகையார் நீர்ப்போலென்று மொழிதல்-மலரோடு அரும்பு நிறைந்த தாமரைபோனடையை யுவமைகூறுஞ்சொல்,— வெதிரேகச்சொல்-வெதிரேகச்சொல்லாம்,—இவை-இவ்விருவகைச் சொற்களையும்,— தொகையாறுறுப்பைந்தொடுங்கூட - தொகைபொருந்திய மேற்கோளு மேதுவு மெடுத்துக்காட்டு முபநயமு நிகமநமுமென்னு மைவகையுறுப்புக்களால் இங்கண்வைத்து,— துணிந்து சொல்லுவாருமுளர் - தெளியக்கூறுவாருமுளர் என்பதாம்.

இதனானே சொல்லிரண்டென்றவற்றினியல்பு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் காண்டன் முதலிய மூன்றினுண்

மூன்றநுமான முணர்த்துகிறார்.

போதுநாற்றத் தாலறிதல் பூர்வக்காட்சி யநுமானமோ, மோதுமுறையா லறிவினள வுணர்தல்கருத லநுமான, நீதியான்முற் கன்மபல நிகழ்வதிப்போ திச்செய்தி, யாதியாக வரும்பயனென் றறிதலுரையா லநுமானம். (கஉ)

(இ-ள்.) போதுநாற்றத் தாலறிதல் பூர்வக்காட்சி யநுமானம்

பூர்வக்காட்சி யநுமானமாவது:—முன்பொருவன் முன் யாதாமொரு பூவையுஞ் சந்தனமணத்தையு மநுபூதியாகவறிந்து பின்பொருகாலத் தோரிடத்துப் பூவின்மணம்வீச வதனைக் காணாதிருக்கவு மதனையீதென் றறுதியிடுகை. இது திருட்டாநுமானமெனப் பெறும்.

ஓதுமுறையா லறிவினள வுணர்தல் கருதலநுமானம்

அநுமானாநுமானமாவது:— முன்பொருவனொருநூலை யதிகரித்தறிந்தவர்கள்சொன்ன வாக்கியத்தைக்கொண்டே யிவனுக்கிந்நூல் கைவருமென் றநுமித்தறிதல். இஃது திருட்டாநுமான மெனப்பெறும்.

நீதியான்முற்கன்மபல நிகழ்வதிப்போதிச்செய்தி யாதியாக வரும்பயனென் றறித

[இப்போதிச்செய்தியாதியாக வரும்பயனீதியான முற்கன்மபல நிகழ்வதென் றறிதலுரையா லநுமானம்—எனப்பதமாறிக் கொள்க] ஆகமாநுமானமாவது:—ஒருவனிந்தஜநநத்தி லார்ஜித்ததொழிலுக்குத் தோற்றமாய் வருகிற மகத்தாகியசுகதுக்க போகங்களைக்

லுரையா லநு கண்டு முறைமையாக முன் ஜநநத்தி லார்ஜிமானம். த்த நல்வினை தீவினைப்பய னிரண்டுண்டாயதெ ன் றநுமித்தறிவது—எ-று.

"உரையினநுமானத்து முண்டநுமானங்கள் - விரியுமினும்பாரிவ் விதம்" எனவறிக. (கஉ)

சிவாக்கிரயோகியருரை வருமாறு.

—o—

அளவை முதல்விருத்தத்திற் பத்துவித ப்ரமாணஞ் சொல்லி "அவையிற்றின் மேலுமறைவர் அவையெல்லா மளவைகாண்டல் கருதலுரையென் றிம்மூன்றிலடங்கிடுமே" என் றதற்குப் பூர்வதரிசந ப்ரமாணமென்றும், வசநலிங்க ப்ரமாணமென்றும், அநுபவ ப்ரமாணமென்றும், †ப்ரமாணாந்தரங்களாகச்சொல்லுமவைகளை ; யநுமானத்தி §லந்தர்ப்பவிக்கும்படி, மேல்விருத்தத்திற் கூறுகின்றது.

†அந்தர்ப்பவிக்கும் - அடங்கும். §ப்ரமாணாந்தரம் - வேறு பிரமாணம்.

போதநாற்றத்தா லறிதல் பூர்வக்காட்சி யநுமானம்-பூர்வத்திற் புஷ்பத்தையும் வாசனையு மோரிடத்திற் கண்டு பின் போரிடத்தில் வாசனையைக்கண்டு புஷ்பத்தைக் காணாதிருக்கவும்இவ்விடத்துப் புஷ்பமுண்டென்றறிவது தர்மாதர்மி யநுமானமே †ப்ரதக்ப்ரமாணமல்ல—ஒதுமுறையா லறிவினள வுணர்தல் கருதலநுமானம் - பரபுத்தி யப்பிரத்தியக்ஷமாகையா லொருவன்சொன்ன வாக்கியத்தைக் கொண் டவனுக்கு ஞான மிவ்வளவுண்டென் றறிகிறதும் வசநலிங்காநுமானமே,—நீதியான் முற் கன்மபல னிகழ்வதிப்போ திச்செய்தியாதியாக வருபய னென் றறிதலுரையா லநுமானம் - இப்போதறியப் படுகிற சுக

துக்கானுபவமானது பூர்வஜன்மங்களி னீதியானு மநீதியாலும் பண்ணப்பட்ட புண்ணியபாவங்களின் பலமென் றறிவதும், இன்னபுண்ணியத்திற் கின்னசுக மின்னபாவத்திற் கின்ன துக்க மென்றும், இகத்திற் ப்ரத்யக்ஷமாகக் காணுதபடியாற் ச்ருஷ்டியாதிகளிற் சொல்லிய வாகமங்களிற் புண்ணியபாபங்களுக் கிவ்வாறுபலம் வருமென் றநுமிக்கையினால்; இஃதாகம லிங்காநுமானமே. ஆகையா லிம்மூன்று தர்மாதர்மி யநுமானமும் வ்சநலிங்காநுமானமு மாகமலிங்காநுமானமுமாக; வநுமானத்தி * லந்தர்ப்பவிக்கும்.

§ ப்ரதக்ப்ரமாணம் - வேறுப்ரமாணம், * அந்தர்ப்பவிக்கும் - அடங்கும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

பின்னுங் காண்டல்முதலிய மூன்றினாலு மூன் றநுமான முணர்த் துகின்றார்.

(இவ்வழியினதோர் புறத்துத் தாழைப்பூவுமுண்டு பூர்வங்கண்டு முகந்த தாழைப்பூ மணத்துக்கொத்த சாதீயமணம் வீசலால் என்று.) போது - புஷ்பத்தை,—

நாற்றத்தால் - மணத்தால்,—

அறிதல் பூர்வக்காட்சி யநுமானம்-முன்னும்பின்னும் ப்ரத்யக்ஷயோக்கியப் பொருளையுணர்த்துதலால் ப்ரத்யக்ஷாநுமானம், இது தன்மாநுமானம் திருஷ்டாநுமான மென்றுமாம்— நம்மிடத்துச் சாத்திரப்பொருள் போதிக்குமுதிர்ந்த வார்த்தை மானதப்ரத்யக்ஷத்திற்றோற்று முதிர்ந்த புத்திபூர்வமாய் வருதல் கண்டவன்; முதிர்ந்தபுத்திமான், சாத்திரப்பொருள் போதிக்கு முதிர்ந்தவார்த்தை வசநித்தலால், நம்போல்வாரி லொருவன்போலென்று பிறன்,—

ஓதமுறையா லறிவினளவுணர்தல் கருதலநுமானம்-பிரதிவு யோகிக்குமாத்திரத்துக்கல்ல தொருவர்க்கும் ப்ரத்யக்ஷமல்லவாதலாற் புத்திபூர்வமான வார்த்தைவருமென் றநுமித்ததிந்த வறிவினதுயற்சியை யநுமித்த லநுமானநுமானம், இது காரியாநுமானம்; சாமாந்நியத்தினுற் றிருட்டாநுமானமென்றுமாம்,—

இப்போதுநிகழ்வது - முன்சொன்ன முறைமையிற் புத்தியிலிருக்கும் போசககன்ம நிமித்யமா யுண்டாகிய புறபோக்கியப்பொருள் முன்னுகப் புத்தியி லிப்போதுண்டாகி நிற்கின்ற சுகதுக்கமோகங்கள்,—

ீதியான் முற்கன்மபலம்-முறைமையில் முந்தியஜன்மங்களிற் செய்தபுத்தியிற் சஞ்சிதகன்மத்தி லெடுத்துக்கோத்த பக்குவப்ராரத்த கன்மத்திற் போசககன்ம நிமித்தியமாய் முதற்காரணமாகிய போக்கியகன்ம பரிணுமமாகிய பலங் கன்மகாரியமென் றுகமஞ் சொல்லுதலால்,—

இச்செய்தியாதியாக - ப்ராரத்தம் புசிக்குமிடத்துவரு மிவ்வாகாமியகன்மங் காரணமாக,—

பயனென்று - சுகதுக்கமோகங்கள்,—

வரும் - சொர்க்கநரகங்களிலேயுஞ் ஸ்வர்க்கநரகசேடமாகிய பூலோகத்திலேயு மினிமேல்வந்து பொருந்தும்.

(சுகதுக்க மோகபல காரணங் கன்மமென் றுகமஞ்சொல்லுதலாலென்று) அறிதலுறையா லநுமானம்-இவ்விரண்டநுமானமு மாகமாநுமானம், கிரமத்திலே காரியாநுமானமென்றுங் காரணுநுமானமென்றுஞ் சொல்லப்பட்டு;திரும்பவிரண்டுஞ் சாமாந்நியத்தினுற் றிருட்டாநுமானமென்றுஞ் சொல்லப்படும்—எ - று.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

எ-து. நாற்றமுதலிய ஏதுப்பற்றி போது முதலிய காட்சிப்புலனாதற்குறிய பொருளை, உயிரினோடுணர்வு தெரிவதெல்லாம் பூருவக்காட்சி யநுமானமெனப்படும். உரைமுதலிய ஏதுபற்றி அறிவினளவு முதலிய கருத்துப்புலனாதற்குறிய பொருள்களை தன்குறிப்போடு சார்த்தி, உயிரினோடுணர்வு தெரிவதெல்லாங் கருதலநுமானமெனப்படும். இவ்விரண்டினும் வேறாய் இதமகிதங் கண் முன்னர் அச்செயலானு லிங்குரவை செயின் மேலைக்காகும் என்றாற்போல, வேதாகமங்களுட் சொல்லியது கொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமைபற்றி யூகித்துத் துணிவதாய் உயிரினோடுணர்வு தெரிவதெல்லாம் உரையநுமான மெனப்படுமென்பதாம்.

ஆகமத்துட்கூறும் பதிமுதலிய பொருள்களை அவ்வாகமத்திற்கிடைபுடைய அநுமானத்தின் வைத்தறிவதூஉம் உரையநுமானமெனப்படுமென்பாருமுளர்.

இதனானே (அவையிற்றின் மேலுமறைவர்) எனப்பட்ட அளவைகள் காட்சியநுமானத்தோடொப்பவைத்து அநுமானத்துளடக்கிக் காட்டப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

———0———

இன்னமுமனுமான மூன்றுபிரகாரமா யிருக்குமென்னு முறைமை யருளிச்செய்கிறார்.

போது நாற்றத்தாலறிதல் பூர்வக்காட்சி யனுமானம் - தான் முன்பறிந்த கந்தங்களைக்கொண்டே யிது பாதிரியா யிருக்குமென் றறிகிறது பூர்வக்காட்சி யனுமானமென்று சொல்லப்படும்; இதுதிட்டிதானுமானம்.—ஓதுமுறையா லறிவி னளவு

ணர்தல் கருதலநுமானம் - ஒருவன் சொன்ன வார்த்தை யைக்கொண்டே யின்னவளவுஞான முண்டாயிருந்த தென்றறி கிறது கருதலனுமானமென்று சொல்லப்படும். இது அதிட்டிதா னுமானம்,—நீதியால்முற் செய் கன்மபல நிகழ்வதிப்போ தி ச்செய்தியாதியாக வருபயனென் றறித லுரையா லனுமான ம் - இப்பொழு துண்டாயிருக்கிற விந்த முறைமையைக்கொ ண்டு முறைமையாக முற்சனனங்களி லார்ஜித்த புண்ணியபாவு ங்க ளேதுவாக வந்த பிரயோசனமென் றறிகிறது ஆகமவனு மானமென்று சொல்லப்படும்.

இதனாற் சொல்லியது பூர்வக்காட்சி யனுமானத்தின் மு றையும் கருதலனுமானத்தின் முறையும் சாத்தரங்கொண் டறிகிற வனுமானத்தின் முறையும் இப்படி யிருக்குமென்னு முறைமை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நாற்றத்தாற் போதறிதல்-நாற்றமுதலிய வேதுப்பற்றிப் போது முதலிய காட்சிப்புலனுதற்குரியபொருளை யுயிரினோடு ணர்வு தெரிவதெல்லாம்,— பூர்வகாட்சியநுமானம்-பூர்வகாட் சியநுமானமெனப்படும்,—ஓதுமுறையால் அறிவின் அளவுணர் தல் - ஓதப்பட்டவுரைமுதலிய வேதுப்பற்றி யறிவினளவுமுத லிய கருத்துப்புலனுதற் குரிபொருள்களைத் தன்குறிப்போடு சார்த்தி யுயிரினோடுணர்வு தெரிவதெல்லாம்,—கருதலநுமான ம்-கருதலநுமானமெனப்படும்,—இச்செய்தி நீதியான் முற்கன் மபலம்-இவ்விரண்டினும்வேறு யிதமகிதங்கண் முன்ன ரச்செ யலானல்,—இப்பொழுது நிகழ்வதாதியாக வரும்பயனென்று அறிதல்-இங்குபவைசெயின்மேலைக்காகு மென்முற்போல வே தாகமங்களுட் சொல்லியதுகொண்டு சொல்லாத பொருளையு

டொப்புமைபற்றி யூகித்துத் துணிவதா யுயிரினு டுணர்வுதெரி வதெல்லாம்,—உரையாலநுமானம்-உரையநுமான மெனப்படு மென்பதாம்.

இதனானே யளவையிற்றின்மேலு மறைவெனப்பட்ட வளவைகள் காட்சியநுமானத்தோடு ஒப்பவைத்து அநுமானத்துள் அடக்கிக்காட்டப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேல் விருத்தமுறையானே யுரை மூவிதமென் றுணர்த்துகிறார்.

அநாதியே யமலனாய வறிவனூ லாகமந்தான், பி
னாதிமா றின்றிப்பேண றந்திர மந்திரந்தான், மனாதிக
ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையாகுந், தனாதியீ
றிலாதான்றன்மை யுணர்த்துத லுபதேசந்தான். (க௬)

(இ-ள்.) அநாதியே யமலனாய வறிவனூலாகமம் — அநாதியே மலமில்லாதவனுமாய் சர்வஞ்ஞத்வாதி குணங்களையுமுடையனா யிருக்கிற சிவனருளிச்செய்யப்படாநின்ற காமிகமுதலிய திவ்யாகமங்க ளிருபத்தெட்டுஞ் சிவாகமமெனப்பெறும்

ஆ-சிவஞானம், க-மோக்ஷசாதநம், ம-மலநாசம், ஆகலா லாகமமெனப் பெயராயிற்று.

சாதாக்கியமென்னுந் தத்வத்தில் வீற்றிருக்குஞ் சதாசிவனா மமலன்றன் "நயந்தாருலகெல்லா நண்ணவரமாதி - யியம்பினனாகமநாலேழு" எனவறிக.

தான் பினாதி மா றின்றிப் பேணல் — அந்த மகாத்மனருளிச்செய்த வாகமந் தான் முன்னொடுபின் மலைவின்றி யிருக்கும்,

“வினையினீங்கியவிளங்கியவறிவின்-முதல்வன்கண்டது முதனூலாகும்” நூலெனப்படுவது நுவலுங்காலை-முதலுமுடிவுமாறுகோளின்றி-யுண்ணின்றகன்ற வுரையொடுபொருந்தி-நுண்ணிதன்விளக்க லதுவதன்பண்பே” என்றார் தொல்காப்பியனார்.

தந்திரம்

தந்திரகலையாவது:—சத்த சாமர்த்தியத்தாற் கொள்வது, அத்த சாமர்த்தியத்தாற் கொள்வது, அல்லது வத்துசத்தியினாற் றான்கொள்வது, இம்மூன்றுவிதத்தாலு மாகமாந்தரங்களிற்கண்டு செய்வது,

இதனை ம்ருகேந்திரபத்ததி வியாக்கியையில் விளங்கவறிக.

மந்திரங் கண மனுதிக ளடங்கித் தெய்வம்வழி படுவோ வாய்மை யாகும்

மந்திரகலையாவது:—யாதாமொருவனெந்தத் தெய்வத்தை யாராதித்தா னந்தந்தத் தெய்வங்களுச்சரித்தான நியாசம் இருடி சந்தசு தேவதைமுதலியவற் றுண்மையை யுணர்ந் தந்தந்தத் தேவதைகளை யாராதனை செய்தல்

தனுதியீறிலா தான் றன்மையுணர்த்துவ துபதேசந்தான்

உபதேசகலையாவது:— ஆதியந்தமில்லாத பரமசிவனுடைய வ்யாத்திவ்யாபகத்தையும் ஆன்மாவினுடைய வ்யாத்திவ்யாபகத்தையும், பாசவ்யாத்திவ்யாபகத்தையும், ஆசாரியனிடமாக வுள்ளபடியறிகை—எ-று.

ஆகம நாலுபாதமென் றோதியிருக்க மூன்றென்றதென்னெனின்? சரியை கிரியை யிவ்விரண்டுந் தந்திரகலையிலடங்கும், மந்திரகலையி லியோகமடங்கும், உபதேசகலையின் ஞானபாதமடங்குமென்றறிக. (கரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ஆகம மூன்றுவிதமென்னு முறைமை கூறுகின்றது.

அநாதியே யமலனாய வறிவனூ லாகமந்தான்- அநாதியே யமலனாயுள்ள சித்ரூபனாகிய சிவ னநுக்ரகம்பண்ணிய வேதாகமங்க ளிரண்டையும்.

எனவே காமிகாதி வாதுளாகமம் - உஅ, வேதம் - ௪, ம் எனவறிக. [ஆ வென்பது சிவஞானம், க வென்பது மோக்ஷசாதநம், மகாரம் மலநாசம், ஆதலா லாகமமெனப் பெயராயிற்று.]

[வேதமென்பது வஸ்துவையறிவது] இவைகளை—

பினாதிமா றின்றிப்பேணல் தந்திரம்-†உபக்கிரமோப சம்மாரமத்தியே பராமர்சங்களினாலே பூர்வோத்ர விரோதமில்லாமல் ஏகவாக்யத்தைப் பண்ணிச் சத்தசாமர்த்யத்தாற் கொள்வதும், அர்த்தசாமர்த்யத்தாற் கொள்வதும், வஸ்துசத்தியினாற் கொள்வதும் விசாரித்தறிந்து; அக்நிஷ்டோமஞ் சிவபூசாதி க்ரியாபாதத்தைப் போதிப்பது தந்திரகலை,—

† உபக்கிரமோப சம்மார மத்தியேபராமர்சங்களினாலே- முதனடுவிறுதியை விசாரித்து.

மந்திரங்கள் மனாதிகளடக்கித்தெய்வம் வழிபடும்வாய்மையாகும்-மனசுமுதலாகிய அந்தக்கரணங்களைத் தகைந்து நிறுத்தி நின்று தான்யாதொருதெய்வங்களை அகங்கிரகோபாசனை பண்ணுகிறா னந்தத் தெய்வத்துக்குள்ள நியாசம் இருடி சந்தசு அதிதேவதை பீஜம் சத்திமுதலியவற்றி னுண்மையு முணர்த்தி; அந்தமூர்த்தியினுடைய ஜ்யோதிர்மயத்தைத் தானென்று நிற்கும்படி பாவித்து உபாசனைபண்ணும்படி போதிப்பது மந்திரகலை.

மந்த்ரமென்றது மந் - அந்தவஸ்துவை நினைக்கிறவனை, த்ரம்- இரக்ஷிக்கிறதென்று பொருள். [மந் - மநநம்.]

தனாதி யீறிலாதான்றன்னை யுணர்த்துத லுபதேசந்தான் - உபதேசகலையென்றது உற்பத்தியும் நாசமுமில்லாத ஞானரூபியாகிய சிவஸ்வரூபத்தையும்,உற்பத்தி நாசவத்தான தேகத்தையுடைய வான்மாவையும், உற்பத்தியாகுந் தேகத்துக்கு ஏதுவான வாணவாதிபாசங்களையும், வ்யாத்து வ்யாபகத்துடனே அதுவதின்சொரூபங்களையறிவிக்கிறதுஉபதேசகலை—எ-று.

உபதேசம் - அறிவிப்பது.

ஆகமத்திலே சரிதாதி நாலுபாதம்சொல்லியிருக்க மூன்றென்றதெப்படியென்னில்? சரியை கிரியை இரண்டும் தந்திரகலையிலடங்கும்,மந்திரகலையில் யோகமடங்கும்,உபதேசகலையில் ஞானபாத மடங்குமென்றறிக.

அமலனென்னு அநாதியே யமலனென்றது - அநாதிபதும் சாதிமுத்தராகிய அநந்தேஸ்வராதி * வ்யாவிருத்தியின்பொருட்டு.

* வ்யாவிருத்தி-அவர்களல்லவென்று தள்ளுகையெனவறிக.

அமலனாயவென்கிற க்ரியாபாதம் மலசகிதராகிய ஆன்மாக்களிடத்து அவினாபூதராயிருந்து மவர்க்கு அந்தமலசம்பந்தமில்லை யென்பதின்பொருட்டு. அமலனென்னும் பதமாத்திரம் போதும்,அறிவனென்னும் பதமுங்கூட ப்ரயோகிப்பானேனென்னில்? ஜடமாகிய சுத்தமாயைக்கும் நிமலத்வம் கூறப்படுகையால் தத்வ்யாவிருத்தியின்பொருட்டு அறிவனென்னும்பதம் ப்ரயோகித்ததெனவறிக.

நூல் ஆகமமென்று இரண்டுபதங் கூறினது வேதம் சிவாகமமிரண்டு மீஸ்வர வாக்யமென்கையால்.

இதற்குச்சம்மதி "வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்" என்று பிறகேசொல்லியிருக்கையால் நூலென்றது வேதமெனவறிக.

இதற்குமீமாம்சர் வேதம் *அபௌருஷேயமாய் நித்யமுமாகையாற் ப்ரமாணமாம்; ஆகமத்திற்குப் ப்ரமாண்யங்கூடாது, ¶பௌருஷேயமாகையா லென்பர்கள். அஃதெப்படியெனின்? வேதத்திற்கு நித்யத்வஞ் ஸ்ம்ருதியிற் சொல்லப்படுகையினாலும், காரணமின்னதென்று நிரூபிக்கப்படாமையினாலும், இப்படி நித்யமாகிய வேதத்திற்குந் தோஷரகிதமாகையாலும், மஹாஜன +பரிக்கிரஹமுள்ளமையாலும், ப்ரமாணம் சித்தம்; மனுவாதி ஸ்மிருதிகள், § தாத்ருசமாயிருக்கிற வேதமூலகமாகையால் அதுவும் ப்ராமாண்யவத்தென்று சொல்லப்படும்.

* அபௌருஷேயம்-புருஷராற்கூறப்படாதது, ¶ பௌருஷேயம் - புருஷராற்கூறப்பட்டது, + பரிக்கிரஹம்-அங்கிகரித்தல், § தாத்ருசம்-காணப்படுதல்.

ஆகமத்திற்குப் புருஷப் †ப்ரணீதமாகையினா னித்யத்வமுநிர்த்தோஷத்வமுங் கூடாமையானும், வேதமூலகத்வ மில்லாமையானும், வேதம்போலும் ஸ்மிருதிபோலு மஹாஜனபரிக்ரக மில்லாமையானும், ப்ரமாண்யங்கூடாது. ஆயினும் விசிஷ்டபுருஷராயுள்ள வியாசாதிகளினாற் ப்ரமாணாந்தரமூலமாகப் பண்ணப்பட்ட பாரதாதிகள்போ லவர்களாலு முபாசியரான ஈஸ்வரராலே ரசிக்கப்பட்ட வாகமத்திற்குப் ப்ரமாண்யங்கூடாதோவெனின்? பாரதப் பிரதிபாத்யமான தருமாதி புருஷார்த்தங்களுக்கு ஸ்ருதியாதிகள்போல வாகமங்களுக்கு மூலபூதமாக வொருப்ரமாணாந்தரங் காணாமையானும், ஆகமங்களினாற் பரஸ்பர விருத்தமான வர்த்தஞ் சொல்லப்

படுகையினாலும், தந்திராநுஷ்டாநத்திற்குப்புராணங்களி னி ந்தைக்கேட்கப் படுகையினாலும்; இஃதன்றியும் துர்வாசர் ததீசி கௌதமர் கண்வர் ப்ருகு உபமன்னியுவாகிய வறுவர்களானு ஞ் சபிக்கப்பட்ட ப்ராமணர் ஈஸ்வரனையும் விஷ்ணுவையு நம ஸ்கரித் தெங்களுக்கு விருத்தியேதென்று கேட்டளவில், ஈஸ்வ ரனும் விஷ்ணுவும் ப்ரம்மசாபத்தால் வைதிகத்தி லநதிகாரிக ளாயிருக்கிற வப்பிராமணர்களுக்கு ஜீவநோபாயமாகவும் அசு ராதி வ்பாமோகார்த்தமாகவும் ஆகமங்களைப் பண்ணினார்க ளென்று கேட்கப்படுகையானும், தந்திராநுஷ்டாநத்தினாற் சாண்டில்யர் சித்திரநாமாவென்கிற த்ராவிட ராசாமுதலி யவர்க்கு நரகபதநங்கேட்கப் படுகையானும்; ஆகமத்திற்குப் ப்ராமாண்யங்கூடாதெனின்? இப்பூர்வபக்ஷமுஞ் சித்தாந்த முஞ் சித்தாந்த தீபிகையில் விஸ்தரித்துச்சொன்னோம்: இவ ணுஞ் சிறிதுகூறுவாம்.

† ப்ரணீதம் - சொல்லுதல்.

வேதநித்தியம் நிர்த்தோஷத்வத்தினாற் ப்ராமாண்யமு டையது; புருஷப்பிரணீதமாகலின் ஆகமத்திற்குப் ப்ராமண் யமின்றென்பது கூடாது.

வேதத்திற்கு நித்யத்வத்திற் ப்ராமாண்யமில்லாமையா ன் வேதமுஞ் ஸ்வரூபநித்யமோ ப்ரவாகநித்யமோவெனின்? ஸ்வரூபநித்யங்கூடாது; முந்தக்கேட்ட மகாரம் போயிற்றுக காரமுற்பன்னமாயிற்று என்றும், கோலாகலஞ் சாந்தமாயிற் றென்றுஞ் சொல்லுகையினாலே வர்ணசத்தங்களுக் கநித்யத் வம் ப்ரத்யக்ஷசித்தமா யிருக்கையா லின்றுகேட்ட மகாரம் நேற்றுக்கேட்ட மகாரமேயென்ற ப்ரத்யபிஞ்ஞையினாலே வ ர்ணங்க ணித்யமேயெனின்? காசியிற் யாதொருநெல்லைப் புசி த்தோம் அதுவே சோளதேசத்திலும் புசித்தோமென்புழி ‡வ்

ரீஹித்வஜாதி யொன்ருய்¶வ்ரிஹிவியத்திபின்னமானதுபோல், கேற்றுக்கேட்ட மகார மின்றுக்கேட்டோமென்பது மத்வர திஜாதி ப்ரத்யபிஞ்ஞையொழியவந்த மகாரமல்ல வாகலின் வ ர்ண மநித்யமே.

‡ வ்ரீஹித்வஜாதி - நெல்லென்னும்ஜாதி, ¶ வ்ரிஹிவியத்தி பின்னம் - நெல்லின் ஆகாரங்கள் பின்னமானது.

இஃதன்றியும், உரக்கச்சொன்ன மகார மெள்ளச்சொல் லப்பட்ட மகாரத்தைவிட பின்னமென்று மகாரபேதம் ப்ரத் யக்ஷமாக வநுபவிக்கப்படுகையால் வர்ணங்க ளநித்யமே; ஆ கையால் *வர்ண சமூஹமாயிருக்கிற வேதமு மநித்யமே.

* வர்ணசமூஹம்-அக்ஷரக்கூட்டம்

இனி ப்ரவாகநித்யத்வமென்பதுங் கூடாது. ப்ரவாகநி த்யத்வமாவது? + அவிச்சின்ன த்வ்யாபக பரம்பராதீநத்வம், அதுகூடாது; போன ப்ரளயமு மினிமேல்வரும் ப்ரளயமும் ப் ரமாணசித்தமாகலின்.

\+ அவிச்சின்னத் வ்யாபக பரம்பராதீநத்வம்-ஒழியாம ற்படிப்பிக்கிற பரம்பராதீநம்.

ஆகில்வேதத்திற்முனே வேதநித்யமென்று சொல்லியிரு க்கிறதேயெனின்? நித்யமாகிய சிவப்பிரணீதமாகையாலும் ஆ ப்ரளயஸ் தாயியாகையாலு நித்யமென்றுசொல்லப்பட்டது. அல்லாமலும் திருபத்தை முகமென்பர்கள், ஓலைதிருமுகமாமோ? அந்தமுகத்திலே நின்றும்பிறந்த வாசகத்தை யந்தத்திருமுக மென்பதுபோலும், ஸ்வயம்புவினிடத்திலே நின்றும் பிறந்தபடி யினுலே ஸ்வயம்புவென வறியாயாக.

ஆகில்வேதத்திற்குப் ப்ரமாண்ய மின்னபடியென்று நீர் சொல்லுமெனின்? வேதம் சாதியோச்சாரணத்தை யபேக்ஷி

யாமலிருக்கிற ஸ்வார்த்த யதார்த்தஞானவானாகிய வொருவ ராற்சொல்லப்பட்டதே ப்ரமாணவாக்யமாகலின், யாதொரு சத்த ÷முக்த சாத்தியவத்தல்ல அது ப்ரமாணவாக்யமல்ல; கவிவர்ணனை வாக்யம்போல. அஃதெவ்வாறெனின்?

÷ உக்தசாத்தியவத்தல்ல-ஒருவராற் சொல்லப்பட்ட சாத்யத்துடனே கூடினதல்ல.

[illegible] || இத்யாதி.

ஆகையால் யாதொருவன் ப்ராந்த விப்ரலம்பக னாகாதவனாக யாதொருவனுடைய சத்தத்தின்படியே யர்த்தமுண்டாகிறது அத்தன்மையனாப்த்தனாகலின் அநாதிநின்மல நிரதிசயானந்த ஸ்வரூபியாய் சர்வஞ்ஞனுஞ் சர்வகர்த்தாவுமாயிருக்கிற சிவன் பரமாப்தன்; அவன்வாக்யமாகலின் வேதமுஞ் சிவாகமமும் ப்ரமாணமே.

தத் வாக்யம் ப்ரமாணமாம்பொழுது வாம காளாமுக பௌத்தாதிகளுக்கும் ப்ரமாண்ய முண்டாகாதோவெனின்? சத்தியம்; வேதபாக்யராயிருக்கிறவர்களுக் கதிகாரானுகுணமாகவு மசுராதி வ்யாமோகார்த்தமாகவு மச்சாஸ்திரங்களைப்பண்ணி யவ்வீஸ்வரனே காமிகாதி சைவாகமங்களி லிச்சாஸ்திரங்கள் வேதபாஹ்யமாகலின் வேதோக்தா நுஷ்டானாதிகாரிகளுக்கு ஸேவியமல்லவென்று நிஷேதிக்கலி னவைகளுக்குப் ப்ராமாண்யங்கூடாது.

ததுக்தம்- [illegible]

ததோக்தம் || ஶ்ருதிஸாரார்த்தயா ந்யஸ்தம் க்வாபி க்வாபி விஸ்தர꞉ | வாமம் பாஶுபதம் யத்து வ்ருத்தம் ஜ்ஞாநஞ்ச கல்ப்யதே || அந்யாநி ஶைவஶாஸ்த்ராணி மோகேஷுசிந் மோஹநாயவை | வேதவாத விருத்தாநி ச மயைவ கதிதாநி து | வாம பாஶுபதஞ்சைவ லாகுளஞ்சைவ பைரவம் | ந ஸேவ்யமேதத் கதிதம் வேதபாஹ்யம் ததேதராத்.

ஆகமமிரண்டுவிதமாயிருக்கும். வேதத்தை யநுசரித்ததொன்று, அநுசரியாததொன்று; வேதத்தையநுசரித்தது வங்கீகாரம், அநுசரியாதது மோகிப்பிக்கிறதின்பொருட்டு நாமேசொன்னதென்கிறது ஈஸ்வரவாக்கியம். அதுகள்தாலேதென்னில்? வாமம் பாசுபதம் லாகுளம் வயிரவம் இதுமுதலானதுகள் வேதவாக்கியங்களாகையால் என்பது ஸ்லோகப்பொருள்.

ஆகையால் மநுவாதிஸ்மிருதிகளிற் றந்திராநுஷ்டானத்திற்கு நிஷேதஞ்சொன்னது வேதவிருத்தமான வாமாதி யாகமவிஷயங்களே! மநுஷ்யாதி சிவபரியந்த மாப்த தாரதம்மியங்களினுற் சிவன் பரமாப்தனாகலின் சிவவாக்ய மொருவராலும் பாதிக்கப்படுவதல்ல.

தத்ரோக்தம் - நாஸ்திகம் ஶாக்தமேவ ச க்ஷத்ர கேஷ்விஹ நைஷ்டிகம் ததா | நமோ நமோ வேத்ரஹ்மணாவாக்ய வைஷ்ணவம் பாஞ்சநா || ததாநுஷ்ட்ரம் நஹாரிணா நரந்த்ரணமியார்த்தகம் | பாஞ்சரா த்ரேய்வாய்வ மோஷிவ்ராதயோயோவாய த்ரை

[illegible]

மனுஷவாக்கியத்திலும் ருஷிகள்வாக்கியம் விசிஷ்டம், ருஷிகள்வாக்கியத்திலுந் தேவதைகள்வாக்கியம் விசிஷ்டம், தேவதைகள் வாக்கியத்திலும் ப்ரம்மாவின்வாக்கியம் விசிஷ்டம், ப்ரம்மாவின்வாக்கியத்திலும்விஷ்ணுவாக்கியம்விசிஷ்டம், விஷ்ணுவாக்கியத்திலும் ருத்திரன்வாக்கியம் விசிஷ்டம், ருத்திரன் வாக்கியத்திலும் சிவனுடையவாக்கியம் விசிஷ்டம்; இப்படிமேன்மேல் விசிஷ்டமுங் கீழ்க்கீழ்த்தள்ளுகிறது சிவாகமங்களுக்கு விரோதமில்லாத சாத்திரங்களெல்லாம் ப்ரமாண்யம்: விரோதமுள்ளது அப்பிரமாண்யம். எந்தெந்தச்சாத்திரங்களெவ்வளவு வ்யாபிச்சிருக்கிறது அவ்வளவு அதுவதுகட்குப் ப்ரமாண்யம் என்பது ஸ்லோகப்பொருள்.

காமிகாதியாகமங்கள் பரமசிவ கர்த்ருகமென்பதற்குச்சம்மதி பாரதத்தில்.

[illegible]

காமிகமுதலான வாகமங்களுக்கு எப்படிக் கர்த்தாமகேஸ்வரனே வப்படி பதினெண்புராணங்களுக்குங் கர்த்தா சத்தியவதியினுடைய பிள்ளை என்பது ஸ்லோகப்பொருள்.

[illegible]

ஆகில் நிஷ்களசிவத்தினின்று சாதாத்மகமாக ஞானமார்க்கமானது †ப்ரவர்த்திக்கப்பட்டதென்று கேட்கப்பட்டது. சிவனிஷ்களனென்றுங் கேட்கப்பட்டது. நிஷ்களனான சிவனுக்கு வாக்கிந்த்ரியமில்லையாகலின் சப்தோச்சாரண மெப்படிக் கூடுமெனின்? அத்யந்தம் *விமலனாகி சர்வத்ர சிற்சத்தி §விச்ரும்பணத்தையுடைய சிவன் வாக்கிந்த்ரியமன்றியுஞ் சப்தோற்பத்தியைப் பண்ணுவனென்கிற தாச்சரியமல்ல. அஃதெவ்வாறுண்டாகிறதெனின்?

† ப்ரவர்த்தி-உண்டாதல், * விமலன்-நிர்மலன், மலமில்லாதவன், § விச்ரும்பணம்-பரம்பியிருத்தல்.

சுத்தமாயையாகிய விந்துவிற் சிவனது சிற்சத்திபானது ப்ரவர்த்தி +யுன்முகமாகப்பதிய நாதமுண்டாம். அதில்அச்சூக்குமமாய ×சிதேகசரணமாயிருக்கிற நாதத்திற் பைசந்திமத்திமை வைகரியென்னும் வாக்குகள் கிரமத்தில் விருத்திரூபமாகப் பிரவர்த்திக்கும். அச்சத்தங்கள் வக்த்ரபாரம்பரியக்கிரமங்களால்வேதசிவாகம ஸ்வரூபமாய் கன்மமார்க்க ஞானமார்க்கங்களைப்போதிக்கும். இப்படியுண்டான சத்தத்தி னுற்பத்தியெப்படியுண்டாயிற்று? சத்திசஹிதமான மந்த்ர தந்த்ரங்களெவ்வாறுண்டாயிற்று? இவைகளின்பேதங்களெத்தனைப்ரகாரம்? சாதனமெத்தனைப்ரகாரம்? சித்தியெத்தனைப்ரகாரம்? இவையெல்லாம்விளங்க விளம்பவேண்டுமெனின்?

+ உன்முகம்-எதிர்முகம், ×சிதேகசரணம்-ஆன்மாக்களைரக்ஷித்தல்.

நிரோதக் கருணாசாலியாயிருக்கிற பரமசிவன்,சிற்சத்தியால் விந்துவை ‡க்ஷோபிக்க, அவ்விந்துவினின்றும் ப்ரம்மமயமானஅகாரமுதிக்கும்; அச்சுத்தமாயையை க்ஷோபிக்கப்பண்ணியசிவாவிர்ப்பூதையான சத்தி மாயாதிஷ்டாத் திரியாகவிவியாகையால் போகமாயையென்று நாமமாம்.

‡ க்ஷோபிக்க-கலக்க.

ஈஸ்வரசிற்சத்தியால் ÷க்ஷோத்தமான சத்தார்த்தரூப சகத்காரணமாகிய விந்துவின் முதற்சாஸ்திரங்க ¶நாதாத்மகமாக வுண்டாம். அதற்குமேற் குண்டலாகாரமாகச் சரத்காலத்தி னிஷ்களங்க சந்த்ரப்பிரகாசமாக வபரவிந்துவுண்டாம். அவ்விந்து ஞானத்தே ஜோதியான விந்து விர்த்திரூபமாகக் கிரமத்தி னுத்தரோத்தர காரணமாகச் சூக்குமை பைசந்தி மத்திமை வைகரீயென்று நான்குவாக்குரூபமாம்.

÷ க்ஷோத்தார்த்தம்-கலக்கல், ¶ நாதாத்மகம்-நாதஸ்வரூபம்.

சிவேச்சையால் க்ஷோபிதையாகிய விந்துசத்திக் ௦அதோ பாகத்தி லம்பிகையென்கிறசத்தி யுண்டாம். அவ்வம்பிகையிடத்தினின்றுஞ் சந்திரப்பிரகாசம்போல வாமா ஜ்யேஷ்டை ரௌத்ரீயென்று முச்சத்திகளுண்டாம்.

௦ அதோபாகம்-கீழ்ப்புறம்.

அம்மூன்றில்:—

வாமை நித்திரைபண்ணுகின்ற ஸர்ப்பம்போற் குண்டலாகாரையாயிருக்கும்.

ஜ்யேஷ்டை தண்டாகாரையாயிருக்கும்.

ரௌத்ரீ யிரண்டு கலைக்கொம்புபோ லிருக்கும்.

அம்மாயை யபரரூபையாய்க்கொண்டு சயை விசயை அசிதை பராசிதையென்று நான்குசத்தியாம். மேலும் நிவிர்த்தி ப்ரதிஷ்டை வித்தை சாந்தி இந்திகை தீபிகை உரோசிகை மோசிகை வ்யோமரூபை அநந்தை அநாதை அநாச்ரிதையென்று பனிரெண்டுசத்தியு மாகப் பதினாறுசத்தியாம்.

இவைகளினாற் சிவதத்வமுதலாகப் ப்ருதுவிதத்வ மீறாகச் சர்வப்பிரபஞ்சமும் வ்யாபிக்கப்படும்.

இச்சத்திகளிடத்திற் றானே மூன்றுற்பத்தியாமென்ற அகார சஹிதமான வைம்பதக்ஷரமுண்டாம். அந்தவிஸ்தாரம் பிறகுசொல்லுகிறோம். முன்சொன்ன அகாரம், ரூபமாகிய தெவ்வாறெனின்? இரௌத்ரீசிரசும் வாமைமுகமும் அம்பிகை பாஹுவும் ஜ்யேஷ்டைதண்டாகாரமானதான ப்ரதானதேகமுமா யிருக்கும்.

இப்படியே அகாரமென்று சொல்லப்பட்டது. அவ் அகாரரூபமான சிவனுடைய சத்தி யானது அகாராதியாக ‡விஸ்ருதையாய் க்ஷகாரந்தமாக வைம்பதுபேதமாம்.

‡ விஸ்ருதை-விஸ்தாரம்.

சர்வாநுக்கிராஹிகையாய்ச் சர்வசத்தார்த்தரூபிணியுமாயிருக்கிற வில் வக்ஷரரூபிணியான சத்தியன்றிச் சத்தப்பிரபஞ்சமு மில்லை, யர்த்தப்பிரபஞ்சமு மில்லையாகலின், இவ்வர்ணங்களெல்லாஞ் சர்வசித்திக்கு மாலயமாயிருக்கும். இவற்றிற்கெல்லா மீஸ்வரனுடைய ஞானசத்தி யோனியும், ஈஸ்வர னிமித்தமும், விந்துவுபாதாநமுமாம். இதற்கான்மாக்களின் கன்மஞ் *சஹகாரிகாரணமாம்; காரணங்களினின்று காரியமெல்லாமான்மாக்களின் கன்மாநுகுணமாக வுண்டாகவேண்டுகையால்.

* சஹகாரி-துணைக்காரணம்.

ஆகலின், விந்துவ்யதிரிக்தமாக வர்ணங்க ளொன்றுமில்லை; வர்ணங்க ளநேகமுஞ் ஜடமுமாகலின். விந்துவிற் சிவனாலுண்டாக்கப்பட்டதே ஆகலி னுற்பன்னத்திற்கு நாசமுண்டு. ஆ ப்ரளயஸ்தாயிபானபடியாற் ஸ்வரம் யுக்தமாயிருக்கிற விவ்வர்ணங்களையும், வர்ணசமூஹமாயிருக்கிற பதங்களையும், பதசமூஹமாயிருக்கிற வேதவாக்யங்களையும், நித்தியமென்றதே.

வேதங்களை ஸ்வயம்புவென்றது தக்த தாலோஷ்ட புட வ்யாபாரத்தினாற்றானே யுண்டாகாம லீஸ்வரசத்திப் ○பிரசாரத்தினால் விந்துவினின்றும் ¶நாதாத்மகமாக வுண்டாகையால் இப்படியிருக்கிற வாக்யங்களாஃ வைதிக லௌகிக வ்யவஹாரவேதுவாயிருக்கிற †வர்த்தப்பிரதீதியுண்டாம். இவ்வர்ணங்கள் சகத்திற்கு மாத்ருஸ்தாநமாயிருக்கையாலும், §ஸ்வதஸ்ஸர்வஞ்ஞராகிய சிவசத்திப் பிரசாரத்தினா லுண்டாகையாலுஞ், சிவமாத்ருகையென்று சொல்லப்படும்.

○ ப்ரசாரம்-விஸ்தரிக்கப்பட்டது, ¶நாதாத்மகம் - நாதஸ்வரூபம், † அர்த்தப்பிரதீதி - அர்த்தவிர்பத்தி, அர்த்தஞானம், § ஸ்வதஸ்ஸர்வஞ்ஞர் - தானே சர்வஞ்ஞர்.

இதில் அகாராதி ஷோடச ஸ்வரத்திற்குப் பரதேவதை சிவனும், ககாராதி க்ஷகாராந்தா க்ஷரங்களுக்குப் பரதேவதைதேவியும். இவைக ளெட்டு வர்க்கமாகப் பிரிந்துள்ளவில் அகாராதி ஷோடச ஸ்வரத்துக்கு மதிதேவதை விநாயகன், ககாராதி க்ஷகாராந்தமாயிருக்கிற ஸப்தவாக்யத்திற்கும் ப்ராமியாதி சப்தமாதாக்களுந் தேவதை.

இவ்வர்ணங்கள் சர்வாநுக்ரஹராயிருக்கிற வீஸ்வரனுக்குக் கரணங்களாகலி னீஸ்வரனென்றுஞ் சொல்லப்படும். லோகமாத்ருகையா யிருக்கிற விவ்வர்ணங்களே ஞானசத்தியென் றறியப்படும். அவ் ஞானசத்தியிற்முனே § வாங்மயமாயிருக்கிற † சத்தஜாலமுஞ் சராசராத்மகமா யிருக்கிற ‡ வர்த்தஜாலமுங் கிரமத்திலுண்டாம். × இவ்வர்ணாத்மகமாயிருக்கிற சத்தியை யுபாதாநமாகக்கொண்டு சிவன் வேதாகமங்களை யநுக்ரஹம்பண்ணுவர்.

§ வாங்மயம்-வாக்குமயம், † சத்தஜாலம்-சத்தஸ்வரூபம், ‡ அர்த்தஜாலம்-அர்த்தஸ்வரூபம், × வர்ணாத்மகம் - வர்ணரூபம்.

முன்னே சிவன்மூர்த்தா, வாக்கிக்த்ரிய வர்ஜ்ஜிதர்என்று சொல்லப்பட்டார்; அவர்க்கிச்சாஸ்த்ரகாரண மெப்படிக்கூடும். கூடிப்பண்ணினுரெனின், அவரு மிவ்வர்த்தகத்தினுற் சகளராவரோவின்? அப்படி சகளராகவேண்டா! ஸ்வேச்சாசாமர்த்யபலத்தினுன் முன்விந்துவினின்றும் ¶ வர்ணுதியுற்பத்தியைப் பண்ணினதுபோற் சாஸ்த்ர ரசனையுங்கூடும். எப்படியெனில்? சம்ஞாவல்லபரான பரிபக்குவமல விஞ்ஞானகலர்க்கு ‡ கசரீரியாகஞானப்ரதாநம் பண்ணினதுகொண்டு சகளராவரோ! ஆகார். ஆயின் சாஸ்த்ரங்களிற் சம்ப்ரதாய பரம்பரை யெவ்வாறுவந்த தெனின் அதைதெல்லாந் தோன்றச்சொல்லுவோம்.

¶ வர்ணாதி-அக்ஷராதி, ‡ அசரீரி-சரீரமில்லாதவர்.

சிவனுக்குச் சர்வாரம்பமு மான்மாக்களின் பொருட்டாகலின் ஸ்வேச்சையினாற் பூரணமூர்த்தியாயிருக்கிறவர் பஞ்சமந்திரமூர்த்திமானாவர். அவையாவன? ஈசானஞ்சிரசாகவும், தற்புருடம் வக்த்ரமாகவும், அகோரமிதயமாகவும், வாமதேவங் குஹ்யமாகவுஞ், சத்தியோசாதம் மூர்த்தியாகவுஞ், சர்வஞ்ஞத்வாதி யிருதயாதி யாறு மங்கமாகவுங் கொள்வர்.

ஆயினிவ்வர்த்தத்தினா லான்மாக்கள் கலாசஹிதரான போதுசகளரானதுபோல் சிவனுஞ் சகளராவரோவெனின்? ஆகார். ஆன்மாக்க டேகம்போற் சர்மாஸ்திமுதலிய தேகதாதுக்களில்லையாகலி னகளரே! ஆன்மாக்களின் த்யான பூஜாநிமித்தமாகவுஞ் சாஸ்த்ர *வக்த்ருத்வ நிமித்தமாகவும் பராயாதி பஞ்சசத்திஸ்வரூபமாகிய வீசானாதிபஞ்சமந்த்ர தநுமானாகையால், வஸ்துத அகளராயிருந்து முபசாரமாகச் சகளரென்று சொல்லப்பட்டு வேதங்களையுங் காமிகாதியாகமங்களையு மநுஷ்டுப்ச்சந்தசாக வநேககோடி சங்கியையாகப்பண்ணி விஞ்ஞானகலரில்பக்குவமலரைத் தமதுசக்திபரிசத்தினான் ஞானக்ரியாசத்திகளை §நிராவர்ணமாகப் பிரகாசிக்கப்பண்ணி, அவர்களிற்ப்ரணவாதிசிவர்கள் பதின்மருக்கு மேகருத்ராதிகள் பதினெண்மருக்குங் காமிகாதி வாதுளாந்தமான விருபத்தெட்டாகமத்தையு மொவ்வொருவர்க் கொவ்வோ ராகமமாகப் பஞ்சமுகத்தினாலு மநுக்ரகம்பண்ணினாராகலின்; வேதசிவாகமங்கள் பரமாப்த சிவ ‡ப்ரணீதமாகையாற் ப்ரமாணம். இந்த சத்தஜாலத்தை யிந்தசாத்திரமூலத்திலே விளங்கச்சொல்லாதபடியால் இதற்குச்சம்மதி ஆகமத்திற் காட்டுகிறோம்.

* வக்த்ருத்வம்-சொல்லுகிற, § நிராவர்ணம்-தடையில்லாமல் ‡ ப்ரணீதம்-சொல்லப்பட்டது.

* तदुक्तं वासिष्ठे — इक्ष्वाकुनाथदेवा
त्ता ज्ञानमात्रं प्रवर्तिते । उक्त्वोक्तं तदनुयुक्तं
सर्वाभिप्रायविमोहकः । वाभिप्राया नवे
क्षस्य शक्तिस्वरूपनिस्पृहता ॥ [illegible]
[illegible] तथावश्रित्वा [illegible] । प्रवर्तकं स्वशिव
त्त्वं वर्तत्रानन्दघनस्य च । नादस्य विन्दो
प्रवृत्ति स्वभावानां निस्पृत्तिस्पृहः ॥ स्वभावस्त
वारं परमेणं शिवज्ञानानन्दप्रकाशः । कथं त
त्त्वस्यान्यत्त्वं इन्द्रियेण सहमहाशक्तिभिः ॥ वेदना
स्त्र क्रियाज्ञानयोः स्वायनं स्थितिभव च । मनोत्क
स्थावरोपेन प्रवृत्तिनः परमेश्वर ॥ श्रु
द्धप्रवृत्तपरं परा शक्तिवर्णरूपमध्यः । तत्त्व
मन्त्रक्षमावरणं परायणं तजस्ततः ॥ अना
दिस्थितिसंहारे कारणं परमेश्वरः । स्वस्था
नादिविज्ञातना इन्द्रप्रहकारः परः ॥ तत स्व
[illegible] शिवशक्त्या [illegible] । शिवे
[illegible] सर्वेषां [illegible] ॥ [illegible]
[illegible] कारणं [illegible] ॥ त
[illegible]
[illegible] । प्रवृत्तं [illegible] कारण
[illegible] ॥ [illegible]

ஹ: । ஸர்வதத்த்வோர்த்வ ஸம்வ்யாப்தா ஜ்யோதிஷாம் ப
ரமேஶ்வரீ ॥ ஶிவேச்சா க்ஷோபிதா ஶக்திஸ்ஸ்ருஷ்ட்யு
ந்முகரூபிகா । பராசக்தி பராகாரா ப்ரக்ருத்யம்ஶ ஸமுத்
த்த்தா: ॥ வாமா ஜ்யேஷ்டா ததா ரௌத்ரீ ஸ்ருஷ்ட்யாதி நாமபி:
ர்த்ஸம்ஜ்ஞிதா । வாமைவோத்பவஜ்யேஷ்டா ரௌத்ரீ ஸம்
ஹாரவிசேஷிதா ॥ ஸாமாயா பரமேசாநா ஜயா
த்யா: பரிகீர்த்திதா: । ஜயா ச விஜயா சைவ அஜிதா
அபராஜிதா ॥ நிவ்ருத்திஶ்ச ப்ரதிஷ்டா ச வித்யா ஶாந்தி
ஸ்ததைவ ச । இந்திகா தீபிகா சைவ ரோசிகா மோ
சிகா பரா: । வ்யோமரூபா வ்யநந்தா ச அநாதா
நாஶ்ரிதா ததா ॥ ஸூக்ஷ்மாத்யஷ்டகம் ஸர்வம் ஶிவாத்
வம் மஹேஶ்வரம் । தாதாத்ம்யேந ஸமஸ்தாநாம் ஶக்திம்ப்ர
ஷண்ணாம்ஸம்ஸக்தி: ॥ ஶிரஸ்யாஸாம் ஸ்திதா ரௌத்ரீ
ஊர்த்வாதா ப்ரகீர்த்திதா: । கம்டிகாபாஹு ஸம்ஸ்ருஷ்டா
ஜ்யேஷ்டா ஏவோத்பவஸ்திதா ॥ ககாரவர்ண விக்ரு
த: குமாரம் ப்ருத்தமிஜா: । வர்ணத்ஷீதீயா
ஸர்வாத்மநா ஸ்திதா ச ॥ ஶேஷாணாம் ஸ
க்ஷணம் ப்ரோக்தம் யதா விஸ்தார ஹீநகா । தஸ்ய ஶ
க்திஸ்ரியாஹீநா பத்ருயா உபஸேவித: । ஸர்வா ந
ஷ்டாதிகாஜ்ஞேயா ஸர்வபூதாஸம்ஹாரிணீ ॥ சை

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌤𑍁 [illegible] 𑌨𑌾𑌭𑍇𑌯𑍋 [illegible]
[illegible] । 𑌤𑍇𑌨𑍈𑌵 [illegible]
[illegible]
[illegible]
[illegible] 𑌕𑌾𑌯𑌂 [illegible]
[illegible] ‖ 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨 [illegible]
𑌨𑌾 । [illegible] 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌕𑍃𑌤𑌕𑌾 [illegible]
[illegible] ‖ 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑍍𑌵𑌰𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 [illegible]
[illegible] । [illegible]
[illegible] ‖ [illegible]
[illegible] । [illegible]
𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍁 [illegible] ‖ [illegible]
[illegible] । [illegible]
[illegible] 𑌨𑌾𑌯𑌕𑌃 ‖ [illegible]
[illegible] । [illegible]
[illegible] ‖
𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿 [illegible] ।
[illegible]
[illegible] ‖ 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌤𑍁 [illegible]
[illegible] । [illegible]
[illegible] ‖ [illegible]

ஸிம்ஹீ ப்ரயவிவர்ஜிதம் | நஶாஸ்த்ரகாரணே ஶாஸ்த்ரஸகாமா

ஷர்வஸ்த்ரஸ்வச || கஶ்சித் ஸ்யாவி தேவஸ்ய ஸே

ஷா ஸாஶ்ஷர்த்ய யொமதம் | வணர்ஹிரசநாஸவரா

ஸாஹவேத்த்ரகாயர்வகு || கிஞ்சவதேஶ ஜாத்ர

ஜேவஸகமம் கிமஸப்ரஹம் | ஸாகல்யாத் யதாத

ஸ்ய தஸ் ப்ரவக்ஷ்யாமி ஸாப்ரதஷ் || ஸவர்ணம்

ஹோநாஷர்ம் யஸிஜாவச்சணர்தநம் ப்ரஹோம்

ஸாவச்சணர் வஞ்சுஹிஸ்தேர்வ வர்ஶவோரநா

க்ஷிமிகேம் | ஶம்ஶாநஸஹிதே ஶர்மதேத்ரம் ஸாத

நம் வரஶேஷிநம் || ஶம்ஶாந ஶச்ஷர் வம் வ

க்த்ரவொரஹாஜ்ஞாஶ மம் ஷாகஷ் | ஸஶேர்ர ஶச்

க்ரிஸ்சேவாயம் ஸகமம் வஶிவம்யதே || ஸாகல்ய

ஞாஶர்தஸ்ய கஸ்நீயம் யதாத்நம் | நாந்யதா

ஸ்யாசர்நம் யஸாச்ஷர்ஸ்யாஷ்விவர்ஜநஷ் || நசஶா

ஸ்ப்ரணெத்ரஜ்ஞ ஜேநாயம் ஸகமஸ்யிதம் | ஸத்ரஷ்

நஸதரஶேவம் ஶம்ஸாஸ்யிவியாநணச்சு || ஸாம்

ஶம் ஸாஸ்ஶர்நாதேவ க்ரஜ்ஞா ஜ்ரகீ க்ரியமொ த்க

பாது | ஸஜாஶிவோவி ஹமவா ஞாஜசமச்சவதயா ம

தம் || கநஷ்ஷர் வம்ஷஸா தேத மிஶம் ஸஹம

கொஷிஹம் || ஶம்ஶேவம் வஶேஷஸ்ச ஸமேவர்ஸ்ச மிவே

[illegible]

ஆயின் சிவப்ரணீதமாகிய சாஸ்த்ரத்தானன்றிக் கபிலசாண்டில்யாதி மஹாருஷிகளினாற்பண்ணப்பட்ட சாஸ்த்ரங்களினால் ஞானசித்தியு மோக்ஷமுமில்லையோவெனின்? அவர்களெல்லாம் ப்ரகிருதிக்குக்கீழிருபத்துநான்கு தத்வமுஞ் சொன்னதேயொழியப் பிரகிருதிக்குமேலுள்ள தத்வம் பன்னிரண்டையும் * ஷட்த்ரிம்சத் தத்வாதீதமாகிய பரசிவத்தையுஞ் சொன்னதில்லையாகலின் சிவோக்தாகம ஸ்ரவணமனனாதிகளினாலேயேபரஞானசித்தியும் பரமோக்ஷமுமாம்.

* ஷட்திரிம்சத் - முப்பத்தாறு.

* [illegible]

இத்தன்மையான சிவாகமத்திற்கதிகாரி புராணவிதிகாசங்களுக்குப்போல ஸ்த்ரீசூத்ர த்விசபந்துக்களோ, சாதுர்

வர்ணத்தி லவர்களுக்குமோவெனின்? ப்ராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர சுத்த குலோத்பவா இதிவசநாத். என்பது § த்ரைவர்ணிகரு முபயகுலசுத்தருமாய் பரம்பரையாக ஸ்த்ரீகளும் புருஷரு ௱ மபேயபாகாதிரகிதருமாயிருக்கிற சூத்திரரிலும், இவ்வர்ணத்தி லவர்களிலுஞ் சத்திநிபாதமுடையராய் சிவதீக்ஷையுடையவர்க ளதிகாரிகள்.

§ த்ரைவர்ணிகர்-மூன்றுவர்ணத்தரர், ௱ அபேயபாகாதி-மதுமாம்சாதி.

இதற்குச்சம்மதி யெட்டாஞ் சூத்திரத்திற் றீக்ஷாப்ரகரணத்திற் கூறுவாம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஆகமத்தினது பகுப்பிலக்கண முணர்த்துகின்றார்.

ஆகமந்தான் - சத்தப்பிரமாணந்தான்,—அநாதியேயமலனாய - அநாதிமலமுத்தசிவனாகிய,—அறிநூல்-சர்வஞ்ஞனது சாத்திரம்,(அந்த ஆகமம் தந்திரகலையென்றும், மந்திரகலையென்றும், உபதேசகலையென்று மூன்றுவிதமாம்.) அம்மூன்றினுள்,—தந்திரம்-தந்திரகலையாவது, சரியாகிரியாபாதப் பகுப்பாதலால்,—நிறுதிமாறின்றிப்பேணல்-சத்தசாமர்த்யம் அர்த்தசாமர்த்யம் வத்துசாமர்த்யங்களால் பின்முன் னாகமாந்தரவிரோதமின்றிச் சரியா கிரியா க்ருத்யம் போதிப்பது.—மந்திரந்தான் - மந்திரகலையாவது, யோகபாதப் பகுப்பாதலால்,—மஞ்சிகளடக்கி - ஆசன மந்திர ஜபத்தோடு ப்ராணாயாமம் ப்ரத்தியாகாரந் தாரணை யிவைகளால் சித்தேந்த்ரியங்களை நிறுத்தி,—தெய்வம் வழிபடும் வாய்மையாகும் - சுத்தபஞ்சாக்ஷர

ஜப சிவத்தியான சிவசமாதி ஜீவன்முத்தசிவன் சிவசாட்சாத்காராங் காங்கி யோகங்களையுள்ள முறைமை போதிப்பதாகும்.—உபதேசந்தான் - உபதேசகலையாவது,—தனாதி யீறிலா தான்றன்மை யுணர்த்துவது-பசுபாச பதார்த்தங்களினதிலக்கணங்களோடு கூடத் தனதுற்பத்திநாசங்கள் காரண திலக்கணத்தைப் போதிப்பது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

௱-து. அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனருளிச்செய்த வேதாகமங்கள், கருமகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டமென மூவகைப்படும். அவற்றுள், கருமகாண்டம்பற்றிப் பின்னொடு முன் மாறுகோளின்றி அநுட்டித்தலை உயிரினோடுணர்வு தெரிவது தந்திரவுரையளவையெனப்படும்; உபாசனாகாண்டம்பற்றி மனாதிகளடக்கித் தெய்வம்வழிபடும் வாய்மையை உயிரினோடுணர்வு தெரிவது மந்திரவுரையளவையெனப்படும்; ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலுமுடிவுமில்லாத இறைவன் தன்னின்வேறல்லாத எண்குணமுடையனாதல் தன்னின்வேறாகிய பசுபாசங்களையுடையனாதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறும் உயிரினோடுணர்வு தெரிவது உபதேசவுரையளவையெனப்படுமென்பதாம்.

வேதமும் ஆகமமெனப்படுமென்பது சீகண்டபாடியத்துள்ளுங்காண்க. ஆத்தவாக்கியமென்பதுணர்த்துதற்கு அநாதியேயமலனாயவறிவனென்றார்.

அறிவனூலென் புழி அறுவதுசெய்யுட்கிழமைக்கண்வந்தது.

இவ்வாறன்றி, பதிபசுபாசங்களுக்குப் பிரமாணமுமிலக்கணமும் பின்முன் மாறுகோளின்றிப் பாதகாத்துக்கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது தந்திரவுரையெனவும், மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையெனப்படுஞ் சாதநமாகிய வேண்டுஞ்செய்திமுறைமைகளைக் கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது மந்திரவுரையெனவும், தனுதியீறிலாதான்றன்மையுணர்த்துதலெனப்படும் நிட்டையினியல்புகூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது உபதேசவுரையெனவும், இவ்வாறு ஞானகாண்டமொன்றனையே மூவகைப்படுத்துரைப்பாருமுளர். அவர்க்கு மற்றையுபாசனகாண்டமுங் கன்மகாண்டமும் பிரமாணத்துளகப்படாமையறிக.

இனித்தார்க்கிகர்முதலியோர் குடம்படமுதலிய உலகச்சொற்கள்பற்றி அவ்வப்பொருள்களையுணர்தலும் உரையளவையென்பர். அவை, காட்சியநுமானங்களினடங்கிடாப்பொருளைக் காட்டுவனவன்மையின், மா மரத்தைக் காட்டல்போலும் இயல்பேதுபற்றியறிவதாகிய அநுமான விசேடமாவனவன்றி உரையளவையாதற்கேலாமையறிக.

சொல்லானறிந்தேன் என்றனுபவநிகழ்தலின் அது வேறளவையாவதன்றி அநுமானத்துளடங்காதென்பார்க்கு, குளிரின்மைபனியின்மை முதலியன அநுபலத்தியாலறிந்தேனென்று அநுடவநிகழ்தலின், இன்னோரன்னவற்றை வேறு பிரமாணமென்னுது காட்சிமுதலியவற்றுளடக்குதல் பொருந்தாதாய் முடியுமென்றொழிக.

இதனானே உரையளவை மூன்றென் றவற்றதியல்புகூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

---o---

காண்டல்வாயில் என்றெடுத்த திருவிருத்தத்தில் தன்பொருட்டாமநுமானம் பிறர்பொருட்டா மநுமானமென்ற பக்கத்துக்கு, பக்கமூன்று மூன்றுபக்கம் ஏதுமூன்று புகையால் போதுனாற்றம் என்ற ஐந்து திருவிருத்தத்தளவும் வ்யாக்யாநம் வந்துமுடிந்து, ஆகமப்பிரகார மூன்றுவகையா யிருக்குமென்ற தெப்படியென்ன மேலருளிச்செய்கிறார்.

அநாதியே யமலனாய வறிவனூ லாகமந்தான் - ஆகமமானது அநாதியே நின்மலனாயிருக்கிற சர்வஞ்ஞனாலே சொல்லப்பட்டசாத்திரம்,—பினுநிமா நின்றிப்பேணல் தந்திரம் - முன்னொடுபின் மலைவற விதனை யாராய்ந்துபார்த்துச் சொல்லுவது தந்திரகலையாம்,— மந்திரங்கள் மநாதிகளடக்கித்தெய்வம் வழி-டும் வாய்மையாகும் - மந்திரகலையாவது மனமுதலாகிய கரணங்களையடக்கி யவரவர்க்குவேண்டின தெய்வங்களை வழிபடுகிற வுண்மையாம்,—தனாதியீ றிலாதான்றன்மை புணர்த்துக லுபதேசந்தான் - தனக்கொரு முதல்நடுவிறுதி மூன்றுமில்லாத பரமேஸ்வரன் உண்மையை யறிவிக்கிறவிது உபதேசகலையாம்.

இதனாற்சொல்லியது சாத்திரங்களை முன்னொடுபின் மலைவறக் கொள்ளுகிறது தந்திரகலையாமென்றும், கரணங்களுடைய வ்யாபாரங்களை யடக்கி யவரவர் தங்களுக்குவேண்டின தெய்வங்களை யந்தந்த மந்திரங்களினாலே வழிபடுகிறது மந்திரகலையாமென்றும், தனக்கு முதலு முடிவுமில்லாத பரமேஸ்வரனுடைய சிவஞானத்தை பக்குவான்மாக்களுக்குப் போதிப்பிக்கிறது உபதேசகலையா மென்னுமுறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

ஆகமம் - உரையளவையாவன?—அநாதியே யமலனாய வறிவனாருரன் - அநாதிமுத்த சித்தருவாகிய முதல்வன் அருளிச்செய்த வேதாகமங்களா மவை கருமகாண்ட முபாசனாகாண்ட ஞானகாண்டமென மூவகைப்படும்,—பிறநிமாறின்றிப்பேணல் - அவற்றுட் கருமகாண்டம்பற்றி பின்னோடுமுன் மாறுகோளின்றி யநுட்டித்தலே, யுயிரினோ டுணர்வுதெரிவது,—தந்திரம் - தந்திரவுரையளவை யெனப்படும்,—மனநிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை - உபாசனாகாண்டம்பற்றி மனநிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை, யுயிரினோ டுணர்வு தெரிவது,—மந்திரங்களாகும் - மந்திர வுரையளவை யெனப்படும்,—தனாதி யீறிலாதான்-ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலு முடிவுமிலாத விறைவன்,—தன்மையுணர்த்துதல் - தன்னின் வேறல்லாத வெண்குணமுடையனாதல் தன்னின்வேறாகிய பசுபாசங்களையுடையனாதன் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறு முயிரினோ டுணர்வுதெரிவது,—உபதேசந்தான் - உபதேச வுரையளவையெனப்படு மென்பதாம்.

இதனானே வுரையளவை மூன்றென்றவற்ற தியல்புகூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் காண்டன்முதலிய வளவைப்பிரமாணங்களைக் கூறி, மேற் பக்கப்போலி முதலியவற்றைத் தொகுத் துணர்த்துகிறார்.

ஈண்டுப்பக்கப் போலிநான் கேதுப்போலி யொருமூன்றும், வேண்டுமெழுமூன் றாகும்விளங் குவமைப்போலி யீரொன்பான், காண்டுந்தோல்வித் தானமிரண் டிருபத்திரண்டாங் கருதிலிவை, யாண்டுமொழிவரவையெல்லா மளக்கிலறுபத் தைந்தாகும். (கச)

(இ-ள்.) ஈண்டு பக்கப் போலி நான்கு — இவ்விடத் தநுமானம் ப்ரயோகிக்குமிடத்துப் பட்சாபாச நாலாயிருக்கும்.

ஏதுப்போலி யொரு மூன்றும் — ஏதுதுடண மூன்று யிருக்கும்.

வேண்டுமெழு மூன்றாகும் — அசித்தன்முதலிய பகுதியை வகுத்தறியுமிடத் திருபத்தொரு பேதப்படும்.

விளங்கு முவமைப்போலி யீரொன்பான் காண்டும் — ஆன்மாக்களுக்கு விளங்கப்பண்ணுந் திருட்டாந் தாபாசம் பதினெட்டுப் பேதப்படும்

தோல்வித்தான மிரண்டு — செப்புவமு வினுவமுவால்வரு நிக்ரஹத் தானமிரண்டாம்.

அஃதாவது? அப்பிரதிபத்தியெனவும் விப்பிரதிபத்தியெனவும் பெறும்.

இருபத்திரண்டாங் கருதி லிவை — இவைக ளிரண்டினை பிரித்தறியுமிடத்துப் ப்ரதிஞ்ஞையானி முதலிய பதின்மூன்றும், அநநுபாடன்முதலிய வொன்பதும், ஆகவிருபத்திரண்டாம்

ஆன்டு மொழி வர் — இவையிற்றின் மேலும் வாதத்தில் வாராதது, அத்தாந்தர முதலிய வாறுண்டென்றும் சொல்லுவார்கள்

அவை யெல்லா மளக்கிலறு பத்தைந்தாகும். — அவைகளின் பகுதியை விசாரித் தறியுமிடத் தாகவறுபத்தைந்தாம். இக்குற்றம் வாராமற் ப்ரயோகிப்பதே நல்ல ஏது. எ - று.

போலி அறுபத்தைந்தாவன:—பட்சாபாசம் - ச, ஏதுப்போலி - ௨ச, உவமைப்போலி - ௧அ, நிக்ரஹத்தானம் - ௨௨, ஆகவறுபத்தைந்தையு மறிக.

ஆபாச மென்பது வடமொழி.

"ஒப்பில்போலியு மப்பொருட்டாகும்" என்றார் - தொல்காப்பியனார். இவையிற்றின் வ்யாத்தியை யறியுமிடத்துப் பெயருமுதாரணமும் வருமாறு:—

பட்சாபாச நான்காவன?

பட்சாபாசம்	௧	ப்ரதிஞ்ஞாபாசம்	௩
அநுமானுபாசம்	௨	வசனுபாசம்	௪

இதற்கு முறையானே - உ-ம்.

பட்சாபாசமாவது - அநுஷ்ணம்வன்னி, ஈதநுமானம். எ - து. பட்சமாயுள்ள வக்நியிடத்துசூடில்லாமை யாபாசமாகையா லறிக. (௧)

அநுமானுபாசமாவது-அநித்தியம் சத்தம் கண்ணுற்காணப்படுகையினாலே யென்கிறவநுமானம். (௨)

ப்ரதிஞ்ஞாபாசமாவது-சுத்தியிலிரசிதமென்னுமறிவு (௩)

வசனுபாசமாவது - ப்ராம்மணனாலே சுராபாகம்பண்ணப்பட்டது த்ரவத் திரவியமாகையாலே பால்போலறிவது. (ச)

பௌவியமென்றும்பெயர் இதற்குறைவு

ஆகப் பட்சாபாச ஙாலும் வந்தவாறுகாண்க.

இதனை

அப்பிரசித்தி விசேடணம்	க	அப்ரசித்தோபயம்	ங
அப்பிரசித்தி விசேஷியம்	உ	அப்ரசித்தசம்பந்தம்	ச

எனக்கூறுவாருமுளர்

ஏதுப்போலி மூன்றாவன?

அசித்தன் விருத்தன் அநைகாந்திகன் - ங.

இதில் அசித்தனாவது - நிச்சயிக்கப்படாத பட்சவிருத்தியையுடையது. (க)

விருத்தனாவது பட்சத்திலும் விபட்சத்திலு முடைத்தாயிருக்கை. (உ)

அநைகாந்திகனாவது பட்சத்திரயத்திலும் விருத்தியிருத்தல். (ங)

இதிலசித்தபேதம் பன்னிரண்டாவன?

சொரூபாசித்தன்	க	ஆச்ரய ஏகதேசாசித்தன்	எ
வ்யாத்திகரணாசித்தன்	உ	வ்யாத்தவிசேஷ்யாசித்தன்	அ
விசேஷ்யாசித்தன்	ங	வ்யாத்த விசேஷணாசித்தன்	கூ
விசேஷணாசித்தன்	ச	சந்தேகாசித்தன்	க0
பாகாசித்தன்	ரு	சந்திக்தவிசேஷ்யாசித்தன்	கக
ஆச்ரயாசித்தன்	சு	சந்திக்தவிசேஷணாசித்தன்	கஉ

ஆக அசித்தபேதம் - கஉ.

விருத்தபேத மிரண்டாவன?

பட்சவிபட்ச வ்யாபகவிருத்தன் க	பட்சவிபட்ச ஏகதேசவிருத்தன் உ

ஆ விருத்தன் - உ.

அநைகாந்திகபேதமேழாவன?

பட்சத்திரய வியாபகவிருத்தி க	பட்சவிபட்ச வ்யாபகசபட்ச ஏகதேசவிருத்தி ௪
பட்சவ்யாபக சபட்சவிபட்ச ஏகதேசவிருத்தி உ	பட்சத்திரய ஏகதேச விருத்தி ரு
பட்சசபட்ச வ்யாபகவிபட்ச ஏகதேசவிருத்தி ங	பட்சசபட்சவேகதேசவிருத்தி விபட்சவ்யாபகன் ௬
	பட்சவிபட்சவேகதேச விருத்தி சபட்சவ்யாபகன் எ

ஆ அநைகாந்திகன் - எ.

ஆ ஏதப்போலி - உக.

இவ்விமுறையானே யிதற்குகாரணம்:—

அசித்தபேதம் பன்னிரண்டும் வருமாறு:—

சொரூபாசித்தனாவது-சத்தமநித்தியம் காணப்படுகையாலே யநித்தியத்தைச் சாத்தியமாயிருக்கிற சத்தத்திலே காணப்படுகையென்கிற வேதுசொரூபமாகவில்லை, சத்தஞ்சிரவணமாகையாலே; இதுமுந்திய சொரூப சித்தனெனவறிக. (க)

வ்யாத்திகரண சித்தனாவது - அநித்தியம் சத்தம் படம் பண்ணுகையாலே; இந்தவேது சத்தமென்கிறபட்சத்துக்குப் பின்னமாயிருக்கிற வாதாரத்தையுடைய படத்திலே யிருக்கையினாலெனவறிக. (உ)

விசேஷியாசித்தனுவது - சத்தமநித்தியம் சாமாந்யத்தையு முடைத்தாய்க் காணப்படுகையினுலே; இந்தவேதுவிலே விசேஷியங்காணப்படுகை யசித்தமாகையினு லெனவறிக (௩)

விசேஷணு ,சித்தனுவது - சத்தம் அநித்,தியம் காணப்பட்டுச் சாமாந்யத்தை யுடைத்தாகையினுலே; இந்தவேதுவிலே விசேஷணங் காணப்படுகை யசித்தமாகையினு லெனவறிக. (௪)

பாகாசித்தனுவது - சத்தம் அநித்தியம் ப்ரயத்னத்துககுப் பின்புண்டாகையினுலே; இந்தவேதுவிலே யரலவாதிசத்தங்களுக்கு ஈஸ்வரப்பிரயத்னம் பூர்வத்துவமுண்டாயிருக்கையினும் மானுடப் பிரயத்தனத்தாலே யுண்டாயிருக்கிற தீவிரத்துவ மந்தரத்துவ முதலாயிருக்கிற தந்ததாலோட்டங்களின் வ்யாபாரத்திலுலே ஜந்யத்துவ மில்லாதபடியா லெனவறிக. (௫)

ஆச்ரயா சித்தனுவது - தனக்குமாறுய்நின்ற வாதிகருத்தறிய வேதுவுக்குப் பொருந்திய தன்மையில்லையாகிய வேதுவைக்காட்டல். அஃதாவது, சாங்கியன் - ப்ரகிருதியுண்டு, விசுவம்பரிணுமியாகையினுலே ; இந்தவேதுவிலே ஆச்ரயமாயிருக்கிற ப்ரதானந் தார்க்கிகனுக் கில்லாதபடியினுலெனவறிக. (௬)

ஆச்ரய வேகதேசாசித்தனுவது - ப்ரதானமு மான்மாவுமீசுரனுநித்தியம், ஒருவராற் பண்ணப்படாதிருக்கையினுலே ; இந்தவேதுவிலே பட்சமாயிருக்கிற ப்ரதானம் ஜீவனீஸ்வரனிவர்களுக்குள்ளே ப்ரதான மசித்தமாகையினு லெனவறிக.(௭)

வ்யாத்தசித்த விசேஷியாசித்தனுவது - சத்தம் அநித்தியம் பண்ணப்பட்டுச் சாமாந்யவத்தாகையினுலே; இந்தவே

துவிலே சாமாந்யவத்தென்கிற விசேஷியம் வ்யர்த்தமாகையி ஞலெனவறிக. (அ)

வ்யாத்தவிசேஷண சித்தனுவது - இந்தப்பட்சத்திலே யிந்தவேதுவை முன்பின்னுகச் சொல்லுகை. இந்தவிரண்ட சித்தனு மீமாஞ்சகன்மதத்திற் சொல்லுகிறதெனவறிக. (௯)

சந்தேகாசித்தனுவது - தான்கூறுகிறவேது ஐயமாய்நிற்க வு மப்பொருளைச் சாதித்தல். அஃதாவது-ஆவியோ பனியோ தோன்ருநின்றதென் றையமுருநின்றவிடத்து, அதுபுகையென் றறுதியிட்டு அவ்விடத்து நெருப்புண்டென்று கூறுதலெனவறிக. (௧0)

சந்தித்தவிசேஷியா சித்தனுவது - கபிலரிப்பொழுது ராகத்வேஷாதியுடனே கூடினவர்; புருடதத்வத்தோடு கூடினதத்வஞான மில்லாத புருடனுகையாலே எனவறிக. (௧௧)

சந்தித்த விசேஷணசித்தனுவது - கபிலரிப்பொழுதிச்சாதியுடனே கூடினவர், தத்வஞானமில்லாத புருடனுகையினுலே; இந்தவேதுவிலு மிதற்குமுன்சொன்ன வேதுவிலும் புருடதத்வத்திற்கு விசேஷியமாயும் விசேஷணமாயு மிருக்கிற தத்வஞானமில்லாமையென்கிற வேது. இப்பொழு துண்டாகாதேயிருக்கிற தத்வஞானத்தை யுடையவனென்கிறதும், எப்பொழுதுந் தத்வஞான மில்லாதவனென்கிறதுஞ் சந்தேகமாயிருக்கையினுலே; இரண்டினுலும் பெற்ற பெயரெனவறிக. (௧௨)

ஏதுப்போலியில் அசித்தபேதம்—௧௨, ம் முற்றிற்று.

இனிவிருத்தபேதம் இரண்டுவருமாறு:—

பட்ச விபட்ச வ்யாபக விருத்தனுவது? சத்தம் நித்தியம் காரியமாகையினுலே; இந்தக்காரியத்துவ மென்கிறவேது நித்யமென்கிற சாத்தியத்துக்கு விபரீதமாயிருக்கிற அநித்யத்

தோடு வ்யாத்தமாகையாலும், பட்சவிபட்ச வ்யாபகனாகை யாலு மென்றறிக. (க)

பட்சவிபட்ச ஏகதேசவிருத்தியென்கிற விருத்தனாவது? நித்தியஞ் சத்தம் ப்ரயத்நாந்தர மாகையினாலே; இந்தஹேது வாயு முதலான சத்தமாயிருக்கிறபட்ச ஏகதேசத்திலும், த்ர ணமாதியாயிருக்கிற விபட்ச ஏகதேசத்திலும், இல்லாதபடியி னாலென்றறிக. (உ)

ஏதுப்போலியில் விருத்தபேதம் உ-ம் முற்றிற்று.

அநைகாந்திகனேழும் வருமாறு:—

அநைகாந்திகன் - ஒன்று பலவாதல். எனவே அவ்விரண் டிற்கு நிற்றலின் அநைகாந்திகமாயிற்று.

பட்சத்திரயவ்யாபக அநைகாந்திகனாவது? சத்தம் அ நித்தியம் அறியப்படுகையினாலென்கிற ஹேது; பட்சமாயிருக்கி ற சத்தத்தினிடத்திலும், சபட்சமாயிருக்கிற கடத்திலும், வி பட்சமாயிருக்கிற ஆகாசத்திலும், இருக்கையினாலென்றறிக. (க)

பட்சவ்யாபக சபட்சவிபட்ச ஏகதேச விருத்தியென்கிற அநைகாந்திகனாவது? சத்தம் அநித்தியம், ப்ரத்யட்சமாகையி னாலே யென்கிறஹேது; ப்ரத்யட்சத்வம் பட்சமாயிருக்கிற சத்தமெல்லாத்தினு மிருக்கையினாலும், சபட்சவிபட்சங்களி லெங்கு மிராமலிருக்கையினாலு மென்றறிக. (உ)

பட்சசபட்சவ்யாபக விபட்ச ஏகவிருத்தியென்கிற அநை காந்திகனாவது? இஃது பசு, கொம்பை யுடைத்தாகையினாலென் கிற விந்தஹேது, பட்சமாயிருக்கிற விந்தப்பசுவினிடத்தும், ச பட்சமாயிருக்கிற பசுக்களெல்லாத்தினும், வ்யாபித்திருக்கையி னாலும்; விபட்ச ஏகதேசமாயிருக்கிற கோஜாதியி லிருக்கையி னாலு மென்றறிக. (௩)

பட்சவிபட்சவ்யாபக சபட்ச ஏகதேச விருத்தியென்கிற அனைகாந்திகனாவது? இதுகோவல்ல கொம்புடைத்தாகை யினாலே என்கிறவிதவேது, பக்கமாயிருக்கிற விதப்பசுவினி டத்திலும் பசுவாகாமலாகையினாலே, விபட்சமாயிருக்கிற வெல்லாப் பசுவினிடத்திலும் வ்யாபிக்கையினாலும்; சபட்ச ஏகதேசமாயிருக்கிற யானைமுதலானவைகளிடத்திலு மிருக்கையினா லெனவறிக. (ச)

பட்சத்திரய ஏகதேசவிருத்தியென்கிற அனைகாந்திகனாவது? பூமிநித்தியம், நாசம் ப்ரத்யட்சமாகக் காணுகையினாலே என்கிறவேது, பட்சமாயிருக்கிற பூமியி னேகதேசத்தினிடத்தினும், சபட்ச ஏகதேசமாயிருக்கிற விரண்டணுவாதியினிடத்திலும், விபட்ச ஏகதேசமாயிருக்கிற வான்மாவினிடத்திலும்; இருக்கையினா லெனவறிக. (ரு)

பட்சசபட்ச ஏகதேசவிருத்தி விபட்ச வ்யாபகமாவது? திக்கு காலமானது, இவைதிரவியம்; அமூர்த்தமாகையினா லென்கிறவேது. பட்ச ஏகதேசமாயிருக்கிற மனதினிடத்திலும், சபட்ச வேகதேசமாயிருக்கிற பூமியாதியிடத்திலு மிராமலிருக்கையினாலும், விபட்சமாயிருக்கிற வான்மா வாகாசத்திலே வ்யாபித்திருக்கையினாலு மெனவறிக. (சு)

பட்சவிபட்ச வேகதேசவிருத்தி சபட்சவ்யாபகனாகிய அனைகாந்திகனாவது? திக்குக் காலமானது திரவியமல்ல; மூர்த்தமாயிருக்கையினால். என்னவே, பட்ச வேகதேசமாயிருக்கிற மனதிலும் விபட்சவேகதேசமாயிருக்கிற வான்மாவினிடத்திலு மிருக்கையாலும்,சபட்சமாயிருக்கிற குணாதிகளையெல்லாம் வ்யாபித் திருக்கையினாலும், சபட்சமுதலிய விருத்தியுமிவைக

னில்வந்து வ்யாபிக்குமாகையினாலே அநைகாந்திகமென்ப் பெற்றது. (எ)

ஏதுப்போலியில் அநைகாந்திகன்—எ-ம், முற்றிற்று.

பௌட்கரத்திலே நதூடணமஞ்சென்றேதியிருக்கவிவ்வாசிரியர்மூன்றாகக்கூறியதென்னெனில்?விருத்தமப்பிரகரணம் சாத்ய சம்மதீதகாலா யெத்துவாபாசாதிகள்-க௫-ம், சூத்ரவிரோதத்தினாலும் எத்துவாபாச மூன்றுதானே. அஃதெப்படியெனில் ? சமானுதிதுல்லிய பல விகற்பத்தினாலே சற்பிரதிபட்சமெத்துவாபாச மாகாதபடியினாலும், பாதிதவிஷயன் விருத்திதனிலேஅந்தர்ப்பவிக்கையாலும்,இதனையிவ்வாசிரியர்சொல்லியதெனவறிக.

ஆகவேதுப்போலி - உக - முற்றிற்று.

மேல்திருட்டாந் தாபாசமாவது:—

திருட்டாந்தம் - ஏதுவுக்குஞ்சாத்தியத்துக்கும்வ்யாப்தியைக்ரகிக்குந்தலம்.

வ்யாத்திசமவேத நஸகுய்ய ஈதிருஷ்டாந்த மிதிரீயதே என்றார். வாதராச்யக்காரனார். இவ்விலக்கண மின்றியிலேதிருட்டாந்தம் போலத்தோன்றுமவைகளெல்லாந்திருட்டாந்தாபாசமெனப்பெறும்; அவைபதினெட்டாம். அவையாவன ?

சாத்தியவிகலன்	க	சாதன வ்யாவிருத்தன்	எ
சாதகவிகலன்	உ	சாத்தியாவ்யாவிருத்தன்	அ
உபயவிகலன்	௩	உபயவியாவிருத்தன்	௯
ஆச்ரியவீனன்	௪	ஆசிரயவிஹீனன்	௧0
அவ்வியாத்தியபிதானன்	௫	வ்யாவிருத்தியபிதானன்	௧௧
விபரீதவ்யாத்தியபிதானன்	௬	விபரீதவ்யாத்தியபிதானன்	௧௨

சந்தித்த சாத்தியன்	கங	சந்தித்த சாத்தியா வ்யாவி	
சந்தித்தசாதனன்	கச	ருத்தன்	கஎ
சந்தித்தவுபயன்	கரு	சந்தித்தசாதனு வ்யாவிருத்த	
சந்தித்தவாச்ரயன்	கசு	ன்	கஅ

ஆ சாத்யவிகலாதி - கஅ-ம், உத்தேச மெனவறிக.

மேலிலக்கணம் வருமாறு.

சாத்தியவிகலனென்னும் திருட்டாந் தாபாசமாவது? மனது அநித்தியம் மூர்த்தமாகையினுலென்கிற வேதுவிலே, பரமாணுவைப்போலென்கிற திருட்டாந்தம், அநித்யத்துவமென்கிற சாத்தியமில்லாதபடியினு லெனவறிக. (க)

சாதகவிகலனுவது? மனது அநித்தியமூர்த்தமாகையினுலே யென்கிறவேதுவுக்குக் கன்மம்போலவென்கிற திருட்டாந்தம், மூர்த்தத்துவமென்கிற சாதநமில்லையா மெனவறிக. (உ)

உபயவிகலனுவது? இந்தச்சாத்தியத்துக்கு மிந்தவேதுவுக்கு மாகாசம்போலென்கிற திருட்டாந்தத்தினுலே, சாத்தியமாயிருக்கிற அநித்தியமும், சாதநமாயிருக்கிற மூர்த்தத்துவமும் ஆக விரண்டுமல்லாமையா லெனவறிக. (ங)

ஆச்ரயஹீனனுவது? இந்தவேதுவுக்குத்தானே ஆகாசத்திற் பூப்போலவென்கிற திருட்டாந்தமாயிருக்கிற வாகாசபுட்பமில்லாதபடியினு லெனவறிக. (ச)

அவ்யாதித் யபிதானனுவது? இந்தவேதுவுக்குத்தானே கடம்போலென்கிற திருட்டாந்தத்தினுலே யாதொன்றுமூர்த்தம் அதுநித்தியம், கடம்போலென்கிற தலத்திலேயொழியப் புறத்தில் வ்யாத்திதோன்றுதபடியினு லெனவறிக. (ரு)

விபரீதவ்யாத்தி யபிதானனுவது - இந்தவேது சாத்தியங்களுக்கே யாதொன்றுமூர்த்தம் அது அநித்தியம்என்று வ்யா

த்திசொல்லாமல்,இதற்கு விபரீதம் யாதொன்று அநித்தியம் அதமூர்த்தம் என்று வ்யாத்திசொல்லுகையினாலெனவறிக. (௬)

சாதனாவ்யாவிருத்தனாவது - இந்த வேதசாத்தியங்களுக்குத்தானே யாதொன்று அநித்தியமல்ல அமூர்த்தமுமல்ல, பரமாணுவைப்போலவென்கிற திருட்டாந்தத்திலே சாதகமாயிருக்கிற மூர்த்தத்வம் வ்யாவிருத்தமாகாமல் அதிலேயிருக்கையினாலெனவறிக. (௭)

சாத்யா வ்யாவிருத்தனாவது - இந்தவேதசாத்தியங்களுக்கே கன்மவத்தென்கிற திருட்டாந்தத்திலே இப்படிக்கொத்த வெதிரேகவ்யாத்தியினாலே சாத்தியமாயிருக்கிற அநித்யத்வம் வ்யாவிருத்தமாகாமலிருக்கையினாலெனவறிக. (௮)

உபய வ்யாவிருத்தனாவது - இந்தவேத சாத்தியங்களுக்குக் கடாதியைப்போலவென்கிற திருட்டாந்தம் பொருந்துகையாலெனவறி. (௯)

ஆச்ரயவிஹீனமாவது-இந்தவேத சாத்தியங்களுக்கு ஆகாசத்திற் பூப்போலவென்கிற திருட்டாந்தம் பொருந்துகையாலெனவறிக. (௧௦)

வ்யாவிருத்தி யபிதானனாவது - ஆச்ரயம்போலவென்கிற வ்யாத்தியுண்டாகையா லெனவறிக. (௧௧)

விபரீத வ்யாத்தி யபிதானனாவது - இந்தவேத சாத்தியங்களுக்கே விபரீதவ்யாத்தியிலே ஆகாசவத்தென்கிற திருட்டாந்தம் பொருந்துதலா லெனவறிக. (௧௨)

சந்தித்த சாத்தியமாவது - இவன் மகாவிராஜாவாகப் போகிறான்,சோமவம்சோற்புதனாகையினாலே யிராஜ்யபாரத்துக்குக் கர்த்தனான விராஜபுத்திரனைப்போல. இந்தவேத இவனிராஜ்யபாரத்துக்குக் கர்த்தனாகப் போகிறானென்கிறசா

த்தியத்தோடேகூட வ்யாத்திக்குந் திருட்டாந்த நிச்சயித்து இராஜ்யபாரத்தை யுடையவனுகையா லெனவறிக. (சங)

சந்தித்தசாதகமாவது-இவன் அசர்வஞ்ஞன் அஃதெக்காரணத்தா லெனின், இராகத் வேஷாதிகளுடன் கூடினவனுகையாற் றெருவிற்போகிற புருடனைப்போல. இந்தவேதுவுக்குத் திருட்டாந்தமாயிருக்கிற தெருவிற் புருடனிச்சிதசாதனனுகையாலும்,சாத்தியமாயிருக்கிற விந்தப்புருடனிடத்திலே யசர்வஞ்ஞ லட்சணமுண்டோ வில்லையோவென்று சங்கித்த முறுதலா லிது திருட்டாந்தாபாச மெனவறிக. (கஎ)

சந்தித்தோபயனுவது - இவன் சுவர்க்கத்தை யடையப்போகிருன், முற்ஜநநத்திற் றேடப்பட்டிருக்கிற சற்கன்மபலத்தை யுடையவனுகையினுலே, தேவதத்தனைப்போல. இந்தத் திருட்டாந்தத்திலே யேதுவாயிருக்கிற முன்பார்ஜ்ஜித்த சுத்தகன்மத்வமுஞ் சாத்தியமாயிருக்கிற சுவர்க்காதித்வமும் சந்தித்தமாகையினு லெனவறிக. (கஅ)

சந்தித்தவாச்ரயமென்னுந் திருட்டாந் தாபாசமாவது-இவன் சர்வஞ்ஞனல்ல,அஃதெதக் காரணத்தாலெனில்,வெகுவகத்தாவா யிருக்கையினுலே ஜநிக்கப்போகிற தேவதத்தனைப்போல வென்கிற திருட்டாந்தமாயிருக்கிற தேவதத்தன் ஜநிக்கிறதிலே ப்ரமாணமில்லாதபடியா லெனவறிக. (கசு)

சந்தித்த சாத்தியா வ்யாவிருத்தனுவது - யாதொருவன் மகத்தாயிருக்கிற விராஜ்யம் பண்ணவில்லையவன் சோமவம்சோற்புதனுமல்ல, வேறேயொரு ராஜபுருடனைப்போலவென்கிற திருட்டாந்தத்திலே திருட்டாந்தமான விராஜபுத்திரனிடத்திலே சாத்யா வ்யாவிருத்தியமுண்டாய் சந்தேகமுண்டாகையினு லெனவறிக. (கஎ)

சந்தித்தசாதன வ்யாவிருத்தனுவது - யாதொருவன் ச ர்வக்கியன் அவனே ராகத்துவேஷமில்லாதவன், சகலசாத் திரக்கியனைப்போலவென்கிற திருட்டாந்தத்திலே யிருக்கிற சமஸ்த சாத்ரக்கியனுக்கு இராகாதியில்லாததிலே ப்ரமாணமி ல்லாதபடியா லெனவறிக. (கஅ)

இப்படித் திருட்டாந்தாபாசம் பதினெட்டு
ம் வந்தவாறுகாண்க.

மேற் றொகையானே நிக்கிரகத்தாநம்

அப்பிரதிபத்தியெனவும்

விப்பிரதிபத்தியெனவும்

இரண்டாம்

அப்பிரதிபத்தியாவது - வாதியானவன் முன்சொன்னது ம், ப்ரதிவாதியானவன் சொன்னது மறியாதிருத்தல்.

விப்பிரதிபத்தியாவது - வாதியானவன் முன்சொன்னவசநத்தையும், ப்ரதிவாதியானவன் சொன்னவசநத்தையும், உள்ளபடி யதனையறியாமல் விபரீதமாக வறிகை.

இந்தவிரண்டும் வகையானே யறியுமிடத்து, அப்பிரதிபத்தி-ப்ரதிஞ்ஞ ஆனிமுதலான பதின்மூன்றும், விப்பிரதிபத்தி-அநநுபாடன்முதலான வொன்பதும், ஆகநிக்கிரகத்தாந மிருபத்திரண்டாம்.

நிக்கிரகத்தாநமென்பது ஒருவராலுங் கண்டிக்கப்படே னென்னு மவன்மதத்தைப் பிறருற் கண்டிக்கப்படுகை நிக்கிரகத்தாநம். அவையாவன?

ப்ரதிஞ்ஞஆனி	க	ப்ரதிக்கியாவிரோதம்	௩
ப்ரதிக்கியாந்தம்	உ	ப்ரதிக்கியாசந்யாசம்	௪

ஏத்துவாந்தரம்	ரு	அஞ்ஞாதம்	கரு
அர்த்தாந்தரம்	சு	அப்பிரதிபை	கசு
நிரர்த்தகம்	எ	விக்ஷேபம்	கஎ
அவிக்கியாதார்த்தம்	அ	மதாநுக்ஞை	கஅ
அபார்த்தகம்	கூ	பரியநுயோச்சியாபேக்ஷணம்	ககூ
அப்பிராத்தகாலம்	க0		
நூனம்	கக	நிரநுயோச்சியாநுபேக்ஷணம்	உ0
அதிகம்	கஉ		
புனருத்தம்	கங	அபசித்தாந்தம்	உக
அநநுபாடன்	கச	ஏத்துவாபாசன்	உஉ

இவையிற்றுக் கிலக்கணம். வருமாறு:—

ப்ரதிஞ்ஞானியாவது - வாதிக்கையிலே வாதியானவன் சபக்கமுதலியவற்றைச் சொல்லி, யதனை முட்டச் சாதிக்கமாட்டாம லுடனே யதனைவிடுகை யெனவறிக. (க)

ப்ரதிக்கியாந்தமாவது - வாதியானவன் விசேஷியாமல் சொன்ன ப்ரதிக்கியாதிகளைப் ப்ரதிவாதியானவன் அதனைத் தூஷித்தளவில் அந்தப்பிரதிக்கியாதிகளைப் பின்பு விசேஷணத்துடனே கூட்டிச்சொல்லுகை யெனவறிக. (உ)

ப்ரதிக்கியா விரோதமாவது - யாதொருவன் பதவாக்கியங்களினாலே ஜகத்கத்தாவை யங்கீகரித்துப் பின்பந்த வீஸ்வரனைக் கர்த்தாவல்லவென்கை யெனவறிக. (ங)

ப்ரதிக்கியா சந்யாசமாவது - தான்சொன்ன ப்ரதிக்கியாதிகளை ப்ரதிவாதியானவ னிந்தித்துள்ள விளுவதனைச் சொல்லவில்லையென்கை யெனவறிக. (ச)

ஏத்துவாந்தரமாவது - வாதிசொன்ன சாத்தியாம்சமாயிருக்கிற வேதுமுதலியவற்றைப் பிரதிவாதியானவன் தூஷிக்கையி லவன் பின்னையுமொரு விசேஷணத்தோடே கூடத் தா

ன் முன்சொன்ன வேதுவை திடப்படுத்திச் சொல்லுகை யென வறிக. (௫)

அர்த்தாந்தரமாவது- ப்ரதிவாதி சொன்ன தூடணத்துக் குத் தானதற்கேற்ற வசனஞ் சொல்லாம லதற் குபயோகமில் லாத வார்த்தையை யவ்விடத்திற் சொல்லுகை யெனவறிக. ()

நிரர்த்தகமாவது-ப்ரதிவாதியானவன் ஒன்றுஞ் சொல்லா திருக்கையிற் றன் வீண்வார்த்தையைச் சொல்லுகை யெனவ றிக. (௭)

அவிக்கியாதார்த்தகமாவது-ப்ரதிவாதியானவன் ஒரு வது வை மூன்றுதரஞ் சொல்லுகையிலுஞ் சபையிலே யிருக்கிற பரீக்ஷித்துக்க ளறுவாதிக்கையினாலும், ப்ரதிவாதி யானவன் எனக்கிந்த வேது தெரியாதென்கை யெனவறிக. (௮)

அபார்த்தகமாவது - அந்வயத்தில் அர்த்தமாகாதிருக்கிற பதவாக்கியங்களைச் சொல்லுகை. அதற்கு - உ - ம். குண்ட மாத்திமதே சடாரிமான்விட பூபாம் என்கை யெனவறிக. (௯)

அப்பிராத்த காலமாவது - வாதம்பண்ணுமிடத்து வாதி யானவன் பஞ்சாவயவங்களை யடைவில் மாறிப் பிரயோகித்த லெனவறிக. (௧௦)

நூனமாவது-ஸ்வசித்தாந்தத்திற் கூறிய அவையவங்களை யறிந்து ப்ரயோகியாமல் மாறிக் குறைத்துப் பிரயோகித்த லெ னவறிக. (௧௧)

அதிகமாவது - ஏது முதலியவற்றுடனே கூட வுதாரண தூடணானுவாதங்களுக்கதிகத்தைப் பிரயோகிக்கையெனவறிக.

புனருத்தமாவது- சத்தத்தினாலேதான் அத்தியாகாரத்தி னாலே தான்சொன்ன வசநங்களைப் பிரயோசன மின்றியில் மீள வும தனையே சொல்லுகை யெனவறிக. (௧௩)

அநநுபாடணமாவது - வாதியானவன் சொன்னபொருள்களைச் சபையிலிருக்கிறவர்களுக்கு அநுவதித்த சத்தத்தை நானறியேனென்னாமல் சொல்லாதிருக்கை யெனவறிக. (கச)

அஞ்ஞாதமாவது - வாதியும் சபையிலுள்ளவர்களும் வாக்கியார்த்தத்தை யறியாதிருத்தலெனவறிக. (கரு)

அப்பிரதிபையாவது - வாதிசொன்னதற்குத் தானுமங்கீகரித் திருக்கையினாலு மதற் குத்தரஞ் சொல்லாதிருக்கை யெனவறிக. (கசா)

விக்ஷேபமாவது - வாதியானவ னொன்றைச் சொல்லத்தொடங்கி, யதனைமறந்து, வேறொரு வ்யாச்சியத்தையிட்டு அதைச்சொல்லாதிருக்கை யெனவறிக. (கஎ)

மதாநுக்ஞையாவது - வாதியானவன் தன்னுடையமதத்துக்குவருந் தூடணம் பரிகரியாமல், பிறமதத்துக்கு இட்டத்தைத் தூடணமாகச் சொல்லுகை யெனவறிக. (கஅ)

பரிபநூயோச்சியா பேக்ஷணமாவது - வாதம்பண்ணுவந்தவிடத்து அந்தவாதம் பிறனாலே நிக்கிரகிக்கப்படுகையினானும் நிக்கிரகிக்கப்பட்டோமென்று பரிபவமின்றி யிருக்கை தானெனவறிக. (ககூ)

நிரநுயோச்சியாநுயோகமாவது - நிக்கிரகத்தாற் ப்ராத்தனாகாதவனை நிக்கிரகஞ் செய்யவேணுமென்று நிக்கிரகிக்கிறது. ஏவப்படாதவனை யேவுதலெனவறிக. (உ0)

அபசித்தாந்தமாவது - ஒருசித்தாந்தஞ் சொல்லத்தொடங்கி யதற்கு விருத்தமாயிருக்கிற சித்தாந்தவசனஞ் சொல்லுகை யெனவறிக. (உக)

எத்துவாபாசனமாவது - அவாந்தர பேதங்களுடனேகூட அசித்தாதிகளான பஞ்சரூபப் பிரகாரமான யாதொருரூபங்க

ளாலே காணப்பட்டிருக்கிறதோ அவைகளந்தந்த ரூபங்களினு லேதானே யெனவறிக. (உஉ)

இப்படி நிக்கிரகத்தான மிருபத்திரண்டையு மறிக.

அளவைகாண்டலென்றதுமுதல் ஈண்டுப் பக்கப்போலியீ ருக வளவை பதினாலுக்குப் பிரமாணஞ் சித்ததந்திர மெனவ றிக.

அளவைப்பிரமாண முடிந்தது.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலநுமானப்ரமாணங்கள் வ்யாத்திபை நன்றாகவறிந் து நிர்த்தோஷமாக ப்ரயோகிக்குஞ் சாதநமானது சாத்திய சமர்த்தனத்திற் பரியாப்தமாம். யாதொருமார்க்கமேனும் வ் யாத்திபங்கம்வரு மநுமானத்தைக்கூறி லஃதே துவாபாசனும். இஃதநுமானத்திற்கு முதற்றூஷணமாகலின் பக்ஷஹேது. தி ருஷ்டாந்தங்களை யவிரோதமாக ப்ரயோகித்து வாதகதையி னும் பஞ்சாவயவ பௌர்வாபரிய விபர்யயவாதியான நிக்கிரக ஸ்தாநங்கள் வாராமற் கூறவேண்டும். ஆகையாற் பக்ஷாபா சாதிகளுக்குத் தொகையாகப் பௌஷ்கராநுசாரமாகத் தோ ஷங்களினது ஸ்வரூபங்கூறுகின்றது.

* தத்ரோக்தம் பௌஷ்கரே — வ்யாப்த்யாதியநுபாவ ஸ்ரீ ஜ்ஞாந ஸாத்யநம் ஸாத்யவிஷயே | பக்ஷாத்யம் தத்வ தோஷதோ யத்நேநாவிவர்ஜிதா || வ்யாப்தி ஹாநோ நஸாதநஸ்ய தூஷணம் ப்ரயுஜ்யதே.

ஈண்டு பக்கப்போலிநான்கு - [ஈண்டு-இவ்வடத்து] இவ் வநுமானத்திற் பக்ஷலக்ஷணம் சேஷமாக வில்லாமையிருந்து

மேகதேசத்திலுற் பக்ஷம்போற்காண்பித்துப் பரீக்ஷித்தளவிற் பக்ஷமல்லாமற்போம் பக்ஷாபாசநான்கு. [ஆபாசம் போல என்பது பரியாயநாமம்]

அவையாவன:—

ஓரிடத்திற் பக்ஷமில்லாமையினலே
ஓரிடத்திற் பக்ஷத்தன்மையில்லாமையினலே [வே
ஓரிடத்திற் பக்ஷம் பக்ஷத்தன்மை யிரண்டுமில்லாமையின
ஓரிடத்தி லிரண்டுமிருந்தும் வ்யாத்தியில்லாமையினலே.

இவற்றுள் பக்ஷமில்லாமைக் குதாரணம்.—ஆகாயத்தாமரை வாசனையுள்ளது, தாமரைத்தன்மையால் குளத்திலுண்டான தாமரைப்போல வென்பது. (க)

பக்ஷத்தன்மை யில்லாமைக்கு - உ-ம். ஆன்மாநித்தியன் அனுரூபமாகலினென்பது. (உ)

பக்ஷம் பக்ஷத்தன்மை யிரண்டுமில்லாமைக்கு-உ - ம். முயற்கோடு கந்தமுள்ளது, ப்ருதிவி விகாரமாகலினென்பது.(ந)

பக்ஷம் பக்ஷத்தன்மை யிரண்டுமிருந்தும் வ்யாத்தியில்லாமைக்கு - உ-ம். ப்ருதிவிநித்யம், கண்ணிற்கு விஷயமாகலினென்பது. (ச)

இந்நான்கு முபலக்ஷணம்.

இவ்வாறுவந்துழி வந்துழி யுய்த்துணர்க,—

ஏதுப்போலியொருமூன்றுப்வேண்டுமெழுமூன்றுகும்-எது. ஏதுலக்ஷணமில்லாதிருந்து மேதுப்போற்றோன்றி யேதுவல்லாமற்போ மேதுவாபாசஞவது, முன்னே அசித்தன் விருத்தன் அநைகாந்திகனென்று மூன்றுவிதமாய் மேலுமிவற்றிற் சிறுபேதமாய்க் காலாத்தியாபதிஷ்டன், ப்ரகரணசமனென் றிரண்டுங்கூடி யைந்துவிதமா யிவைக ளவாந்தரபேதங்களினு லிருபத்தொன்றும்.

அவைவருமாறு:—

ஆகாசத்தாமரை வாசனையுள்ளது, தாமரைத்தன்மையால், தடாகத்தாமரைபோல, இதற்குப் பக்ஷமாகிற வாகாயத்தாமரையில்லையாகலின் ப்ரதமமான வாச்ரயாசித்தன். (க)

கடமுதலானவை ப்ரமாணரூபங்களாகக் கூடும், அநித்தியத்தன்மையால். பாஞ்சராத்திரிமதத்திலான்மாவைப்போல என்றால் சர்வசம்மதமாயநித்தமாயிருக்கிற கடத்தினித்தியத்தன்மையேதுஸ்வரூபத்தினால் சித்தமாகலின் ஸ்வரூபாசித்தன். (உ)

சத்த மநித்தியம், கண்ணிற்குத்தெரியுங் குணமாகலின்; ரூபம்போல. இந்த கண்ணிற்குத் தெரியுமென்கிற விசேஷணமேதுவிலசித்தமாகலின் விசேஷணாசித்தன். (ங)

சத்தம் அநித்தியம், அறிவிற்கு விஷயமான திரவியமாகலின்; கடம்போல. இந்த விசேஷியமாயிருக்கிற திரவியத்தன்மை யசித்தமாகலின் விசேஷ்யாசித்தன். (ச)

மேலும் விசேஷண விசேஷ்யாதி யென்கிற வாதிபத சத்தியினாலும், அவ்வவ்வுரூபமென்கிற பதஸ்வாரஸ்பத்தினாலும், இவ்விருத்தத்தி னிருபத்தொன்றென்று கணக்காயிருக்கையினாலும், விருத்தன் அநைகாந்திக னென்துநீக்கி யசித்தன்பதினாறுக்கு முதற்சொன்ன நான்குநீங்கலாக நின்றபனிரண்டும் வருமாறு கூறுவாம்:—

கட மநித்தியம் குணமாயு மிந்திரியங்களுக்கு விஷயமாகாமலு மிருத்தலின், விசேஷணமாயிருக்கிற குணத்தன்மையும் விசேஷ்யமாயிருக்கிற விந்திரியவிஷயமாகாமையுஞ் சித்தமாகலி னிந்த துபயாசித்தன். (ரு)

சீவனுக்கேகமு மநித்தியம், காரியமாகலின், கடம்போல, இது பக்ஷமாகச்செய்யப்பட்டிருக்கிற ஜீவதேகங்களுள் ஜீ

னிடத்திற் காரியத்தன்மையேது அசித்தமாகலிற் பாகாசித்தன். (உ)

தேவதத்தன் பகுத்னமுள்ளவன், அதற்கேதுவாகிய வதிருஷ்டனுளனாகலின் யஞ்ஞதத்தன்போல, அதிருஷ்டமுளனென்கிற ஹேது நம்மா லறிபொணாதாகலி னிஃதேதுவஞ்ஞானாசித்தன். (ங)

இப்போ திவ்வாகாயத்திற் பரமாணு வொருக்காற் றிரவியத்தையுண்டாக்கும் பரமாணுவாகலின், கடத்தை யுண்டாக்குகிறபரமாணுப்போல ஆகாயமிடமாயிருக்கிற வேதுவுக் காச்ரயமாயிருக்கிற பரமாணுவிஷயமான ஞானமின்மையி னிஃ ததிக்ரனுஞ்ஞானாசித்தன். (ச)

எல்லாம்க்ஷணிக மசத்தாகலின்,நீர்க்குமிழிபோல;அசத்துக்கும் க்ஷணிகத்திற்கும் வியாத்தியையறிவிக்கிற பிரமாணமில்லாமையி னிஃதுவியாப்பியத்து வாசித்தான். (ரு)

கருப்பத்திலிருக்கிறவன் கறுத்தவன் மயித்திரைபிள்ளையாகலின முன்பிறந்த மயித்திரை பிள்ளைபோல கறுப்பைச்சாதிக்குங்காற் சாகாதி யாகார டரிணதிபேதமென்கிற வுபாதியுண்டாகலி னிஃ தௌபாதிக வியாப்பியத்து வாசித்தான். (சு)

யாகமுதலியவை சுவர்க்கசாதகங்களல்ல கிரியையாகலின்:ஹீன க்ரியைபோல இதற்குச் சாத்திய மாகமத்தினாற் பாதிதமாகலி னிஃ தாகம பாதித விஷயசாத்தியாசித்தன் (எ)

கவ்யமென்பது பசுவுக்குச்சமானமல்ல வஸ்துவாகலின், இதற்குச் சாத்தியமுவமானத்தினாற் பாதிதமாகலி னிஃதுவமான பாதிதவிஷயசாத்தியாசித்தன். (அ)

நூறுவருடஞ் சீவித்திருக்கிற தேவதத்தன் வீட்டினுமில்லை வெளியினுமில்லை, பிரத்தியக்ஷமாகத் தோற்றாமையின் இஃ தர்தாபத்தியினாற் சாத்தியம் பாதிதமாகலின் அர்த்தாபத்தியபாதித விஷய சாத்தியாசித்தன். (கூ)

விஸ்வமானது சந்தானபரம்பிரையாயிருக்கும், வஸ்துவாகலி னென்கிற ஹேது தன்சாத்தியசாதனத்தி லப்பிரயோசகமாகலினிஃது நித்திய வசிதனென்கிற பிரயோசகாசித்தன்(க0)

சத்தம் அநித்தியம், செய்யப்படுதலின், கடம்போல-என்புழி யிஃது மீமாம்ச கர்மத்திற் செய்யப்படுகிற ஹேது அசித்தமாகலி னிஃது தந்நியதார்சித்தன். (கக)

ஆகவசித்தபேதம் - கரு.

ஆத்மாவிபுவல்ல - தேசத்தி லடங்காமையின் என்னுமேது பக்ஷமாயிருக்கிற வாத்மாவினிடத்தும் விபக்ஷமாயிருக்கிற வாகாயத்தினிடத்தும் வியாப்பியமாயிருக்கலினிது விருத்தன்.

விருத்தன் - க.

ஆத்மாநித்தியன் பிரமேயனாகலின், பிரமேயத்துவமென்கிறவேது மூன்றுபக்ஷத்தினு மிருக்கலினிது சாதாரணனைகாந்திகன். (க)

இதனு லசாதாரணனைகாந்திகனுஞ் சூசிக்கப்பட்டது. அஃதாவது? பூமி நித்தியம் கந்தமுடைமையி னென்கிற வேது தார்க்கீகமதத்திற் சபக்ஷமாயிருக்கிற வாகசாதிகளினும் விபக்ஷமாயிருக்கிற சலாதிகளினு மிராமற் பக்ஷமாயிருக்கிற ப்ருதிவிமாத்திரத்தி னிருப்பதாகலி னிஃது தசாதாரணனைகாந்திகன். (உ)

ஆ அனைகாந்திகன்-உ.

கார்யமெல்லா முபாதானமில்லாத வாகக் கடவதாகலி னென்கிறவேது சர்வகாரியத்திற்கு முபாதானத்தை யறிவிக்கிற பிரமாணத்தினாற் பாதித்விஷயமாகலி னிஃது காலாத்தியயாபதிஷ்டன்.

அக்கினி சூடில்லாதது பதார்த்தமாகையால் ஜலத்தைப்போல என்பது சூட்டையறிவிக்கிற பிரத்தியக்ஷ பாதித்மாதலி னிஃதுங் காலாத்தியயாபதிஷ்டன்.

கன்ம நித்திய மனுதியாதலி னாத்மாபோல வென்கிற வனுமானத்திற்குக், கன்ம மநித்திய மனோவாக்குகாய வியாபார ஜந்யமாகையால் கடம்போலென்கிற வநுமானத்தாற் சாத்யன் வேறுசாதிக்கப்படுதலி னிதுபிரகரணசமன் -

ஆ_-அநைகாந்திகபேத காலாத்யாபாதிஷ்டன்

ப்ரகரணசமன் - உ.

ஆ_ ஏது வாபாசன் - உக.

மேல் திட்டாந்தாபாசங்கள் கூறுகின்றது,—

விளங்குவமைப்போலியீரொன்பான்காண்டும். எ-து. உவமைபோற் ப்ரகாசித் துவமாபாசமாகப்போவது, ¶சாத்திய விகலன் - ‡சாதநவிகலனென் றிரண்டுவகையாகப் பதினெண் பேதமாம்.

அவை வருமாறு:—

¶ சாத்தியவிகலனாவது-தானுண்டென்று சாதிக்கிர பொருளில்லாமை.

‡ சாதநவிகலனாவது-தான்சாதிக்கிர பொருளுக்குச் சொல்லும் ஹேது இல்லாமை.

சாதருமியதிட்டாந்தத்திற்குச், சாத்தியவைகல்லியம்-சாதநவைகல்லியம் உபயவைகல்லியம் - ஸ்வரூபவைகல்லியமென நான்குவிதமாம்.

வைதருமியதிட்டாந்தத்திற்குச், சாத்தியாபாவவைகல்லியம் - சாதநாபாவவைகல்லியம் - உபயாபாவவைகல்லியம்-ஆச்ரயாபாவவைகல்லியமென்று நான்குவிதமாம்.

அவற்றுள், அந்வயதிட்டாதத்திற் சாத்யவைகல்லியத்திற்கு. உ-ம். ஆத்மாநித்தியன் விபுவாகைல் ஆகாயம்போல இதற்கு வைதிகசைவாதிகளி லாகாயத்திற்கு நித்யத்வமில்லாமை

இந்த திட்டாந்வயசாத்தியவிகலனே, வெதிரேகதிட்டாந்தத்திற் சாத்தியாபாவவிகலன்.

அன்வயதிட்டாந்தத்திற் சாதநவைகல்லியத்திற்கு. உ-ம். விமதங்காரியம் பிரத்தியக்ஷமாகையால் திருஷ்டம்போல வி

வன் திட்டாந்தமானது சாதகமாயிருக்கிற பிரத்தியக்ஷமில்லா தது.

இதுவே வெதிரேகதிட்டாந்தத்திற் சாதனாபாவ வைகல்லியத்திற் குதாரணம்.

உபயவைகல்லியத்திற்கு. உ - ம். விமதங்காரியம் பிரத்தியக்ஷமாகையால் மாயைபோல இவண் சாத்பமாயிருக்கிற காரியத்துவமுஞ் சாதகமாயிருக்கிற பிரத்தியக்ஷத்வமுமில்லை.

இதுவே வைதருமியதிட்டாந்தத்திற்கு முதாரணம்.

ஸ்வரூபவைகல்லியத்திற்கு. உ - ம். விமதங்காரியம் பிரத்தியக்ஷமாகலி னாகாயபுஷ்பம்போல. இவண் திட்டாந்தமாயிருக்கிற வாகாயபுஷ்பமே யில்லை.

இஃது வெதிரேக திட்டாந்தத்திற்கு முதாரணம்.

அன்வயதிட்டாந்தத்திற்குவேறாய்ச்சொல்லுகையு மன்னுவயவெதிரேகவியாத்திகளுக்குவேறாய்ச்சொல்லுகையு மவ்வியாத்திகளிற்றானே சாத்தியசாதனங்களை வேறாய்ச்சொல்லுகையுஞ் சாத்தியத்தைச்சாதனமாகச்சொல்லுகையுஞ் சாதனத்தைச்சாத்தியமாகச்சொல்லுகையுமென் றன்வயானுமானத்தினுக்குதோஷ மைந்துவிதம்.

இப்படியே வெதிரேகானுமானத்து மைந்துவிதம் ஆகப்பத்துவிதம்.

திட்டாந்த விபரீத யோகத்தியாவது? மலைநெருப்புள்ளது புகையினாலென்று மநுமானத்தி லன்வயவியாத்தியைச்சொல்லி மடுவைப்போலவென்கை. அவ்வநுமானத்தில் வெதிரேகவியாத்திசொன்னபின்பு பாகசாலைபோலவென்கை. அவ்வனுமானத்திற்றானே எங்கேஎங்கே அக்கினி, அங்கேஅங்கே புகைபாகசாலைபோலவென்கை அவ்வநுமானத்திற்றானே மலை

புகையுள்ள தக்கினியினுலென்று சாத்திய + விபர்யயத்திற்குஞ் சாதனவிபரியயத்திற்குந் திட்டாந்தம்.

+ விப்ர்யயம் திரிபுக்காட்சி.

வெதிரேகத்தினு மிப்படியே. சத்தார்த்ததோஷ வசத்தினு மன்னுவயவெதிரேகத்தினுனுந் திட்டாந்தாபாசம் பதினெண்விதம்.—

தோல்வித்தான மிரண்டிருபத்திரண்டாங் கருதில். எ-து. தோல்வித்தானமாவது விசாரிக்குமிடத்து † அப்பிரதிபத்தி - §விப்பிரதிபத்தியென்று மிருவகைப்பேதத்தினு லிருபத்திரண்டாம்; இதற்குத் தத்துவாப்பிரதிபத்தியென்று சாமானியலட்சணம்.

† அப்பிரதிபத்தி - அர்த்தங்தெரிபாதது, விப்ரதிபத்தியாவது-வேறேயொன்ருகச் சொல்லுகை.

சத்தமநித்தியம் இந்திரியக் கிராஹ்பமாகலின், கடம்போல; என்னுமனுமானத்திற்குப் பிரதிவாதி இந்திரியக்கிராஹியமானது நித்தியமாயிருக்கிற சப்தத்வஜாதிபோலே வியாத்தமாயிருக்கையினிவ்வேது விபிசாரியென்று தூஷித்தவுடனே யாகில் சத்தந்தானு மநித்தியமாகிடுமென்பது பிரதிஞ்ஞாஹானியென்னு நிக்கிரஹஸ்தாநம். (க)

வர்ண மநித்தியஞ் சுரோத்திரேந்திரியக் கிராஹ்யமாகலின்சத்தத்வசாதியைப்போலவென்கிற வநுமானத்திற்கு ? த்வனிகளுட † னவ்வியாத்தியாயிருத்தலின் னவ்விபிசாரியென்று தூஷித் தவளவில் ஆகில் த்வனிகளோடு வர்ணங்க ளநித்தியமென்பது பிரதிஞ்ஞாந்தரமென்னு நிக்கிரகஸ்தாநம். (உ)

† அவ்யாத்தி - பிரிக்கக்கூடாதது.

குணத்திற்குவேருயது திரவிய மதற்குவேருகாமையின் ருபத்லதப்போலென்றது குணத்திற்குவேறெண்கிறபிரதிஞ்

னைக் கதற்குவேறாகாமையி னென்பது விரோதமாகலி னிஃது பிரதிஞ்ஞாவிரோதமென்று நிக்கிரகஸ்தானம். (௩)

சத்தமான துநித்தியம் §வியாபாரஜந்யமாகலின் ஆகாசம்போலென்புழி யனித்தியத்தோடு ¶வியாத்தமாய் வியாபாரசன்னியத்துவமானது நித்தியத்துவத்திற் கெங்ஙனமேதுவாமென்று தூஷித்தளவில் வியாபாரசனனியமென்று நாஞ்சொல்லவில்லையென்பது பிரதிஞ்ஞாசன்னியாசமென்று நிக்கிரகஸ்தானம். (௪)

§ வ்யாபாரஜந்யம்-தொழிலாற்பிறந்தது, ¶ வ்யாத்தம்-கூடினது.

சத்தமநித்தியம் நாம்முதலானது பாக்யேந்திரிக் கிராகியமாகலி னிவ்வேதுநித்தியமாகிய சத்தத்வஜாதியோடு வ்யாத்தமாகலின் விபசாரியென்று தூஷித்தவளவிற் சாமாந்யவஸ்துஜாதியுள்ளதாயுமென்கிற விசேஷணத்துட னவ்வேதுவைச் சொல்லுத லேதுவந்தரமென்னு நிக்கிரகஸ்தானம். (௫)

சத்தமநித்திய மிந்த்ரியக் கிராஹியமாகலின் கடத்தைப் போலவென்ற விவ்வநுமானத்திற் கேதுவான விந்த்ரியக் கிராஹியத்துவமானது நித்தியமாயிருக்கிற கடத்துவ ஜாதியோடு விபசாரியென்று சொன்னவளவி லிச்சத்தமாகாசத்திற் குணமாகாசத்தினாற் க்ரஹிக்கப்படுஞ் சமவாயசம்பந்தத்தினா லச்சமவாய சம்பந்தமு மநித்தியமென்று ‡ ப்ரகிருதோபயோகியாகாதவாக்கியத்தைப் பிரயோகிப்ப தர்த்தாந்தரமென்று நிக்கிரகஸ்தானம். (௬)

‡ ப்ரகிருதோபயோகி-முன்சொன்னதை.

கட மநித்தியம் அகார ககார யகார ரேபாத்மகமா யிருக்கிற சத்தமான தகார்ய ரூபமாயிருக்குமென்னும் ப்ரகிருதார்த்தத்தைச் சொல்லமாட்டா தசத்தத்தைச்சொல்லுகை நிரர்த்தகமென்னு நிக்கிரகஸ்தானம். (௭)

வாதியானவன் மூன்றுப்ரகாரஞ் சொல்லியிருக்கையிலு மத்தியஸ்தருக்கும் ப்ரதிவாதிக்கு மர்த்தந்தெரியாத சத்தஞ் சொல்லுகை யவிஞ்ஞாதார்த்தமென்னு நிக்கிரகஸ்தாநம்.

அஃதாவது- *ஸ்வேதோயாவ்தியென்கிற வாக்கியத்திற்கு வெள்ளைநாய் வழியேபோகிற தென்றும், வெள்ளையாயிருக்கிற குதிரைபோகிறதென்றும்,ஸ்வேதனென்னு நாமமுடைய புருஷன்போகிறானென்று நிச்சயிக்கப்போகா வர்த்தத்தைப் ப்ரயோகிக்கை. (அ)

* ஸ்வேதோயாவதி-வெள்ளைபோகிறது.

விசேஷண விசேஷ்யபாவத்தினு லன்வயம்பண்ணுகைக்கு யோக்கியமாகாமலு மொன்றிற்கொன் †ஆகாம்க்ஷை சந்நிதியோக்கியத்தை யிவைகளன்றியிருக்கும் வாக்கியத்தையும், தூரசம்பந்தமாயிருக்கிற வாக்கியத்தையும் சொல்லுகை யபார்த்தகமென்னு நிக்கிரகஸ்தாநம்.

† ஆகாம்க்ஷை சந்நிதியோக்யத்தை - பதசமூகம் வாக்யசமூகம்.

அஃதாவது- பத்துமாதுளம்பழம், ஆறப்பம், ஒரு குழியாட்டுத்தோல், மாம்சபிண்டம், இந்தச் சல்லடம் குமரியுடையது,ஸ்தைரிபக்ருதனென்கிற புருடனுடைய பிதா ப்ராதிசீனனென்றும், அசநமோடையிலுண்டு, குளித்துப்போகிறான், என்னும் வசநம்போ லொத்தவாக்கியம் ப்ரயோகிக்கை. (௯)

ப்ரதிஞ்ஞையாதி யவயவங்களையு மவற்றி னம்சங்களையுங் க்ரமந்தப்பி முன்பின்னாகச்சொல்வ தப்பிராந்தகாலமென்னு நிக்கிரகஸ்தாநம்.

அஃதாவது? புகையினு லடுக்களைப்போல மலையினு நெருப்புண் டென்பதுபோலச் சொல்லும் வசநங்கள். (௰)

ப்ரதிஞ்ஞைமுதலிய வவயவங்களுக்குட் சிறிதுசொல்லியும் மற்றவைசொல்லாமை *ந்யூநமென்னு நிக்கிரகஸ்தாநம்.

மலைநெருப்புள்ளது புகையினால் அடுக்களைபோல வென்று சொல்லி மற்றதுசொல்லாமை. (௧௧)

* ந்யூநம்-குறைவு.

உபையோகமாயுங் கூட்டரவுடைத்தாயு மிருக்கிற சொற்களைப் புனருத்தமாகச்சொல்லுத லதிகமென்கிற நிக்கிரகத்தானம்.

அதாவது பர்வதமானது வக்கினியையுடையது, புகையும் வெளிச்சத்தையு முடைத்தாகையால். எப்படியானால்? அடுக்களை - கொல்லனுலைமழுஇதுகள்போல. (௧௨)

வெளியாயிருக்கிறவர்த்தத்தை ப்ரயோசனமில்லாமல் திரும்பியும் வேறேயொரு சத்தங்கொண்டு இரட்டித்துச் சொல்லுதல் புனருத்தியென்கிற நிச்கிரகத்தானம்.

அஃதிரண்டு விதமாயிருக்கும்: சத்தத்தினாலேயு மர்த்தத்தினாலேயு முந்தின வநித்தியஞ் சத்தமநித்தியம் இரண்டாவதநித்தியஞ் சத்தநாசமாய்ப்போம். (௧௩)

வாதியினாலே சொல்லப்பட்டு வறிவுடையவனாலே யறியப்பட்ட வர்த்தத்தை யுடைய சத்தத்தை மூடனாயிருக்கிறவனவன்சொன்னபடி திரும்பச்சொல்ல வறியாமலிருத்தல் கூடச்சொல்லாமையென்கிற நிக்கிரகத்தானம். இதுவேஅநுபாடம்.

வாதியாற் சொல்லப்பட்டு மத்தியஸ்தராற் பொருளறியப்பட்டு மறுபடி வாதியினாற் சபையாராற் சொல்லப்பட்டுஞ் சொல்லக்கூடினதாயு மிருக்கிற சொல்லுக்குப் பதில்சொல்லாமை யநநுபாஷணமென்னு நிக்கிரகஸ்தாநம். என்பதுமொன்று. (௧௪)

வாதியினாலே சொல்லப்பட்டு வறிவுடையவ னறிந்திருந்தாலும் வாதியினுடைய பாஷ்யார்த்தத்தை யெப்படிதெரிஞ்

அறிந்திலேனென்று ப்ரதிவாதிசொல்லுதல் அக்கியானமென்கிற நிக்கிரகத்தானம். (௧௫)

வாதிமூன்றுதரஞ்சொல்லி மத்தியஸ்தர் பொருளறிந்திருக்கையிலு மெப்போது ப்ரதிவாதி நானறியவில்லையென்று தன்னறியாமையை வெளிப்படுத்துகிறானோ வப்போ தவனுக் கப்பிரதிபையென்னு நிக்கிரகஸ்தானம்.

அஃதாவது? தேவதாத் தியானம் செய்வோர்போற் பேசாதிருக்கை, இராஜகார்யஞ்சொல்லுகை, ஸ்லோகமுதலானவை படித்தல், மயிராற்றுதல், ஆகாசம் பார்க்கை, தரையிலெழுதுகை முதலியவைகளைச் செய்கை. (௧௬)

வாதம் பண்ணவேண்டுமென்று வந்த வாதி, ப்ரதிவாதிகளிலொருவன் வாதமாரம்பித்தபின்பு, காலதாமசம்பண்ணத்தக்கதாக மத்தியஸ்தராயிருக்கிற வித்துவாமிசர் வரவில்லையென்றும், சபைக்கு நாயகனாயிருக்கிற விராஜா வரவில்லை யவன் வருதற்கேதுவாகிய வெக்காளையின் சத்தமுங் கேளாமென்றும், காலக்ஷேபம்பண்ணுவது விக்ஷேபமென்னு நிக்கிரகஸ்தானம். (௧௭)

தனது சித்தாந்தத்தி லெதிராளிசொன்ன தோஷத்தை நீக்காம லெதிரிக் கநிஷ்டபுத்தியினாற் றனதிஷ்டத்தைக் காட்டன் மதானுஞ்ஞையென்னு நிக்கிரகஸ்தானம்.

அஃதாவது? சிலர் தனக்குச் சோரத்தன்மையை யொப்புக்கொண்டு ப்ரதிவாதியைப்பார்த்து புருஷனுடையாற் சோரத்தன்மை யுனக்குண்டென்றுசொல்ல, அவ்வேதுவினா னீயுஞ் சோரனென்றுசொல்லுகை. (௧௮)

ப்ரதிவாதியானவ னிக்கிரகயோக்கியமான வாக்கியத்தைப்பிரயோகித்திருக்கையிலு மஃதையறிந்தாத லறியாமையாத

விக்கிரகித்துப் பரியாசம்பண்ணுதிருப்பது பரியநுயோச்சியோபேக்ஷணமென்னு நிக்கிரகஸ்தாநம். (௧௯)

வாதியானவ னிக்கிரகஸ்தாநத்திற் கியோக்கியமல்லாமற் றருந்த வாக்கியஞ்சொல்லியிருக்கவு மாபாசமாக நிக்கிரகத்தைச்சொல்லிப் பரியாசம்பண்ணுகை நிரநுயோச்சியாநுபேக்ஷண நிக்கிரகத்தாநம். (௨0)

யாதாவதொரு சாஸ்திரத்தின் சித்தாந்தத்தைக்குறித்து வாதமுண்டாயிருக்கையி னடுவிற் சித்தாந்தவிரோதமான வர்த்தத்தை யொப்புக்கொள்ள லபசித்தாந்தமென்னு நிக்கிரஹஸ்தாநம்.

அஃதாவது? மகத்தாதியாயிருக்கிற விகாரங்களேகப் பிரகிருதியி லுண்டானவைகளேகரூபமாக் காண்கையின் ஏகஜாதியாயிருக்கிற மண்ணுண்டையி லுண்டான கட மண்ணினது விகாரமா யிருக்குமாப்போலவென்ற சாங்கியனை; ப்ரகிருதியாவதேது விகாரமாவதேதென்று கேட்டுழி, யாதொன்றிலிருந்து மகத்துக்களாயிருக்கிற விகாரங்களுண்டாகின்றன வது ப்ரகிருதி: யாவை சில வுற்பத்தியு நாசமு முண்டாயிருக்கின்றன வவை விகாரங்களென் றுத்தரஞ்சொன்னுனுகி லவனுக் கசத்காரியாங்கீகாரமாகிய வபசித்தாந்தமென்னு நிக்கிரகஸ்தாநம். (௨௧)

உஉ - வது எத்வாபாசன் உதாரணம் ப்ரதிகளில் விடப்பட்டிருக்கிறது. இதற்குதாரணம் மரறைஞானதேசிகருரையாற் காண்க.—

இவை யரண்டு மொழிவர்-இவ்வாறுசொன்னபக்ஷாபாசம் ஏதுவாபாசம் உவமாபாசம்×பராஜயஸ்தானமென்னு நான்கு

வகையின் பேதங்களையு முண்மையா யறிந்து வாதசமயத்திற் குற்றங்கள்வாரா தறிந்தோ ருரைப்பர்.—

× பராஜயம் - நிக்ரகம்.

அவையெல்லாமளக்கி லறுபத்தைந்தாகும்-இந்நால்வகையிற் பேதத்தொகையுரைப்பி னறுபத்தைந்தாமென் றிதன்பெருள்.

மேலிச்சாஸ்த்திரம் பன்னிரண்டுசூத்திரத்தினும் பூர்வபக்ஷமாகச் சொன்னவிடமெல்லா மித்தோஷங்களினு னிராகரித்தமையுஞ் சித்தாந்தத்தி லித்தோஷங்களில்லா துரைத்தமையுங் கண்டுகொள்க.

அளவை காண்ட லநுமான மாகம
முளவை மேலுரை செய்வ திதற்குளாம்
விளைவு தோன்ற விளம்பின னன்பர்க
டெளியு மாறு சிவாக்கிர யோகியே

இவ்வுதாரணங்கள் சமஸ்கிருதவாக்யப் பிரயோகங்களாகச் சிலப்பிரதிகளி லெழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை முறையானேகுறிப்பிட் டிதனடியிற் றனியே சேர்க்கப்பட்டது.

வருமாறு:—

* ஹெத்வாஹாஸஃ பக்ஷ ஸபக்ஷ விபக்ஷாணாம் லக்ஷணம்

பக்ஷாபாசம் - ௭ -உம், அவற்றி னுதாரணமும்.

...

ரூபஹீநோ ரூபவான் - [illegible]
[illegible],

ககநாரவிந்தம் ஸுரபி அரவிந்தத்வாத் - ஸரோஜாரவிந்தவத். க

[illegible] உ

[illegible] ௩

[illegible] ௪

ஏதுவாபாச - ௪ - உம், அ-உ-ம்.

[illegible]

ககநாரவிந்தம் ஸுரபி அரவிந்தத்வாத் ஸரோஜாரவிந்தவத். க

[illegible] உ

[illegible] ௩

[illegible] ௪

அசித்தபேதம் - கஉ - உம், அ-உ-ம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] உ

[illegible]

[illegible] ங

[illegible]

[illegible]

[illegible] ச

[illegible] ரு

[illegible]

[illegible] சு

[illegible]

[illegible] எ

[illegible]

[illegible]

[illegible]

[illegible] கO

[illegible] கக

விருத்தன் - க் - உம், அ-உ-ம்.

[illegible] ௬

அநைகாந்திகன் - க - உம், அ-உ-ம்.

[illegible] ௬

காலாத்யயாபதிஷ்டன் - க - உம், அ - உ - ம்.

[illegible]

[illegible] ௬

ப்ரகரணசமன் - க - உம், அ - உ - ம்.

[illegible]

[illegible] உ

* [illegible]

நிரூபணாதகம் விஶ்வம் கார்யத்வாத் ஸம்தக்கஸ்தத: । ஸந்தேஷ்ணா வஹ்நிமித்யாதி ப்ரதிஜ்ஞாயேத ஸமேதத்கதி.

திட்டாந்தாபாசங்கள் - ௨௨ - உம், அ-௨-ம்.

* தத்ராத்யாஸ்தத்ரைவ — த்ருஷ்டாந்தாபாஸா விகலா: ஸாத்யேந வா ஸாதநேந வா ।

இதிற்சாந்த - சாத்தியவிகல - ௪ - உம், அ - ௨ - ம்.

ஸூத்ராதித்யாதி விவாதஸ்தாத் ஸூகாபவத். க

விவாதம் கார்யம் ப்ரத்யக்ஷத்வாத் - ஶப்தவத். ௨

விவாதம் கார்யம் ப்ரத்யக்ஷத்வாத் - மாயாவத். ௩

விவாதம் கார்யம் ப்ரத்யக்ஷத்வாத் - பாஷாணவத். ௪

பரமாணோர்ஹி தாவந்ந ப்ரத்யக்ஷத்வாத்.

மேல் நிக்கிரஹஸ்த்தானம் - ௨௨ - இ ௨ - ம்.

ப்ரயோஜநிர்திஷ்டஸ்ய தூஷணே ஸதிதோஷேண க்ஷயாநிவாரஹம் க்வசித்தாநேந பக்ஷஸ்யாஹ: ப்ரதிஜ்ஞாஹாநி: - தத்ர யதா அநித்ய: ஶப்த: ஐந்த்ரியகத்வாத் - கடவதித்யுக்தே ஐந்த்ரியகம் ஸாமாந்யம் நித்யம் த்ருஷ்டமிதி வ்யபிசாரே ந தோஷ உத்பாவிதே தர்ஹி கடோऽபி நித்யோऽஸ்த்விதி ப்ரதிஜ்ஞாஹாநே: பரிஹாரணம். க

𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌸𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌨𑌾𑌹𑍂𑌯𑌤𑍇 𑌨 𑌵𑍈𑌰𑍇𑌣 𑌕𑍃𑌤𑍇𑌸𑍍𑌤𑌿 𑌤𑌚𑍍𑌚 𑌵𑍈 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚 𑌯𑍇𑌽𑌤𑍋𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌵 𑌨𑌿𑌵𑍇𑌶𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌭𑌾𑌸𑌮𑍍

𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌶𑌬𑍍𑌦𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌿 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌕𑍇𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌤𑌦𑍍𑌧𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑌯𑍋𑌵𑌰𑍍𑌣𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋 𑌜𑌾𑌤𑌿𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌤𑍍 ॥ ௨

𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑌰𑍍𑌕𑌯𑍋 𑌰𑌵𑌾𑌗𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌯𑍋𑌃 𑌪𑌕𑍍𑌷𑌯𑍋 𑌵𑌾𑌚𑌾𑌵𑌸𑍍𑌥𑌂 𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌾𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 । 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 — 𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌸𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌤𑍍 ॥ ௩

𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌪𑍇𑌨𑍍𑌵𑌤𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌮𑍍𑌭𑌵𑌃 । 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 — 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌾𑌯𑍁𑌵𑌤𑍍 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑍇𑌹𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑌿 ॥ ௪

𑌹𑍇𑌤𑍋𑌸𑍍𑌵𑌾𑌯𑌕𑌾𑌂𑌶𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌤𑌸𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌧𑍋 𑌷𑌪𑌰𑌦𑍍𑌰𑌷𑌿𑌷𑍍𑌯𑌾 𑌪𑌨𑌃 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌹𑍇𑌤𑍁𑌪𑌰𑌞𑍍𑌚 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌶𑌬𑍍𑌦𑌃 — 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌹𑍇𑌤𑍍𑌵𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌕𑌾

[illegible]
[illegible]
[illegible] ௫

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
இதி. ௬

[illegible]
[illegible] ௭

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
ரூபம். ௮

[illegible]
[illegible]

𑌆𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌸𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 [illegible] 𑌭𑌵𑌤𑌿 — 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 [illegible] 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂. ௯

𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌯𑌵𑌯𑌵𑌾𑌨𑌾𑌂 [illegible] ௰

𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌯𑌵𑌯𑌵𑌾𑌨𑌾𑌂 [illegible] ௧௧

[illegible] ௧௨

[illegible]

𑌰𑍍𑌥𑌨𑌾𑌮 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 – 𑌤𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌸𑍍𑌵𑌪𑌕𑍍𑌷-
𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌬𑍍𑌦 𑌇𑌤𑌿 । 𑌅𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌃
𑌶𑌬𑍍𑌦𑍋 𑌵𑌿𑌨𑌾𑌶𑍀𑌤𑌿 । ௧௩

𑌵𑌾𑌦𑌿𑌨𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌽𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯
𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌾𑌦𑌿𑌨𑌾 𑌪𑌰𑌿𑌷𑌦𑌾 𑌤𑍍𑌰𑌿𑌰𑌭𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑌣-
𑌯𑍋𑌗𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌦𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌂 – 𑌤𑌦𑌨𑌨𑍁𑌭𑌾𑌷-
𑌣𑌂 𑌨𑌾𑌮 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 । ௧௪

𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑍍𑌥𑍇𑌽𑌪𑌿 𑌤𑍍𑌰𑌿-
𑌵𑌿 𑌵𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌯𑌦𑌾 𑌸𑍍𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌾-
𑌵𑌿𑌷𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨𑌜𑍍𑌞𑌾𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌤𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂
𑌨𑌾𑌮 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 । ௧௫

𑌵𑌾𑌦𑌿𑌨𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑍇𑌨𑌾𑌨𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑌿-
𑌷𑍇𑌧𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌯𑌦𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑍀 𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵-
𑌕𑍍𑌤𑌿 𑌤𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌨𑌾𑌮 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑌾-
𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 – 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌨 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋 𑌶𑍀-
𑌹𑌾𑌵𑌂 𑌰𑌾𑌜𑌵𑌾𑌤𑌪𑌿𑌤𑍍𑌤𑌵𑌰𑍍𑌣 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌦𑌿 𑌪𑌾𑌰𑌂 𑌕𑍈𑌶𑍍𑌚
𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌣𑌂 𑌮𑌦𑌨𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌹𑌸𑍍𑌤𑌪𑌾𑌦𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌂 𑌵𑍈-
𑌵𑌨𑌾𑌦𑌿𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑌰𑌣𑌮𑌿𑌤𑌿 । ௧௬

𑌕𑌸𑍍𑌯 𑌹𑍇𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌜𑍍𑌞𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑌰𑍇 𑌤-

𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌦𑌿𑌨𑌿𑌰𑍂𑌪𑌣
𑌸𑌾𑌧𑌨𑌂. கஎ

𑌸𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌦𑍋𑌷𑌰𑌹𑌿𑌤𑌤𑍍𑌵
𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌬𑌾𑌧𑌸𑍍𑌯 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌾𑌧𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 - 𑌤𑌥𑌾 𑌵𑍇𑌦𑌵𑌿𑌹𑌿𑌤
𑌨𑌿𑌷𑍇𑌧𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂
𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑍇𑌦𑌨𑌂 𑌸𑍍𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌂𑌗𑌃. கஅ

𑌶𑌬𑌦𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌰𑍍𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯
𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯 𑌅𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑌵𑌸𑍍𑌥𑌾
𑌦𑍋𑌷𑌾𑌭𑌾𑌵𑌃 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌾𑌧𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 ககூ

𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌾𑌧𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃
𑌪𑍍𑌰𑌤𑌿𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌯𑌂 𑌨𑌿𑌯𑌮𑌃
𑌯𑍋𑌗𑍍𑌯𑌃 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌾𑌧𑌨𑌂. உ0

𑌯𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌭𑍇𑌦𑌾𑌤𑍍
𑌯𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑌯𑍋𑌗𑍍𑌯
𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌸𑌾𑌧𑌨𑌂 𑌭𑌵𑌤𑍀
𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌏𑌕𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌯𑍋𑌃 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌏𑌕
𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌅𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃
𑌤𑌿𑌃 - 𑌅𑌵𑌿𑌕𑌾𑌰𑌾 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌷𑍍𑌟𑌃 𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌃 𑌯𑌃
𑌯𑍇𑌤𑌾𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌾𑌜𑌾𑌯𑌤𑍇 𑌸𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌜𑌨𑌨

ஙாஸவ்ஞோ ஹாவாவிகாராஜக்ஷி வஷ க்ரதஸ ருஸக்ஷ்
காய-ஷ்வாஷ வஸித ருாமாஷவஸிஸாஜோஜக்ஷி. உக

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

காண்டன் முதலிய வளவைகளின திலக்கணங்களைக்கூறி யநுமானப் பிரமாணத்தில் வரு மாபாசங்களைச் சொல்கின்ருர்.

ஈண்டு - அநுமானப் பிரயோகம் பண்ணுமிடத்து,—பக்கப்போலிநான்கு-முன்சொன்ன பக்கம்போலத்தோன்றி யல்லவாய்ப்போம் பக்காபாசம் நான்கு,—ஏதுப்போலி யொருமூன்ரும்-முன் சொன்ன வேதுப்போலத் தோன்றி யல்லவாய்ப்போமேது வாபாச மூன்ரும். அந்த மூன்றுந்தானே,—எழுமூன்ருவேண்டும் - இருபத்தொன்ருக விரும்பப்படும்,—விளங்குமுவமைப்போலி - முன்சொன்ன திருட்டாந்தம் போலத் தோன்றி யல்லவாய்ப்போம் திருட்டாந் தாபாசம்,—ஈரொன்பான் காண்டும் - பதினெட்டாகப் பார்ப்போம்,—தோல்வித்தானமிரண்டு,—நிக்ரகத்தானமிரண்டும்,—கருதில் - விசாரிக்கில்,—இவை-இந்த நிககிரகத்தானங்கள்,—இருபத்திரண்டாம்-இருபதிரண்டாம்,—ஆண்டு மொழிவர் - இவற்றின்மேலுஞ்சொல்வார்கள்,—இவையெல்லாம்-முன்சொல்லிய பக்கப்போலி முதலிய வெல்லாம்,—அளக்கில் - பகுப்புத்தொகை பண்ணிப் பார்க்கில்,—அறுபத்தைந்தாகும் - அறுபத்தைந்தாம்.

இவற்றிற் குதாரணங்கள் காட்டில் விரியும். திருமறைஞானதேசிகரது விரிந்த உரையில் முதிர்ந்தோர் காண்பிக்கவொருப்பட்கார்ந் காண்க.

இப்படி யளவைகளின் திலக்ஷண மறிவிக்கப்பட்டபடியால் நேத்திர முதலிய விந்திரிய விளக்கு, புகைமுதலிய காரியலிங்கவிளக்கு, சிவாகம முதலிய சத்த விளக்கு, இந்த மூன்றுவிளக்கிற் பின்முன் கோத்த சிவசத்தி விளக்கு.

இந்த நான்கு விளக்குக்களோடு விளக்க விளங்குஞ் சம்பந்த வதியாகுஞ் ஜீவான்ம சிற்சத்தியும் ஜீவன்முத் தான்ம சிற்சத்தியும் தனித்தனி இந்திரியப் பிரத்தியக்ஷப் பிரமாணமென்றும், அநுமானப் பிரமாணமென்றும், சத்தப்பிரமாணமென்றும், ஜீவன் முத்தான்ம சிற்சத்தி மாத்ர போகிப் பிரத்யக்ஷப் பிரமாணமென்றும், தடத்த லட்சணமா முபாதிபாஞுன்காயுள்ளொருஸ்வரூப லக்ஷணப் பிரமாணமாயிருக்கும்.

ஆதலால் அந்த நான்கு விளக்குந் தனது தனது சாமர்த்தியமுறைமையில் மலவிருளினது வாசனைபோக ஜீவான்ம ஜீவன்முத்தான்ம சிற்சத்திப் பிரமாணத்தை விளக்கு முபகாரத்தா லவர்களைக் குறித் துபகாரோப காரப்பிரமாணம், சிவசத்தி சிவனைமாத்திரம் குறித்து முக்கியப் பிரமாணம்; நிருபாதிகமாய் நிரபேக்ஷமாயிருக்கும்படி திரும்பத் திரும்பச் சிவசத்திவிளக்கு விரும்பாம லொருங்கே சிவசத்தி விளக்கினால் விளக்கப்பட்டுச் சுவயம் பிரகாசமாய் நிரதிசயமாய், சிவன்முதற் சர்வபதார்த்தப் பிரத்தியக்ஷியாயிருக்கின்ற சிற்சத்திப் பிரமாண மொன்றுமாத்திர முடையனாய், நிரபேக்ஷனாய சிவதுல்லியசிவனாயிருக்கின்ற முத்தான்மாவைக் குறித்துச் சிவசத்தியுபகாரோபசாரங்களினாலும் பிரமாணமன்று: சிவனுக்குமப்படி வேறொரு சிவசத்தி பிரமாணமாய் வருமதனா லநவத்தையா மாதலால்.

இப்படியிருக்கச் சிலர் ஆன்மாவுக்குப் பெத்தாவத்தையிற் சிற்சத்தியினது வித்தியாதத்துவ கலுஷிதாம்சம் பிரமாண

ரூபம், வித்தியாதத்துவ கலுஷிதமல்லாத அம்சம் பிரமாதிரு ரூபம். அதனால் முத்தியவத்தையிற் பிரமாதிரு ரூபமாத்திரமே பிரமாண ரூபமில்லை யாதலான் முத்தான்மாவுக்குச் சிவனைப் பார்க்குமிடத்துச் சிவசத்தியே பிரமாணமென்றும், சிலர் ஆன்ம முத்தான்மாக்க ளிருவர்க்குஞ் சிவசத்தி முக்கியப் பிரமாணமெனறும், சங்கிராந்தவாதி-ஆவேசவாதி-பிரயோச்சிய கர்த்திருத்துவ வாதி-மதமென்கின்ற மும்மதப் பிசா சாவேசிகளாய்ப் பிரஞ்ஞையின்றிப் பிரலாபிக்கின்றார்கள்; அவர்கள் சுத்தசிவ சித்தாந்த மந்திரவாதிகளா லந்தப் பிசாசோட்டப் பிரஞ்ஞை பெறுவார்கள்.

அந்த மந்திரவாதிகள் மந்திரோபதேசமாவது, வித்தியாதத்துவ கலுஷித ஸ்வரூபம் பிரமாண லக்ஷணமென்று பேசுதனன்றன்று, அது சிவசத்திக் கில்லாமையாற் சிவசத்திப் பிரமாணமே யில்லையாமென்று சிவனுக்கும்; முத்தான்மாவுக்கும் பிரமாணக் கண்ணில்லாமையால் அந்தகர்களாய் விடுவார்களாதலால்.வேறொரு பிரகாரத்தினாலே சிவசத்திப் பிரமாணமுண்டென்றால், அது சிவனுக்கு முத்த சிவன்முதற்பொருள்களைப் பார்க்குமிடத்துப் பிரமாணம், முத்தான்மாவாகிய சிவனுக்குச் சிவன் முதற்பொருள்களைப் பார்க்குமிடத்துப் பிரமாணமன்று. ஆயிரம் விளக்கு வந்தாலு மந்தகனானவன் அந்த விளக்குக் கொண்டு பொருள்களைப் பார்ப்பதின்று; அந்த விளக்கினால் விளங்கிய கண்ணுள்ளவன் அந்தக் கண்கொண்டு விளக்கையும் பொருளையும் பார்ப்பன்.

பின்னுமொன்று—சிவசத்தி சிவனுக்குக்கண். அது பிறகண்ணாதலால் முத்தான்மா அதுகொண்டு சிவன்முதற்பொருள்களைப்பாரான். பார்ப்பானாயினும்,பார்த்தற் கிரியைப் பிரமிதப் பிரயோசன மவனதன்றாம். சிவானன்னிய வைக்கியத்தினால் அந்

தப் பிரயோசன மவனதாமென்னில்? அது கூடாது. சிவனோடை யிக்கியம் சிவசமான சாதியாகிய சிவசாதிருச்யம் வேறொன்றன்றென்று சித்தாந்த சிகாமணி பிரமாண தீபிகை முதலானவைகளிலே அநேக பிரகாரத்தாற் சாதிக்கப்பட்டிருக்கையால், சிவனுஞ் சிவசத்தியும் சிவசத்தி விளக்கினால் விளங்கி, திரும்ப அவ்விளக்கு விரும்பாமலிருக்கின்ற முத்தான்மாவினது பிறப் பொருளறிவாகிய வெதிர்முக சிற்சத்தியா லறியப்படுந் தன்மையின்றி, யறியும் பொருளாக வறியப்படும்.

முத்தான்மாவினது தற்பொருளறிவாகிய திரும்பிய முக சிற்சத்தியால் அறியப்படாது. அறியப்படுமாகில் நிருபசரிதவைக்கியம் வருமாதலால் ஏகான்மப் பிரசங்கம் வந்து சித்தாந்தமன்றி வேதாந்தமாய் விடுமாதலால், முத்தான்மாக்களை யிரக்ஷிக்கிறார் என்னுமேகதேசவசனத்துக்கும்; பரமுத்தராகிய அபரமுத்தர்களையென் றர்த்தமாதலால், பரமுத்தான்ம சிவசிற்சத்தி, திரும்பச் சிவசத்தி விளக்கு விரும்பாமற் ஸ்வயம்பிரகாசமாய் ஸ்வதந்திரமாய் ஸ்வரூபப் பிரமாணமா யிருக்குமென்று சித்தாந்தம். ஆகையால், சிவன் முதற் சீவன்மா வந்தமான சிற்பொருள்களுக்கெல்லா முன்சொன்ன முறைமையிற் பிரமாதிருரூபம் பிரமாணரூபம் பிரமிதிரூபம் மூன்றும் சொரூபந்தானே தடத்தமன்று.

ஆதலால் அவரவ ரெதிர்முகியாயிருக்குங்கரணக்குறிச் சிற்சத்தியே பிரமாணம்; பிரமிதி பிரமாணமன்று. அது பிரமாண வியாபாரக்குறிப் பிரமாண பலமாதலால் பிரமிதிதானே பிரமாணம். பலமேதென்னில்? ப்ரமாதிரு கோடிப் பிரமிதி ப்ரமாணம். பிரமேயக்குறி விஷயகோடிப் பிரமிதிதான், விஷய வ்யாபாரந்தான், பலமெனும் பிறர்மதமும்; அதுவன்றி நாதவிருத்தி வித்தியா ராகாதிகளாற் கலக்குண்ட சவிகற்ப நிருவிக

திப் பிரமிதிதானே பரோன்முக சிற்சத்தி; அதுதானே பிரமாணம். ஆனேபாதானே பேக்ஷாபுத்தியே பிரமாண பலப்பிரமிதி. நாதவிருத்தி வித்தியாராகாதிகளாற் கலக்குண்ணாத ஸ்வஸ்வயோன்முக சிற்சத்தியே ப்ரமாதிருரூபம்; ப்ரமாதிருரூபமாத்ரஞ் சொரூபம் முத்தியிலிருப்பது. பிரமாணப் பிரமிதிரூபமிரண்டும் தடத்தம் முத்தியிலில்லை; சம்சாரத்திலிருப்பது. முத்தான்மாவுக்குச் சிவன் முதற்பொருள்களை யறியுமிடத்துச் சிவசத்தியே பிரமாணமென்னும் பிறர் மதமும் பேசாமற்போயின.

திரும்ப ஆஷித்துப் பார்க்குமிடத்து சிவசத்திமுத்தான்ம சிவன் முதற் பிறபொருள்களைப் பார்க்குமிடத்துச் சிவனுக்குப் பிரமாணம்; தற்பொருளாகிய தன்னைப் பார்க்குமிடத்துச் சிவனுக்குச் சிவசத்தி பிரமாணமன்று. அது பிறப்பொருளறிவாதலால் சிவன் சத்திக்குப் பின்னப் பொருளாய்ப் போவாராதலின், சிவன் தன்னறிவாகிய தனது சிவரூப சிற்சத்திப் பிரமாணத்தினாற் பிறவறிவாகிய தனது சத்திரூபமென்கிற சிவசொரூபப் பிரமேயத்தைத் தற்பொருட் பிரமாணம் பிறப்பொருட் பிரமாணமாகும். அந்த இரண்டிற்கும் அந்தரான்ம சித்ரூப சிவரூபப் பிரமாதாவாயிருந் தறிவர். இந்த நீதிமுத்தான்ம சிவன்முதற் சிற்பொருள்களுக்குஞ் சமமாகும்.

ஆகையால், சீவன்முத்த சித்த சிவயோகி நிருபாதிக சிவசத்தி விளக்கில் விளங்கிய தனது சிற்சத்திப் பிரத்தியக்ஷப் பிரமாண சிவப்பிரமாணத்தி லுற்பவித்த அபரோட்ச சாட்சாத்கார சிவ லக்ஷண லக்ஷிய நிபதித சிவயோகப் பிரத்தியட்சப் பிரமிதியினாற் சிவனைப் பார்ப்பன்.

சீவன் முத்த சரத்திய சிவயோகி, திவ்வியாதிதைவிக சிவநாம சத்நாம வித்தாத்தியான்மிக சிவாகம சத்விஷய வாச

னுபூரித புத்திப் பிரகாசத் திரியிற்பற்றி, சிவாகமப் பேர்பெ றுஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய தனது சிற்சத்தி நேத்திர சிவாகமப் பிரமாண சிவப்பிரமாணத்தி லுற்பவித்த பரோட்ச சத்தப் பிரமிதியினுற் சிவலக்ஷணக் கேழ்வி வழியால்; சிவனை யறிந்து தியானசமாதி பண்ணுவன்.

அறிந்தபின்னும்,அவன் வாதிப் பிரதிவாதி விப்பிரதிபத்தி க் சலகங்களால்வருஞ் சந்தேகம் போம்படி காரிய லிங்கவிஷய வாசனுபூரித புத்திப் பிரகாசத் திரியிற் பற்றி யனுமானப் பேர் பெறுஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற்சத்தி நேத்திரானு மான சிவப்பிரமாணத்தி லுற்பவித்த பரோக்ஷானு மிதியினுற் பரீக்ஷித்துப் பரீக்ஷயின தேககோடியில் விழுந்தறிந்து தியா ன சமாதி பண்ணுவன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

௭-து. மேற்கூறிப்போந்த அநுமானசாமக்கிரியைகளுள் து ணிபொருட்கிடனுதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடுடை த்தாயும் ஒருபுடையொத்துப் பக்கம்போலத் தோன்றுவதாகி ய பக்கப்போலி

துணியும்பொருட் கிடனுகாததூஉம்
துணியும்பொருட் கொருமருங் கிடனுகாததூஉம்
துணிந்தபொருட் கிடனுவதூஉம்
துணிந்தபொருட் கொருமருங்கிடனுவதூஉ

மென நான்குவகைப்படும்.

சாத்யப்பொருளோடு வ்யாத்தியுடைத்தாய்ப் பக்கத்தி லிருத்தலாகிய ஏதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒரு புடையொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலி

துணியப்படாததூஉம்
மறுதலைக்கட் படுவதூஉம்
ஒருதலைப்படாததூஉ
மெனமூவகைப்பட்டு, விரியா விருபத்தொன்றும்.
அவையாவன:—
சார்பில்லதூஉம்
சார்புண்மை யறியப்படாததூஉ
மெனச் சார்புபற்றிய குற்றமிரண்டும்
சொரூபமில்லதூஉம்
சொரூபமுண்மை யறியப்படாததூஉம்
சொரூபத்தின் விசேடணமில்லதூஉம்
விசேடணமுண்மை யறியப்படாததூஉம்
விசேடியமில்லாததூஉம்
விசேடியமுண்மை யறிப்படாததூஉம்
ஒருமருங்கில்லதூஉம்
ஒருமருங்குண்மை யறியப்படாததூஉம்
பரனுக் குடம்பாடில்லதூஉ
மெனச் சொரூபம்பற்றிய குற்றமொன்பதும்
சாத்தியத்தோடு வ்யாத்தியுண்மையறியப்படாததூஉம்
செயற்கைபற்றி வ்யாத்தியுடையதூஉ
மென வ்யாத்திபற்றிய குற்றமிரண்டும்
ஆகியபக்கவிருத்தி துணியப்படாத ஏதுப்போலி
யின் விரிபதின்மூன்றும்
மறுதலைப்பொருள் சாதிப்பதூஉம்

மறுதலைப்பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவை உடன்கொண்டு வருவதூஉம்

காட்சியளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டுவருவதூஉம்

உரையளவையான் மறுக்கப்பட்டுக் கொண்டுவருவதூஉ

மென மறுதலைத்தலையுடையஏதுப்போலிவிரியைந்தும்

பக்கசபக்க மாத்திரையினன்றி விபக்கத்துஞ் சேறலுடையதூஉம்

சபக்கத்திற் சேறலின்றிப் பக்கமாத்திரையிலுள்ளதூஉம்

சபக்கவிபக்கங்கள் கிடைக்கப்பெறாததூஉ

மென ஒருதலைப்படாத வேதுப்போலி விரிமூன்றும்.

இனி வ்யாத்தி நிச்சயித்தற்கிடனாதலாகிய உவமையிலக்கணமின்றியும் உவமைபோலத் தோன்றுவதாகிய உவமைப் போலி, அந்நுவயம்பற்றியும் வெதிரேகம்பற்றியும் இருவகைப் பட்டு, விரியானோரோவொன் றொன்பதாய்ப் பதினெட்டு வகைப்படும்.

அவையாவன:—

சாத்தியமுடைத் தாகாததூஉம்

சாத்தியமுடைமை நிச்சயிக்கப்படாததூஉம்

ஏதுவுடைத்தாகாததூஉம்

ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாததூஉம்

இரண்டுமுடைத் தாகாததூஉம்

இரண்டுமுடைமை நிச்சயிக்கப்படாததூஉம்

சொரூபமில்லதூஉம்

சொரூபமுண்மை பரனுக் குடம்பாடாகாததூஉம்

சோபாதிகமாகிய வ்யாத்தியுடையதூஉ

மென அந்நுவய வுவமைப்போலிவிரி ஒன்பதும்

சாத்தியமின்மை யுடைத்தாகாததூஉம்

சாத்தியமின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம்

ஏதுவின்மை யுடைத்தாகாததூஉம்

ஏதுவின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம்

இரண்டின்மையு முடைத்தாகாததூஉம்

இரண்டின்மையு முடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம்

சொரூபமில்லதூஉம்

சொரூபமுண்மை பரலுக் குடம்பாடாகாததூஉம்

வெதிரேகவ்யாத்தி செயற்கையானுடையதூஉ

மென வெதிரேக வுவமைப்போலிவிரி
யொன்பதுமாம்.

இனித் தருக்கவாதத்தின்கட் பேசத் தெரியாமையாகிய தோல்வித்தானம், மயங்கப்பேசுதலும் வாளாவிருத்தலுமென் றிருவகைப்பட்டு, விரியானிருபத்திரண்டாம்.

அவையாவன:—

தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டா மல் அதற்குக் கேடுவரப் பேசுதலும்

பிறிதொரு மேற்கோளைக் கூறுதலும்

மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதலும்

மேற்கோளை விட்டுவிடுதலும்

தான்கூறிய ஏதுவுக்குக் குற்றம் வந்துழி வேறோராற்றான் ஏதுக் கூறுதலும்

தனக்கு வருந்தோல்வியைப் பிறிதொன்றுபேசி மறைத்தலும்

பயனொடுபடாதன பேசுதலும்

பொருள் இனிது விளங்காத சொற்களை யெடுத்துக்கொண்டுபேசுதலும்

அவாய்நிலை தகுதியண்மையில்லனவாய்ப் பேசுதலும்

மேற்கோண்முதலிய வைந்தினையும் முறை பிறழப் பேசுதலும்

அவற்றுட் சிலகுறையப் பேசுதலும்

ஒன்றற்குப் பல கூறுதலும்

சொல்லை இரட்டித்துச் சொல்லுதலும்

பொருளையிரட்டித்துச் சொல்லுதலும்

பிறன்கூறிய பொருளை அநுவதிக்கமாட்டாமையும்

பிறன்கூறியபொருளை யறிந்தும் அறியான்போன்று வினுதலும்

விடைசொல்லத் தெரியாது வேறொரு கருத்துடையன் போன்றிருத்தலும்

வாதத்தை விட்டுப் பிறிதொன்றனைச் சொல்லிப் பொழுதுபோக்கலும்

சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம்பட்டுப் பரபக்கத்துக்குக் குற்றம்பேசுதலும்

தோல்வித்தானமெய்தியோனைத் தோல்வித்தானமெய்தினுயென் றறிந்துகூறுதிருத்தலும்

தோல்வித்தானமெய்தாதானை எய்தினுயென்று கூறுதலும்

தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தலு

மெனவிவை.

இங்கனம் நான்கும், இருபத்தொன்றும், பதினெட்டும் இருபத்திரண்டுமாகிய அறுபத்தைந்தும்; அனுமான வளவைக்குக் குற்றங்களா மென்பதாம்.

....

இவை குற்றமாகலின் ஆகமவளவைக்கு முன்னாக வையாது இறுதிக்கண் வைத்தார். இவற்றிற்குதாரணம உய்த்துணர்ந்துகொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இன்னும் இப்பக்கவேது வுவமைகளை எடுத்துச் சொல்லும் வழிப் படுஞ் சொற்குற்றங்களெல்லாந் தோல்வித்தானத்துளடங்கும்.

ஈண்டுக்கூறும் பக்கப்போலி உவமைப்போலிகளெல்லாம் ஏதுப்போலியுளடங்குமெனத் தார்க்கிகர் கூறுவர். பக்கவுவமைகளி னிலக்கணத்தை நோக்கிக் காணும்வழி, அவை பக்கப் போலி யுவமைப்போலியெனப் படுவனவன்றி ஏதுப்போலியெனப் படாமையறிக.

இதனுனே அநுமானப் பிரயோகத்தின் கட்படுங் குற்றங்களிவையென்பது தெரித்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருளா வருமாறு.

—o—

'காண்டல் வாயில்'என்ற திருவிருத்தத்துக்கு 'அறிவியே யமலனும்' என்ற திருவிருத்தமளவும் வியாக்கியானம் வந்து

முடிந்தது. மேலிந்தப் பிரமாணங்களுக்குத் தொகை யருளிச் செய்கிறார்.

ஈண்டு பக்கப்போலி நான்கு - இவ்விடத்துப் பட்சம் நாலாயிருக்கும்.

அவையாவன :—

பிரத்தியட்சாபாச மென்றது - அநுஷ்ணேயம் அக்நிதீயனுமானம், ஸஹா பிரத்தியட்சாபாசம்.

அனுமானுபாசம் ... அனித்திய சத்தம் சாக்ஷுஷத்துவாது, இதீய மனுமானுது.

ஸ்வனுமா னாபாசம் பிரத்தியாபாசம் ... சுத்திகையிலே ரசிதமிதிஞ்ஞானம், ஸஹா ப்ரத்தியாபாசம்.

வசனுபாசம் ... ப்ரம்மணேன சுராபேயா திரவத் திரவியாத் வாது க்ஷீரவது இதீ யதனுமாநம், இது வசனுபாசம்.

ஆ௨ சு.

ஏதுப்போலி யொருமூன்றாய் வேண்டு மெழுமூன்றாக - ஏத்துவாபாச மூன்று பிரகாரமா யிருபத்தொன்றாம்.

அவையாவன :—

அசித்தம் ... அநிஸ்சித பட்சவிருத்தி.
அனேகாந்திகம் ... பட்சத்திரய விருத்தி.
விருத்தம் ... பட்ச விபட்ச விருத்தி.

என்று மூன்றாம்:—

அசித்தபேதம்-கஉ.
அனேகாந்திகம்-எ.
விருத்தபேதம்-உ.

ஆக இம்மூன்றுபேதமும் இருபத்தொன்று.—

விளங்குவமைப்போலி யிரொன்பான் காண்டும் - விளங் கத்தக்க திருட்டாந் தாபாசம்-௪௮-ஆகக் காணப்படும்.

அவையாவன:—

சாத்திய விகலாதி பதினெட்டுமாம்.—

தோல்வித்தான மிரண் டிருபத் திரண்டாம் - நிக்கிரகத் தான மிரண்டுவகையா யிருபத்திரண்டாம்.

அவையாவன ?—

பிரதிஞ்ஞா ஹாநி முதலான-௧௪,

அனனுபாஷண் முதலான-௮,

ஆக இருபத்திரண்டாம்.

இதக் குவமை,

ப்ரதிஞ்ஞாஹாநி...சத்தா வுண்டென்ன வேறே யொருவ னில்லை யென்று சாதிக்க வுடன்படுதல். ௧

பிரதிஞ்ஞாந்தரம்...ஒரு பிரதிஞ்ஞையைப்பண்ணிஅதனைச் சாதியாமல் வேறேயொன்றைப் பிரதிஞ்ஞை பண்ணுதல். உ

பிரதிஞ்ஞா விரோதம்...தான் சொன்ன பிரதிஞ்ஞை ஏது வுக்குத் தானே விரோத முரைத்தல். ௩

பிரதிஞ்ஞா சந்நியாசம் ... ஒன்றை பிரதிஞ்ஞைபண்ணி அதனை வாதியானவன் தூடணம்பண்ணி யுள்ளளவில் ஆர் சொ ன்ன சொன்னை. ௪

ஏத்துவாந்தரம் ... வேதம் நித்தியமென்று சொல்லி யுதி க்கைக்கு ஏதுக்காட்டி அதற்குத் தூஷணம்வர வேறே ஒன் றை ஏதுவாகக்கொள்ளல். ௫

அத்தாந்தரம் வாதியானவன் தனக்குத் தோல்விவர ஏதுவென்ற சத்தத்துக்குப் பொருளேதென்று வினவிக் கேட்டவை தன்னை மறைத்தல். ௬

நிரத்தகம் ... அத்தமல்லாத வசனங்களைப் பேசல். ௭

அவிஞ்ஞாதார்த்தம்...வாதியானவன் தனக்குவந்த தூஷணமறைத்தற்காக தெரியாதசத்தங்களைக் கொண்டு பேசல். ௮

அபார்த்தகம்...பூர்வபாஷை சம்பந்தமின்றி யிருக்கின்ற வசனங்களைப் பேசுதல். ௯

அப்பிராத்தகாலம் ... பஞ்சாவயவங்களை யடைவொழித்து மாறிப்பிரயோகித்தல். ௧௦

நியூனம் ... பஞ்சாவயவங்களைக் குறையப் பிரயோகித்தல். ௧௧

அதிகம் ... ஏது உதாரணங்களைப் பலவாகப் பிரயோகித்தல். ௧௨

புனருத்தகம் ...சொன்னபொருளை மீண்டுஞ்சொல்லுதல்.

அத்தப் புனருத்திகம், சத்தம் தொனி கேடின்றியிருக்குமென் றிரட்டித்துச் சொல்லுதலுமாம். ௧௩

அநநுபாஷனம் ... வாதியானவன் சொன்ன பொருளையறிந் தநுமதியாதிருத்தல். ௧௪

அஞ்ஞானம்...ஒன்று மறியாதிருத்தல். ௧

அப்பிரிதிபை ... உத்தரஞ்சொல்லாமல் திகைத்தல். ௨

விட்சேபம்...ஒன்றைச் சொல்லுவதாகத் தொடங்கி வேறேயொரு வியாசத்தையிட்டுச் சொல்லாமலிருத்தல். ௩

மதானுஞ்ஞை...தன்னுடைய மதத்துக்குவருந் தூஷணம் பரிகரியாமல் பிரமதமெடுத்துத் தூஷிக்கை. ௪

பரியனுயோச்சியா பேட்சணம்...நிக்கிரகத்தான பிராந்தியினையறிந்து நிக்கிரஹியாயிருத்தல். ரு

நிரனுயோச்சியானுபேக்ஷம் ... நிக்கிரகத்தான பிராந்தனுகாதவனை நிக்கிரகித்தல். சா

அபசித்தாந்தம்...சித்தாந்தஞ் சொல்லத் தொடங்கி வேறேயொன்றைச் சொல்லுதல். எ

* எத்துவாபாசன் - உதாரணம். விடுபட்டிருப்பதை மறைஞானதேசிகருரையிற் காண்க. அ

ஆ உஉ.—

கருதலிவை யாண்டுமொழிவா ரவையெல்லா மளக்கிலறு பத்தைந் தாகும்—பிரமாணத்தைக் கொண்டு பிரமேயத்தையறியுங் காலத்தி லப்படியே யனுபவித்துச் சொல்லுவார்கள், அவையிற்றையெல்லா மறியுங்காலத்து அறுபத்தைந்து பிரகாரமாம். இந்த வறுபத்தைந்து குற்றமும் வாராமல் பிரயோகிப்பது. எ-று.

இதனுற் சொல்லியது பக்கப்பொலி
பிரத்தி யட்சாபாசமென்றும்
அனுமானு பாசமென்றும்
பிரத்தியாபாசமென்றும்
வசனுபாசமென்றும்
ஆக நாலென்றும்,
ஏதுபக்க மூன்ருயிருக்குமென்றும், அவை
அசித்தம்
அனேகாந்திகம்
விருத்தம்
ஆ மூன்றுக்கு வகை

அசித்தபேதம் - சஉ

அனைகாந்திகம் - எ

விருத்தம் - உ

ஆக உக - என்றும்,

இதில்திட்டாந்தபக்கம் சாத்தியாகலாதி முதல் பதினெட்டுப்பேதமென்றும்;

சொல்வித்தானமென்றது, இரண்டு வகையான் பிரதிஞ்ஞா ஆனிமுதற்-கச.

அந்நுபாஷணமுதல்-அ.

ஆக உஉ - என்றும்,

பிரமாணத்தைக் கொண்டு பிரமேயத்தை யறியுமிடத்து இவையெல்லாவற்றையும் பெரியோர்கள் அனுபவித்து அளவைப்பிரமாணமாக - கூறு. என்பரென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

மேற்கூறிப்போந்தவனுமானசாமக்கிரிகளுள்,—ஈண்டுபக்கப்போலி - துணிபொருட் கிடனாதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடுடைத்தாய் ஒருபுடை யொத்துப் பக்கம்போல்தோன்றுவதாகிய பக்கப்போலி,—நான்கு -நான்குவகைப்படும்,—ஏதுப்போலி - சாத்தியப்பொருளோடு வியாத்தியுடைத்தாய் பக்கத்திலிருத்தலாகிய வேதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தொரு புடையொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய வேது

ப்போலி,—ஒருமூன்றாய் - ஒருமூவகைப்பட்டு,—வேண்டுமெழு மூன்றாகும் - விரியா னிருபத்தொன்றாகும்.—விளங்குவமைப் போலி - இனி வியாத்தி நிச்சயித்தற் கிடனாதலாகிய உவமை யிலக்கணமின்றியு முவமைபோலத் தோன்றுவதாகிய விளங்கு வமைப்போலி,—ஈரொன்பான்காண்டும் - அன்னுவயம்பற்றியு ம் எதிரேகம்பற்றியும் இருவகைப்பட்டு, விரியா லொரோ வொ ன் றொன்பதாய்ப் பதினெட்டுவகைப்படும், — தோல்வித்தா னம் - இனித் தருக்கவாதத்தின்கட் பேசத்தெரியாமையாகிய தோல்வித்தானம்,—இரண்டிருபத்திரண்டாம் - மயங்கப் பே சுதலும் வாளாவிருத்தலுமென் றிருவகைப்பட்டு, விரியா னிருப த்திரண்டாம்.— அவையெல்லா மளக்கில் - அவைகளை யளவி டுமிடத்து,— அறுபத்தைந்தாகும் - இங்ஙன நான்கு மிருபத் தொன்றும் பதினெட்டு மிருபத்திரண்டு மாகிய அறுபத்தைந்தா ம்,—இவைகருதில் - இவைகளை விசாரிக்கின்,—யாண்டுமொழி வர் - அனுமானவளவைகட் கெவ்விடத்துங் குற்றங்களாமென் றொழிப வென்பதாம்.

இதனானே யனுமானப்பிரயோகத்தின்கட் படுங் குற்றங் களிவையென்பது தெரிந்துக் கூறப்பட்டது.

அளவை-கச.

பாயிரமுட்பட செய்யுள்-உ௦.

"ஈரைமளவையாகும்"

என்னும் அளவை பதினுலும் முற்றிற்று.